# இராஜாஜி

(வாழ்க்கை வரலாறு)

பேராசிரியர் நாரண. துரைக்கண்ணன்

அமுத நிலையம் லிமிடெட்,

46, ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை-14.

இராஜாஜி நூற்றாண்டு விழா வெளியீடு

புத்தம் புதிய பதிப்பு

அக்டோபர் 1978

விலை ரூ. 8-00

பரணி & பரணி அச்சகம் 3, அந்தோணி தெரு சென்னை-14.

# இராஜாஜி

(வாழ்க்கை வரலாறு)

பேராசிரியர் நாரண துரைக்கண்ணன்

அமுத நிலையம் லிமிடெட்,

1/45, ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை-14

இராஜாஜி நூற்றாண்டு விழா வெளியீடு
புத்தம் புதிய பதிப்பு
அக்டோபர் 1978

ARCHIVES LIBRARY
No. 109103
FORT, MADRAS

விலை ரூ. 8-00

பரணி & பரணி அச்சகம், 3, அந்தோணி தெரு, சென்னை-14

# ஆசிரிய உரை

உருஷ்யக் கவிஞர்கள் மூவர் சென்ற ஆண்டின் இறுதியில் சென்னை மாநகருக்கு விஜயஞ் செய்திருந் தனர். சாஹித்ய அகாடமியின் சென்னை கிளை நிறுவனத்தின் சார்பில் அவர்களுக்கு மயிலாப்பூர் உட்லண்ட்ஸ் ஓட்டலில் வரவேற்பு அளிக்கப் பட்டது.

அக்கூட்டத்துக்கு எழுத்தாளச் சகோதரர்களும் பத்திரிகையாள நண்பர்களும் பலர் வந்திருந்தனர்.

விழா தொடங்குவதற்கு முன், இலக்கிய அன்பர் களாகிய நாங்கள் ஒருவருக்கொருவர் அளவளாவிக் கொண்டிருந்தோம்.

'கல்கி' உதவியாசிரியராயிருந்த எஸ். வி. சுப்பிர மணியம் என்னைப் பார்த்து "நீங்கள் எழுதியிருக்கிற இராஜாஜி சரிதத்தைச் சமீபத்தில் படிக்க நேர்ந்தது. ஏற்கனவேயும் இரண்டொரு முறை அதை வாசித் திருக்கிறேன் இராஜாஜியை நீங்கள் சரியாக மதிப்பிட்டிருக்கிறீர்கள். நடு நிலையில் நின்று இராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றை நீங்கள் எழுதி யிருக்கும் முறை எனக்கு மிகவும் பிடித்திருக்கு. இராஜாஜி நூற்றுண்டு விழா நிகழவிருக்கும் இச் சமயத்தில் அச்சரித்திரப் புத்தகத்தை எல்லோருக்கும் கிடைக்கும்படியாகச் செய்தால் நன்ருக இருக்கும்" என்று சொன்னர்.

எஸ். வி. எஸ். இராஜாஜியிடத்திலும் ரசிகமணி டி. கே. சி. யிடத்திலும் அணுக்கத் தொண்டராக இருந்து அரும்பணியாற்றி வந்தவர். இப்போது தமிழ்

நாட்டுத் தேசீயத் தலைவர்களில் ஒருவரான க. சந்தானம் தலைவராக இருக்கும் இராஜாஜி நூற்றாண்டுவிழாக் குழுவுக்கு இவர் செயலாளராக நியமிக்கப்பட்டுச் செயல் புரிந்து வருகிறார்.

எங்கள் பக்கத்தில் அமர்ந்திருந்த கவிஞர் மஹி (டி. ஆர். குருஸ்வாமி), "ஏன் அண்ணா! நீங்கள் அனுமதி தந்தால், எங்கள் அமுத நிலையத்தின் வெளியீடாக இராஜாஜி சரிதத்தைக் கொண்டு வர நான் ஏற்பாடு செய்கிறேன்" என்று ஆர்வத்தோடு தெரிவித்தார்.

நண்பர் எஸ். வி. எஸ். ஸாம், "உடனடியாகப் புத்தகம் வெளிவருவது நல்லது" என்று ஊக்குவித்தார்.

"இராஜாஜி நூற்றாண்டு விழாவில் நான் எழுதியுள்ள அவரது வாழ்க்கை வரலாற்று நூலை மற்றொரு முறை வெளியிடுவது அம்மகானுக்கு என் அஞ்சலியாக அமையட்டும்" என்று எண்ணிய நான், "அப்படியே ஏற்பாடு செய்து விடுங்கள்; மஹி! இராஜாஜி சரிதம் அமுதநிலையம் பதிப்பாகவும் வெளிவருவதில் எனக்கு மகிழ்ச்சியே!" என்று என் சம்மதத்தைத் தெரிவித்து விட்டேன்.

அதன் விளைவாகத்தான் என் இராஜாஜி சரிதத்தின் இப்புத்தம் புதிய பதிப்பு உங்கள் கரங்களில் தவழ்கிறது.

இராஜாஜி காங்கிரஸ் ஸ்தாபனத்தில் சேர்ந்து தேசப்பணி புரிவதற்குமுன், சேலம் முனிசிபல் சேர்மனாக இருந்தபோது புரிந்துவந்த தீண்டாமையொழிப்பு, மதுவிலக்கு முதலிய சமுதாய சீர்திருத்தப் பணிகளில் கவர்ச்சி கொண்டுதான், நான் 1935-ம் ஆண்டில் அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதி

'சக்தி பிரசுராலயம்' என்ற என் பதிப்பகத்தின் வாயிலாக வெளியிட்டேன். அதற்கு அக்காலத்தில் புகழ்பெற்ற தலைவர் எஸ். சத்தியமூர்த்தி முன்னுரை தந்து என்னைப் பாராட்டினார்.

இரண்டு பதிப்புகளுக்குப் பின் அல்லயன்ஸ் கம்பெனி குப்புசாமி ஐயர் இராஜாஜி சரிதப் புத்த கத்தை வெளியிட முற்பட்டார். அப்பதிப்பகத்தின் மூலம் பல பதிப்புகள் வெளியாயின. அத்துடன் இது உயர் நிலைப் பள்ளிகளில் பத்தாவது படிவத்துக்குப் பாடமாகவும் பல ஆண்டுகள் தொடர்ந்து வைக்கப் பட்டன.

இராஜாஜி சுதந்திர பாரதத்தில் கவர்னர் ஜெனர லாகப் பதவி வகித்திருந்த வரையில் வெளியாகி யிருந்த வாழ்க்கை வரலாற்றை அவர் 94 வயது வரை வாழ்ந்திருந்து புரிந்திருக்கும் அரிய பெரிய சாதனைகளையெல்லாம் நான் தொகுத்து வைத்து முற்றும் புதிதாகவே விரிவாக எழுதி வெளியிடக் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகத் திட்ட மிட்டிருந்தேன்.

நண்பர் பி சி. கணேசன், 'இராஜாஜி, காமராஜ் ஆகிய இரு பெருந்தலைவர்களின் வரலாறுகளை இன்றைய இளந்தலைமுறைக்கு நீங்கள் புதிதாக எழுதித் தரவேண்டு'மென்று என்னைச் சந்திக்கும் போதெல்லாம் சொல்லிக் கொண்டேயிருப்பார்.

அவ்விதமே அப்பெரியவர்களது. வரலாறுகளை எழுதி முடிக்க வேண்டுமென்று தீர்மானித்திருக் கிறேன்.

நான் பல துறைகளிலும் அரும்பெருஞ் செயல் புரிந்த பெரியார்கள் பலருடைய வாழ்க்கை

வரலாறுகளை எழுதி வெளியிட்டிருக்கிறேன். திருவள்ளுவர், இராமலிங்க வள்ளலார், சங்கரர், இராமானுஜர், மாத்வர், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், இராமதீர்த்தர், சாரதாமணிதேவி, அரவிந்தர், இரமணர், பாரதி, காந்தி அடிகள் போன்ற மகான்கள் வரலாறுகளை எழுதியபோது ஏற்பட்ட மன நிறைவும் மகிழ்ச்சியும் இராஜாஜி வரலாறு எழுதுகையிலும் எனக்கு உண்டாயிற்று.

ஐம்பதாண்டுகளுக்கு மேற்பட்ட என் இலக்கியப் பணிகளில் மேற்குறித்த பெருமக்களின் வரலாறுகளை எழுதி வெளியிட்டதையே நான் பெரும்பேருக மதிக்கிறேன்.

இராஜாஜி நூற்ருண்டு விழாவின்போது இந் நூல் வெளிவருவதற்கு உதவிபுரிந்த அமுத நிலைய நிர்வாகிகளுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் எஸ். வி. எஸ் அவர்களுக்கும் கவிஞர் மஹி அவர்களுக்கும் தனித்த முறையில் நன்றி கூறியாக வேண்டும்.

இராஜாஜி அன்பர்களும் தமிழ் மக்களும் உவகையோடு இந்நூலை வரவேற்பார்களாக.

"ஜீவோதயம்" நாரண - துரைக்கண்ணன்
சென்னை - 94 1—10—78

## முன்றும் பதிப்பின் முன்னுரை

நமது நாட்டில் நமது தலைவர்களின் சரித்திரத்தை எழுதும் வழக்கம் இல்லாமலிருப்பது எல்லோரும் அறிந்ததாகும். நமது பண்டைக்காலத் தமிழ் நாட்டுத் தலைவர்களின் சரித்திரத்தை எழுதாததால் அவர்களது பெயர்கள்கூடப் பல தமிழர்களுக்குத் தெரியாமலிருக்கிறது. நம் தமிழ்நாட்டைப் பொருத்தமட்டில் இராஜாஜி போன்ற தலைவர்கள் சிலரே அவருடைய திறமையைப்பற்றித் தெரியாதவர்கள் தமிழ்நாட்டில் யாரும் இருக்கமாட்டார்கள். ஆயினும் பின்னல் வரும் இளைஞர்கள், இராஜாஜி தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் என்ன தொண்டாற்றினரென்று தெரிந்துகொள்ள வேண்டியது மிக அவசியம். நண்பர் ஸ்ரீமான் நாரண—துரைக்கண்ணன் அவர்கள் இராஜாஜியின் வாழ்க்கையை முதலிலிருந்து தற்காலம் வரையிலும் நன்கு விவரித்து எழுதியிருக்கிறர். இதை எல்லாத் தமிழ் மக்களும் பாராட்டுவார்கள். தமது வாழ்நாள் முழுவதையும் தேசசேவைக்கே இராஜாஜி சமர்ப்பித்துவிட்டார். ஆதலால் இராஜாஜியின் சரித்திரத்தை நமது தமிழ் நாட்டுக் காங்கிரஸ் சரித்திரமாகவே எடுத்துக் கொள்ளலாம். அவரும் காலஞ்சென்ற சத்தியமூர்த்தியுமே நமது தமிழ்நாட்டின் அரசியல் விஷயங்களில் காங்கிரஸ் கொள்கைகளைப் பரப்புவதற்குத் தங்கள் வாழ்நாட்களை உபயோகப்படுத்தினர்கள் என்று சொன்னல் மிகையாகாது.

இராஜாஜியை, சென்ற முப்பத்தைந்து வருஷங்களாக எனக்குத் தெரியும். அவரது அரசியல் துறையிலும் நான் கலந்து அவருடன் வேலை செய்திருக்கிறேன்.

ஓர் ஆச்சரியமான சம்பவம் என்னவென்றால், அவர் எப்பொழுதும் கொஞ்சம் முன்பாகவே நடக்கப் போகும் விஷயங்களை அறிந்து அதன்பிரகாரம் செய்ய எத்தனிப்பார். இதைச் சில நண்பர்கள் தவருக எடுத்துக்கொள்வார்கள். ஆனல் அவர் தம் மனோபலத்தினல் இவைகளையெல்லாம் பொருட்படுத்தாமல் நாட்டின் நன்மையையே கருதித் தம்முடைய வேலையைச் செய்வார்.

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பது அவரது ஜீவிய சரித்திரம். தமிழர்கள் மாத்திரமன்று, மற்றவர்களும் இதை நன்ருக அறிந்து கொள்ளலாம்.

இம்மாதிரியான புத்தகங்களை நமது பள்ளிகளிலிருக்கும் மாணவர்களுக்குக் கொடுப்பது அவசியம். இவைகளின் வழியாக நமது இளைஞர்கள் தேசசேவையைச் செவ்வையாய்க் கற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியர் ஸ்ரீமான் நாரண—துரைக்கண்ணன் அவர்களுக்கு, தமிழ்நாடு என்றும் கடமைப்பட்டுள்ளது,

சென்னை
7-1-48

ப. சுப்பராயன்

# மூன்றாம் பதிப்பின் சிறப்புரை

நம் நாட்டுக்கு ஏற்பட்ட தனிப்பெருஞ் செல்வம் அதற்குக் கிடைத்த தலைவர்கள் என்று சொல்லலாம். வேறு எந்த நாட்டிற்கும் கிடைக்காத தலைமை நமக்கு உண்டு. இத்தகைய சிறந்த தலைவர்களில் ஒருவரான இராஜாஜியைத் தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியாவே நன்கறியும். இவ்வாண்டின் தலைவரவர் களின் ஜனன விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு இராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றைத் தெரிந்து கொள்வதில் ஒரு விசேஷ ருசி ஏற்பட்டிருக்கிறது. இச்சமயம் பார்த்து இந்நூலை வெளியிடுவதை நான் பாராட்டுகிறேன். இராஜாஜியின் பெருமை யைத் தெரிந்து கொள்ளுபவர்களும், அவர் களுடைய வாழ்க்கை விவரங்களைத் தெரிந்து கொள்ளப் பிரியப்படுவார்கள். சமூகச் சீர் திருத்தத்தில் இராஜாஜி வெகு காலத்திற்குமுன் காட்டிய மன உறுதி நம்மெல்லோருக்கும் படிப்பினை யாகும். அதை ஆசிரியர் நன்கு விளக்குகிறார். தமிழ் நாடும் சென்னை மாகாணமும் முதல்முதல் இராஜாஜியைக் கண்டது 1918 - ல் காஞ்சீபுரத்தில் ஸ்ரீமதி சரோஜினி தேவியின் தலைமையில் நடந்த அரசியல் மகாநாட்டில் என்று சொல்லலாம். அன்றே இராஜாஜியின் பேச்சுத்திறமையை நான் கண்டேன். திருச்செங்கோடுகாந்திஆசிரமத்திலிருந்து இராஜாஜி செய்துவந்த திருப்பணியை ஏழை மக்கள் கண்டார் கள். இராஜாஜியின் இடைவிடா உழைப்புத் தன்மையைத் தமிழ்நாடு கண்டது. அவர்களின் நிர்வாகத் திறமையை நம் நாடும் உலகமும் தெரிந்து கொண்டன இவைகளையெல்லாம் எல்லோரும் உணரக்கூடிய அளவில் ஆசிரியர் வரைந்த இந்நூலை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

எம். பக்தவத்ஸலம்

# பொருளடக்கம்


| அதிகாரம் | | | பக்கம் |
|---|---|---|---|
| | தோற்றுவாய் | ... | 1 |
| 1. | தோற்றம் | ... | 3 |
| 2. | வக்கீல் தொழில் | ... | 9 |
| 3. | சமூக சீர்திருத்தச் சேவை | ... | 12 |
| 4. | வைதிக எதிர்ப்பும், சமூக பகிஷ்காரமும் | ... | 14 |
| 5. | ஆரம்ப வாழ்க்கை | ... | 25 |
| 6. | அரசியல் பிரவேசம் | ... | 30 |
| 7. | ஒத்துழையாமையும் சிறைவாசமும் | ... | 40 |
| 8 | சுயராஜ்யக் கட்சிக்குத் தீவிர எதிர்ப்பு | ... | 50 |
| 9. | காந்தி ஆசிரம ஸ்தாபிதம் | ... | 70 |
| 10. | உப்புச் சத்தியாக்கிரகத் தலைமை | ... | 75 |
| 11. | தமிழுக்குச் சேவை | ... | 80 |
| 12. | லக்ஷ்மி - தேவதாஸ் திருமணம் | ... | 85 |
| 13. | சட்டசபை வேலையில் சிரத்தை | ... | 91 |
| 14. | இராஜாஜியும் சத்தியமூர்த்தியும் | ... | 100 |
| 15. | பிரதம மந்திரி பதவி | ... | 103 |
| 16. | தேசீய சர்க்கார் யோசனை | ... | 119 |
| 17. | கிரிப்ஸ் தூதும் அதன் முறிவும் | ... | 151 |
| 18. | காங்கிரஸ்-லீக் சமரஸ முயற்சி | ... | 152 |
| 19. | ஆகஸ்டுப் புரட்சி | ... | 158 |
| 20. | வைஸ்ராய் வேவல் திட்டம் | ... | 160 |
| 21. | தமிழ் நாட்டில் எதிர்ப்பு | ... | 162 |
| 22. | இடைக்கால சர்க்காரில் மந்திரி பதவி | ... | 165 |
| 23. | சுதந்திர சர்க்காரில் இராஜாஜியின் அந்தஸ்து | ... | 169 |

# இராஜாஜி

## தோற்றுவாய்

உலகில் எத்தனையோ மகான்கள் - பெரியார்கள், அறிஞர்கள் - தோன்றினர்; வாழ்ந்தனர்; மறைந்தனர். ஆனால், அவர்களில் ஒரு சில மெய்ஞ்ஞானிகளின் பெயர்கள்தாம் உலகில் அழியாமல் நின்று நிலவி வருகின்றன. அதற்குக் காரணம் என்ன? அப் பெரியார்கள் செய்த தன்னலமற்ற சேவையும், தியாகச் செயல்களும், மக்கள் சமூகத்தை வாழ்விக்க வரையறுத்த உன்னத லட்சியங்களுமேயாகும். அவர்கள் கூறிய உபதேசங்களும், ஆற்றிய அற்புதங்களும், மக்கள் மனங்களை விட்டு மறையாமல் அவர்களை ஊக்கிக்கொண்டே இருக்கின்றன.

நற்றவப்பயனை நமக்கு வழிகாட்டக்கூடிய மகான்கள் இக்காலத்திலும் இருக்கிறார்கள். அத் தகைய பெரியார்களில் தலைசிறந்து விளங்கியவர் மகாத்மா காந்தி என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர். சத்தியத்தையும் அஹிம்சா தர்மத்தையும் அடிப்படையாகக் கொண்டு, நமக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதுக்குமே அவர் சேவை செய்து வந்தார்.

மகாத்மா காந்தியின் இவ்வுயரிய தத்துவங்களைப் பின் பற்றி நடப்பவர்கள் பலர் இருக்கின்றனர். நம் தமிழ் நாட்டைப் பொருத்தமட்டில் காந்தியடிகளை முழுவதும் பின்பற்றி நடந்துவந்தவர்களில் ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார் தலைசிறந்த

ராவர் என்று கூறின் மிகையாகாது. ஆசாரியார் அவர்கள் பொது வாழ்விலும் அரசியலிலும் ஈடு பட்டதிலிருந்து, பால கங்காதர திலகருக்குப் பிறகு, காந்தியடிகளையே தமது ஆதர்ச புருஷராகக் கொண்டு தாய்நாட்டுக்கும் மக்களுக்கும் தொண் டாற்றி வரலானார். மகாத்மாகாந்தி எவ்விதம் தமது சுகபோகங்களையும், செல்வம் முதலிய சிறப்புகளையும் தியாகம் செய்துவிட்டுப் பொது வாழ்வையே பெரி தாகக் கொண்டாரோ, அதுபோல, நம் இராஜாஜியும் தமது ஆடம்பர வாழ்வையும், செல்வச் சிறப்பையும் ஒரு கணத்தில் உதறித் தள்ளிவிட்டுப் பொதுநலத் தொண்டாற்ற முனைந்து விட்டார். அவர் புரிந்துள்ள தன்னலமற்ற சேவையும், தியாகச் செயல்களுமே இன்று அவரை ஒப்புயர்வற்ற தலைவராக்கி யிருக் கின்றன என்று துணிந்து கூறலாம். முன்னர் சட்ட சபைப் பிரவேசம் கூடாதென்று சித்தாஞ்சன தாஸ ரோடு போராடிய ராஜாஜி பின்னர் கால மாறுதலை அனுசரித்துச் சட்டசபையில் புகுந்து பிரதம மந்திரி பதவி மட்டுமல்ல, மேல்வங்க கவர்னர் பதவியையும், ஏன், கவர்னர் ஜெனரல் பதவியையுமே ஏற்றாரென் றால், அது இவரது தியாகத்தின் வெற்றியென்றே கூறவேண்டும். இன்று தமிழ்நாட்டில் எத்தனையோ இராஜகோபாலாசாரியார்கள் இருந்தும், இராஜ கோபாலாசாரியார் என்றவுடனே இவரது உருவமே தம் கண்முன் நின்று இவரையே ஞாபகப்படுத்து கிறதென்றால், இது இவரது தியாகத்தின் உயர்வை விளக்கச் சிறந்த உதாரணமன்றோ!

ஆகவே, நம் நாட்டிற்கே பெரும் புகழையும் உயர்வையும் தேடித் தந்திருக்கும் இப்பெரியாரது

வாழ்க்கை வரலாற்றைத் தமிழ் மக்களாகிய ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டியது - அறிந்திருக்க வேண்டியது - அவசியம்.

## முதல் அதிகாரம்
## தோற்றம்

சேலம் ஜில்லாவில் ஓசூர் என்று ஒரு கிராமம் உண்டு. அது குக்கிராமமன்று; ஒரு பெரிய கிராமமாகும். அக்கிராமத்தில் பல பிரிவைச் சேர்ந்த வகுப்பினரும் வாழ்ந்து வருகிறார்களாயினும், பெருந்தொகையினராகவும், செல்வமும் செல்வாக்கும் உடையவர்களாகவும் இருப்பவர்கள் கவுண்டர்களும் (கொங்கு வேளாளர்) செட்டியார்களுமே. இவர்களுக்கு அடுத்தபடி பிராம்மணர்கள் ஆவர். இவர்கள் பேசும் மொழி தமிழும், தெலுங்குமாகும். சிலருக்குக் கன்னடமும் தெரியும்.

இத்தகைய ஓசூரின் கிராமமுன்சீபாக இருந்தவர் ஒரு வைஷ்ணவப் பிராம்மணர். இவரை அனைவரும் சக்கரவர்த்தி ஐயங்கார் என்று அழைத்துவந்தனர். கிராம முன்சீபாயிருக்கும் செல்வாக்கினால் மட்டுமின்றி உண்மையிலேயே இவர் தம் கிராம மக்களால் தலைவராக மதிக்கப்பட்டு வந்தார். அவ்விதம் ஒரு கிராம மக்களுக்குத் தலைமை பூணக்கூடிய தகுதியனைத்தும் இவரிடம் அமைந்திருந்தது. இவர் ஒரு சிறந்த பேரறிஞர். சம்ஸ்கிருதத்தில் நல்ல புலமை வாய்ந்தவர். நல்லொழுக்கமும் நற்குணமும் இயற்கையாகவே இவர்பால் அமைந்திருந்தன. அத்துடன் அக்கிராமத்தில் இவர் ஒரு குறிப்பிடத்தக்க மிராசுதாராகவும் சுமாரான செல்வமுடையவராகவும் இருந்தார்.

சக்கரவர்த்தி ஐயங்கார் உதித்த குடும்பம் ஒரு நல்ல வைதிக குடும்பமாகும். நல்லான் சக்கரவர்த்தி பரம்பரை என்றுலே வைஷ்ணவ ஐயங்கார் மரபி லேயே மிக உயர்ந்த குடும்பம் என்று பெயர் பெற்ற தாகும். ஆசாரிய பீடத்து அமர்ந்து தம் மரபினர்க்கே யல்லாமல், மற்றவர்களுக்கும் ஞானோபதேசம் செய்யக்கூடிய தகுதி நல்லான் சக்கரவர்த்தி மரபில் வந்தவர்களுக்கே சிறப்பாக உரியதாகும். அத்தகைய பிரசித்தியும் பழம் பெருமையும் வாய்ந்த உயர்குடித் தோன்றலான சக்கரவர்த்தி ஐயங்காரும் தம் பரம் பரைப் பண்பை யொட்டியே தமது கல்வியறிவை அனைவருக்கும் பயன்படுத்தி வந்தார். வேதாகம புராண இதிகாச தரும சாஸ்திரங்களை ஆழந்து படித்து ஆராய்ச்சி செய்திருந்ததால், அவை சம்பந்த மாகத் தம்மை நாடி வருபவர்களின் சந்தேகங் களையும் அறியாமையையும் போக்கியனுப்புவார். இவர் காலத்தில் சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் சம்ஸ்கிருத புரொபசராக இருந்த ஹப்பர்ட் என்னும் பெயருடைய ஜெர்மானிய அறிஞர் சக்கரவர்த்தி ஐயங்காரிடம் அடிக்கடி வந்து தமக்கு ஏற்படும் ஐயங்களைந் தெளிவுபடுத்திக்கொண்டு போவது வழக்கமென்று கூறப்படுகிறது. ஒரு முறை சென்னை கவர்னர் லார்டு கன்னிமாரா என்பார் ஓசூருக்கு விஜயம் செய்தபோது, சக்கரவர்த்தி ஐயங்காரின் புலமையையும் பெருமையையும், கேள்விப்பட்டு, இவரை வரவழைத்து, உரையாடி மகிழ்ந்ததோடு சம்ஸ்கிருத நூல்களில் இவருக்கிருந்த ஆழ்ந்த ஞானத்தை அறிந்து வியந்து பாராட்டினர் என்று கூறப்படுகிறது. சக்கரவர்த்தி ஐயங்கார் தம் கிராம மக்களுக்கு வால்மீகி ராமாயணம் முதலிய நூல்களைப்

பற்றிப் பிரசங்கம் செய்து அறிவு விருந்தளித்து வந்தார். இப்பேர்ப்பட்ட பெருமையும் தகுதியுமுடைய சக்கரவர்த்தி ஐயங்காரிடம் ஒசூர் மக்கள் ஒப்பற்ற மதிப்பும் பேரன்பும் கொண்டிருந்ததில் ஆச்சரியம் என்ன இருக்கிறது ?

இத்தகைய பெரியாருடைய வாழ்க்கையைச் சிறப்பிப்பதற்கு உறுதுணையாக வந்து வாய்த்தவர் சிங்காரம் அம்மையார் ஆவர். இவர் பெண்களுக்குரிய சகல நலன்களும் வாய்க்கப்பெற்றிருந்தார். குடும்பப் பாங்கை நன்கு அறிந்து நடந்து கணவருக்கு இனியராய் இருந்துவந்தார். அவ்வுத்தமத் தம்பதிகளுக்கு பகுதான்யஹு கார்த்திகைமீ 25உ (9-12-1878) இல் அருந்தவ மைந்தராய்ப் பிறந்தவர் நம் இராஜாஜி. கடைசி குமாரரான இராஜாஜி தம் பெற்றோர்களது பரிபூரண அன்புக்கும் பாசத்துக்கும் பாத்திரமாய் விளங்கினாரென்று சொல்லவும் வேண்டுமோ! இவருக்கு முன்பிறந்தவர் இருவர் : அவர்கள் நரசிம்மாசாரியர், ஸ்ரீநிவாச ஐயங்கார் ஆவர்.

இராஜாஜியின் இளமைப் பருவத்தில் குறிப்பிடத்தக்க அம்சங்கள் ஒன்றும் காணப்படவில்லை. இப்போது பலராலும் பாராட்டப்படும் அறிவு நுட்பம் இளமையில் அவரிடம் காணப்பட்டதாகத் தெரியவில்லை. சாதாரணச் சிறுவர்களைப்போலவே இவரும் விளையாட்டில் பெரிதும் ஆர்வமுடையவராய் இருந்தார். சிலம்ப விளையாட்டு முதலியவைகளைக்கூட மேற்கொண்டிருந்தார். இவரது ஆரம்பப் பாடசாலை டிரில் மாஸ்டரே இவருக்குக் 'கரடி வாத்தியா'ராக இருந்தார்.

ஆரம்பத்தில் சக்கரவர்த்தி ஐயங்கார் இராஜாஜிக்கு வீட்டிலேயே கல்வி போதித்து வந்தார். ஆதலால் இவர் பள்ளிக்கூடத்தில் ஐந்தாவது வகுப்பில் சேர்க்கப்பட்டார்.

இவருக்குக் கல்வி கற்கண்டாய் இருந்ததேயொழிய, மற்ற மாணவர்களுக்கு உள்ளதுபோல் எட்டிக்காயாக இல்லை. இவர் எல்லாவிதமான பாட விஷயங்களையும் ஆர்வத்துடனேயே படிக்கலானுர். "ஆங்கிலத்தில் தான் சிறந்து விளங்கினுர்; கணிதத்தில் கெட்டிக்காரத்தனம் ஏற்படவில்லை; பூகோளம் பூஜ்யம்; சரித்திரம் சரியாக மூளையில் ஏறவில்லை" என்றெல்லாம் இவர் விஷயத்தில் சொல்வதற்கில்லை. எல்லாப் பாடங்களிலும் இவர் முதல்தர மாணவராகவே திகழ்ந்தார். சதா ஏதாயினும் ஒரு புத்தகத்தை -அது எந்த விஷயத்தைப் பற்றியதாயினும் சரி- படித்துக்கொண்டிருப்பார். தந்தையார் தாம் பெரும் படிப்பாளியா யிருந்ததுடனல்லாமல், பிள்ளைகளின் கல்வி விஷயத்திலும் அக்கறை செலுத்தி ஆசிரியர் போல அவர்களுக்குப் பல விஷயங்களையும் போதித்துவந்ததுதான் இதற்குக் காரணம். இராஜாஜியும் தாம் படிக்கும் விஷயங்களில் ஏற்படும் சந்தேகங்களைத் தந்தையாரிடம் கேட்டுத் தெளிவடைவார். தகப்பனுர் கொடுக்கும் காசை வீண் செலவு செய்யாமல், தமக்கு வேண்டிய புத்தகங்களை வாங்கிப் படிப்பார். மாடு, குதிரை, பூனை முதலிய பிராணிகளிடம் இராஜாஜிக்கு மிகுந்த அன்பு உண்டு.

உயர்தரப் படிப்புக்காக, இராஜாஜி பெங்களுர் சென்று சென்ட்ரல் ஹிந்து கலாசாலையில் சேர்ந்தார். ஆரம்பப் பாடசாலையில் முதல் மாணவராய் விளங்கி

யதுபோலவே கலாசாலையிலும் இராஜாஜி சிறந்து விளங்கினர். புரொபசர் கூக் இவருடைய நுண்ணறிவைக் கண்டு இவரைப் பூத பௌதிக, விஞ்ஞான சாஸ்திரங்களையே விசேஷ பாடமாக எடுத்துக்கொள்ளச் செய்தார். இங்கிலீஷ் புரொபஸர் டெய்ட் முதலிய ஆசிரியர்கள், இவருடைய அறிவு நுட்பத்தையும் அடக்க ஒடுக்கத்தையும் கண்டு இவர்பால் அன்புகொண்டனர்.

வில்லியம் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள், சர் வால்டர் ஸ்காட்டின் நாவல்கள் இவற்றை இராஜாஜி விருப்பத்தோடு படித்துவந்தார். பின்னர் பிரஸி டென்ஸி காலேஜிலும் முறையே சேர்ந்து தம் பதி னெட்டாம் வயதில் பி. ஏ. பரீட்சையில் தேறிப் பட்டம் பெற்றதும், சட்டக் கலாசாலையில் சட்டப் பரீக்ஷைக்காகப் படித்துவந்தார். அச்சமயம் இவர் தம் பெற்றோரையும் உற்றாரையும் சேலத்தில் விட்டுத் தனித்துப் படித்து வந்ததால், மாணவர் விடுதியில் தங்கியிருக்க நேர்ந்தது. அவ்விடுதி இப் போது விவேகானந்தர் இல்லம் (ஐஸ் ஹவுஸ்) என்னும் கட்டிடமே.

இராஜாஜி அவ்விடுதியில் தங்கிச் சட்டக் கலா சாலையில் வாசித்துவருகையில் வேதாந்த கேசரியான சுவாமி விவேகானந்தர், டாக்டர் நஞ்சுண்ட ராவ், அழகியசிங்காராசாரியார் முதலிய பிரமுகர்களால் வர வேற்கப்பட்டார். சுவாமிகள் சென்னையில் இருந்த வரையில் மாணவர் விடுதியில்தான் தங்கியிருந்தார். ஆதலால், இராஜாஜிக்குச் சுவாமி விவேகானந்தரின் கூட்டுறவு ஏற்பட்டது. இயற்கையிலேயே நுண்ணறி வும், கடவுள் பக்தியும், பெரியோர்களிடம் அத்யந்த

விசுவாசமும் உள்ள இராஜாஜி சுவாமிகளிடம் அளவு கடந்த பக்தி கொண்டதும் அன்பைப் பெற்றதும் ஆச்சரியமல்ல. சுவாமிகளின் தொடர்பால் இளமையிலேயே இருந்துவந்த தேசபக்தியும் தியாக உணர்ச்சியும் அதிகரித்தன. இராஜாஜி பி.எல். பட்டம் பெற்ற பின்னர், தமது சொந்த ஊருக்குத் திரும்பிச்சென்றார். பிறகு அவர் சேலம் நகரில் வக்கீல் தொழிலை ஆரம்பித்தார்.

இதனிடையே சக்கரவர்த்தி ஐயங்கார் இராஜாஜிக்கு, பதினாருவது வயதில், சித் தூரைச் சேர்ந்த அலர்மேலுமங்கம்மாளைத் திருமணம் செய்துவைத்தார். நற்குடியில் வந்த அப்பெண்மணி கணவனுக்கு ஏற்ற மனைவியாய் ஒழுகிக் குடும்பத்தைத் திறம்பட நடத்திவந்தார். ஆகவே, இராஜாஜியின் இல்லற வாழ்க்கை இன்பமாகவே நடந்துவந்தது. இவர்களுடைய நல் வாழ்க்கையின் பயனாக, முறையே மூன்று ஆண்களும், இரு பெண்களும் பிறந்தனர். சுமார் பதினைந்து வருஷகாலம் இவர்களுடைய மனை வாழ்க்கை மாட்சியுடன் விளங்கியது. ஆயினும், எதிர்பாராதவாறு அலர்மேலு மங்கம்மாள் நோய் வாய்ப்பட்டதால் இராஜாஜிக்குக் கவலை ஏற்பட்டது. மனைவியை நோயினின்றும் விடுவிக்க வெகு பாடு பட்டார். எத்தனையோ டாக்டர்கள், எவ்வளவோ மருந்துகள், ஒன்றாலும் பயனில்லை. இரவு பகலெனப் பாராது, இராஜாஜி சிரமமெடுத்துக் கொண்டு சிகிச்சையும் சிசுருஷையும் செய்தும் அலர்மேலு மங்கம்மாள் குணமடையாமல் கடைசியில், கணவரையும் மக்களையும் விட்டுப் பிரிந்தே போனார். அருமை மனைவியின் பிரிவு இராஜாஜியை அதிர்ச்சியுறச் செய்ததாயினும், மனம் சோர்ந்து

அவர் உட்கார்ந்துவிடவில்லை. மேற்கொண்டு வாழ்க்கையை நடத்தும் விஷயத்தில் தம் கவனத்தைச் செலுத்தினர். குழந்தைகளைக் காப்பாற்றும் பொறுப்பைத் தாமே ஏற்று, பெற்ற தாய் இல்லையே என்ற ஏக்கம் பிள்ளைகளுக்கு ஏற்படாதவாறு, அவர்களைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தார்.

## இரண்டாவது அதிகாரம்

## வக்கீல் தொழில்

வக்கீல் தொழிலை இராஜாஜி மேற்கொண்ட போது, சேலம் நகரில், பிரபல வக்கீலாய் விளங்கி வந்த ஒரு கனவானின் ஜூனியர் வக்கீலாய் இருந்து அத்தொழிலில் நன்கு பயிற்சிபெற அவரை அனுமதி கேட்டார். அதற்கு அக்கனவான் இசையவில்லை. ஆகவே, இராஜாஜி தனித்து நின்றே வக்கீல் தொழிலை நடத்தத் தொடங்கினர்.

தொழில் துவக்கத்திலேயே இராஜாஜிக்கு ஒரு விநோதமான அனுபவம் ஏற்பட்டது. இவர் தம்மிடம் வந்த முதல் வழக்கை முன்னிட்டு நீதிமன்றத்தில் ஆஜரானர். இவ்வழக்கின் எதிர்தரப்புச் சார்பாக, இராஜாஜியைத் தம் ஜூனியர் வக்கீலாக வைத்துக் கொள்ள விரும்பாத கனவானே தோன்றி வாதித்தார். இராஜாஜி அந்தப் பிரபல வக்கீலை எதிர்த்து எவ்விதம் வாதிப்பது என்று அஞ்சிப் பின்னடையாமல், தம் கட்சியை எடுத்துக்கூறித் திறமையாக நடத்தினர். அதன் பயனாக, அவ்வழக்கில் இவரே வெற்றியடைந்தார். இந்த முதல் வெற்றியே இவர் வக்கீல் தொழிலை நடத்திவந்த காலம்வரையில் இவருக்கு அழியாக் கீர்த்தியையும், பெரும் புகழையும் தருவதற்கு அடிப்படையான காரணமாயிற்று.

இராஜாஜியின் சட்டஞான நிபுணத்துவமும், அசைக்க முடியாத வாதத்திறமையும் வெகு சீக்கிரத்தில் பிரசித்த மடைந்தன. சில நாட்களுக்குள்ளேயே அவர் சேலத்திலுள்ள பிரபல வக்கீல்களுக்குள் தலைமை ஸ்தானத்தைப் பெற்ருர். அதிலும், கிரிமினல் வழக்குகளில்தான் இராஜாஜி அதிகமாக ஆஜராகிக் கட்சிக்காரர்களுக்கு வெற்றியை வாங்கித் தந்திருக்கிருர். இதனுல் இவருக்குக் "கிரிமினல் லாயர்" என்று பெயர் வழங்கலாயிற்று. இராஜாஜியின் வாதத் திறமையையும், சட்ட நுணுக்கங்களைத் தக்க இடங்களில் சரளமாக எடுத்துக் கையாளும் ஆற்றலையும் கண்டு நீதிபதிகளே ஆச்சரியப்பட்டனர். அவ்வளவு ஏன் ? எதிர்க்கட்சி வக்கீல்களே இராஜாஜியின் ஆணித்தரமான உதாரணங்களையும் அசைக்க முடியாத வாதத் திறமையையும் கண்டு, தங்கள் கட்சிகளை மறந்து, இவரது பேச்சில் மயங்கி வாய் பிளந்து நின்றனர்.

ஸ்ரீ ஸி. விஜயராகவாசாரியார் சேலத்தில் பிரபலத் தலைவர்களில் முக்கியமானவர்; அதுபோல் வக்கீல் துறையிலும் வெகு பிரசித்தி பெற்றவர் என்பது அனைவரும் அறிந்ததே. இராஜாஜியைவிட அவர் எத்தனையோ ஆண்டு வயதிலும் அநுபவத்திலும் பெரியவர். இராஜாஜி இளைஞராக இருந்தபோதே ஸ்ரீ விஜயராகவாசாரியார் வக்கீல் தொழிலிலும், அரசியல் துறையிலும், பொதுவாழ்விலும் பிரபலமடைந்திருந்தார். அத்தகைய பெரியாரிடம் இராஜாஜிக்கு மிகுந்த மதிப்பு உண்டு, ஆயினும், நீதிமன்றத்தில் நேருக்கு நேர் வாதிக்க நேர்ந்து விட்டால், இராஜாஜி அவரையும் மிஞ்சிவிடுவார். ஒரே வழக்கில்

ஸ்ரீ விஜயராகவாசாரியார் ஒரு தரப்பிலும், இராஜாஜி மறு தரப்பிலும்; தோன்றி வாதிக்கத் தொடங்கி விடுவார்களானல் அது ருசிகரமானதாகவும், வக்கீல்களுக்கெல்லாம் பெருவிருந்தாகவும், இருக்குமாம். ஸ்ரீ விஜயராகவாசாரியாரது நீண்ட நாளைய வக்கீல் தொழில் அநுபவமும், உலக அநுபவ முதிர்ச்சியும் எல்லாம் இராஜாஜியின் வாதத் திறமைக்கு முன் சோபிக்காமல், இராஜாஜியின் வாதமே மேலோங்கி நிற்குமாம். சட்ட நுணுக்கங்களைச் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி பிரயோகித்துத் தமது கட்சியே நியாயமானதென்று நீதிபதிகள் மனத்திலும், ஜூரர்களின் மனத்திலும் பதியும்படி எடுத்து வாதிப்பதிலும், தமது சாதுரியம் மிகுந்த பேச்சால் நீதிபதி முதலியவர்களை வசீகரிப்பதிலும் இராஜாஜி வெகு சமர்த்தர் என்று நேரில் கண்ட பலர் கூறுகின்றனர். எனவே, இவ் வக்கீல் தொழிலில் அவர் மாதமொன்றுக்குச் சுமார் 2,000 ரூபாய்க்குக் குறையாமல் சிரமமின்றிச் சம்பாதித்து வந்ததில் ஆச்சரியமில்லை யல்லவா ?

இராஜாஜி சில காலம் சேலம் ஜில்லாவைச் சேர்ந்த குமாரமங்கலம் ஜமீன்தார் டாக்டர் சுப்பராயன் குடும்பத்து வக்கீலாய் இருந்துவந்தார். அதுவன்றி சேலம் செல்வந்தர்களான திரு இரத்தினசுவாமி கவுண்டர் முதலிய பலருக்கும் வக்கீலாக இருந்து அவர்களுக்கு ஏற்படும் வழக்கைத் தீர்த்து வெற்றியளித்துவந்தார். 1900-ஆம் ஆண்டில் தொடங்கிய வக்கீல் தொழிலை இராஜாஜி 1918 ஆம் ஆண்டுவரையில் சேலத்தில் நடத்தினர். 1920-இல் ஆசாரியார் சென்னைமாநகருக்கு வந்து ஹைகோர்ட்டில் தொழில் நடத்தலானர்.

## மூன்றாவது அதிகாரம்

## சமூகச் சீர்திருத்தச் சேவை

இளமையிலேயே இராஜாஜி தீவிரக் கொள்கைகளையுடையவரா யிருந்தார். எவ்விஷயத்தையும் முன்னேற்றத்துக்கான முற்போக்கோடும் பரந்த நோக்கோடும் ஆராய்ந்து பார்க்கலானார். இந்து சமூகத்தில் காணப்பட்ட சில மூடப் பழக்க வழக்கங்களையும், சீர்கேடுகளையும் கண்டு அவர் வருந்தினார். ஆசாரம், அநுஷ்டானம், வைதிகம் என்பவற்றின் பேரால் நடைபெறும் அநாசார வழக்கங்களும், அருவருக்கத்தக்க பழக்கங்களும் அவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. கடவுள், சமயம் ஆகியவற்றின் பெயரால் நடைபெறும் அநீதிகளையும் கொடுமைகளையும் கண்டு அவர் கண்ணீர் சிந்தினார். ஜாதி வேற்றுமைகளையும், சமய வேற்றுமைகளையும் அறவே ஒழித்து, நமது சமூகத்தில் ஒற்றுமையையும் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் உண்டாக்க வேண்டுமென்று அவர் உறுதிகொண்டார். நம் நாட்டில் பிறந்தவர்கள், "எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் இனம்; எல்லோரும் இந்நாட்டுமன்னர்" என்பதே அவரது அடிப்படையான கருத்தாகும்.

இத்தகைய பரந்த நோக்கமும் விரிந்த மனப்பான்மையும் கொண்ட இராஜாஜி தாம் தனித்து வாழ்க்கை நடத்தத் தொடங்கியதும் - வக்கீல் தொழிலில் சிறப்புற்றுப் பெரும்பொருள் சம்பாதிக்க ஆரம்பித்ததும் - தம் சீரிய கொள்கைகளைத் தாமே செயலில் நடத்திப் பிறருக்கு வழிகாட்டலானார். இந்து சமூகத்துக்கும் சமயத்துக்கும் பெருங்களங்கமாகவும்,

நீங்காக் கறையாகவும் இருக்கும் தீண்டாமையை ஒழித்தால்தான் நமது சமூகமும் நாடும் விமோசன மடையும் என்று அவர் கருதினர். மற்ற எல்லாச் சீர் திருத்தங்களையும்விடத் தீண்டாமை விலக்கை அவர் தமது முக்கியத் தொண்டாகக் கொண்டார். மற்ற வகுப்பினரைக் காட்டிலும் தாழ்த்தப்பட்ட மக்க ளுக்கே அவர் தம்மாலான உதவியைச் செய்து வந் தார்.

1906 ஆம் ஆண்டில் இராஜாஜி சேலம் கலா சாலையில் ஆதித்திராவிட மாணவர் சிலரைச் சேர்க்க முயன்றார். இதைக் கண்டு உயர்வகுப்பினரெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்தனர். 'அந்த ஆதித்திராவிட மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதானல், எங்கள் மக்களைக் கல்லூரிக்கே அனுப்பமாட்டோம்' என்று அவர்கள் பயமுறுத்தினர். கலாசாலை அதிகாரிகள் உயர்வகுப்பினரின் தீவிர எதிர்ப்பைக் கண்டு முதலில் பயந்து தயங்கினரெனினும், கடைசியில் இராஜாஜி யிடம் நியாயம் இருப்பதை உணர்ந்து, அவரது அந்த நன்முயற்சிக்கு ஆதரவு தந்தனர். முதலில் ஆதித் திராவிட மாணவர்களுக்கு உதவிசெய்ய வேண்டு மென்று இவ்வித முயற்சியில் ஈடுபட்டாலும், பின்னர் உயர்வகுப்பினர் பெருங்கிளர்ச்சி செய்யத் தொடங் கியதைக் கண்டதும், வேறொருவராக இருந்தால் பயந்து, 'நமக்கு ஏன் இந்த ஊர்ப்பொல்லாப்பு?'என்று மெல்லப் பின்வாங்கி யிருப்பர். திடசித்தமுள்ள இராஜாஜி உயர் வகுப்பினரது தீவிர எதிர்ப்பைக் கண்டு சிறிதும் அஞ்சாது கடைசிவரை போராடித் தாம் நல்லதென்று செய்யக் கருதியதைச் சாதித்து வெற்றிக்கொடி நாட்டினர். இவரது இத்தகைய பெருமுயற்சியால் கலாசாலையில் சேர்த்துக்கொள்ளப்

பட்ட ஆதித்திராவிட மாணவர்கள் இராஜாஜியை மனமார வாழ்த்தினர்.

உயர்வகுப்பார் அத்துடன் நிற்கவில்லை. பிராம்மணர்களெல்லாம் இராஜாஜியை ஜாதிப்பிரஷ்டம் செய்தனர். வீண் பிடிவாதம் கொண்டவர்கள் தங்கள் முயற்சியில் தோல்வியுற்றால் ஆத்திரமடைவது இயல் பேயன்றோ! தேசபக்தியும், சீர்திருத்த உணர்ச்சியும் மிகுந்துள்ள இக்காலத்திலேயே - காலச்சக்கரத்தின் வேகத்தால் பலவகையிலும் பெருமாறுதல் ஏற்பட்டிருக்கும் இக்காலத்திலேயே, பல கிராமங்களில் - ஏன் சில நகரங்களில்கூட - ஜில்லாபோர்டு பள்ளிக்கூடங்களிலோ, கார்ப்பொரேஷன் பாடசாலைகளிலோ-சர்க்கார் உயர்தரப் பள்ளிக்கூடங்களிலோ தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களைச் சேர்த்துப் படிக்க வைத்தால், தங்கள் பிள்ளைகளை அனுப்பமாட்டோம் என்று உயர்வகுப்பினர் கிளர்ச்சி செய்துவருவதை நாம் கண்டும் கேட்டும் வருகிறோம். இவ்விதக் கிளர்ச்சியின் பயனாகப் பல பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டதையும் அநேகர் அறிந்திருக்கலாம். ஆகவே, 1906-ஆம் ஆண்டில் உயர் வகுப்பாரின் மனப்பான்மையும் கிளர்ச்சியும் எவ்விதம் இருந்திருக்குமென்பதை நாம் ஊகித்துப் பார்த்தால் இராஜாஜி அக்காலத்தில் சாதித்த அச்செயலின் அருமையும் பெருமையும் நன்கு விளங்கும்.

## நான்காவது அதிகாரம்

## வைதிக எதிர்ப்பும், சமூகப் பகிஷ்காரமும்

இதே விதமான போராட்டம் 1917-ஆம் ஆண்டில் இராஜாஜி சேலம் நகரசபைத் தலைவராக

இருந்த போது மீண்டும் ஏற்பட்டது. நகர சபையின் மேற்பார்வைக்கு உட்பட்ட தண்ணீர்க் குழாய்களை அவ்வப்போது திறந்து மூடுவதற்கு வேலைக்காரர்கள் பலர் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் ஆதித் திராவிட இளைஞர்களும் இருந்தனர். எஞ்சினியர் ஸ்ரீ. ஏ. வி. ராமன் (பிரபல வழக்கறிஞர் பி. வி. ராமனின் தந்தையார்) இந்த ஆதித்திராவிட இளை ஞர்களைத் தற்செயலாக அக்கிரகாரத்திலுள்ள தண்ணீர்க் குழாய்களைக் கவனிக்கும்படி மாற்றினர். அக்கணமே அக்கிரகாரத்தில் வசிக்கும் பிராம்ம ணர்களெல்லாம் ஆவேசங்கொண்டு எழுந்தார்கள். அடாத செயல் என்று தாங்கள் கருதிய இவ் விஷயத்தை நகரசபைத் தலைவராகிய இராஜாஜி யிடம் போய் அவர்கள் முறையிட்டார்கள். இராஜாஜி இதைக் கேட்டுப் புன்னகை புரிந்தார். அவர் களுடைய முறையீடு சரியானதல்ல வென்று நயமா கவே எடுத்துக் காட்டினர். "பொதுஜன சேவையில் இவ்வித ஜாதி பேதத்தைக் கவனித்து வேலைசெய்ய வேண்டுமென நீங்கள் கேட்பது சிறிதும் நியாய மில்லை; உங்கள் வீட்டு வேலைகளுக்கு இவர்களை அனுப்பினுல் அப்போது வேண்டுமானுல் நீங்கள் ஆட்சேபிக்கலாம். மேலும் இந்த ஆதித்திராவிட இளைஞர்களை வேண்டுமென்றே அக்கிரகாரத்துக்கு மாற்றவில்லை. இது தற்செயலாக நிகழ்ந்தது. நீங்கள் இதை ஆட்சேபித்துக் கிளர்ச்சி செய்கிறீர்கள் என்பதற்காக, அவர்களை வேறு எங்கேனும் மாற்று வதானுல், பொது விஷயத்திலும் நான் சாதி வேற்று மையை உறுதிப்படுத்துவதாக அல்லவா பிறரால் கருதப்படும்? ஆகவே நான் உங்களுடைய நியாய

மற்ற முறையீட்டுக்குச் சிறிதும் இணங்க இயலாது" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறிவிட்டார்.

பிராம்மணர்கள் முன்னையிலும் இராஜாஜிமீது அடங்காச் சினம் கொண்டனர். அவர்கள் தங்கள் நியாயமற்ற கிளர்ச்சிக்குப் படை திரட்டலாயினர். சேலம் வக்கீல்கள் அனைவரும் ஸ்ரீ. பி. வி. நரஸிம்ம ஐயர் அவர்களைத் தலைவராகக் கொண்டு இராஜாஜியை எதிர்த்தனர். இது விஷயமாக, நகரசபையில் கண்டனத்தீர்மானமும் கொண்டுவந்தனர். இராஜாஜியிடம் அன்பும் நன்மதிப்புங்கொண்ட பிராம்மணரல்லாத அங்கத்தினர்களில் பலருங்கூட இந்தப் பிராம்மண அங்கத்தினர்கள் கொண்டுவந்த கண்டனத் தீர்மானத்துக்கு ஆதரவளித்தனர். இக்கிளர்ச்சியில் கலந்துகொள்ளாமல் நடுநிலைமை வகித்தவர்களும் உண்டு. அவர்களில் இருதிறத்தாருக்கும் நல்லவராக நடந்து கொள்ளும் நோக்கங்கொண்ட பாரிஸ்டர் ஆதிநாராயணஞ் செட்டியார் என்பார் "இரு கட்சியிலும் நியாயம் இருக்கிறது. ஆயினும் இது மிகப் பெரிய விஷயம். ஆதலால் அவசரப்படாது ஆழ்ந்து யோசித்து எதையும் செய்வது நலம்" என்று மழுப்பினர். இராஜாஜி இந்த ஆர்ப்பாட்டங்களையெல்லாம் கண்டு சிறிதும் மனங்கலங்க வில்லை. நகரசபையில் மேற்படி கண்டனத் தீர்மானம் வந்தபோது தலைவர் இராஜாஜி, 'இது முனிசிபல் விதிகளுக்கு முரணானது' என்று கூறி அதை நிராகரித்துவிட்டார். வைதிகர்களின் மனக்கொதிப்பு இன்னும் அதிகமாயிற்று.

இதுபோன்ற மற்றொரு செய்தியும் நம் நாட்டில் ஒரு சிலரிடையே வழங்குகிறது. இராஜாஜி சேலம்

முனிசிபல் சேர்மனு யிருந்தபோது, சேலம் கலாசாலை இவரது நிர்வாகத்துக்கு உட்பட்டிருந்ததென்றும், இச்சமயம் மேற்படி கலாசாலையைச் சேர்ந்த ஹாஸ்டலில் வேலை செய்வதற்கு இரு ஆதித்திராவிட சகோதரர்களை இவர் நியமித்ததாகவும். இதையறிந்த நகரப்பிரமுகர்கள் முக்கியமாகப் பிராம்மணப் பெரியார்கள் பெருங்கிளர்ச்சி செய்ததாகவும், இராஜாஜி தங்கள் எதிர்ப்பைப் பொருட்படுத்தா ததைக் கண்டு, அவர்கள் அந்த ஜில்லா கலெக்டரிடம் போய் முறையிட்டதாகவும், ஐரோப்பியரான அந்தக் கலெக்டர் இராஜாஜி செய்த காரியத்தில் தவறு இருப்பதாகத் தமக்கு ஒன்றும் தோன்றவில்லையென்று கூறி அவர்களை அனுப்பிவிட்டதாகவும்• தங்கள் கிளர்ச்சியும் முறையீடும் பயன்படாததைக் கண்டு அவர்கள் மறுபடியும் இராஜாஜியிடமே வந்து "தீண்டாதாரை வேலைக்கு வைத்துக்கொள்வதை நாங்கள் ஆட்சேபிக்க வில்லை. ஆனால், ஹாஸ்டலில் அவர்களை வைக்கவேண்டாமென்றே கேட்டுக் கொள்ளுகிறோம். அவர்கள் தொடும் பொருள்களை உயர் வகுப்பு மாணவர்கள் சாப்பிடுவார்களா என யோசித்துப் பாருங்கள். நீங்கள் இவ்விஷயத்தில் இனியும் பிடிவாதம் செய்தால் உயர்வகுப்பினர், அதிலும் பிராம்மணர்கள் கலாசாலை ஹாஸ்டலைப் பகிஷ்கரிக்க வேண்டிவரும்" என்று நயமாகவும் பயமாகவும் வற்புறுத்தி வேண்டிக் கொண்டதாகவும், இதுவரை யாவற்றையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த இராஜாஜி புன்சிரிப்போடு, "ஹாஸ் டலைத்தானே பகிஷ்கரிக்கப் போகிறீர்கள் ? உங்கள்

விருப்பப்படியே செய்யலாம். ஹாஸ்டலைப் பகிஷ்கரிக்கும் மாணவர்களைக் கலாசாலையிலிருந்து நான் பகிஷ்கரித்து விடலாமல்லவா?'' என்று கூறியதாகவும், இப்பதிலைக் கேட்டுக் கிளர்ச்சிக்காரர்கள் தகுந்த பதில் கூறமுடியாது வெட்கித் தலைகுனிந்து சென்றதாகவும் கூறப்படுகிறது.

இவ்விதச் செய்திகளிலிருந்து இ ரா ஜா ஜி தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மக்களின் உரிமைக்காகவும், சமத்துவத்துக்காகவும் எவ்வளவு பாடுபட்டு வந்திருக்கிறார் என்று நன்கு தெரிகிறதல்லவா!

இராஜாஜி சேலம் சேர்மனாக இருந்தவரை, முனிசிபாலிடியிலும், மற்றும் தம் நிர்வாகத்திற்குட்பட்ட ஸ்தாபனங்களிலும் ஆதித்திராவிட சகோதரர்களுக்கு வேலை கொடுத்துவைத்திருக்கிறார்; ஆதித்திராவிட மாணவர்களுக்குப் புத்தகங்கள் வாங்கிக் கொடுத்து உதவியிருக்கிறார். மற்றச் சமூகத்தாரைக் காட்டிலும் ஆதித்திராவிட மக்களே மதுபானப் பழக்கத்தால் கஷ்டமும் நஷ்டமும் அடைந்து கெட்டொழிகிறார்கள் என்று இராஜாஜி உணர்ந்து, தாம் முனிசிபல் சேர்மனாயிருந்த காலத்திலேயே மதுபானக் கடைகளை எல்லாம் அறவே எடுத்துவிட முயன்றார். கலால் இலாகா சர்க்கார் நிர்வாகத்திற்கு உட்பட்ட விஷயமாதலால் இராஜாஜியின் இந்த நன்முயற்சி எதிர்பார்த்த அளவு பலன் தரவில்லை. ஆனாலும், அவர் மதுபானக் கடைகளையெல்லாம் சேலம் நகருக்கு வெளியே - ஊருக்குப் புறம்பே- கொண்டு போகும்படி செய்துவிட்டார்.

ஒரு சமயம் சுவாமி சகஜானந்தர் என்பார் ஏதோ காரியமாகச் சேலத்துக்கு விஜயம் செய்தார். ஜன சமூகத்திலேயே மிகவும் தாழ்த்தப்பட்டுக் கேவல நிலையிலிருக்கும் ஆதித்திராவிடமக்களைப் பல வகை யிலும் உயர்வடையச் செய்ய அல்லும் பகலும் பாடு பட்டுவந்த இராஜாஜி, அச்சமூகத்திலும் ஒருவர் தமிழும் சம்ஸ்கிருதமும் நன்கு பயின்று, சந்நியாசி யாயிருக்கிறார் என்று அறிந்ததும் மிகவும் மகிழ்ச்சிகொண்டார். மேலும், அந்த ஆதித்திராவிடத் துறவி, தம் சமூக உயர்வு நாடி, சிறுவர் சிறுமியர் களுக்குக் கல்வி புகட்டுவதற்காக, சிதம்பரத்தில் 'நந்தனார் கழகம்' என்று ஒரு பாடசாலையையும் ஹாஸ்டலையும் நடத்திவருகிறார் எனத் தெரிந்ததும், இராஜாஜி சுவாமி சகஜானந்தரின் நன்முயற்சிக்குப் பேராதரவு தந்து, தக்க சமயங்களில் பொருளுதவியும் செய்து வந்திருக்கிறார். இவ்விதம், ஏற்கனவே அறி முகமான சுவாமி சகஜானந்தர் 1917-ஆம் ஆண்டு சேலத்துக்கு வந்ததும், இராஜாஜி அவரை ஆர்வத் தோடு வரவேற்று உபசரித்தார். அத்துடனில்லாது, இராஜாஜி தமது அத்யந்த நண்பர்களில் ஒருவரான வக்கீல் ஸ்ரீ ஸி. அனந்தாச்சாரியாருடைய மாளிகை யில் சுவாமி சகஜானந்தருக்கு ஒரு விருந்து ஏற்பாடு செய்தார். அந்தச் சமபந்தி விருந்தில் ஸ்ரீமான்கள் பாரிஸ்டர் ஆதிநாராயணஞ் செட்டியார், ஸி. அனந்தாச் சாரியார், டாக்டர் வரதராஜலு நாயுடு, சேலம் கலா சாலை பிரின்ஸிபால் யக்ஞநாராயண ஐயர், எம். ஏ. எல். டி. பாரிஸ்டர் டி. எஸ். கஜராஜ், எஸ். வி. சுப்ரமணிய ஐயர் முதலிய முக்கியப் பிரமுகர்களெல் லாரும் கலந்து கொண்டனர்.

இராஜாஜியின் அத்யந்த சிநேகிதர்களில், அவரது சமூக சீர்திருத்தப் பணிகளுக்கும், தீண்டாமையொழிப்புத் தொண்டுக்கும் ஆதியிலிருந்து பேராதரவு அளித்து வந்தவர்கள், பாரிஸ்டர் ஆதி நாராயணஞ் செட்டியார். யக்ஞநாராயண ஐயர், ஸி. அனந்தாச்சாரியார், எஸ். வி. சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். சென்னை சட்டசபை அங்கத்தினராயிருந்த ஸ்ரீ பி.வி. நரசிம்ம ஐயரும் இராஜாஜியின் சமூக சீர்திருத்தப் பணிகளுக்கு ஆதரவளித்து வந்தவராயினும், இவர் செய்யும் செயல்களில் மிகத் தீவிரமென்று தாம் கருதிய சில நிகழ்ச்சிகளை மட்டும் ஆதரிக்க முன்வராது ஒதுங்கி யிருந்து வந்தார். சேலம் பெருங்கிழவர் ஸ்ரீ விஜயராகவாச்சாரியாரோ தாம் பழைய வைதிக தருமப்போக்கை அநுஷ்டித்து வந்தாலும், இராஜாஜி செய்துவரும் சமூக சீர்திருத்தச் செயல்கள் நியாயமானவை என்றே அவருக்குப் பட்டதால், அவற்றிற்கு ஆதரவு காட்டி வந்தார்.

சேலம் நகரசபையின் சம்பவத்துக்குப் பிறகு அதையொட்டி நடந்த இச் சமபந்தி விருந்து, எரிகிற நெருப்பில் நெய்விட்டதுபோல் ஆயிற்று. உயர் வகுப்பினரிடையே இது மீண்டும் மனக்கொதிப்பை உண்டு பண்ணியது. சேலம் பிராம்மணர்களும், மற்ற உயர் ஜாதியினரும் இராஜாஜிமீதும், அவர் தோழர்கள் மீதும் அடங்காக் கோபங்கொண்டனர். 1906-ஆம் ஆண்டில் சேலம் கலாசாலையில் ஆதித்திராவிட மாணவர்களைச் சேர்த்ததற்காகப் பிராம்மணர்கள் இராஜாஜியைச் சமூகப் பகிஷ்காரம் செய்தனர் என்று

முன்னர் கூறினோமல்லவா! நாளடைவில், அவர்கள் அதை நழுவவிட்டு, இராஜாஜியோடு உறவு கொண்டாடி வந்தனர். சுவாமி சகஜானந்தரை வரவேற்று உபசரித்தது மட்டுமன்றி, அவரோடு சமபந்தி போஜனம் செய்ததை அறிந்ததும், அவர்கள் இராஜாஜியையும் அவருடைய மேற்படி செயலை ஆதரித்து நின்ற அவரது நண்பர்களையும் சமூகப் பகிஷ்காரம் செய்தனர். இந்த முறை அவர்கள் சமூகப் பகிஷ்காரத்தைக் கடுமையாக அநுஷ்டிக்கலாயினர். ஆகவே, இராஜாஜியின் கோஷ்டியார் விவாகம் முதலிய சுபமுகூர்த்தங்கள், மரணச் சடங்குகள், சிரார்த்தங்கள் ஆகியவைகளை நடத்தி வைப்பதற்கு அவசியமான மந்திரங்களையெல்லாம் பயின்றனர். அவசியம் நேர்ந்தபோது தாங்களே ஒருவருக்கொருவர் உதவியாக இருந்து சடங்குகளை நடத்தி வைத்துவந்தனர்.

இந்தச் சமபந்தி விருந்துக்குப் பிறகு அவ்விருந்தில் கலந்துகொண்ட ஸ்ரீ எஸ். வி. சுப்பிரமணிய ஐயரின் சகோதரியார் இறந்துவிட்டார். ஜாதியார் மட்டுமல்ல; நெருங்கிய உறவினர்கூட, இந்தச் சாவுக்கு வராது பகிஷ்கரித்துவிட்டனர். 'நாமெல்லாம் இல்லாது இக்காரியம் எப்படி நடக்கிறது; பார்க்கலாம்' என்று எல்லோரும் வேடிக்கை பார்த்திருந்தனர். அச்சமயம் இராஜாஜி ஊரில் இல்லை. ஆயினும் ஸ்ரீஸி. அனந்தாச்சாரியார் முதலிய நண்பர்கள் பிரேத அடக்கத்துக்கு வேண்டிய உதவிகள் செய்தனர். பிரின்ஸிபால் யக்ஞநாராயண ஐயரே இறுதிச் சடங்கை நடத்திவைத்தார். தங்களிடம் மன்னிப்புக்

கேட்டுக்கொண்டு தங்கள் உதவியை நாடி வருவார்களென்று மனப்பால் குடித்திருந்த பிராம்மணர்கள் இதைக் கண்டு வெட்கித் தலைகுனிந்தனர்.

சுவாமி சகஜானந்தர் சமபந்தி போஜன விஷயம் ஓசூருக்குப் பக்கத்துக் கிராமத்தில் தமது முதிய வயதை உத்தேசித்து அமைதியாகக் காலங்கழித்து வந்த இராஜாஜியின் தகப்பனருக்கு எட்டியது. தமது குமாரரின் நுண்ணறிவையும், நல்லொழுக்கத்தையும் மற்றவர்களைவிட நன்கு அறிந்து வைத்திருந்த அவருடைய தகப்பனர், 'என் மகன் தவருன வழிக்குச் செல்லமாட்டான்' என்று உறுதியாக நம்பியிருந்தார்.

ஆதலால், இராஜாஜி அவ்வப்போது செய்து வரும் புரட்சிகரமான காரியங்களைப்பற்றி யாராகிலும் தெரிவித்தாலும் அவர் தம் மகன் செய்வது நியாயமானதாகவே இருக்கும் என்று திருப்திகொண்டு வந்தார். அவருங்கூடத் தம் மகன் சந்நியாசியாயிருந்தாலும் ஜாதியில் ஆதித்திராவிடராயுள்ள ஒருவரோடு சமமாக உட்கார்ந்து போஜனம் செய்த விஷயத்தைக் கேட்டுச் சகிக்கவில்லை. ஆகவே அவர் மிகவும் வருத்தத்தோடு தம் அருமை மைந்தனுக்கு இவ்விஷயமாக ஒரு கடிதம் எழுதினர். அதற்கு இராஜாஜி மிக வணக்கமாகப் பதில் விடுத்தார். அப்பதிலில், தம் மூதாதையரில் ஒருவர் செய்த இதுபோன்ற காரியமொன்றை ஞாபகமூட்டி, அவரைப் பின்பற்றியே தாம் நடந்துகொண்டதாக நயமாக எடுத்துக் காட்டியிருந்தார்.

அதாவது இராஜாஜியின் மூதாதைகளில் ஒரு பெரியார் ஆற்று வெள்ளத்தில் அடித்துக்கொண்டு வரப்பட்ட இரு அநாதைப் பிணங்களுக்கு இறுதிச் சடங்குகளைச் செய்து தகனம் செய்ததாகவும், 'அநாதைப் பிணங்களான அவை எந்தச் சாதியைச் சேர்ந்தனவோ ! அவைகளைப்பற்றித் தீர விசாரித்தறியாமலே தீண்டி இறுதிச் சடங்குகளைச் செய்ததினால் நீ சண்டாளத்துவத்தை யடைந்துவிட்டாய்' என்று கூறி அவரது இனத்தார் அவரைச் சமூகப் பகிஷ்காரம் செய்துவிட்டதாகவும், அவரது தகப்பனார் சிரார்த்தம் வந்த காலத்தில் பிராம்மணர் எவரும் வர மறுத்து விட்டதாயும், எனவே, இறைவனை நோக்கி அவர் மனமுருகி நிற்கையில் கருணாகரமூர்த்தியான ஸ்ரீ மகாவிஷ்ணுவே பிராம்மணனாக வந்து சிரார்த்தத்தை நடத்தி வைத்ததாகவும், கடைசியில் தம் உண்மை உருவத்தை வெளிக்காட்டி 'ஊருக்குப் பொல்லான், எனக்கு நல்லான்' என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்ததாகவும் கர்ணபரம்பரையாக ஒரு வரலாறு வழங்கிவருகிறது. அன்றுதொட்டுத்தான் இராஜாஜியின் குடும்பத்துக்கு 'நல்லான் சக்கரவர்த்தி' என்ற பட்டப்பெயர் பரம்பரையாக வழங்கி வருகிறதாம். குல தர்மத்தை இராஜாஜி எடுத்துக்காட்டிய பிறகு தந்தையார் என்ன கூற முடியும் ? அதற்கு மேல் அவர் ஒன்றும் கூறாமல் இருந்துவிட்டார்.

இவ்விதம் இராஜாஜி தம் வாழ்க்கையிலேயே சமூக சீர்திருத்தத்திற்கு அடிகோலி வந்ததோடு, சமயம் நேர்ந்தபோதெல்லாம் பிறருக்கும் அறிவுறுத்தி வந்தார். அத்துடன் அவர் நிற்கவில்லை. சமூக சீர்

திருத்தத்தில் ஆர்வமுள்ள மற்றவர்களோடு அவர் கலந்து நம் சமூக உயர்வுக்கான ஆக்க வேலைகளைச் செய்து வரலானார்.

1914-ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் சமூக சீர்திருத்த மகாநாடு ஒன்று நடைபெற்றது. அம் மகாநாட்டு நிர்வாகிகள் இராஜாஜியையே தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். இராஜாஜி தமது தலைமைப்பேருரையில், "நம் இந்து சமயத்தைவிட்டு ஜாதிவேற்றுமை ஒழியவேண்டும். அதை அறவே ஒழிப்பதையே நமது முதற்கடமையாகக் கொள்ள வேண்டும். அந்த ஜாதி வேற்றுமை வேரூன்றியிருக்கும் வரையில் நம் நாடும், சமூகமும் முன்னேற்றமடையாதென்பது திண்ணம்'' என்று குறிப்பிட்டு வீரமுழக்கம் செய்தார்.

ஜாதிச் சங்கங்கள், ஜாதி மகாநாடுகள் நடப்பது இராஜாஜிக்குச் சிறிதும் பிடிக்காது. இவ்விதச் சங்கங்களும், மகாநாடுகளுமே ஜாதிப் பிரிவுகளை ஊர்ஜிதப் படுத்தி வருகின்றன என்பது அவர் கருத்து. இவ்வித அபிப்பிராய முடையவராயிருந்தும், இராஜாஜி சேலத்திலுள்ள கொங்கு வேளாள சமூகத்துக்கு வெகுவாக வேலை செய்தார். அச்சமூக உயர்வு நாடி உழைக்கும் நண்பர்களுக்குத் தக்க யோசனை கூறி வந்தார். அது மட்டுமா! அவர்கள் நடத்தும் சங்கங்கள், மகாநாடுகளில் அவர் கலந்து கொள்ளலானார். மகாநாடுகளின் போது இராஜாஜி 'கள் குடிக்கக் கூடாது' என்று வற்புறுத்தியும், ஜாதி பேதங்களை அகற்றுவதற்கு அநுகுணமாகச் சமபந்தி போஜனம் செய்யும்படி வேண்டியும் பல அரிய பிரசங்கங்கள்

செய்தார். முதலில் அவரவர் போக்கில் அவரவரை விட்டு, அவர்களோடு தாமும் போவதுபோல் காட்டி, பிறகு மெள்ள தம் வசப்படுத்திக் கொள்வதில் இராஜாஜி வெகு சமர்த்தர். சமூக சீர்திருத்த வேலைகளில் சிறிதும் விருப்பமில்லாதவர்களை யெல்லாம் இராஜாஜி இவ்விதந்தான் திருப்பினார், தமது சமூகச் சீர்திருத்தக் கொள்கைகளை அவர் எல்லாத் துறைகளிலும் புகுத்திவந்தார் ; எவ்விடத்திலும் பரவச் செய்து வந்தார். அரசியல் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த போதுகூட அவர் தம் சீர்திருத்தக் கொள்கைகளை மறந்துவிடவில்லை. உலகிலுள்ள ஜன சமுதாயங்களைப் போல், நம் பாரத சமுதாயத்தையும் உயர்த்த வேண்டும் என்பதில் இராஜாஜிக்கு அளவிலா ஆர்வம் இருந்து வந்ததே இவற்றிற்கெல்லாம் காரணமாகும்.

## ஆடம்பர வாழ்க்கை

இராஜாஜி இளமையில் வெகு ஆடம்பரப் பிரியராய் இருந்தாரென்று தெரிகிறது. அவர் எப்போதும் டாம்பீகமாகவே மிக விலையுயர்ந்த ஆடைகளையே உடுத்துவார். ஒரு பெரிய பங்களாவில் வசித்துவந்தார். கோச்சு வண்டி, மோட்டார் கார் முதலியவைகளிலேயே செல்வார். அவருக்கும் அவரது குடும்பத்துக்கும் குற்றேவல் செய்வதற்குப் பணியாளர்கள் பலர் இருந்தனர். பெருஞ்செல்வர்களும், உயர் தகுதி வாய்ந்தவர்களும், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களுமே இவருக்கு உற்ற நண்பர்களாக இருந்தனர். இவர் சேலம்

'மெஸானிக் லாட்ஜில்' சேர்ந்திருந்தார். அதில் இவர் ஒரு முக்கிய அங்கத்தினராகவும் இருந்துவந்தார். சேலம் (ஐரோப்பியர்) கலெக்டரோடு இவர் மெஸானிக் லாட்ஜுக்குப் போவார். இவர் கலெக்டருடன் வெகு சகஜமாகப் பழகுவதும், அவர் இராஜாஜியிடம் அதிக அன்பும் மதிப்பும் காட்டுவதும் பலருக்குப் பொறாமையை உண்டுபண்ணிற்று.

இராஜாஜி நெடுங்காலம் 'மெஸானிக் லாட்ஜ்' மெம்பராகவே இருந்து வந்தார் ஆனால், 1935-ஆம் வருஷத்தில் இவரது அரசியல் போக்குக் காரணமாகச் சிலர் இவரை அங்கத்தினர் பதவியிலிருந்து நீக்க முயன்றனர். 'அரசியலில் தீவிரமாக வேலை செய்துவரும் இவர் 'மெஸானிக் லாட்ஜ் மெம்பர்களோடு ஒத்துழைப்பது சாத்தியமாகாது; இவர் லாட்ஜின் ரகசியங்களைப் பிறருக்கு வெளியிட்டு விடக்கூடும்' என்றெல்லாம் பல அங்கத்தினர்கள் வாதித்தனர். ஆனால், அவர்களது இம்முயற்சியில் பலன் ஏற்படவில்லை.

இராஜாஜி தம் வைதிகத் தகப்பனருடன் அடிக்கடி கோச்சுவண்டியில் வெளியே செல்வார். பலமுறை அவர் காசாரியைப் பின்புறத்தில் இருக்கச் செய்துவிட்டு, தாமே சாரத்தியம் செய்துகொண்டு செல்வார். அச் சமயங்களில் அவர் தம் தகப்பனரிடம் மரியாதையாகவும், நயமாகவும், சமூக ஒற்றுமையைப் பற்றியும், சமத்துவத்தைப்பற்றியும் கூறிச் செல்வார். வைதிகத்தில் ஆழ்ந்த பற்றுடையவராயினும் தருமகுணம் வாய்ந்த அவர் தகப்பனர் தம் அருமைப்

புத்திரன் கூறுவனவற்றை யெல்லாம் அமைதியாகக் கேட்டுவருவார். சாதாரணமாகத் தம் மக்களின் அறிவற்ற மழலைச் சொற்களையே கேட்டு மகிழக்கூடிய நிலையிலுள்ள அவர் தந்தையார் தம் தவப்புதல்வனின் கூரிய அறிவையும் அருள் உள்ளத்தையும் கண்டு கேட்டு விம்மிதமுறாதிருக்க முடியுமா!

பெரும் பொருள் வருவாயுடைய இராஜாஜி ஆடம்பர வாழ்க்கையை மேற்கொண்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இவ்வளவு செல்வச் சிறப்பிலும் ஆடம்பர நிலையிலுங்கூட, மற்றவர்களைப் போலத் தருக்கித் திரியாமல், தவருன வழிகளில் செல்லாமல், தீய பழக்கங்களைக் கைக்கொள்ளாமல் இருந்ததுதான் நாமெல்லாம் கண்டு ஆச்சரியமுறத் தக்கதாகும். அதற்கு இராஜாஜியின் நல்லறிவும் மனவுறுதியுமே காரணமாகும்.

செல்வமும், செல்வாக்கும், அதிகாரமும் உடைய வர்களைக் கூடாவொழுக்கம் வந்தடைவதற்குப் பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆனுல் இராஜாஜி யை எவ்விதக் கூடாவொழுக்கமும் அண்டியதில்லை. இராஜாஜி சென்னைப் பிரதம மந்திரியாக வந்த பிறகு ஒரு சமயம் சென்னைக் கிரிக்கெட் பந்தாட்ட ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்துப்பேசுகையில், "பெரும் பாலும் பந்தாடுபவர்களிடையே குடிப்பழக்கம் முதலிய தீய பழக்கங்கள் இருப்பதை நான் அறிவேன். அக்கொடிய பழக்கத்தை அறவே ஒழித்துவிட வேண்டும், அதனுல் பல தீமைக ளிருக்கின்றன"

என்று குறிப்பிட்டு வரும்போது, தாம் ஒருமுறை பரீக்ஷார்த்தமாக மதுபான வகைகளை உபயோகித்துப் பார்த்ததாகக் குறிப்பிட்டார்.

“குடி பல குடித்தனங்களைக் கெடுக்கிறது. குடிப் பவனையும் கெடுக்கிறது. ஜனங்கள் குடிக்காமலிருக்க முடிவு செய்தாலன்றி, மதுவிலக்கு மசோதாவைச் சட்டமாக்கி என்ன பயன்?”

“கீழ்ச்சபையிலும் மேல்சபையிலும் மதுவிலக்கு மசோதா சட்டமாகிவிட்டது; ஆனால் அது உங்கள் மேல் சபையில் (அதாவது மூளையில்) நிறைவேறினாலன்றிப் பிரயோஜனமில்லை”

“மதுபானத்தில் ‘ஆல்கஹால்’ என்ற நஞ்சுச் சத்து இருக்கிறது. அதனால்தான் குடிப்பவர்களுக்குப் பலவிதமான நோய்கள் உண்டாகின்றன. இது உங்களுக்கு எப்படித் தெரியுமென்று நீங்கள் கேட்கலாம்; மதுபான வகைகளின் தன்மைகளையும், அதனால் விளையும் தீமைகளையும் அறிவதற்காகவே நான் ஒரு முறை—ஒரே ஒரு முறைதான், குடித்திருக்கிறேன். அதற்குமேல் இல்லை” இவைகள் இராஜாஜியின் அன்றைய பேச்சின் பகுதிகள்.

இராஜாஜி சேலம் நகரசபையின் அங்கத்தினராகவும். தலைவராகவும் இருந்தபோதுகூட வீண் ஆடம்பரங்களிலும், கேளிக்கை விருந்துகளிலும் அதிகமாகக் காலத்தைக் கழித்ததில்லை; தம் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ததில்லை.

லஞ்சம் முதலிய ஊழல்களுக்குச் சிறிதும் இடங் கொடுத்ததில்லை. பொதுநலத்தைக் காப்பதிலும் செய்வதிலும் அதிகக் கவனம் செலுத்தினரே ஒழியத் தன்னலத்தைச் சிறிதும் கருதியதில்லை. தம்மால் நகரத்துக்கும் நகர மக்களுக்கும் எவ்வளவு நன்மை செய்யமுடியுமோ அவ்வளவும் செய்துவந்தார். அவர் தலைவராக இருந்த காலத்தில் சேலம் நகரம் பல வகையிலும் சிறப்புறலாயிற்று. சேலம் நகர விஸ்தரிப்புத் திட்டத்தை இராஜாஜிதாம் ஏற்படுத்தினர். நகரசபையில் அவர் ஆற்றிய அரும்பெரும் சேவையைப் பலரும் பாராட்டியிருக்கின்றனர். இராஜாஜி எவ்வளவுக்கு எவ்வளவு நுண்ணறிவுடையவராயிருந்தாரோ, அவ்வளவுக்கவ்வளவு நிர்வாகத் திறமையிலும் சிறந்து விளங்கினர். இவர் யுத்தக் கடனுக்காகச் சர்க்கார் சார்பில் பெரிதும் உழைத்திருக்கிருர். இவ்விஷயத்தில் இவர் வாயிலாகச் சர்க்காருக்குக் கிடைத்த பொருளுதவியைக்கண்டு அவ்வூர்க் கலெக்டரும், மற்றும் பிரமுகர்களும் இவரை வெகுவாகப் போற்றிப் புகழ்ந்திருக்கின்றனர். இவ்விதம், இவர் உயர்பதவி, தகுதிகளில் இருந்தபோதுகூடச் சாதாரண மக்களுடனும், கிராம விவசாயிகளுடனும் அதிகமாகப் பழகிவந்தார். அவர்களுக்கு நன்கு புரியும்படியான முறையில் நல்லுபதேசங்கள் செய்து வந்தார். அக்காலத்தில் இராஜாஜி நடத்திவந்த ஆடம்பர வாழ்க்கையை நேரில் பார்த்தவர்கள், ஒத்துழையாமைப் போராட்ட காலத்திலிருந்து, அவர் இருந்துவந்த எளிய நிலையைக் ,கண்டு பேராச்சரியமுற்றனர்.

## அரசியல் பிரவேசம்

இராஜாஜியின் வாழ்க்கையிலேயே பெரு மாறுதலை உண்டுபண்ணிய குறிப்பிடத்தக்க சம்பவம் இவ்விடத்தில்தான் ஆரம்பமாகிறது. இராஜாஜி வக்கீலாக இருந்தபோதே மகாத்மா காந்தியைப்பற்றிக் கேள்விப் பட்டிருந்தார். காந்தியடிகள் தென்னுப்பிரிக்காவில் இந்தியர் உரிமைக்காக நடத்திவந்த சத்தியாக்கிரகப் போராட்டம் இவரது மனதைப் பெரிதும் கவர்ந்தது 1910-வது ஆண்டிலிருந்து அடிகளது சத்தியாக்கிரகப் போராட்டத்தை உன்னிப்பாகக் கவனித்து வந்தார். அஹிம்சா தர்மத்தை அடிப்படையாகக் கொண்டே தம் சத்தியாக்கிரகப் போராட்டங்களை அடிகள் செய்துவருவது இவருக்குப் பொருத்தமாகக் காணப்பட்டது. ஆகவே, காந்தியடிகளின் சத்தியாக்கிரகப் போராட்டத்துக்குப் பேராதரவு காட்டிய தமிழ்ப் பெரியோர்களோடு இராஜாஜியும் கலந்துகொண்டார்.

மகாத்மாவைப்பற்றி அதிகமாக அறிய இராஜாஜி ஆவல்கொண்டார். மகாத்மாவைப் பற்றி வரும் விஷயங்களையெல்லாம் ஆர்வமாக வாசிக்கலானுர். மகாத்மாவால் எழுதப்பட்ட நூல்களையும், அவர் நடத்திவந்த பந்திரிகைகளையும் வரவழைத்துப் படித்து வந்தார். மகாத்மாகாந்தி, “இந்து சுயராஜ்யம்'' என்று ஒரு புத்தகம் எழுதியிருந்தார். அப் புத்தகம் இராஜாஜியின் உள்ளத்தை அப்படியே கவர்ந்து விட்டது. அவ்வரிய நூல் வாயிலாகத் தாம் அறிந்துணர்ந்த உண்மைகளைப் பிறரும் அறிந்து

உய்யவேண்டுமென்ற நன்னோக்குடன், தமது நண்பர்களுக்கும், மற்றவர்களுக்கும் அப்புத்தகத்தை வாங்கிக்கொடுத்துப் படிக்கச் செய்தார். தென்னுப்பிரிக்காவில் இந்தியர் உரிமைக்காக மகாத்மா காந்தி ஐரோப்பியரை எதிர்த்துப் போராடினுர் என்ருல், நம் இராஜாஜியும் இந்தியாவில்-சிறப்பாகத் தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பார் உரிமைக்காக, வைதிக மனப்பான்மை கொண்ட ஜாதி இந்துக்களோடு போராடினுரல்லவா ! அதுவன்றி, மகாத்மா தென்னுப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்தபின் தீண்டாமை யொழிப்பைத் தமது நிர்மாண வேலைத் திட்டங்களில் முக்கியமானதொன்ருகக் கொண்டு வேலை செய்வதற்கு முன்பே, இராஜாஜி நம் தமிழ் நாட்டில் தீண்டாமையை வேரோடு கெல்லி எறியும் வேலையைத் தீவிரமாகச் செய்து வந்தா ரென்பதைக் கவனிக்கும்போது, இவ்விரு பெரியார்களது கொள்கைகளும் செயல்களும் எவ்வளவுக்கு ஒத்துக் காணப்படுகின்றன என்பதை நாம் அறிந்து கொள்ள லாம்.

> ''புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
> நட்பாங் கிழமை தரும்''

என்பது தமிழ் மறைமொழி யன்ருே ! இவ்வொற்று மை உணர்ச்சியே பிற்காலத்தில் மகாத்மா காந்திக்கு இராஜாஜியை மற்றெல்லாரைக் காட்டிலும் சிறந்த தோழராக்கியது எனலாம்.

இராஜாஜி வக்கீல் தொழில் செய்கையிலேயே அவகாச மேற்பட்ட போதெல்லாம் அரசியலிலும் கவனம் செலுத்திவந்தார். லோகமான்ய பால

கங்காதர திலகர் தோற்றுவித்த 'ஹோம் ரூல்' இயக்கம் அவர் உள்ளத்தை முதன் முதலாகக் கவர்ந்தது. எனவே அவர் திலகரை அரசியல் குருவாகக் கொண்டு அதற்குத் தம்மாலான ஆதரவு அளித்துவந்தார், மேற்படி இயக்க வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டுவந்த திரு வ. உ. சிதம்பரம் பிள்ளை, மஹாகவி சுப்பிரமணிய பாரதி முதலியவர்களுக்குப் பேருதவி செய்து வந்தார். மிதவாத மனப்பான்மை கொண்ட கோகலே போன்றவர்கள் காங்கிரசை விட்டு வெளியேறுவதற்குக் காரணமாயிருந்த சூரத் காங்கிரஸுக்குச் சென்னை மாகாணத்திலிருந்து சென்ற தீவிரவாதிகளில் இராஜாஜியும் ஒருவராயிருந்தார். சூரத் காங்கிரஸுக்குப் பின்னர், கோபால கிருஷ்ண கோகலே முதலிய தலைவர்கள் மிதவாதக் கட்சி யொன்றை ஸ்தாபிக்கலானார்கள். தமிழ் நாட்டில் ஸ்ரீமான்கள் ஸ்ரீநிவாச சாஸ்திரி, சிவஸ்வாமி ஐயர் முதலியோர் மிதவாதக் கட்சிக்கு ஆதரவு தேட முயன்றனர். மிதவாதக் காங்கிரஸ் கமிட்டியொன்றை ஏற்படுத்த ஸ்ரீமான் சாஸ்திரியார் சேலத்துக்குச் சென்றார். அவரது தலைமையிலேயே ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. இராஜாஜியும் இக்கூட்டத்தில் பிரசன்னமாயிருந்தார். ஆயினும், ஸ்ரீ சாஸ்திரி போன்றவர்களது மிதவாதப் போக்கைக் கண்டித்துப் பேசி ஒருதீர்மானத்தை நிறைவேற்றினர். இராஜாஜி, சாஸ்திரியாருக்கு நெருங்கிய நண்பராதலால் அவரது பேருதவியையே பெரிதும் நம்பி வந்த சாஸ்திரியார் இதைக் கண்டு திகைப்புற்றார். கடைசியில் தமது முயற்சி இங்கு பலிதமாகாது என்று அறிந்து சாஸ்திரியார் சேலத்தினின்றும் திரும்பினர்.

நம் நாட்டவரது அரசியல் விழிப்புக்கே பெருங் காரணமாக இருந்தது ரௌலட் சட்டமன்றோ? கடுமையும் அநீதியும் பொருந்திய அச்சட்டம் இந்தியா சட்ட சபையில் மசோதாவாக வந்து நிறைவேறிய காலத்தில் தேசமே கொதித்து வெகுண்டு எழுந்தது. காந்திஜி முதலிய தேசியத் தலைவர்கள் அக்கொடிய சட்டத்தை அமலுக்கு வரவொட்டாமல் தடுக்க சத்தியாக்கிரகம் செய்ய முயன்றனர். அச்சமயத்தில் தான் இராஜாஜி அரசியலில் அடியெடுத்து வைத்தார். இதுவரை மறைமுகமாக வேலைசெய்து ஆதரவு தந்துவந்த இராஜாஜி இப்போது தேசீயப்போரில் நேர்முகமாக ஈடுபடலானார். ஆகவே, அவர் நகர சபைத் தலைவர் பதவியை ராஜிநாமா செய்து விட்டார். ஸ்ரீ கஸ்தூரிரங்க ஐயங்கார் முதலிய நண்பர்களது தூண்டுதலினால் அரசியலில் அதிகமாக ஈடுபடும் நோக்கோடு தமது சொந்த ஜில்லாவாகிய சேலத்தை விட்டு, சென்னை மாநகருக்கு வந்தார். மயிலாப்பூர், லஸ் சர்ச் ரோட்டிலிருந்த 'திலகர் பவன'த்தில் அவர் குடியேறினார். சென்னை ஹைக் கோர்ட்டில் அவர் தம் வக்கீல் தொழிலைத் தொடங்கி நடத்தி வரலானார்.

ரௌலட் சட்டத்தை உடைத்தெறிய மகாத்மா காந்தி சத்தியாக்கிரக இயக்கத்தைத் தொடங்க 1919-வது ஆண்டுத் துவக்கத்தில் தீர்மானித்தார். தமது இயக்கத்துக்கு ஆதரவு பெற மகாத்மா இந்தியாவில் சுற்றுப் பிரயாணஞ் செய்தார். இராஜாஜி மகாத்மா காந்தியைச் சென்னைக்கும் விஜயஞ் செய்யும்படி அழைத்தார். அவ்வழைப்பை ஏற்றுக்கொண்டு காந்தி அடிகள் சென்னைக்கு விஜயஞ் செய்தார்.

அப்போது மகாத்மா, இராஜாஜியின் விருந்தினராக அவரது மாளிகையில் தங்கினர். மகாத்மாவுக்கு அனுப்பப்பட்ட அழைப்பில் ஸ்ரீ கஸ்தூரிரங்க ஐயங் காரது கையெழுத்திடப்பட்டிருந்ததால், அவரது விருந்தாளியாகவே தாம் இருப்பதாகவும், தம்மைப் போலவே இராஜாஜியும் ஒரு விருந்தாளியே என்றும் மகாத்மா எண்ணியிருந்தார். இராஜாஜியின் தன் னடக்கம் அடிகளை அவ்வாறு கருதச்செய்தது. மகா தேவ தேசாய் உண்மையைக் கண்டுபிடித்துக் கூறிய பிறகே, மகாத்மா இராஜாஜியின் அரிய குணத்தை அறிந்து வியந்தார். இதுவரை கேள்வி மாத்திரத்தில் ஒருவரை யொருவர் அறிந்து வைத்திருந்த இருபெரும் தேசத் தலைவர்களும் இச்சமயம் அளவளாவி மனங் கலந்து பேசினர்கள். அவரவரது மன நிலைகளையும் கொள்கைகளையும் இருவரும் நன்கு தெரிந்து கொண்டனர். இப்பெரியார்களது இணைபிரியாச் சிறந்த நட்புரிமைக்கு இங்குதான் விதை விதைக்கப் பட்டது.

இது பற்றி மகாத்மா காந்தியே தமது சுய சரிதத் தில் கூறியிருப்பதை இங்கு தருகிறோம்.

‘‘கஸ்தூரிரங்க ஐயங்காரின் கையொப்பத்துடன் எனக்கு அழைப்பு வந்தது. ஆனல் அவ்வழைப் புக்குக் காரணமாயிருந்தவர் இராஜகோபாலாச்சாரி யார் என்று சென்னைக்குப் போகும் வழியில் அறிந்து கொண்டேன். அவருடன் முதன் முதலாக இப்போதுதான் எனக்குப் பழக்கம் ஏற்பட்டது. நேருக்கு நேர் சந்தித்து ஒருவரை யொருவர் நாங்கள் அறிந்துகொண்டது இப்போதுதான்.

இராஜகோபாலாச்சாரியார் சமீபத்தில் தான் சேலத்திலிருந்து சென்னைக்கு வந்து வக்கீல் தொழில் நடத்தி வந்தார். காலஞ்சென்ற ஸ்ரீ கஸ்தூரிரங்க ஐயங்கார் முதலியோர் அவரை வற்புறுத்தி யழைத் திருந்தனர். பொதுவாழ்வில் மிகத் தீவிரமாக ஈடுபட வேண்டுமென்பது அவரது எண்ணம். சென்னையில் அவரது விருந்தினராகவே நாங்கள் தங்கினோம். ஆனால், இரண்டு மூன்று நாட்கள் சென்ற பின்னரே, நான் இதை யறிந்தேன். ஏனெனில் நாங்கள் தங்கி யிருந்த வீடு ஸ்ரீகஸ்தூரிரங்க ஐயங்காருக்குச் சொந்த மானதாகையால் நாங்கள் அவருடைய விருந்தின ரென்றே எண்ணியிருந்தேன். மகாதேவ தேசாய் தான் எனக்கு உண்மை நிலையைத் தெரிவித்தார். அவர் வெகுசீக்கிரம் இராஜகோபாலாச்சாரியாருடன் அன்னியோன்னிய நட்புக்கொண்டார். இராஜ கோபாலாச்சாரியார் தமது இயற்கையான சங்கோச குணத்தினால் எப்போதும் பின்னாலேயே இருந்தார். ஆனால், மகாதேவ் எனக்கு விஷயத்தைத் தெரிவித் தார். "இந்த மனிதரிடம் தாங்கள் பழக்கஞ் செய்து கொள்ள வேண்டும்" என்று ஒரு நாள் அவர் வற்புறுத்திக் கூறினார். அவ்வாறே நான் செய்தேன். போராட்டத்துக்குரிய திட்டங்களைப்பற்றி, நாங்கள் நாடோறும் விவாதித்தோம்."

மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக இயக்கத் தின் மேன்மையையும், தன்மையையும் தெரிந்து கொள்ள ஸ்ரீ கஸ்தூரிரங்க ஐயங்கார், உள்ளூர்த் தலைவர்களும் வெளியூர்த் தலைவர்களும் அடங்கிய ஒரு சிறு மகாநாட்டை இராஜாஜியின் மாளிகையில் கூட்டினர். மகாத்மா எல்லாருக்கும் தமது சத்தி

யக்கிரக இயக்கத்தின் தத்துவங்களை விரிவாக எடுத்துக் கூறினுர். அடிகளின் சத்தியாக்கிரக இயக்கம் நாட்டுக்கே நவீனமான தொன்ருதலால், பெரும்பாலாருக்கு இவர் கூறும் தத்துவ நுட்பம் அவ்வளவாக விளங்கவில்லை. ஆனுல், நம் இராஜாஜியோ, அவற்றை வெகு விரைவில் கிரகித்துக்கொண்டதோடு, மயங்கிநிற்கும் மற்றவர்களுக்கும் மகாத்மாவோடு சேர்ந்து எடுத்து விளக்கலானுர். இது மகாத்மா உட்பட அனைவருக்கும் ஆச்சரியத்தை விளைத்தது. “பாபுஜி! நீங்கள் சத்தியாக்கிரக தத்துவங்களை விளக்கி நூல் எழுதியிருக்கிறீர்களா? ஆச்சாரியார் அதைப் படித்திருக்கவேண்டும். இல்லையேல், அவருக்கு இவ்வளவு நன்ருக எப்படித் தெரிந்திருக்க முடியும்?” என்று ஸ்ரீ ஸி. விஜயராகவாச்சாரியார் கேட்டார். காந்தியடிகள் புன்னகை புரிந்து, “நான் சத்தியாக்கிரக சம்பந்தமாக நூல் எதுவும் எழுதி வெளியிடவில்லை. ஆச்சாரியார் எனது சத்தியாக்கிரக தத்துவங்களை எவ்விதமோ நன்கு அறிந்து கொண்டிருக்கிருர்” என்று பதிலளித்தார்.

இச்சம்பவத்துக்குப் பிறகுதான் சென்னை மாநகரிலும் சத்தியாக்கிரக சபையொன்று நிறுவப்பட்டது. பிரபலஸ்தர்கள், அரசியல் அனுபவமுடையவர்கள் பலர் இருந்தும், அச்சபைக்கு இராஜாஜியே காரியதரிசியாக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். விளம்பரமோ ஆர்ப்பாட்டமோ இன்றிச் சேவை செய்யும் இயல்புடைய இராஜாஜி இப்பொறுப்பு வாய்ந்த பதவியை ஏற்றுக்கொள்ள முதலில் மறுத்தார். ஏனென்ருல், சென்னை நகர மக்கள் நன்கறிந்த எத்தலைவர்களேனும் இப்பதவியை ஏற்றுக்கொண்

டால், தாம் மறைமுகமாக அவருக்கு உதவி செய்து வரலாமென்பது இவருடைய எண்ணம்.

> ''இதனை இதனால் இவன்முடிக்கும் என்று ஆய்ந்து
> அதனை அவன்கண் விடல்''

என்ற திருக்குறளின் உண்மைப்பொருளை உணர்ந்த காந்தியடிகள், தமது சத்தியாக்கிரக இயக்கத் தத்து வத்தை மற்றெல்லாரைக் காட்டிலும் நன்குணர்ந்த இராஜாஜியே இச் சென்னைக் கிளைச் சபைக்குக் காரியதரிசியாக இருக்கவேண்டுமென்று மற்றவர்க ளோடு சேர்ந்து வற்புறுத்தினார். 'காங்கிரஸ் பீஷ்மர்' ஸ்ரீ. ஸி. விஜயராகவாச்சாரியார், 'இந்து' ஆசிரியர் ஸ்ரீ கஸ்தூரிரங்க ஐயங்கார் உள்ளிட்ட பல அரசியல் அறிஞர்களெல்லாம் இச் சபையில் அங்கம் வகித் தனர். எனவே, இச்சபை சென்னையில் சத்தியாக்கிரக இயக்க வளர்ச்சிக்குத் தீவிரமாக வேலை செய் திருக்கும் என்பதைக் கூறவும் வேண்டுமோ!

பிரம்மஞான சங்க ஸ்தாபகர்களி லொருவரும் தலைவருமாயிருந்த அன்னிபெஸண்டு அம்மையார் அயல் நாட்டைச் சேர்ந்தவராயிருந்தும், இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார் என் பதும், காங்கிரஸ் மகாசபையில் முக்கிய அங்கத் தினரா யிருந்தாரென்பதும் பெரும்பாலார் அறிந்த விஷயம். தமிழ்நாட்டுப் பொது வாழ்விலும், அரசியலி லும் சிலகாலம் அவ்வம்மையார் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தார்கள். குறிப்பாக, 1917-வது வருஷத் தில் பெஸண்டு அம்மையாரும் அவரைச் சேர்ந்தவர் களும் அரசியல் வாழ்வில் ஆதிக்கம் பெற்றிருந்தார் கள். அதுவரை, பெஸண்டு அம்மையார் திலகரைப்

பின்பற்றி வந்தமையால் இராஜாஜியும் அவரை ஆதரித்து வந்தார். ஹோம்ரூல் இயக்கக் கிளர்ச்சி காரணமாக 1918-இல் பெஸண்டு அம்மையார் சிறை சென்றபோது இராஜாஜி டாக்டர் நாயுடு முதலிய தோழர்களோடு தீவிரமாக வேலை செய்தார். இச்சமயத்தில், முதல் ஐரோப்பிய மஹாயுத்தம் மும்முரமாக நடந்துகொண்டிருந்த தென்பதை வாசகர்கள் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

'இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுத்தாலொழிய பிரிட்டிஷ் சர்க்காருக்கு இம்மஹாயுத்தத்தில் நாம் ஓர் உதவியும் செய்யக்கூடாது' என்று திலகர் பெருமான் தீவிரமாகக் கிளர்ச்சி செய்துவந்தார். 1918-வது ஆண்டில் காஞ்சிபுரத்தில் தமிழ் மாகாண மகாநாடு நடைபெற்றது. கவியரசி ஸ்ரீமதி சரோஜினி தேவியார் தலைமை வகித்தார். பெஸண்டு அம்மையார் அந்த மகாநாட்டில், 'இம்மஹா யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பிரிட்டிஷ் சர்க்காருக்கு இந்தியர் நிபந்தனையொன்றும் கேளாமலே உதவி புரியவேண்டும்' என்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

இராஜாஜிக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் திலகர் கொள்கைக்கு மாருகப் பெஸண்ட் அம்மையார் தீர்மானம் கொண்டுவந்தது சிறிதும் பிடிக்கவில்லை. எனவே, இராஜாஜியின் வலது கை போன்ற ஸ்ரீ சத்தியமூர்த்தி, 'பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுத்தாலொழிய, நாம் அவர்களுக்கு உதவி செய்யக்கூடாது' என்று ஒரு திருத்தப் பிரேரணை கொண்டுவந்தார். அசல் தீர்மானத்தை ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் போன்ற மிதவாதத் தோழர்கள் ஆதரித்தனர்.

தம்மைப்போன்ற ஒரு பெண்மணி இத்தீர் மானத்தைக் கொண்டு வந்திருக்கிறுர் என்ற அபி மானத்தாலோ என்னவோ ஸ்ரீமதி சரோஜினி அம்மையார்கூட இதற்குப் பேராதரவு தந்தார். முதலில் பெஸண்ட் அம்மையாரின் பேச்சுவன்மை யில் மகாநாட்டுப் பிரதிநிதிகள் பெரும்பாலோர் மயங்கிப்போயிருந்தனர். ஆனுல், ஸ்ரீ சத்தியமூர்த்தி அசல் தீர்மானத்தைக் கண்டித்துத் திருத்தப் பிரேரணை கொண்டுவந்து சாதுரியமாகப் பேசியதும் பிரதிநிதிகள் விழிப்படைந்தனர்.

எனவே, அசல் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்ட போது பெரும்பான்மையான ஓட்டுக்களால் தோல்வி யடைந்தது. ஆனுல் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் திருத்தப் பிரேரணையும் ஸ்ரீமதி சரோஜினி தேவியின் ஓர் ஓட் டால் தோற்றது. எப்படியோ, இதற்கு முன் அரசிய லில் பெஸண்ட் அம்மையாருக்கு இருந்த செல்வாக்கு இச் சம்பவத்துக்குப் பிறகு அழிந்தொழிந்தது.

இவ்வாண்டில்தான் டாக்டர் வரதராஜுலு நாயுடு மீது சர்க்கார் இராஜத்துவேஷ வழக்குத் தொடர்ந்திருந்தனர். வழக்கு மதுரையில் நடைபெற் றது. இது தமிழ்நாட்டு மக்களிடையே ஒருவிதப் பர பரப்பை உண்டுபண்ணியிருந்தது. பொதுமக்கள் இவ்வழக்கை நடத்துவதற்கு நிதி திரட்டி யுதவினர். இராஜாஜி வலிய வந்து ஸ்ரீ நாயுடு சார்பாகத் தோன்றி வாதித்தார். இவரது தீவிர முயற்சியாலும் வாதத் திறமையாலுமே இவ்வழக்கில் டாக்டர் நாயுடு விடுதலை யடைந்தார்.

## ஒத்துழையாமையும் சிறைவாசமும்

சர்க்காரோடு மகாத்மா காந்தி ஒத்துழையாமைப் போராட்டத்தைத் துவக்கிய காலம். சட்டமறுப்பு இயக்கத்துக்கு முன்வரை தமிழ்நாட்டு அரசியலில் பிரதான புருஷராய் விளங்கிய ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார் 1920-வது வருஷத்தொடக்கத்தில் தமது அட்வொகேட் ஜெனரல் பதவியைத் துறந்துவிட்டுக் காங்கிரஸில் சேர்ந்தார். அதே சமயம் திருநெல்வேலியில் நடைபெற்ற தமிழ் மாகாண மகாநாட்டின் தலைமைப் பதவியை அவருக்கு அளித்தார்கள். ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் தலைமையில் மிதவாதிகளும், சென்னைக் காங்கிரஸ் தலைவர்களும் இராஜாஜியைத் தலைவராகக் கொண்ட வெளியூர்க் காங்கிரஸ்காரர்களும் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

இதுவரை சென்னைக் காங்கிரஸ் தலைவர்களும், வெளியூர்க் காங்கிரஸ்காரர்களும் சர்க்காரையும், சர்க்காருக்கு ஆதரவளித்துவந்த மிதவாதக் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி ஆகியவைகளையும் எதிர்த்துப் போராடுவதிலேயே கவனம் செலுத்தி ஒற்றுமையாக வேலை செய்துவந்தார்கள். ஆயினும், அரசியலிலும், பொதுவாழ்விலும் சென்னைக் காங்கிரஸ் தலைவர்களுக்கு இருந்துவரும் ஆதிக்கமும் செல்வாக்கும் வெளியூர்க் காங்கிரஸ்காரர்கள் மனத்தை உறுத்தி வந்தது.

இம்மகாநாட்டில், 'மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை திட்டத்தை ஏற்றுக்கொள்வதா? வேண்டாமா?' என்ற பிரச்னை ஏற்பட்டது. சென்னைக்

காங்கிரஸ் தலைவர்கள்கூட மகாத்மாவின் ஒத்துழை யாத் திட்டத்தை ஏற்கத் தயங்கினரெனின், மிதவாதி கள் இதைக் கண்டு மருண்டதைச் சொல்ல வேண்டுமோ! இராஜாஜி கோஷ்டியாரே ஒத்துழை யாமைக்கு முழு ஆதரவளித்தனர். சென்னைக் காங்கிரஸ் தலைவர்களும் மிதவாதிகளும் தீவிரமாக எதிர்த்தும், ஒத்துழையாத் திட்டத்தை ஏற்று நடத்த வேண்டுமென்ற இராஜாஜியின் கொள்கையே மகா நாட்டில் வெற்றியுடன் நிறைவேறியது. இதன் பயனாக, சென்னைக் காங்கிரஸ் தலைவர்களின் அரசியல் செல்வாக்கு ஒரு படி தாழ்ந்ததென்றே சொல்லவேண்டும்.

மாண்டேகு-செம்ஸ்போர்டு அரசியல் சீர் திருத்தம் சட்டமானது பற்றித் தங்களுக்கு ஏற் பட்டுள்ள அதிருப்தியைக் காண்பித்துச் சுயராஜ்யமே தங்கள் லட்சியம் என்று சர்க்காருக்குத் தெரிவிக் கவும், பஞ்சாப் படுகொலைக்குப் பரிகாரம் தேடவுமே மகாத்மாகாந்தி ஒத்துழையா இயக்கத்தை ஆரம்பித் தார் என்பதைக் குறிப்பிடல் அவசியம். 1920-ஆம் ஆண்டில் இவ் வியக்கத்தைப்பற்றி ஆலோசித்து ஒரு வித முடிவுக்கு வர, கல்கத்தாவில் விசேஷ காங்கிரஸ் ஒன்று கூடியது

அந்தக் காங்கிரஸுக்கு இராஜாஜியும் அவர் தோழர்களும் விஜயம் செய்திருந்தனர். கூட்டத்தில் காந்தியடிகளின் ஒத்துழையா இயக்கத் திட்டத்தைப் பண்டித மதன மோகன மாளவியா, டாக்டர் அன்னி பெஸண்ட் போன்ற தலைவர்கள் தீவிரமாக எதிர்த் தனர். ஆயினும், இராஜாஜி கோஷ்டியாரின் தீவிர

முயற்சியால் ஒத்துழையாத் திட்டம் பெரும்பாலான ஓட்டுகளால் நிறைவேறியது. இம்முடிவைக் கண்ட தும், இதுவரை தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியில் ஸ்தானங்கள் வகித்துவந்த சென்னைத் தலைவர்கள், தங்கள் பதவிகளினின்றும் விலகிக்கொண்டனர். ஆகவே, இராஜாஜி அக் கமிட்டியில் வேறு சிலரை நியமித்து வேலை செய்துவந்தார். ஆனால், அவர் மட்டும் அக்கமிட்டியில் முக்கியப் பதவியெதுவும் வகிக்காது சாதாரண அங்கத்தினராகவே இருந்து வந்தார்,

ஒத்துழையா இயக்கக் கொள்கைகளைப் பரப்பு வதற்கு மகாத்மா காந்தி ஷௌகத் அலியுடன் இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்தது போலவே, இராஜாஜியும் தம் தோழர்களோடு தமிழ் நாடெங்கும் ஒத்துழையாப் பிரசாரம் செய்துவந்தார்.

ஒத்துழையா இயக்கக் கிளர்ச்சி எல்லா இடங் களிலும் பரவியதுபோல் கேரளத்திலும் தலையெடுத் தது. அங்குள்ள மக்கள் அதை உற்சாகத்துடன் வரவேற்றனர். அச்சமயம் மலையாளத்தில் மாப்பிள்ளைக் கலகம் ஏற்பட்டு ஒரே குழப்பமாக இருந்ததால், அஹிம்சா தத்துவத்தைப் பிரசாரம் செய்ய 1921-ஆம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் இராஜாஜி ஜனாப் யாகூப் ஹாஸன் முதலியோருடன் அவ்விடத்துக்குச் சென்றார். சர்க்கார் இவர்கள்மீது தடையுத்தரவு பிறப்பித்தனர். இத் தடையுத்தரவை மீறிய குற்றத்துக்காக ஜனாப் யாகூப் ஹாஸன் முதலிய சிலர் தண்டிக்கப்பட்டனர்.

இதற்குள் அவ் வருஷக் கடைசியிலேயே நாகபுரியில் காங்கிரஸ் நடைபெற்றது. அதில் ஒத்துழையா இயக்கத்தின் திட்டங்கள் வகுக்கப்பட்டன. சட்ட சபைகள், கலாசாலைகள், நீதிமன்றங்கள் ஆகியவைகளைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும், கதர் அணிதல், மதுவிலக்கு, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமை யொழிப்பு ஆகிய நிர்மாண வேலைத் திட்டங்களை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்றும் அந்தத் திட்டங்களில் விவரிக்கப்பட்டிருந்தன. அவையனைத்தும் காங்கிரஸ் மகா சபையால் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேறின. இங்கேதான் இராஜாஜி காங்கிரஸ் மகாசபையின் பொதுக் காரியதரிசிகளில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த ஒத்துழையா இயக்கத்தின்போதுதான், ஸ்ரீஎஸ். ராமநாதன், ஸ்ரீ கே. சந்தானம், ஸ்ரீ என். எஸ். வரதாச்சாரியார், ஸ்ரீ கே. எஸ். சுப்பிரமணியம் முதலிய வாலிபர்கள் கோர்ட்டைப் பகிஷ்கரித்து விட்டு இராஜாஜியோடு சேர்ந்து, அவருக்குப் பல வகையிலும் உதவியாக இருந்தனர்.

அக்காலத்தில் சென்னைத் தினசரிப் பத்திரிகைகள் ஒத்துழையா இயக்கத்துக்கு ஆதரவாக இல்லை. அரசியலில் முக்கியத்துவம் வகித்துவந்த தலைவர்கள், பிரபல பத்திரிகைகள், இவர்களின் எதிர்ப்புகளைச் சமாளித்துக்கொண்டு இராஜாஜி ஒத்துழையாமை இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தி, மற்ற மாகாணங்களைப்போல் நம் மாகாணத்துக்கும் நற்பெயர் வாங்கித் தந்தாரென்றால் அவரது விடா முயற்சியும், மனத் திண்மையும், பேருழைப்புமே அதற்குக் காரணமாகும்.

இராஜாஜியின் ஒத்துழையா இயக்கப் பிரசாரத்தைக் கேட்டு, தமிழ் நாட்டில் கலாசாலைகளைப் பகிஷ்கரித்து விட்டு வந்த மாணவர்களும், கோர்ட்டுகளைப் பகிஷ்கரித்த வக்கீல்களும், சட்டசபைகளை விட்டு வெளியேறிய கனவான்களும் கணக்கற்றவர்களாவர். 'மாணவர்களே ! சர்க்கார் கலாசாலைகளைப் பகிஷ்கரியுங்கள் ; தேச சேவையில் ஈடுபடுங்கள்' என்று ஒத்துழையாவாதிகள் ஒரு பக்கமும், 'மாணவர்களே ! அரசியலில் ஈடுபடாதீர்கள்' என்று மிதவாதிகள் மற்றொரு பக்கமும் எழுப்பிய முழக்கங்களைக் கேட்டு இன்னது செய்வதென அறியாது மயங்கிய மாணவர்கள் பலருக்கு இராஜாஜி நல்வழி காட்டினர்.

அவர்களில் சாந்திநிகேதனத்தில் தமிழாசிரியராயிருந்த ஸ்ரீ வி. தேவாசாரியன் என்பார் ஒருவர். இவர் சர்க்கார் ஆதரவில் நடைபெறும் மயிலாப்பூர், பி. எஸ். ஹைஸ்கூலில் படித்துக்கொண்டிருந்தார். இவர் அதைப் பகிஷ்கரித்து இயக்கத்தில் சேரவேண்டுமென்று எண்ணமிருந்தாலும், தந்தையார் இதற்கு நேர்மாருக இருந்தார். ஆகவே, இவர் தமது தர்ம சங்கடமான நிலைமையை விளக்கி இராஜாஜிக்குக் கடிதம் எழுதியிருந்தார். இராஜாஜி உடனே அவரை நேரில் வரவழைத்துப் பேசி அவர் நோக்கத்தை அறிந்தார். பிறகு இராஜாஜி தக்ஷிண பாரத ஹிந்தி பிரசார சபையின் காரியதரிசியாயிருந்த ஸ்ரீ ஹரிஹர சர்மாவுக்கு ஒரு கடிதமெழுதி இவரிடம் கொடுத்தனுப்பினர். அதன்படி ஸ்ரீ தேவாசாரியனுக்கு ஹிந்தி கற்பிக்கப்பட்டு, பிரயாகை என்னு

மிடத்திலுள்ள ஹிந்தி போதனுமுறைப் பாடசாலைக்கு அனுப்ப ஏற்பாடாயிற்று. ஆனல், ஸ்ரீ தேவாசாரியனின் தந்தையார் தம் மகனைப் பிரயாகைக்கு அனுப்ப மறுத்துவிட்டார். இது எவ்வாருயினும், இராஜாஜி தம் உதவியை நாடிவந்த மாணவருக்கு எவ்வளவு உதவி செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்தார் என்பது இங்கே கவனிக்கத்தக்கது.

இராஜாஜி ஒத்துழையா இயக்க சம்பந்தமாகப் பிரசாரம் செய்யத் தொடங்கும்போதே தம் புதல்வர்களைக் கலாசாலையை விட்டுவிடும்படி கட்டளையிட்டிருந்தார். அச்சமயம் மூத்தபுதல்வர் ஸ்ரீகிருஷ்ணசாமி, பி. ஏ., ஜூனியர் வகுப்பிலும், இரண்டாவது குமாரர் ஸ்ரீ ராமசாமி இண்டர்மீடியட் வகுப்பிலும் வாசித்துக் கொண்டிருந்தனர். ஆனல், எக்காரணத்தாலோ அவர்கள் கலாசாலையை விட்டு நிற்கவில்லை. இயக்கப் பிரசார சம்பந்தமாக அடிக்கடி வெளியூர் போய்வந்து கொண்டிருந்த இராஜாஜி தம் புதல்வர்கள் இன்னும் கலாசாலையைப் பகிஷ்கரிக்காதிருப்பதைக் கவனிக்கவில்லை. ஆனல், ஒரு பொல்லாத மாணவன் இராஜாஜி பிரசங்கம் செய்த ஒரு பொதுக் கூட்டத்தில், 'உங்கள் பிள்ளைகள் கலாசாலையைப் பகிஷ்கரித்துவிட்டார்களா ?' என்று குறும்பாக ஒரு கேள்வி கேட்டு விட்டான். அப்போதுதான் இராஜாஜி உண்மை நிலையை உணர்ந்து அடங்காக் கோபங்கொண்டார்.

வீடு திரும்பியதும், இராஜாஜி தம் பிள்ளைகளை நோக்கி, 'நீங்கள் முதலில் கலாசாலைக்கு ராஜிநாமா

எழுதிக் கொடுத்துவிட்டு வந்தாலாச்சு; இல்லா விடில் வீட்டில் அடியெடுத்து வைக்கக்கூடாது' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். இரு குமாரர் களும் கலாசாலைக்கு ராஜிநாமாக் கொடுத்துவிட்டு வந்த பிறகே, இராஜாஜி அவர்களை வீட்டில் அனுமதித்தார். இதிலிருந்து இராஜாஜி வெறும் வாய்ப்பேச்சு வீரரல்லர் என்று தெரிகிற தன்றோ! சொல்வதொன்று, செய்வதொன்று என்ற வழ வழாக் கொள்கை அவரிடம் கிடையாது. தம்மை முதலில் திருத்திக்கொண்டே, அதாவது தாம் எதைச் சொல்ல விரும்புகிறாரோ அதை முதலில் தாம் செய்து காட்டிய பிறகே, பிறருக்கு அதுபற்றி உபதேசம் செய்வார் என்பது இது போன்ற பல சம்பவங்களால் நாம் அறியலாம்.

ஒத்துழையா இயக்கத்தில் வெற்றி பெற்றதன் பய னாக, இராஜாஜி பெயர் வெகு பிரபலமடைந்தது. அவருக்கு என்றுமில்லாச் செல்வாக்கும் ஆதிக்கமும் ஏற்பட்டன. தமிழ் மக்கள் அவரைத் தெய்வமெனக் கொண்டாடினர். இந்நிலைமையைக் கண்ட பிறகு தான், சென்னைத் தலைவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியை இராஜாஜியின் ஆதிக்கத்தில் விட்டுத் தாங்கள் விலகிக்கொண்டது தவறு என உணர்ந் தனர். ஆகவே, அவர்கள் பழையபடி அக்கமிட்டி யைக் கைப்பற்றப் பகீரதப் பிரயத்தனம் செய்தனர். ஆனால். அவர்களுக்குத் தமிழ் மக்களது ஆதரவு கிடைக்கவில்லை. அவர்கள் தங்களது முயற்சியில் தோல்வியுற்றனர்.

இராஜாஜி பல ஜில்லாக்களுக்கும் சென்று ஒத்துழையாப் பிரசாரம் செய்துகொண்டு வருகையில்

வேலூரில் இ. பி. கோ. 144 - ஆம் பிரிவின்படி அவருக்குத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இராஜாஜி இதைக் கண்டு சிறிதும் அஞ்சாது, அத் தடையுத்தரவை மீறி அங்கு பிரசங்கம் செய்தார். அதன் பயனாக, அவர் போலீஸாரால் கைது செய்யப் பட்டார். சர்க்கார் தடையுத்தரவை மீறியதாகக் குற்றம் சாட்டி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் இவர் மீது வழக்குத் தொடுத்தனர். விசாரணை நடைபெற்றது. இராஜாஜி எதிர் வழக்காடவேயில்லை. மாஜிஸ்டிரேட் அவருக்கு மூன்று மாதம் வெறுங்காவல் தண்டனை விதித்தார். 1921-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 21-ஆம் தேதியன்று இராஜாஜி, அச்சமயம் தமிழ் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராயிருந்த ஆரணி ஸ்ரீசுப்பிரமணிய சாஸ்திரியாருடன் வேலூர்ச் சிறைச்சாலையை அடைந்தார். இராஜாஜியைப் பின் பற்றித் தமிழ் நாட்டில் பலர் சட்டத்தை மீறிச் சிறை புகுந்தனர். சிறைச்சாலையில் இராஜாஜி இருக்கை யில், அங்கே தமக்கு ஏற்பட்ட அநுபவங்களை யெல் லாம் நாடோறும் குறித்து வைத்தார். இக்குறிப்புக் களே பின்னர் "சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி யாரின் சிறைவாசம்" என்ற பெயரோடு புத்தக ரூப மாக வெளியிடப்பட்டன. இதில் பல ரஸமான குறிப்புகள் காணப்படுகின்றன. இது பொதுவாக, அனைவரும் படித்தறியக் கூடிய அரிய நூலாகும். இதுவன்றி, ஸோக்ரதர் என்ற பெயருடன் கிரேக்க தேச மகாஞானியான 'சாக்ரடீஸ்' என்பாரைப்பற்றி அழகிய சிறு நூலொன்று எழுதியிருக்கிறார். இதுவே இராஜாஜி முதல் முதலாக எழுதிய தமிழ் நூலாகும்.

இராஜாஜி வேலூரில் சிறை புகுந்தபோது, காச நோயால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அத்துடன், காலில் கட்டியும், சிரங்கும் ஏற்பட்டு அவரைத் துன்புறுத்தி வந்தன. இவ்வளவு தேக அசௌக்கியமான நிலையிலும் அவர் தேசத்துக்காகச் சிறை புகுவதைத் தமது பாக்கியமாகக் கருதினர். 'உலகில் நியாயமான ஒரு காரணத்திற்காக இப்படிச் சிறை புக வெகு சிலருக்குத்தான் பாக்கியம் கிடைக்கிறது. அப்படிப் போன வெகு சிலரில் நம் நாட்டார் எவ்வளவு குறைவு? அச்சிலருள் தற்சமயம் நான் ஒருவனன்றோ! இக் கௌரவத்தை யடைய நான் மிக அதிருஷ்டசாலியாகவே இருக்கவேண்டும்' என்று அவர் தமது சிறைக்குறிப்பில் கூறுவதிலிருந்து இது தெரிகிறது. ஒத்துழையாப் போராட்டக் காலத்தில் தமிழ்நாட்டார் போதிய பங்கு எடுத்துக்கொண்டு சேவை செய்யவில்லையே என்று அவர் கவலை கொண்டிருந்தார் என்பதும் இதிலிருந்து விளங்குகிறதல்லவா!

இராஜாஜி தமது தண்டனைக் காலம் முடிவுற்று 1922-ஆம் வருடம் மார்ச்சு மாதம் 20-ஆம் தேதி யன்று விடுதலை யடைந்தார். சிறைவாயிலில் ஸ்ரீ சிங்காரவேலு செட்டியாரும், ஸ்ரீ ஈ. வே. ராமசாமி நாயக்கரும் இராஜாஜியை எதிர்கொண்டு அழைத்துச் சென்றனர். தேசியப் போராட்டம் காரணமாகச் சிறைசென்றாலும், விடுதலையடையச் சில நாட்கள் இருக்கும்போதே தாங்கள் சிறையிலிருந்து வெளியேறுகையில் ஆடம்பரமாக வரவேற்பு அளிப்பதற்குத் தக்க ஏற்பாடு செய்யும்படி தங்கள் நண்பர்களுக்கு அறிவிக்கும் தேசபக்தர்களும் சிலர் உண்டல்

லவா ? பத்திரிகை நிருபர்களுக்குத் தங்கள் சிறையநுபவத்தைப்பற்றிப் பிரமாதமாகப் பேட்டியளிப்போரும், பொதுக் கூட்டங்களில் தாங்கள் சிறையில் அநுபவித்த கஷ்டங்களைப்பற்றி வர்ணித்துக் கூறுவோரும் எத்தனையோ பேர் ! ஆனால் இராஜாஜியோ இவற்றிற்கெல்லாம் நேர் மாறானவர். இவரது விடுதலை நாளைக் குறித்து ஒருவருக்கும் அறிவிக்கவில்லை. நண்பர்களாகத் தெரிந்து அவரை வரவேற்கக் காத்திருந்தும், கூடுமானவரையில் ஆடம்பர வரவேற்பினின்றும் தப்பித்துக்கொள்ளவே முயன்றார். இராஜாஜி விடுதலை பெறுவதை எவ்வாறோ அறிந்து வேலூர், ஆரணி முதலிய இடங்களிலிருந்து வந்த தேசபக்த இளைஞர்கள் பலர் இவருக்குத் தங்கள் அன்பைத் தெரிவிக்கவேண்டிப் பூமாலை முதலியன போட முயன்றனர். ஆனால், இராஜாஜி இதற்குச் சிறிதும் இணங்கவில்லை. கடைசியில், ஸ்ரீ ஈ. வே. ராமசாமி நாயக்கர் முதலிய நண்பர்கள் வற்புறுத்தியதன் பேரில் ஒருவாறு இணங்கினார். இவரைப் பேட்டி காண வந்த பத்திரிகை நிருபர்களுக்கு ஒன்றும் கூற மறுத்துவிட்டார். அன்று மாலை நடந்த பொதுக்கூட்டத்திலும் அவர் எதுவும் பேசவில்லை.

இராஜாஜி சிறையிலிருந்து வெளிவருவதற்குள், நாட்டில் பல பெரிய மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. ஐக்கிய மாகாணத்திலுள்ள சௌரி சௌரா என்னும் இடத்திலும் சென்னை மாநகரிலும் நடந்த பலாத்காரச் செயல்களைக் கண்டு, மகாத்மா காந்தி சட்ட மறுப்பை நிறுத்தலானார். 1922 பிப்ரவரி மாதம் 12-ஆம் தேதி பர்டோலியில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி இதை அங்கீகரித்தது. அடுத்து டில்லியில்

கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி இதை அங்கீகரித்துக்கொண்டு, தனிப்பட்டோர் சட்ட மறுப்புச் செய்ய அதிகாரம் அளித்தது. யாரோ சிலர் தவறு இழைத்து விட்டதற்காகத் தேசத்தையே தண்டிக்கும் முறையில் சட்ட மறுப்பை நிறுத்தியது சரியல்ல எனக் கூறிப் பண்டித மோதிலால் நேரு, லாலா லஜபதிராய் போன்றவர்கள் மகாத்மாவை எதிர்த்தார்கள். மற்றும் பலரும் காந்தியடிகள் செய்கையைப் பலமாகக் கண்டித்தனர். இந்நிலைமையைக் கண்டு மகாத்மாவின் செல்வாக்கு ஒடுங்கிவிட்டதென்று சர்க்கார் மனப்பால் குடித்து, அவரை மார்ச்சு மாதம் 13-ந்தேதி ராஜத்துவேஷக் குற்றஞ் சாட்டிக் கைது செய்து ஆறு ஆண்டு தண்டனையளித்தனர். சட்டமறுப்புத் தலைவரைச் சிறைக்குள் புகுத்திய பிறகு, சர்க்கார் அடக்கு முறைப் பாணத்தை மிகக் கடுமையாகப் பிரயோகித்து அவரது சைனியத்தைச் சிதறடித்து அழிக்க முயன்றனர். காந்தியடிகள் சிறைவாசமும் சர்க்கார் அடக்கு முறைக் கடுமையும் சேர்ந்து தேசமக்களைச் சோர்வுறச் செய்தன.

### சுயராஜ்யக் கட்சிக்குத் தீவிர எதிர்ப்பு

1922-ம் ஆண்டு ஜூன் மாதம் லக்ஷ்மணபுரியில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி சட்டமறுப்பு இயக்கத்தின் பலாபலன் என்னவென்று கவனிக்கத் தொடங்கியது. இச்சமயத்தில் சித்தரஞ்சன தாஸர், விட்டல்பாய் படேல் போன்றவர்கள் தற்போதைய காங்கிரஸ் கொள்கையை மாற்றி, அதி

கார வர்க்கத்தினருடைய கோட்டைகளான சட்ட சபைகளில் பிரவேசித்து அங்கு ஒத்துழையாமையை அநுஷ்டிக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். முடிவில் நாட்டின் நிலைமையைக் கண்டறிய ஒரு சிலரைச் சுற்றுப் பிரயாணம் செய்ய நியமிக்கும்படி அ. இ. கா. கமிட்டியார் காங்கிரஸ் தலைவரை வேண்டிக்கொண்டனர். அதன்படி ஏற்பட்ட சுற்றுப் பிரயாணக் கமிட்டியில், பண்டித மோதிலால் நேரு, டாக்டர் அன்சாரி, விட்டல்பாய் படேல், ஸ்ரீ எஸ். கஸ்தூரிரங்க ஐயங்கார் முதலியவர்களோடு இராஜாஜியும் ஒருவராக நியமிக்கப்பட்டார். சில மாதங்களில் சட்டமறுப்பு விசாரணைக் கமிட்டி இந்தியா முழுதும் சுற்றுப்பிரயாணஞ் செய்து முடித்தது. கடைசியாக, இக்கமிட்டி ஓர் அறிக்கை வெளியிட்டது. அதில் சட்டமறுப்பைக் கைவிட்டு விட கமிட்டியார் சிபார்சு செய்திருந்தனர். ஆனால், சட்ட சபைப் பிரவேசம் செய்வதைப்பற்றி இவர்களிடையே அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. பண்டித மோதிலால் நேரு, விட்டல்பாய் படேல், ஹகீம் அஜ்மல் கான் ஆகிய மூவரும் சட்ட சபைப் பிரவேசத்தை ஆதரித்தனர். டாக்டர் அன்சாரி, இராஜாஜி, ஸ்ரீ கஸ்தூரிரங்க ஐயங்கார் ஆகிய மூவரும் சட்ட சபைப் பிரவேசம் கூடாதென எதிர்த்தனர்.

இவ்விதம் ஒத்துழையா இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்குள் இருவித அபிப்பிராயங்கள் ஏற்படவே, இவ்விரு உணர்ச்சிகளும் நாட்டில் சிறிது சிறிதாகப் பரவலாயின. நாட்டில் மாறுதல் வேண்டாதாருக்குச் செல்வாக்கு எவ்வளவு இருந்ததோ, அதுபோலவே

மாறுதல் விரும்பும் கோஷ்டியாருக்கும் செல்வாக்கு ஏற்படலாயிற்று.

1922-ஆம் ஆண்டு நவம்பர் மீ 20, 24-தேதிகளில் கல்கத்தாவில் நடைபெற்ற அ. இ. கா. கமிட்டிக் கூட்டம் காங்கிரஸின் சரித்திரத்தில் முக்கியமானது. இக் கூட்டத்தில் பண்டித மோதிலால் நேரு, தேசபந்து தாஸ் முதலிய தலைவர்கள் சட்டசபைப் பிரவேசத்தை ஆதரித்துத் தீர்மானம் கொண்டுவந்து தீவிரமாகப் பேசினர். இவர்கள் கட்சியை மகாராஷ்டிரப் பிரதிநிதிகள் முழு மனதாக ஆதரித்தனர். இராஜாஜி முதலிய ஒத்துழையாதாரோ சட்டசபைப் பிரவேசத் திட்டத்தைப் பலமாக எதிர்த்தனர். இதன் பயனாக, இம் முக்கியப் பிரச்னை கயா காங்கிரஸ் வரை ஒத்திவைக்கப்பட்டது.

கயா காங்கிரஸ் அகில இந்திய காங்கிரஸ் எல்லாவற்றிலும் மிக முக்கியமானதாகும்.

இதற்குத் தலைமை வகித்த தேசபந்து தாஸ் காங்கிரஸின் வேலை முறையையும் திட்டத்தையும் மாற்ற வேண்டுமென்று வற்புறுத்தித் தம் கட்சியை விளக்கினார். அவருடைய தலைமைப் பேருரை உணர்ச்சியும் உண்மையும் வீரமும் கொண்டு விளங்கியது.

தேசிய போராட்டத்தில் கலந்துகொண்ட எல்லாத் தலைவர்களும் இக்காங்கிரஸுக்கு விஜயம் செய்திருந்தனர். இவர்கள் மூன்று கட்சிகளாகப் பிரிந்து தத்தம் அபிப்பிராயங்களை நிறைவேற்ற முயன்றனர். சர்க்கார் ஏற்படுத்தும் சட்ட சபைத்

தேர்தல்களில் நின்று வெற்றி பெற்றதும், சட்ட சபைகளுக்குப் போவதில்லை; போனாலும் ராஜ விசுவாசப் பிரமாணம் செய்வதில்லை என்று ஒரு சாரார் கூறினர். சட்டசபை வேலையில் தீவிர உணர்ச்சி காட்டிய மற்றொரு சாரார் சட்டசபைகளைக் கைப்பற்றி மந்திரி சபைகளை ஏற்படுத்த முடியாமல் செய்து சர்க்கார் மந்திராலோசனைச் சபைகளை உடைத்து, சர்க்காரோடு போராடி வெற்றி பெறுவதாக உறுதி கூறினர். காந்தியடிகளைப் பின்பற்றும் மாறுதல் வேண்டாதாரோ எக்காரணத்தை முன்னிட்டும் சட்ட சபைப் பிரவேசம் கூடாதென்று வாதாடினர்.

இக்காங்கிரஸில் வரவேற்புக் கழகத் தலைவராயிருந்த பாபு இராஜேந்திர பிரசாத் தமது வரவேற்புரையில்,

"சட்டசபைப் பகிஷ்காரத்தின் உண்மையான நோக்கத்தை இன்னும் பலர் சரியாக உணராமல் இருக்கிறார்கள். அவைகள் கேவலம் மாயா ஸ்தாபனங்களே. தவிர, நம்முடைய உண்மையான பிரதிநிதி ஸ்தாபனங்களல்ல என்பதை நாம் உலகின் முன் மெய்ப்பித்துக் காட்ட விரும்புகிறோம். சட்ட சபை சென்று வீண்காலம் கழிப்பவர்களைத் தடுத்து, தேச ஊழியத்தில் அவர்களைத் திருப்பவேண்டுமென்பது நம் இரண்டாவது நோக்கம். எந்த ஸ்தாபனங்களின் வாயிலாக அரசாட்சி நடத்தப்படுகிறதோ, அந்த ஸ்தாபனங்களை விட்டு நாம் விலகி, நம் ஒத்துழைப்பை வாபஸ் வாங்கிக்கொண்டு, அந்த ஸ்தாபனங்களுடைய இடத்தில், சுய முயற்சியால் நிர்மாணிக்கப்படும் புதிய ஸ்தாபனங்களை ஏற்படுத்த

வேண்டுமென்பது நம் நோக்கம்...சட்டசபைத் தேர்தல் காரணமாக, காங்கிரஸ்காரர்களுக்குள் வீண் கட்சிச் சண்டைகள் பிரமாதமாக வளர்ந்து விடுமோ என்று அஞ்சும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது ...... அரசாங்கத்தைப் பணிய வைக்கக் கூடியவை நம் நிர்மாண வேலைகளேயாகும்...... சட்டசபையில் நுழைந்த பின் ராஜவிசுவாசப் பிரமாணம் செய்ய மறுப்பதும் பின் வெளியேறுவதும் மறுபடியும் நுழைவதும் அரசாங்கத்தினுல் கொண்டு வரப்படும் தீர்மானங்களை நன்மை தீமை பாராமல் எதிர்ப்பதும் ஆகிய இத்தகைய காரியங்களெல்லாம் சிறுபிள்ளைத்தனமான காரியங்களே யாகும்'' என்று குறிப்பிட்டுப் பேசினுர்.

தலைவர் தேசபந்து தமது தலைமைப் பேருரையில் சட்டசபைப் பகிஷ்காரத்தைப் பற்றிப் பேசுகையில்,

"துரதிருஷ்ட வசமாக நமது நாட்டில் சட்டசபை விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் விவாதம் மிகவும் தவருனது என்று நான் கருதுகிறேன். உண்மையில் நம்முடைய திட்டத்தில் நாம் எவ்வித மாறுதலையும் செய்ய உத்தேசிக்கவில்லை. வேலைசெய்யும் முறையை மாற்றுவது பற்றித்தான் இப்போது பிரச்னை ஏற்பட்டிருக்கிறது. பர்டோலியில் திட்டத்தை மாற்ருமல் எப்படி நம்முடைய வேலை முறைகளை மாற்றிக் கொண்டோமோ அதைப் போலவே, சட்டசபை விஷயத்திலும் மாற்றிக்கொள்ள வேண்டுமென்பது தான் தற்போதைய உத்தேசம்......

"சட்டசபைப் பகிஷ்காரத்தை நான் எதிர்க்கவில்லை. புதிய சட்டசபைகளை நான் வெறுக்

கிறேன்......இதுவரை சட்டசபைகளை வெளியில் இருந்துகொண்டு பகிஷ்கரித்தோம். இனி உட் புகுந்தும் அவைகளைப் பகிஷ்கரிக்க வேண்டும். உட் புகுந்து அவைகளைத் திருத்தவேண்டும். அதுமுடியா விடில் அவைகளை அடியோடு ஒழிக்கவேண்டும். இங்ஙனம் சட்டசபைகளைத் தாக்குவது ஒத்துழை யாமைத் தத்துவத்துக்கு சற்றும் முரண்பட்டதல்ல என்பது எனது அழுத்தமான அபிப்பிராயம் ........ சண்டைக்குப் புறப்பட்ட சைனியங்கள் நடுவழியில் எதிரியுடன் உறவாட முடியுமா? நாம் ஒத்துழைப் பதற்குச் சட்டசபை செல்லவில்லை. நமது ஒத்துழைப்பை மறுக்கவே நாம் செல்லுகிறோம். நமது போராட்டத்தின் நோக்கம் மாறவில்லை; முறைதான் மாற்றப்படுகிறது" என்று தமது சட்டசபைப் பிரவே சத்தின் நோக்கத்தை நன்கு விளக்கினர்.

இவ்வளவு தூரம் தேசபந்து தாஸ் சட்டசபைப் பிரவேசத்தின் அவசியத்தை வற்புறுத்திக் கூறியும் பின் நடவடிக்கையின்போது இராஜாஜி வைதிக ஒத்துழையாதாரின் தலைவராயிருந்து, சட்டசபைப் பகிஷ்காரத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என ஒரு தீர்மானத்தைப் பிரேரேபித்துத் தம் கட்சியை நிலைநாட்டினர் இத்தீர்மானத்தின்மீது அவர் பேசிய பேச்சு காங்கிரஸ் பிரதிநிதிகள் மனத்தை முற்றும் கவர்ந்துவிட்டது.

"சட்டசபை பகிஷ்காரத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்னும் தீர்மானத்தைப் பரிபூரண மான அந்தரங்க சுத்தியுடன் பிரேரணை செய்கிறேன். இவ்விஷயத்தில் அபிப்பிராய பேதம் பலமாக இருந்து

வருவது எனக்குத் தெரியும். சட்டசபைகளைப் பகிஷ்கரித்துவிட வேண்டும் என்ற விஷயத்தில் நாம் ஒன்றுபட்டிக்கிறோம். ஆனால், எவ்வாறு பகிஷ்கரிப்பது என்ற விஷயத்தில்தான் அபிப்பிராயபேதம் ஏற்பட்டிருக்கிறது. சட்டசபைகளைப் பகிஷ்கரிப்பதற்குச் சிறந்த வழி, நான் அறிந்தவரையில், தேர்தல்களைப் பகிஷ்கரிப்பதுதான் என்பது என்னுடைய திடமான நம்பிக்கை. சட்டசபைகளை நீதியுள்ள ஸ்தாபனமாகப் பொருட்படுத்தி, அவைகளில் நுழைவதற்கு ஏற்பாடு செய்து தேர்தல்களில் ஓட்டுப் பெற்றுப் பின், அச்சபைகளைப் பகிஷ்கரிப்பதைவிட தேர்தல்களையே பகிஷ்கரித்து, சட்டசபைகளுக்கு வாக்குக் கொடுக்க மறுத்து, அவைகளைக் காலியாக வைப்பதுதான் சிறந்த முறை. நாம் இச்சட்டசபைகளை ஏற்றுக் கொள்ளவே மறுக்கவேண்டும். அங்ஙனம் மறுப்பதற்கு நல்ல வழி, தேர்தல்களில் கலந்துகொள்ள மறுப்பதுதான்.

"பலவிதமான பகிஷ்காரங்கள் சிபார்சு செய்யப் படுகின்றன. சட்டசபைத் தேர்தல்களில் அபேட்சகர்களாக நின்று வெற்றி பெற்று, பின் சட்டசபைகளில் உட்கார மறுத்துவிடுவது ஒன்று. சட்டசபைகளில் பெரும்பான்மையான ஸ்தானங்களைக் கைப்பற்றியபின், அரசாங்கத்துடன் ஒத்துழைக்க மறுத்துவிடுவது மற்றொன்று; சட்டசபைகளில் ஸ்தானம் வகித்துக் கொண்டு மந்திரிகளை நியமிக்க மறுத்துவிடுவது இன்னொன்று; மந்திரிகளையும் நியமித்துவிட்டு, அவர்களும் சட்டசபையும் ஒன்று சேர்ந்துகொண்டு சட்டசபை நடவாமல் செய்வது வேறொன்று ; மந்திரி

களை நியமித்து அரசாங்கத்தார் கொடுக்கும் வேலையை அவர்கள் செய்யாமல் தடுத்து விடுவது பிரிதொன்று : மந்திரிகளைக்கொண்டு நன்மையான காரியத்தைச் சாதித்துக்கொண்டு வேண்டாத காரியத்தைத் தடைசெய்வதும் ஒன்று. இப்படிப் பலவிதமாகக் கூறப்படும் இவ்வீண் பகிஷ்காரங்களில் உங்கள் காலத்தைப் பாழாக்க வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எது உண்மையான பகிஷ்காரமோ, எது அடிப்படையானதோ அந்த ஒன்றில் மட்டும் நாட்டம் செலுத்த வேண்டுகிறேன்.

"சென்ற முறை நாம் செய்த காரியத்தையே இம்முறையும் இன்னும் சுலபமாகச் செய்து முடிக்கவேண்டியது அவசியம் என்பதுதான் என் அபிப்பிராயம். நாம் செய்த பகிஷ்காரத்தின் பயனாக, சட்டசபைகளின் மதிப்பு அழிந்துவிட்டது. அவைகள் வெறுங் கேலிக்கூத்துகளாக இப்பொழுது கருதப்படுகின்றன. அரசாங்கத்தின் வேஷத்தை வெளிப்படுத்திவிட்டோம். சட்டசபைகள் வெறும் பொம்மைச் சபைகளே என்றும், அவற்றில் உள்ளவர்கள் நம்முடைய பிரதிநிதிகள் அல்லர் என்றும் உலகம் அறியும்படி வெளிப்படுத்திவிட்டோம். இங்குள்ள அரசாட்சி எவ்வளவு பொறுப்பற்ற தன்மையில் நடத்தப்படுகின்றது என்பதையும் விளக்கிவிட்டோம். 'நாங்களும் ஜனநாயக ஆட்சிதான் நடத்திவருகிறோம்' என்று அதிகாரவர்க்கம் இனி வேஷம் போடமுடியாது. இனி நாம் செய்ய வேண்டிய வேலை சட்டசபைகளே ஏற்படாமல் செய்வதற்குரிய மார்க்கமேயாகும். அதாவது, :தேர்தல்களை மீண்டும் பரிபூரணமாகப் பகிஷ்கரிப்பதே யாகும்.

"சட்டசபைகளே அழிந்துவிட்ட போதிலும் அரசாங்கம் நடந்துகொண்டிருக்கும் என்பது உண்மைதான். ஆனால், சட்டசபைகளின் பெயரால் இங்கு நடைபெற்றுவரும் ஆட்சியை அழித்துவிட வேண்டுமென்ற நமது நோக்கம் வெற்றியுடன் ஈடேறிவிடும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.''

இவ்விதம் இராஜாஜி அழுத்தந்திருத்தமாகப் பேசிய பின்னர், இத்தீர்மானத்தின் நோக்கத்தை அழித்துவிட எத்தனை திருத்தப் பிரேரணைகள் வந்தாலும் என்ன பயன்? ஸ்ரீ எஸ். சீனிவாச ஐயங்கார், "காங்கிரஸ்காரர்கள் தேர்தலுக்கு நின்று ஜனங்களுடைய ஆதரவால் வெற்றி பெற்றபின், சட்டசபைகளில் ஸ்தானம் வகிக்க மறுத்துவிடவேண்டும்' என்ற ஒரு திருத்தப் பிரேரணையைக் கொண்டுவந்து தமது வாதத் திறமையைக் காட்டி வற்புறுத்திப் பேசினார். ஸ்ரீ சி. எஸ். ரங்கையர் அதைத் தாங்கிப் பேசினர். ஆனால், இராஜாஜியின் சட்டசபைப் பகிஷ்காரத் தீர்மானமே காங்கிரஸ் பிரதிநிதிகளின் பரிபூரண ஆதரவைப் பெற்று நிறைவேறியது.

இவ்விதமே, மகாத்மா காந்தியின் கொள்கைக்கு முரண்பட்ட பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரத் தீர்மானத்தையும் எதிர்த்துப் பேசித் தோற்கடித்தார். இத்தீர்மானத்தைப் பிரேரேபித்தவர் நம் தமிழ் நாட்டின் பெரும் பேச்சாளர் ஸ்ரீ சத்தியமூர்த்தி. அவர் தம் நாவன்மையெல்லாம் காட்டிப் பேசி அத்தீர்மானத்தை நிறைவேற்றப் பார்த்தார். இதற்குக் காலஞ்சென்ற ஸ்ரீ ஏ. ரங்கசாமி ஐயங்காரின் ஆதரவும் இருந்தது. ஆனால், முதலில் இதை

எதிர்த்த ஸ்ரீ விஜயராகவாச்சாரியாரைப் பின்பற்றி, இராஜாஜி—

"கோபங் காரணமாக இத்தீர்மானத்தை நீங்கள் நிறைவேற்றிவிடக் கூடாது. இங்கிலாந்தின் சாமான்களை யெல்லாம் நாம் இன்று பகிஷ்காரம் செய்வதானல், அவைகளை இங்கு உற்பத்தி செய்யவும், நாம் வழி தேடவேண்டாமா? இங்கிலாந்தின் சாமான்களுக்குப் பதிலாக ஜப்பான் சாமான்களை வாங்குவதில் பயனென்ன? அன்னியத் துணி பகிஷ்காரத்தில் நமது முழுக் கவனத்தையும் செலுத்தி, கதர் இயக்கத்தை வெற்றியுறச் செய்வோம். நம்முடைய கவனம் முழுவதையும் பெறுவதற்கு அந்த ஓர் இயக்கமே போதுமானது.

"நமது கோபத்தை அடக்கியாளும் சக்தி படைத்த தலைவர் மகாத்மா காந்தி ஒருவரே. அவர் இப்பொழுது நம் மத்தியில் இல்லை; சிறையில் இருக்கிறார். அவர் ஆதி முதல் பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரத் தீர்மானத்தை எதிர்த்து வந்தார். அவர் இல்லாதிருக்கும் சமயம் பார்த்து, அவரால் எதிர்க்கப்பட்ட இத் தீர்மானத்தை நாம் இன்று நிறைவேற்றி விடுவது தகுதியா?" என்று மிக உருக்கமாகப் பேசினார். அப்புறம் அத் தீர்மானத்தின் கதி என்னவாயிருக்கும் என்று கூறவும் வேண்டுமோ! படுதோல்விதான்.

இவ்விதமாக, மகாத்மாவின் ஆத்மசக்தியும், இராஜாஜியின் விடாப்பிடியான கொள்கையும், சாதுரியமான பேச்சும் சேர்ந்து சட்டசபைப் பிரவேசத் திட்டத்தைத் தலை யெடுக்காது செய்து

விடவே, காங்கிரஸ் தலைவர் தேசபந்து தாஸ், முடிவுரையில்,

"இக்கூட்டத்தில் அபிப்பிராய பேதங்கள் தலையெடுத்து நின்றன. பெரும்பாலோருடைய தீர்மானம் இன்று எனக்குச் சாதகமாக இல்லை. எனினும், பெரும்பாலோர் எனது கொள்கையை ஏற்றுக் கொள்ளும் நாள் விரைவில் வந்துவிடும் என்ற நம்பிக்கையை நான் இழந்துவிடவில்லை. பிரிவுகளைக் கண்டு நான் அஞ்சவில்லை. நம்முள் வேற்றுமைகளை விட, ஒற்றுமையான அம்சங்கள் அதிகமாக இருப்பதை நான் காண்கிறேன். ஒரு விஷயத்தில் நாம் முற்றும் ஒற்றுமைப்பட்டிருக்கிறோம். இவ்விஷயத்தில் நீங்கள் என்னைப் பிரிக்க முடியாது. அதாவது, எப்படியேனும் இந்நாட்டுக்குச் சுதந்திரம் அதிவிரைவில் ஏற்படவேண்டுமென்பதே. பலாத்காரமற்ற ஒத்துழையாமைத் திட்டத்தைப்பற்றிய வரையிலும் வேற்றுமைகள் கிடையா" என்று கூறிப் பிரதிநிதிகளுக்கும் மற்றவர்களுக்கும் நன்றி செலுத்தினர்.

பின்னர், தேசபந்து தாஸ் காங்கிரஸ் முடிவடைந்ததும், தம் தலைவர் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார். அடுத்தபடியாக, சுயராஜ்யக் கட்சி என ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தினர். 1920-ஆம் ஆண்டிலேயே வங்க மாகாணக் காங்கிரஸ் கமிட்டி, சுயராஜ்யக் கட்சித் திட்டத்தைத் தொகுத்து வைத்திருந்தது; ஆதலால், இச் சுயராஜ்யக் கட்சியில் மேற்படி திட்டத்தைப் புகுத்தினர். இத்திட்டப்படி வங்காளச் சட்டசபையைத் தேசபந்து தாஸும், டில்லியையும் சிம்லாவையும் பண்டித மோதிலால்

நேருவும், நாகபுரி சட்ட சபையை மகாராஷ்டிரக் காங்கிரஸ் கமிட்டியும் கைப்பற்ற முயல்வதென்று தீர்மானிக்கப்பட்டது. ஒத்துழையா இயக்கத்தின் வேகம் சட்டசபை வேலைகளில் செல்லலாயிற்று.

தமது கட்சிக்கு ஆதரவு தேட தேசபந்து தாஸ் இந்தியா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்யலானார். அவ்விதம் சுற்றிவருகையில், தேசபந்து சேலத்துக்கும் விஜயம் செய்தார். டாக்டர் வரதராஜுலு நாயுடு தலைமையில் சுயராஜ்யக் கட்சியை ஆதரிப்பதற்காகப் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். தேசபந்து தாஸ் சுயராஜ்யக் கட்சியின் கொள்கைகளை விரிவாக எடுத்து விளக்கிப் பேசினார். அவர் ஆங்கிலத்தில் பேசியதை ஸ்ரீ சத்தியமூர்த்தி தமிழில் மொழிபெயர்த்துக் கூறினார்.

இக் கூட்டத்தில் இராஜாஜியும் பிரசன்னமாயிருந்ததால், தேசபந்து தாஸ் பேசி முடிந்ததும், இவர் எழுந்து சுயராஜ்யக் கட்சியின் முக்கிய வேலையான சட்டசபைப் பிரவேசத்தை நியாயமான காரணங்களைக் காட்டிக் கண்டித்து இதனால் நாட்டிற்கு நலனொன்றும் விளையாதென்று அழுத்தந் திருத்தமாகக் கூறிப் பிரசங்கித்தார். எனவே, தேசபந்து தாஸ் பிரசங்கத்தைவிட, இராஜாஜியின் ஆணித்தரமான பிரசங்கமே மக்கள் மனத்தைக் கவர்ந்ததால், எதிர்பார்த்த அளவு சேலத்தில் சுயராஜ்யக் கட்சிக்கு ஆதரவு கிடைக்கவில்லை.

இவ்விதமே இராஜாஜி நாடெங்கும் சட்டசபைப் பிரவேசத் திட்டத்தை எதிர்த்து அல்லும் பகலும்

பிரசாரம் செய்யலானர். சட்டசபைப்பிரவேசத்தினல் என்ன என்ன தீமைகள் நேரும் என்பதை வெகு திறமையாக எடுத்துக்காட்டிப் பல இடங்களிலும் பிரசங்கம் செய்தார். மற்ற மாறுதல் வேண்டாதார்களைக் காட்டிலும் இராஜாஜியின் தீவிர எதிர்ப்பைச் சுயராஜ்யக் கட்சியாரால் சமாளிக்க முடியவில்லை. ஆகவே, அலகாபாத்தில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், மாறுதல் வேண்டாதாரும் சுயராஜ்யக் கட்சியினரும் ஒரு விதச் சமரசத்துக்கு வரவேண்டியதாயிற்று. ஏப்ரல் மாதம் 30-ஆம் தேதிவரை இரு தரப்பினரும் சட்டசபைப் பிரவேசத்தைப் பற்றிப் பிரசாரம் செய்வதில்லை என்று ஒப்புக்கொண்டு, அதற்கிடையில் மற்ற வேலைகளைக் கவனிப்பதாகச் சம்மதித்தனர். அதற்குப் பிறகு தத்தம் கட்சிப் போக்குப்படி வேலை செய்து கொள்ள உரிமை யளிக்கப்பட்டது.

எனவே, இராஜாஜி, பாபு ராஜேந்திர பிரசாத், ஸேட் ஜம்னுலால் பஜாஜ், தேவதாஸ் காந்தி ஆகியோர் நிர்மாண வேலைத்திட்டப் பிரசாரத்தை வெகு மும்முரமாக நடத்தலாயினர். 1923-ஆம் ஆண்டு, மே மீ 25,26,27-ஆம் தேதிகளில் பம்பாயில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் இவர்கள் தங்கள் வேலையைப்பற்றி ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தனர். அதே சமயத்தில் கூடிய மற்ருெரு கமிட்டிக் கூட்டத்தில் சட்டசபைப் பிரவேசத்தைக் கண்டித்து எதிர்ப்பிரசாரம் செய்யக் கூடாதென்று தீர்மானிக்கப் பட்டது. இது கயா காங்கிரஸ் தீர்மானத்திற்கு மாறுபட்டதென்று கருதி இராஜாஜி,

இராஜேந்திரப் பிரசாத், வல்லபபாய் படேல், பிரிஜ் கிஷோர் பிரஸாத், கங்காதரராவ் தேஷ்பாண்டே, ஜம்னுலால் பஜாஜ் ஆகியோர், காரியக் கமிட்டியிலிருந்து ராஜிநாமா செய்தனர். இராஜாஜி முதலியவர்களை ராஜிநாமாச் செய்யவேண்டா மென்று பண்டித ஜவஹர்லால் நேரு வெகுவாகக் கேட்டுக் கொண்டும் பயனில்லை. மாறுதல் வேண்டாத தலைவர்களுடைய நிலைமையை விளக்கியும், கயா காங்கிரஸ் தீர்மானத்தோடு அகில இந்தியக் கமிட்டித் தீர்மானம் எவ்விதம் மாறுகிறது என்பதை எடுத்துக் காட்டியும், சட்டசபைப் பகிஷ்காரத்தின் அவசியத்தை வற்புறுத்தியும் இராஜாஜி தமிழில் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டுப் பரவச் செய்தார்.

ஆகவே, மேற்படி காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் ராஜிநாமாவும், காங்கிரஸ் தலைவர் தேசபந்து தாஸ் ராஜிநாமாவும் அங்கீகரிக்கப்பட வேண்டியவையாயின. பின்னர், டாக்டர் அன்சாரி தலைமையில் புதிய காரியக் கமிட்டி ஏற்பட்டது. இதனிடையே பம்பாயில் ஏற்படுத்தப்பட்ட சமரசப்படி பல மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகள் நடக்கவில்லை. ஆகவே, நாகபுரியில் கூடிய அ. இ. கா. கமிட்டியில் பம்பாய் சமரஸம் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. இச் சமரசத்தை எதிர்த்துச் சில மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகள் வேலை நடத்தி வருவது வருந்தத் தக்கதென்றுக் கூறப்பட்டது. ஒழுங்கு தவறி நடந்து கொண்டதற்காக தமிழ்நாடு மாகாணக் காங்கிரஸ் கமிட்டியைக் கண்டிக்க வேண்டுமென்று பண்டித

ஜவஹர்லால் நேரு ஒரு பிரேரணை கொண்டுவந்தார். தகுந்த ஆதாரங்கள் இல்லாமல் கண்டிக்கக் கூடா தென்று சிலர் கூறிப் பண்டிதரின் பிரேரணையைத் தோற்கடித்தனர். இதனால் பண்டித ஜவஹர்லாலும், டாக்டர் அன்சாரியும் இவர்களைச் சேர்ந்தவர்களும் காரியக் கமிட்டி அங்கத்தினர் பதவிகளை ராஜிநாமாச் செய்தனர். வேறு வழியின்றி இவர்களின் ராஜி நாமாக்களும் ஒப்புக்கொள்ளப்பட்டு புது அங்கத் தினர்கள் நியமிக்கப்பட்டனர்.

அடுத்தபடியாக, அ. இ. கா. கமிட்டிக்கூட்டம் நாகபுரியில் நடைபெற்றது. சட்டசபை பகிஷ்காரத் தைக் கவனிக்க விசேஷ காங்கிரஸ் கூட்டம் கூட்டப்பட வேண்டுமென்ற ஒரு தீர்மானம் எதிர் பாராதபடி பிரேரேபிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. ஆகஸ்டு மாதத்தில் நடந்த விசேஷ அ. இ. கா. கமிட்டிக் கூட்டத்திலும் விசேஷ காங்கிரஸ் நடத்து வது உறுதிப்படுத்தப் பட்டது.

மகாத்மா காந்தி சிறை சென்ற பிறகு, இராஜாஜி தான் "யுவ இந்தியா" என்னும் ஆங்கிலப் பத்திரி கையை நடத்தி வந்தாரென்பதை அனைவரும் அறி வார்கள். நாகபுரியில் காங்கிரஸ் ஊர்வலமொன்றில் தேசியக்கொடியைக் கொண்டு போகக் கூடா தென்று போலீஸார் தடை யுத்தரவு பிறப்பித்ததன் பயனாக, 1923-ஆம் வருஷம் மே மாதம் முதல் தேதி தேசியக்கொடி சத்தியாக்கிரகப் போர் ஆரம்ப மாயிற்று. சாதாரணமாக ஆரம்பிக்கப்பட்ட இக் கொடிப் போர் அகில இந்திய இயக்கமாகப் பரவு

வதற்கு இராஜாஜி, "யுவ இந்தியா"வில் எழுதிய உணர்ச்சி மிக்க கட்டுரைகளே முக்கிய காரணமென்று சொல்லலாம். எல்லா மாகாணங்களிலிருந்தும் தேச பக்தர்கள் பலர் திரள் திரளாக இப்போரில் கலந்துகொண்டனர். தமிழ் நாட்டாரும் இதில் பங்கெடுத்துக்கொண்டனர் என்று சொல்ல வேண்டியதில்லை. இராஜாஜியை அரசியல் குருவாகக் கொண்ட ஸ்ரீ வரதாச்சாரியார், ஸ்ரீ கே. எஸ். சுப்பிரமணியம் முதலியோர் இப்போரின் துவக்கத்திலேயே போய்ச் சேர்ந்தனர். ஸேட் ஜம்னுலால் பஜாஜ் போன்ற தலைவர்கள் சிறைப்பட்டதன் பயனாக, மூன்று மாதத்துக்குள் கொடிப் போரில் காங்கிரஸ்காரர்களுக்கே வெற்றி ஏற்பட்டது.

காலச்சக்கரத்தின் வேகத்தில் பல விசித்திரங்கள் நடைபெறுவதுண்டல்லவா! தீவிர ஒத்துழையாத் தலைவர்களின் செல்வாக்கு நாட்டில் வர வரக் குறைந்துவரலாயிற்று. புதிதாக ஏற்பட்ட சுயராஜ்யக் கட்சிக்கே பேராதரவு கிடைத்து வந்தது. பத்திரிகைகளெல்லாங்கூட, சுயராஜ்யக் கட்சியின் கொள்கைகளைத்தான் அதிகமாக ஆதரித்தன. இப்புதிய மாறுதலை எதிர்த்து வேலை செய்த இராஜாஜி போன்ற மாறுதல் வேண்டாத் தலைவர்களுக்கு எவ்வளவு சிரமமும் கஷ்டமும் ஏற்பட்டிருக்கும் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. இராஜாஜி போன்ற மாறுதல் வேண்டாத் தலைவர்கள்தாம் தேச முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருப்பதாக, சுயராஜ்யக் கட்சியை ஆதரிக்கும் தினசரிப் பத்திரிகைகள் எல்லாம் குறை கூறின.

டில்லியில் விசேஷ காங்கிரஸ் 15-9-1923-இல் கூடியது. மௌலானு முகம்மது அலி தலைமை வகித்தார். சுயராஜ்யக் கட்சியாரும், மாறுதல் வேண்டாதாரும் அவர்பால் நம்பிக்கை கொண்டிருந்தனர். இக்காங்கிரஸுக்கு வைதீக ஒத்துழை யாதார்களான இராஜாஜியும் ஸ்ரீ ஸி. விஜயராகவாச் சாரியாரும் வரவில்லை. ஆனால் இராஜாஜியின் சிஷ்யர்களான ஸ்ரீ என். எஸ். வரதாச்சாரியார் முதலியவர்கள் வந்திருந்தனர்.

தலைவர் தமது பேருரையில் சட்டசபைப் பிரவேசத் திட்டத்தை ஆதரித்துப் பேசினர். மௌலானு முகம்மத் அலி, மாறுதல் வேண்டாத் தலைவர்களையும் சட்டசபைப் பிரவேசத்தை ஆதரிப்பவர்களையும் சமரசம் செய்விக்கும் நோக்கத் துடன்,

"பலாத்காரமற்ற ஒத்துழையாமைக் கொள்கை யை இக்காங்கிரஸ் உறுதிப்படுத்துவதோடு, சட்ட சபை விஷயத்தில், மதம் அல்லது மனச்சாட்சி சம்பந்தமான ஆட்சேபம் இல்லாத காங்கிரஸ்காரர் கள் அடுத்த தேர்தலில் சட்டசபைக்கு அபேட்சகர் களாக நிற்கலாமென்றும் ஓட்டு உரிமையை உபயோகிக்கலாமென்றும் தீர்மானிக்கிறது. இதை முன்னிட்டு, சட்டசபைப் பிரவேசத்துக்கு விரோத மான பிரசாரத்தை நிறுத்தி வைக்கிறது. எல்லாக் காங்கிரஸ்காரர்களும் சீக்கிரத்தில் சுயராஜ்யம் அடையும்பொருட்டு ஒற்றுமை முயற்சி செய்து, நமது மாபெருந் தலைவரான மகாத்மா காந்தியின் நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதில் பதின்மடங்கு அதிகமாகப் பாடுபடவேண்டும்".

என்று சமரசத் தீர்மானமொன்றைப் பிரேரேபித்து, இதை ஏகமனதாக நிறைவேற்றி வைக்கும்படி கேட்டுக்கொண்டார்.

இத்தீர்மானத்தை ஆமோதித்த தேசபந்து தாஸும், "இதை ஏக மனதுடன் நிறைவேற்றினுல் தான் விசேஷப் பலன் ஏற்படும்; ஆதலால் இதை எதிர்க்கவேண்டாம்" என்று வேண்டிக்கொண்டார் ஆகவே, பாபு ராஜேந்திர பிரஸாத், வல்லபபாய் படேல் முதலிய மாறுதல் வேண்டாத் தலைவர்கள் இதனுல்ஏற்படக்கூடியபலாபலன்களுக்கு மௌலானு முகமத் அலியைப் பொறுப்பாளியாக்கி, இச்சமரஸத் தீர்மானத்தை ஏற்றனர். ஆனுல் ஸ்ரீ ராஜாஜியின் பரம சிஷ்யரும் அவருக்குப் பிரதிநிதிபோல இக்காங் கிரஸுக்கு வந்திருந்தவருமான ஸ்ரீ என். எஸ். வரதாச்சாரியார் முதலிலேயே இச்சமரஸத் தீர்மானத்தை எதிர்க்கலானுர். "அகம்பாவங் காரணமாக நான் பேச எழுந்திருப்பதாக எவரும் நினைக்க வேண்டாம். ஒற்றுமை ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கம் உண்மையாக இருக்கலாம். ஆனுல், அந் நோக்கம் தப்பான எண்ணங்களின்மீது ஏற்பட்டிருக் கிறது. இச் சமரஸத் தீர்மானத்தைப் பிரேரணை செய்ததன் மூலம் மௌலானு முகம்மத் அலி தேசத்துக்கு மிகத் தவறுன ஒரு வழியைக் காட்டு கிருர். ஒத்துழையாமைக்குச் சாதகமாக இருந்த உப கரணங்களை நாசமாக்குகிருர். ஒத்துழையாமை உணர்ச்சி அழிந்து போய்விடின், நிர்மாண வேலை களையாவது, சட்ட மறுப்பையாவது, இத்தேசத்தில் ஒரு நாளும் நடத்த முடியாது" என்று அழுத்தந்

திருத்தமாகக் கூறி இராஜாஜியின் கட்சியை நிலை நாட்டினர். எனவே, ஏகமனதாக நிறைவேறவிருந்த சமரஸத் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டுப் பெரும் பான்மையான வாக்குகளால் நிறைவேறியது.

இவ்விதம் டில்லி விசேஷ காங்கிரஸ் சமரஸத் தீர்மான வாயிலாகச் சட்டசபைப் பிரவேசத் திட்டத் துக்கு இருந்த தடை நீங்கிவிடவே, தேசம் முழுவதும் நடந்த சட்டசபைத் தேர்தல்களில் சுயராஜ்யக் கட்சி யார் நின்று பெரு வெற்றியடைந்தனர். எனினும், வைதீக ஒத்துழையாதாருக்கும் சுயராஜ்யக் கட்சி யாருக்கும் ஏற்பட்டிருந்த பிணக்கு முன்னையினும் அதிகமாகிக் கொண்டே வந்தது.

எனவே, மீண்டும் அடுத்து நடந்த காகிநாடா காங்கிரஸில் ஒற்றுமைக்கான முயற்சிகள் செய்யப் பட்டன. "மூவகைப் பகிஷ்காரத்தைக் காரணமாகக் கொண்டு, மீண்டும் அக்கட்சிச் சண்டைகளை இனி நாம் வளர்த்துக்கொண்டிருப்பது அழகல்ல" என்று தலைவர் மௌலானா முகம்மத் அலி தமது தலைமைப் பேருரை வாயிலாகக் கேட்டுக்கொண்டதன் பேரில், சுயராஜ்யக் கட்சியாரும் மாறுதல் வேண்டாக் கட்சித் தலைவர்களும் கலந்து யோசித்து ஒரு சமரசத் தீர்மானத்தைத் தயாரித்தனர். சட்டசபைப் பிரவேசத்தை வெகு மூர்த்தண்யமாக எதிர்த்துவந்த இராஜாஜியே சமரஸத் தீர்மானத்தைப் பிரேரேபித் தார். அதாவது :—

"கல்கத்தா, நாகபுரி, அகமதாபாத், கயா, டில்லி முதலிய இடங்களில் நடந்த காங்கிரஸ் மகாசபை களில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒத்துழையாமை

சம்பந்தமான தீர்மானங்களை இக்காங்கிரஸ் உறுதி செய்கிறது. சட்டசபைப் பிரவேசத்தின் காரணமாகக் காங்கிரஸ் கொள்கையில் மாறுதல் ஏற்பட்டதாகச் சந்தேகம் இருப்பதால், மூவகைப் பகிஷ்காரத்தின் கொள்கையும் முறையும் மாறவில்லை என்பதை இங்கு வற்புறுத்துகிறது. மேற்கண்ட பகிஷ்காரங்களே நிர்மாணத் திட்டத்திற்கு ஆதாரமாக இருப்பதால், இந்நிர்மாணத் திட்டத்தை ஒற்றுமையுடன் நிறைவேற்றி வைக்கும்படி தேச மகா ஜனங்களைக் கேட்டுக் கொள்கிறது''

என்பதே. இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்து இராஜாஜி பேசுகையில்,

''இத் தீர்மானம் டில்லியில் ஏற்பட்ட சமரஸத் தீர்மானத்தைக் கவிழ்க்கவில்லை. அதை மீறி அப்பால் செல்லவும் இல்லை. காங்கிரஸ் கொள்கையில் ஏதாவது மாறுதல் ஏற்பட்டுவிட்டதோ என்று சிலருக்கு ஏற்பட்டிருக்கும் சந்தேகத்தை நீக்கி, பகிஷ்காரக் கொள்கையும் முறையும் மாறிவிடவில்லை என்பதை மட்டும் உறுதிப் படுத்துகிறது. டில்லித் தீர்மானத்தை மீறி நடக்க உத்தேசிப்பவர்கள் அவ்வெண்ணத்தை இனி விட்டு ஒழிக்கும்படி வேண்டுகிறேன். இனி நிர்மாணத் திட்டத்தை அச்சமின்றி நம்பிக்கையுடன் நடத்திவைப்பதில் நாம் முனைய வேண்டும்''

என்று கூறினர். ஆகவே அத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

கடுமையான வயிற்று நோய் காரணமாக அடுத்த வருஷம் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்ட

காந்திஜியும் காலதேச வர்த்தமானத்தை யொட்டிச் சுயராஜ்யக் கட்சியார் அவர்கள் விரும்பும் சட்ட சபை வேலையைச் செய்வதற்கு அவகாசமளித்துப் பார்க்கவே விரும்பினர். எனவே, காந்தியடிகள் ஆதிக்கத்திலிருந்த காங்கிரஸ் மகாசபை தற்காலிக மாகச் சுயராஜ்யக் கட்சியார் ஆதிக்கத்தில் மாறியது. மகாத்மா காந்தியும் இராஜாஜி முதலிய மாறுதல் வேண்டாத் தலைவர்களும் அரசியலிலிருந்து விலகி, கதர், மதுவிலக்கு, தீண்டாமை யொழிப்பு ஆகிய நிர் மாண வேலைத் திட்டங்களை நிறைவேற்றி வைக்கும் விஷயத்தில் தங்கள் முழுக்கவனத்தையும் செலுத் தித் தங்களாலான சேவையைச் செய்து வரலாயினர்.

## காந்தி ஆசிரம ஸ்தாபிதம்

இச் சமயத்தில்தான் அதாவது 1924-ஆம் வருஷத்தில்தான் இராஜாஜி சேலம் ஜில்லாவிலுள்ள திருச்செங்கோடு என்னும் ஊரை அடுத்த புதுப்பாளை யத்தில் காந்தி சேவாசங்கத்தின் சார்பாகக் காந்தி ஆசிரமத்தை நிறுவினர், இவ் வாசிரம வாயிலாக இராஜாஜி கதர், மதுவிலக்கு, தீண்டாமை யொழிப்பு ஆகிய நிர்மாண வேலைத் திட்டங்களை நிறைவேற்றி வைக்கும் வகையில் வேலை செய்து வரலானர்.

இராஜாஜி காந்தி ஆசிரமத்துக்குத் தலைவராக இருந்து வந்ததோடு, தாமும் அவ் வாசிரமத்திலுள்ள தொண்டர்களைப் போலவே காலையிலிருந்து மாலை வரை வேலைசெய்து, மேற்குறித்த மூன்று நிர்மாணத் திட்டங்களை ஒழுங்காக நிறைவேற்றி வந்தார். புதுப் பாளையத்தில் இவ்வாசிரமம் ஏற்பட்டிருப்பதனல், மற்

றவர்களைக் காட்டிலும் சுற்றுப் பக்கத்திலுள்ள கிராம மக்கள் ஆசிரமத்தாரால் பல நன்மைகளை யடைந்து வந்தனர். இவ்வாசிரம வாயிலாக இராஜாஜி செய்து வந்த மதுவிலக்கு வேலையின் அருமையைப் பாராட்டி அக்காலத்தில் கலால் கமிஷனராயிருந்த மிஸ்டர் காடரல் என்னும் ஐரோப்பியர் ஆசிரமத்தைச் சுற்றி யுள்ள 37மதுபானக் கடைகளை மூடிவிடும்படிச் செய்தார் என்றால், அவரது மதுவிலக்குத் தொண் டின் மேன்மையை என்னென்பது!

மதுவிலக்குப் பிரசாரத்தை வெற்றிகரமாக நடத்த வேண்டியே இராஜாஜி "விமோசனம்" என் னும் தமிழ் மாதப் பத்திரிகையைச் சில காலம் நடத் தலானார். மதுபானம் செய்வது தீது என்பதைச் சிறு சிறு கதைகள் வாயிலாகவும், கட்டுரைகள் வாயிலாக வும் மக்களுக்கு அவர் எடுத்து விளக்கிவந்தார்.

இந்தியா முழுவதிலும் மதுவிலக்கு இயக்கத் தைத் திறம்பட நடத்தும் பொறுப்பை இராஜாஜிக்கு மகாத்மா காந்தி முதலிய தலைவர்கள் ஒப்படைத் திருக்கிறார்களென்றால், நம்மைக் காட்டிலும் மற்றவர் கள் இராஜாஜியின் சேவையை எவ்வளவு நன்றாக அறிந்திருந்தார்கள் என்று தெரிகிறதல்லவா! இது வன்றி கிறிஸ்தவப் பாதிரிகள், பல திறப்பட்ட அரசி யல் வாதிகள், அரசியலில் ஈடுபடாத சமூக சீர்திருத்த வாதிகள் முதலியோர் சேர்ந்து ஸ்தாபித்திருந்த அகில இந்திய மதுவிலக்குச் சங்கத்திற்கும், காங்கிரஸ் மதுவிலக்குக் கமிட்டிக்கும் இராஜாஜி காரியதரிசி யாக இருந்தார்.

இந்தியாவில் முதல் முதலாகத் தமிழ்நாடுதான் கதர் இயக்கத்தில் ஈடுபட்டது. அதிலும், திருப்பூர்

கதர்த் துணிகளை உற்பத்தி செய்வதில் முதன்மை பெற்று விளங்கி இந்தியா முழுவதற்கும் வழங்கி வந்தது. தமிழ் நாட்டுக்கு இவ்விதம் புகழ் ஏற்படு வதற்கு இராஜாஜியே மூலகாரணராவார். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 'கதர் இயக்கத்துக்குத் தந்தை' என்றுகூட இராஜாஜியைக் கூறின் மிகையாகாது.

இவ்வளவு தூரம் காந்தி ஆசிரம வாயிலாக இராஜாஜி அரும்பெரும் சேவை செய்தும், சுற்றுப்புறக் கிராமவாசிகள் இவ்வாசிரமத்தைப் பகிஷ்கரிக்க முயற்சி செய்து வந்தனர். இதற்கு முக்கிய காரணம், இவ்வாசிரமத் தொண்டர்களில் அங்கமுத்து, முனுசாமி ஆகிய இரு ஆதித்திராவிடர்கள் கலந்திருந்ததேயாகும். இவ்விருவரும் சத்தியாக் கிரக இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றவர் களாவர். தமிழ்நாட்டில் இவர்களைத் தவிர வேறு ஆதித்திராவிடர்கள் சட்டமறுப்புப் போராட்டத்தில் கலந்து சிறைசென்றதாகத் தெரியவில்லை அரசியலில் கலப்பதற்குப் பல காலத்துக்கு முன்பே தீண்டாமை யொழிப்புக்குத் தீவிரமாக வேலை செய்துவந்த இராஜாஜி—சமூக பகிஷ்காரத்துக்கு ஆளான இராஜாஜி—இப்போது மட்டும் அதுவும் தீண்டாமை யொழிப்பு உட்பட நிர்மாணத் திட்டங்களை நிறை வேற்றி வரவேண்டிய இச்சமயத்தில் அதை விட்டு விடுவாரா. என்ன! ஜாதி ஹிந்துக்கள், பெரிய பெரிய உத்தியோகஸ்தர்கள், கவுன்ஸிலர்கள் முதலியோரின் பலத்த எதிர்ப்பை லட்சியம் செய்யாத இராஜாஜியா இக்கிராம வாசிகளின் எதிர்ப்புக்கு அஞ்சுபவர்? சுற்றுப்புறக் கிராம மக்களின் கிளர்ச்சியைச்

சமாளித்துக்கொண்டு இராஜாஜி ஆசிரம வேலை யைப் பின்னும் ஊக்கமாகச் செய்து வரலானார்.

ஒத்துழையாமைப் போராட்டத்தின் போது, வக்கீல் தொழிலை உதறித் தள்ளிய இராஜாஜி- மீண்டும் எக்காரணத்தைக் கொண்டும் அதை மேற் கொள்வதில்லை என்ற விரதம் பூண்ட இராஜாஜி, திருப்பதி கோயிலில் பிரவேசித்ததற்காகக் கைது செய்யப்பட்டுக் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்ட ஆதித்திராவிடர்கள் சிலருக்காக, தாமே வலியப் போய் அவர்கள் சார்பாக வாதித்து அவர்களை விடுதலையடையச் செய்தாரென்றால், அவர் ஆதித் திராவிட சகோதரர்களின் உரிமைக்காக எவ்விதத் தியாகமும் செய்யத் தயாராயிருக்கிறார் என்று நன்கு விளங்குகிறதல்லவா! ஆகவே அவர் தமது ஆசிரமத் தில் தீண்டாமையை அனுஷ்டானத்தில் ஒழிக்க முயன்று வந்ததில் ஆச்சரியமொன்றுமில்லை யன்றோ!

1929-ஆம்வருஷம் 24ஆம் தேதியன்று வேதா ரணியம் அரசியல் மகாநாடு நடக்க ஏற்பாடாயிருந் தது. அதற்குத் தலைமை வகிக்கச் சர்தார் வல்லபபாய் படேலை அழைத்திருந்தார்கள். அச் சமயத்தில் தமிழ் மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராயிருந்த ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் பூரண சுதந்திரத் தீர்மான விஷயத்தில் சர்தார் படேலுடன் மாறுபட் டிருந்ததால் அவர் வருகையை விரும்பவில்லை. இதை எவ்விதமோ அறிந்த சர்தார் தாம் மகாநாட்டுக்கு வர முடியாதென்று கூறி மறுத்துவிட்டார். இதனால் மகாநாடே நடைபெறாது நின்று விடும் போலிருந்தது. காந்தி ஆசிரமத் தலைவராயிருந்த இராஜாஜி இச்

சங்கட நிலைமையைத் தவிர்க்க முன் வந்து, மகாத்மா காந்திக்குத் தந்தியடித்து வல்லபபாயை எவ்விதமும் வேதாரணிய மகாநாட்டுக்கு அனுப்பும்படிவேண்டிக் கொண்டார். எனவே, மகாத்மா காந்தியின் கட்டளைப் படி சர்தார் வல்லபபாய் படேல் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்து, வேதாரண்யம் மகாநாட்டுக்குத் தலைமை வகித்து அதை இனிது நடத்திவைத்தார். இராஜாஜிக்கும் ஸ்ரீநிவாஸ ஐயங்காக்கும் அரசியல் விஷயத்தில் எத்தனையோ அபிப்பிராய பேதம் உண்டு. இருப்பினும், சமயம் வாய்க்கும்போது அவ்வபிப்பிராய பேதங்களையெல்லாம் மறந்துவிட்டு, இவ்விதம் ஒத்துழைத்து உதவிபுரிவதைத் தம் கடமையாகக் கொண்டிருந்தார். இது இராஜாஜியின் சிறந்த நற்குணங்களிலொன்றுகும்.

இராஜாஜி, காந்தி ஆசிரமத்துக்குத் தலைவராயிருந்தாலும், மற்ற ஆசிரமத் தொண்டர்களைப் போலவே தாமும் ஒரு சிறு குடிசையில், ஏழைக் கிராமவாசியைப் போல் வசித்து எளிய வாழ்க்கையை நடத்தி வந்தார். அவருடன் அவரது கடைசிக் குமாரன் நரசிம்மனும், இளைய குமாரி லக்ஷ்மியும் இருந்து வந்தனர். அதுவன்றி, இவரது சகோதரர் குமாரர்களைப் பாதுகாக்கும் பொறுப்பும் இவருக்கு இருந்துவந்தது.

இராஜாஜி கிராமப் புனருத்தாரணத்துக்குரிய நிர்மாண வேலைகளைத் திறம்பட நிறைவேற்றி வைக்கும் ஆற்றலைக் கண்டே, தமிழ்நாடு கதர் போர்டையும் ஹரிஜன சேவாசங்கத்தையும் முறையே இவரது தலைமையிலும், ஆதிக்கத்திலும் விட்டிருந்தனர். ஆந்திரா கதர் போர்டும் இவர் வசத்தில் வருவதற்கிருந்தது. அகில பாரத சர்க்கா சங்கத்திலும், காந்தி சேவா

சங்கத்திலும் இராஜாஜி பிரதான புருஷராய்க் கருதப் பட்டது அனைவரும் அறிந்ததே, இவர் விஜயம் செய்யாது மேற்படி சங்கங்களின் கூட்டமெதுவும் நடைபெற்றதில்லை யென்றால் இவரது சேவையில் வடநாட்டுத் தலைவர்கள் எவ்வளவு மதிப்பு வைத் திருந்தார்கள் என்று அறிந்து கொள்ளலாம்.

## உப்பு சத்தியாக்கிரகத் தலைமை

இவ்விதம், தீண்டாமை யொழிப்பு, மதுவிலக்கு. கதர் அபிவிருத்தி ஆகிய நிர்மாணத் திட்டங்களில் வெகுவாகக் கவனம் செலுத்தித் தீவிரமாக வேலை செய்துவந்த இராஜாஜி 1930-ஆம் வருஷ ஆரம்பத் தில் மீண்டும் அரசியலில் கலந்துகொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவ்வருடத்தில் லாகூரில் காங்கிரஸ் நடைபெற்றது. பண்டித ஜவஹர்லால், நேரு தலைமை வகித்தார். அக்காங்கிரஸில் மகாத்மா வுக்கு மீண்டும் செல்வாக்கு ஏற்பட்டது. காந்தியடி களின் சத்தியாக்கிரகத் தத்துவத்தின் உயர்வும், நிர் மாண வேலைத்திட்டங்களின் மேன்மையும் தேசியத் தலைவர்களுக்குப் புலப்பட்டது. சுயராஜ்யக் கட்சியி னர் நடத்திய சட்டசபைவேலைகளினால் எதிர்பார்த்த பலன் எதுவும் விளையாதது கண்டு, நிஷ்பிரயோஜன மான அவ்வேலையைக் கைவிடுவதே அறிவுடை மையாகும் எனப் பண்டித மோதிலால் போன்ற தலை வர்கள் உணரலாயினர். ஆகவே, லாகூர் காங்கிர ஸில் காந்தியடிகளின் ஆலோசனைகளே முக்கிய மாகக் கவனிக்கப் பட்டன. முடிவில் மீண்டும் மகாத்மா காந்தி அரசியலில் தலைமைப் பதவியேற்று, பரிபூரண சுயராஜ்யத்துக்காக, சாத்விகச் சட்டமறுப்

புப் போர் நடத்துவது என அக் காங்கிரஸில் தீர்மானிக்கப்பட்டது. ஆகவே, மகாத்மாவின் சத்தியாக்கிரகத் தத்துவத்தில் பெரு நம்பிக்கை கொண்டுள்ள தலைவர்களே காங்கிரஸ் காரியக் கமிட்டியில் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களில் இராஜாஜி ஒருவர் என்பதைக் கூறவும் வேண்டுமோ!

லாகூர் காங்கிரசை யடுத்து, வேலூரில் தமிழ் மாகாண மகாநாடு கூடியது. அதில், மகாத்மா ஆரம்பித்திருக்கும் சட்டமறுப்புப் போருக்கு முழு ஆதரவு தந்ததோடு, அதைத் தமிழ் நாட்டில் தலைமை வகித்துத் திறம்பட நடத்த நம் இராஜாஜிக்கே சர்வாதிகாரம் கொடுக்கப்பட்டது. எனவே, இராஜாஜி பழையபடி தமிழ் நாட்டு அரசியலில் தலைமைப் பதவி வகிக்க வேண்டிய பொறுப்பு ஏற்பட்டுவிட்டது. இம் மகாநாட்டில் இராஜாஜியே தமிழ் மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மகாத்மா காந்தி தமது சட்டமறுப்புப் போரை ஆரம்பித்துவிட்டார். சரித்திரப் பிரசித்தி பெற்ற உப்பள முற்றுகையைச் செய்ய, தண்டிக்குப் புறப்பட்டுவிட்டார். அவரைப் பின்பற்றித் தேசத் தலைவர்களும், மற்றவர்களும் திரள்திரளாக அந்தப் போரில் இறங்கிவிட்டனர்.

மகாத்மா தண்டி யாத்திரை செய்தது போலவே இராஜாஜியும் வேதாரணியம் யாத்திரை செய்யத் தொடங்கினர். அவர் திருச்சியிலிருந்து தஞ்சையைச் சேர்ந்த வேதாரணியத்துக்கு, 1930

லூ ஏப்ரல்மீ 13-ந்தேதியன்று தமது தொண்டர் படையுடன் புறப்பட்டு விட்டார். பாரதியாரின் 'வந்தே மாதரம்' பாட்டையும், 'அச்சமில்லை' எனும் பாட்டையும், 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையின் பாட்டையும் தொண்டர்கள் பாடிக்கொண்டு இராஜாஜி தலைமையில் சென்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இராஜாஜி வேதாரணியம் கடற்கரையில் போய் உப்பள முற்றுகையிடப் போகிறார் என்ற செய்தி அறிந்ததுமே, தஞ்சை ஜில்லா கலெக்டர் மிஸ்டர் தாரன் துரை, இச் சட்ட மறுப்பாளருக்கு எவ்வித உதவியோ உபகாரமோ யாரும் செய்யக் கூடாதென்று தடையுத்தரவு போட்டார். இவ்விதம் அவர் பயமுறுத்தியும் பொதுமக்கள் சிறிதும் அஞ்சாது, உள்ளிருந்து எழும் தேசபக்தி உணர்ச்சி உந்த இராஜாஜிக்கும், அவரது தொண்டர் படைக்கும் வழிநெடுக ராஜோபசாரம் செய்து, தங்களது மனப்பூர்வமான ஆதரவையும் ஆசியையும் வெளிப்படுத்தினர்.

திருச்சியில் ஏப்ரல் மாதம் 13-ந் தேதி இராஜாஜி தொடங்கிய கால்நடைப் பிரயாணம் 28-ஆம் தேதி வேதாரணியத்தில் முடிவுற்றது. இவர் வழிநெடுக, காந்தியடிகளின் உப்பளப் போர்பற்றிச் செய்த பிரசங்கங்கள் பொன்னெழுத்தில் பொறிக்கத் தக்கனவாகும். இப்பதினைந்து நாள் கால்நடைப் பிரயாணமே தமிழ் நாட்டு மக்களையெல்லாம் தட்டி யெழுப்பியது. தமிழ் இளைஞர்களும் பெண்மணிகளும் வீறிட்டு எழுந்து போரில் கலந்து கொண்டனர்.

இராஜாஜி உப்பளப் போரைத் தொடங்குவதற்கு முன் 29-ந்தேதியன்று முழுவதும், அவரும் அவரது தொண்டர் படையினரும் உபவாசம் இருந்தனர். இவ் விதம் உபவாசமிருந்து கடவுளைப் பிரார்த்தனை செய்த பின்னரே மறுநாள் 30-ந் தேதியன்று இராஜாஜி 16 தொண்டர்களோடு கடற்கரை சென்று, அநீதி உப்புச் சட்டத்தை மீறி உப்பை அள்ளினர். அடுத்த கணமே ஜில்லா போலீஸ் சூபரின்டெண்டு இராஜாஜியைக் கைது செய்தார். இவ்விதம் இராஜாஜி நடத்திய வேதாரணிய உப்பளப் போர் சரித்திரப் பிரசித்தி பெற்றதாகும்.

மன்னார்குடி சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டின் முன் இராஜாஜி வழக்குவிசாரணைக்குவந்தது. உப்புச் சட்டம் 74-வது பிரிவின்படியும், இ. பி. கோ. 146-வது பிரிவின்படியும் இராஜாஜி குற்றம் சாட்டப்பட்டார். இராஜாஜி தம் மீது சாட்டப்பட்ட குற்றங்களை மறுக்கவில்லை ; எதிர் வழிக்காடவுமில்லை. மாஜிஸ்டிரேட்' "ஏதாயினும் கூறப் போகிறீர்களா ?" என்று கேட்டும், "சொல்வதற்கு ஒன்றுமில்லை" என்று இராஜாஜி கூறிவிட்டார். எனவே, மாஜிஸ்டிரேட், இராஜாஜியைக் குற்றவாளியென்றே தீர்மானித்து, முதல் குற்றத்துக்கு 200 ரூபாய் அபராதம் அல்லது மூன்று மாத வெறுங்காவல்; இரண்டாவது குற்றத் திற்கு ஆறுமாத வெறுங்காவல் ஆக ஒன்பது மாதம் சிறைவாசத் தண்டனை அளித்தார். ஆனல், இராஜாஜியை முதல் வகுப்புக் கைதியாக நடத்த வேண்டும் என உத்தரவிட்டார். இராஜாஜி தமக்கு எவ்விதத் தனிச்சலுகையும் காட்ட வேண்டாமென்று கேட்டுக்கொண்டார். ஆயினும், மாஜிஸ்டிரேட்,

"என் கடமையை நான் செய்கிறேன்'' என்று கூறித் தம் உத்தரவை உறுதிப்படுத்தினர்.

இராஜாஜிக்குச் சிறைவாசத் தண்டனை அளிக்கப்பட்ட செய்தி பரவியதும், தமிழ்நாட்டின் பல பாகங்களிலும் வேலைநிறுத்தங்கள் நடந்தன. சர்க்கார் அடக்கு முறையைக் கண்டித்துப் பல பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன.

இராஜாஜியை முதலில் திருச்சி சிறையில் ஒரு வாரம் வைத்திருந்தனர். பிறகு அவரைச் சென்னை சிறைச்சாலைக்கு மாற்றிவிட்டனர்.

(தமிழ்நாட்டில் முதல் முதலாக இராஜாஜியால் ஆரம்பிக்கப்பட்ட உப்பளப் போர் அவரது சிறை வாசத்துக்குப் பிறகு நாடெங்கும் காட்டுத்தீப்போல் வெகு வேகமாகப் பரவிவிட்டது. ஆங்காங்கு பெரிய பெரிய தகுதியிலும் செல்வத்திலும் ஆழ்ந்திருந்த பிரமுகர்களும் வாலிபர்களும் பெண்மணிகளும் இச் சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டு ஆயிரக்கணக் காகச் சிறை செல்லலாயினர். இராஜாஜிக்குப் பிறகு, வேதாரணியம் உப்பளப் போரை ஸ்ரீமான்கள் வேதரத்தினம் பிள்ளை, கே. சந்தானம், மட்டப்பாறை வேங்கடராம ஐயர், அண்ணாமலைப் பிள்ளை, பந்துலு ஐயர், என்.எஸ். வரதாச்சாரி, வைத்தியநாத ஐயர், கே. எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் தொடர்ந்து நடத்திச் சிறை சென்றனர்.

இதனிடையே காந்தி - இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டதல்லவா ! அதன் காரணமாக, மற்றத்

தலைவர்களோடு ராஜாஜியும் விடுதலை செய்யப் பட்டார். இவ்வாறு முதல் சட்டமறுப்பு இயக்கம் தொடங்கி எல்லாத் தலைவர்களும் சிறைக்குள் போன பிறகு இராஜாஜி மேற்சொன்ன காரணத்தால் சிறை யிலிருந்து வெளிவந்தாரல்லவா ! அப்போது ஸ்ரீ சத்தியமூர்த்தி தம் சொந்த அசௌகரியங்களை உத்தேசித்துச் சட்டமறுப்பில் தீவிரமாக ஈடுபட வில்லை. இதனால் பொதுமக்களும் மற்றக் காங்கிரஸ் காரர்களும் அவர்பால் அதிருப்தி கொண்டனர். இச் சமயம் இராஜாஜி ஸ்ரீ சத்தியமூர்த்தியிடம் சென்று, "தங்களுக்கு அசந்தர்ப்பங்கள் பல இருக்கலாம்; ஆனால் இச்சமயத்தில் காங்கிரஸை விட்டுக்கொடுக் கலாமா ?" என்று உருக்கமாகக் கூறினார். அதற்குப் பிறகே ஸ்ரீ சத்தியமூர்த்தியும் சட்டத்தை மீறிச் சிறை சென்றார்.

இராஜாஜி மீண்டும் மூன்றாவது முறையாக அவசரச் சட்டங்களின்கீழ்க் கைது செய்யப்பட்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். இவ்விதச் சிறைவாச காலங்களில்தான், இராஜாஜி தமிழ்மொழி வளர்ச்சிக்கான முயற்சியில் ஈடுபடலானார்,

## தமிழுக்குச் சேவை

மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் தான் பிறந்த நாட்டுக்கும், சமூகத்துக்கும், தாய்மொழிக்கும் தன்னாலான சேவை'யைச் செய்யவேண்டுமென்னும் உண்மையை இராஜாஜி தமது வாழ்க்கையில் நெடுகக் காட்டி வரலானார். இராஜாஜி என்று சமூகச் சீர்த்திருத்தத் துறையில் தீவிரமாக இறங்கினாரோ அன்றிருந்தே சாதாரணப் பாமர மக்களுக்கும் புரியக்

கூடிய வகையில் எளிமையாகவும், இனிமையாகவும் தமிழிலேயே பேசி வரலானார். ஆங்கிலத்தில் இரண்டு எழுத்துப் பட்டம் வாங்கிவிட்டால் தங்களைச் சீமையில் பிறந்த ஆங்கிலப் பிரபுக்களென நினைத்து இறுமாந்து, 'எனக்குத் தமிழ் சரியாகப் பேசவே வருவதில்லை; சார்! தமிழ் மொழியே அடியோடு மறந்து போய்விட்டது' என்றெல்லாம் பெருமையாகவும் கௌரவமாகவும் பேசிக்கொள்ளும் பிரகிருதிகள் நம் நாட்டில் அநேகமாக இருக்கின்றனர் அல்லவா! அவ்விதமில்லாது இராஜாஜி ஆங்கிலம் பேசவேண்டிய அவசியம் நேர்ந்தாலல்லது தமிழிலேயே பேசுவதையே பெரும்பாலும் வழக்கமாகக் கொண்டிருக்கிறாரென்றால், அவரது தாய் மொழிப் பற்றை என்னென்பது!

இராஜாஜியின் பேச்சு கேட்போருக்கு அறிவு விருந்தாயிருக்கும். சிலரைப்போல் வழவழாவென்று வெகு நேரம் பேசிக் காலத்தைப் போக்கி வீணாக்காது எவ்வளவு பெரிய விஷயங்களையும் சுருக்கமாகச் சொல்லி விளங்கவைப்பார். அரசியல் விஷயங்களும் சரி; மற்ற எந்த விஷயங்களாயினும் சரி; எவ்வளவு சிக்கலாக இருந்தாலும் அவைகளைப் பொருத்தமான உதாரணங்களோடு தெளிவுபடுத்தி விளக்கிப் பேசும் ஆற்றல் இராஜாஜிக்கே உண்டு. கதர்த்திட்டம், மது விலக்கு, தீண்டாமை போன்ற கவர்ச்சியில்லா விஷயங்களைக்கூட, தமது சாதுரிய மிக்க பேச்சால் மிகவும் சுவாரஸ்யமாகச் செய்துவிடுவார். அவரது ஒவ்வொரு பிரசங்கத்திலும் உயர்தரமான நகைச் சுவை ததும்பி நிற்கும்.

இராஜாஜி சிறந்த பேச்சு வன்மை வாய்ந்தவ ரல்லர் என்று சிலர் கருதுகிறார்கள். எழுத்து வாசனையே அறியாத பட்டிக்காட்டு ஜனங்களுக்கும் புரியும்படியாகக் கொச்சை கொச்சையான தமிழிலும், கிராம பாஷையிலும் அவர் பேசுவதால்தான், அவ்வாறு தவறாக நினைக்கிறார்கள். பேச்சின் இலக்கணம், தத்துவம் என்ன என்பதை அவர்கள் அறிவார்களானால், இவ்விதம் தவறாகக் கருதமாட் டார்கள். தமது பேச்சுக்கு அரசியல் எதிரிகளும் மறுபேச்சு சொல்ல முடியாதபடி அளந்து பேசக் கூடிய பேராற்றல் வாய்ந்த இராஜாஜியைப் பேச்சு வன்மையற்றவர் என்று சொன்னால் வேறு யாரைத் தான் பெரும் பேச்சாளர் என்று கூறுவது? ஆங்கிலத் தில் பெரிய பெரிய வார்த்தைகளைப் போட்டு மூச்சு விடாது பேசிப் பிரமிக்கவைக்கும் வழக்கம் இராஜாஜி யிடம் இல்லை என்று வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாமே ஒழிய, ஆங்கிலத்திலும் வாதத் திறமையோடு சரளமாகப் பேசுவதில் பெரும் பேச் சாளிகள் எவருக்கும் அவ்விதத்திலும் அவர் சளைத்த வரல்லர். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், காங்கிரஸ் மகாநாடுகளிலும் பிரசாரக் கூட்டங்களி லும் தமிழ் மொழிக்கே முக்கிய ஸ்தானத்தை ஏற்படுத் தியவர் இராஜாஜி என்றால் அது மிகையாகாது. ஆங்கிலத்திலேயே பேசும் பழக்கமுடைய பெருந் தலைவர்களையெல்லாங்கூட தமிழ் மொழியில் பேசும் படி செய்த பெருமை இராஜாஜிக்கே உரியதாகும்.

இராஜாஜி சேலத்தில் வக்கீல் தொழிலில் ஈடு பட்டிருந்தபோதே, தமிழ் மொழி வளர்ச்சியில் பேரார்வமுடைய சில அறிஞர்களோடு சேர்ந்து

தமிழில் பரிபாஷையை நிச்சயப் படுத்த வேண்டு மென்ற நோக்கத்துடன் "தமிழ் சாஸ்திர பரிபாஷைச் சங்கம்'' என்று ஒன்றை நிறுவி, அதன் சார்பில் பத்திரிகை யொன்றும் நடத்தினர். ஆனால், போதிய ஆதரவு இல்லாமையால், சில மாதங்களிலெல்லாம் இம்முயற்சி நின்று போய் விட்டது.

இராஜாஜி தமிழில் பல நூல்களை எழுதியிருக் கிறார். சிறைவாச அநுபவம், ஸோக்ரதர், கண்ணன் காட்டிய வழி, குடி கெடுக்கும் கள், மார்க்க அரேலியர் உபதேச மொழிகள், இராஜாஜி குட்டிக் கதைகள், உபநிஷதப் பலகணி, திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு முதலிய அவரது நூல்கள் தமிழ் மொழியின் மறுமலர்ச்சிக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் அவர் செய்த அரிய சேவையின் பரிணமங்களாகும், இன்னும் சிசுபாலனம், தாவரங் களின் இல்லறம், தமிழில்வருமா ? அபேதவாதம் முதலிய பல புத்தகங்களும் எழுதியிருக்கிறார்.

இராஜாஜியின் நூல்கள் அனைத்தும் தனிச் சிறப்பு வாய்ந்தவை. அவரது சிறு கதைகளும், கட்டுரைகளும் பெரும்பாலும், மதுவிலக்கு, தீண் டாமை யொழிப்பு, கதர் அபிவிருத்தி ஆகிய நிர் மாணத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டிருக்கின்றன என்பதை அவைகளைப் படித்தவர்கள் அறிவர். படிப்பவர் உள்ளங்களை அப்படியே கவர்ந்து சீர்திருத்த உணர்ச்சியையும், தேசபக்தியையும் தூண்டிவிடும் சக்தி வாய்ந்தன வாய் அவை இருப்பதோடு, சமரசம், சகோதரத் துவம் ஆகிய நன்னெறிகளில் கொண்டு சேர்க்கும்

தன்மை வாய்ந்தனவாயும் இருக்கின்றன என்றால் மிகையாகாது.

அரசியலில் சேர்வதற்கு முன்னர் இராஜாஜி சமஸ்கிருதம் பயிலவில்லை. காந்தி ஆசிரமத்தை ஸ்தாபித்த பிறகு அவர் சமஸ்கிருதத்தைப் பயின்றிருக்கிறார். அதன் பயனை நாம், 'கண்ணன் காட்டிய வழி', 'உபநிஷதப் பலகணி' ஆகிய நூல்கள் வழியாகக் காண்கிறோம். இவ்விரு நூல்களிலும் முறையே பகவத்கீதையின் தத்துவங்களையும், உபநிஷதங்களின் உண்மைகளையும் விளக்கித் தம்மைப் போலவே மற்றவர்களும் சுவைத்துப் பயன் பெறும் வகையில் அளித்திருக்கிறார். கடைசியாக, அவர் திருக்குறளுக்கு எழுதிய வியாக்கியானத்தை மட்டும் ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். தமிழ் மொழி இலக்கிய மறுமலர்ச்சிக்காகச் சேவை செய்த ஸ்ரீ வ. வே. சு. ஐயர், ஸ்ரீ அ. மாதவையா ஆகியவர்களைப்போல், இவரும் திருக்குறளின் மாண்பையும், தமிழ் இலக்கியங்களின் சிறப்பையும் பிற மொழியாளரும், பிற நாட்டாரும் அறிந்து பாராட்டவேண்டுமென்ற பெரு நோக்குடனேயே இவ்வாறு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்க வேண்டும். இவ்விதம், தமக்குள்ள பலவித அரசியல், சமூக சீர்திருத்த வேலைகளோடு தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஆக்கம் தேடும் வகையில் பல நூல்களை இயற்றித் தமிழ் மக்களிடையே சமர்ப்பித்து வந்ததால், தமிழ் இலக்கிய உலகில் இராஜாஜி ஓர் உன்னத ஸ்தானத்தைத் தேடிக்கொண்டார். பிற்காலத்தில் தமிழ் மொழி மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்ட பெரியார்கள் பெயர்

களோடு இராஜாஜியின் பெயரும் பொன்னெழுத்துக்களால் பொறித்து வைக்கப்படும் என்பது திண்ணம்.

## லக்ஷ்மி - தேவதாஸ் திருமணம்

இராஜாஜியின் வாழ்க்கையிலேயே முக்கியமாகக் குறிப்பிடத்தக்க - மிகவும் புரட்சிகரமான - சம்பவம் அவரது இளையமகள் லக்ஷ்மியினுடைய திருமண நிகழ்ச்சியாகும். இத்திருமணம் காதல் மணம் மட்டுமல்ல; கலப்பு மணமுமாகும். மணமகள் பிராம்மண குலம், மணமகன் வைசிய குலம்; மணமகள் பாஷை தமிழ், மணமகன் பாஷை குஜராத்தி. இவ்வளவு வேறுபாடுகளுக்கிடையேயும் மணமக்கள் மனம் ஒன்றுபட்டதால், இராஜாஜி இதை முழுமனதுடன் வரவேற்றார்.

எத்தனையோ சமூக சீர்திருத்தக்காரர்கள் மேடைகளில் அழகாகப் பேசுவார்கள்; பிறருக்குச் சீர்திருத்த விஷயங்களை உருக்கமாக எடுத்து உரைப்பார்கள். ஆயினும் தங்கள் சொந்த விஷயத்தில் அவ்விதச் சீர்திருத்தங்களெல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போய்விடும். பேச்சளவில் பிரமாதப் படுத்தும் அவர்கள் கிரியாம்சையில் வரும்போது பின்னடைந்து போலிக் காரணங்களில் புகுந்து கொள்ள முயல்வார்கள். இராஜாஜியோ சமூக சீர் திருத்த விஷயங்களிலாகட்டும்; அரசியலிலாகட்டும்; தாம் சொல்லுகிறபடியே செயலிலும் செய்து காட்டுபவர். இதை அவரது வாழ்க்கையில் நடந்த பல சம்பவங்களால் அறியலாம். அதிலும் லக்ஷ்மியின் திருமண விஷயம் இராஜாஜியின் சீர்திருத்தங்களுக்

கெல்லாம் சிகரம் வைத்ததுபோலாகும். எக்காரண தாலோ யாரோ ஒரு சிலரால் ஏற்படுத்தப்பட்ட சாதி சமய வேற்றுமைகளில் தமக்குச் சிறிதும் நம்பிக்கை யில்லை என்பதை இவ்வரிய செயலால் இனிது எடுத்துக் காட்டிவிட்டார்.

உப்பளப் போர் சட்டமறுப்பு ஆகியவை ஆரம் பிப்பதற்கு முன், மகாத்மாவின் அருமைக் குமாரரான தேவதாஸ் காந்தி ஹிந்தி பிரசார சம்பந்தமாகத் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்தார். அப்போது தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகையில், தேவதாஸ் திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் சில நாட்கள் இராஜாஜியுடன் தங்கினர். அச்சமயம் தேவதாஸும் இராஜாஜியின் இளைய புதல்வியான லக்ஷ்மியும் சந்தித்தனர்.

இருவரும் நெருங்கிப் பழகுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டதால் ஒருவர் கருத்தை ஒருவர் அறிந்து கொள்வதற்கு முடிந்தது. சில நாட்களுக்கெல்லாம், இவர்களிடையே முகிழ்த்த காதல் செழித்தோங்கி வளர்ந்து கனிந்த நிலையை அடைந்துவிட்டது. இவர்களது காதல் இராஜாஜிக்குத் தெரிந்தது. அவர் இத்தொடர்பு அநுசிதமென்றோ, முறையற்ற தென்றோ, கொள்ளத்தகாத சம்பந்தமென்றோ கூறித் தடுக்கவில்லை. அவர்தாம் சாதி சமய வேற்றுமை கடந்த பெரியாராயிற்றே! உண்மையான காதலால் ஒன்றுபட்ட உள்ளத்தவர்களான இளைஞர்கள் கூட் டுறவைச் சிதைக்க விரும்புவாரோ! அவர் இவர் களது காதலுக்கு நல்லாசி கூறினரென்றே சொல்ல வேண்டும். ஆனல் இவ்விஷயம் மற்றவர்களுக்குத் தெரியவே தெரியாது.

தேவதாஸ் காந்தி சில நாட்களுக்கெல்லாம் தமது தமிழ்நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு தம் ஊருக்குச் சென்றார். மகாத்மா காந்திக்குத் தம் மகனது காதல் விஷயம் முறையே எட்டியது. அவரும் இத்தொடர்பைத் துணிக்க விரும்பவில்லை. ஆயினும், இளைஞர்களாகிய இவர்களிடையே ஏற்பட்டிருக்கும் காதல் உண்மையானதா? உறுதியானதா? என்று மட்டும் அறிய விரும்பினார். ஆகவே, அவர் இருவருக்கும் கடுமையான நிபந்தனையை விதிக்கலானார். ஐந்து ஆண்டுகள் வரை காதலர்கள் தங்கள் கல்யாண விஷயத்தைப் பற்றியே நினைக்கக்கூடாது. அந்த ஐந்து வருடங்களும் ஒருவரையொருவர் பார்க்கவோ கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளவோ கூடாது. இவ்விதம் கழித்த ஐந்து வருடங்களுக்குப் பின்னரும் அவர்கள் இப்போது கொண்டுள்ள காதலினின்றும் வழுவாமலிருந்தால் அவர்கள் திருமணம் செய்துகொள்வதற்குத் தாம் முழுச்சம்மதமும் அளிப்பதாக மகாத்மா கூறினார்.

அவ்விதமே இளங்காதலர்கள் இருந்தனர். ஐந்து வருஷங்களும் விரைந்தோடின. ஆயினும், மகாத்மா சோதனை செய்தது அமையாதென்று கடவுளும் சோதனை செய்ய நினைத்தார் போலும்! மகாத்மா இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டுக்குப் போய்விட்டு லண்டனிலிருந்து திரும்பிவந்தார். சர்க்கார் அவரைக் கைதுசெய்து எரவாடா சிறைச் சாலையில் வைத்தனர். சிறிது நாட்களுக்கெல்லாம் இராஜாஜியும் சிறைசென்றார். தேவதாஸ் காந்தியும்

சிறைக்கோட்டம் புகுந்தார். குமாரி லக்ஷ்மி மட்டும் திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் நோயால் வருத்தி வரும் தமக்கைக்கு ஆதரவாக இருந்து வந்தார். அப்போது அவரது மனம் எந்நிலையில் இருந்திருக்கும்!

மகாத்மாகாந்தி உண்ணாவிரதம் இருந்து வந்ததன் காரணமாக, 1933-வது வருஷம் ஜூன் மாதத்தில் விடுதலையடைந்தார். அதன் பின்னர், இராஜாஜி, தேவதாஸ் காந்தி முதலியவர்களும் முறையே விடுதலையாயினர். மீண்டும் அவ்வருஷத்தில் ஹிந்தி பிரசார சம்பந்தமாகத் தேவதாஸ் காந்தி தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்த போது இராஜாஜி உடனிருந்து சுற்றுப்பிரயாணத்தை வெற்றிகரமாக நடத்தி வைத்தார். இச்சமயத்தில் தேவதாஸுக்கும் லக்ஷ்மிக்கும் திருமணம் செய்துவிட அனைவரும் விரும்பினர்.

ஜூலை மாதம் 16-தேதியன்று திருமணம் நிச்சயிக்கப்பட்டது. ஆனால். வெளியார் யாருக்கும் அழைப்பு அனுப்பவே இல்லை. புனாவிலுள்ளவர்கள் ஒரு சிலருக்கே விஷயம் அறிவிக்கப்பட்டது. மகாத்மா தங்கியிருந்த பர்ணகுடியிலேயே விவாகம் சிறப்பாக நடைபெற்றது. ஆயினும், மிக மிக எளிய முறையில் நடத்தப்பெற்றது என்று இங்கே குறிப்பிட வேண்டியது அவசியம். பர்ணகுடியின் கீழண்டைத் தாழ்வாரத்தை யடுத்த திறந்த வெளியில் ஒரு சிறு பந்தல் போட்டு, அதனடியில் திருமண மேடை அமைக்கப்பட்டிருந்தது. பந்தற் கால்களில் வாழை மரங்கள் கட்டியிருந்தன. மேடையின் நான்கு மூலைகளிலும் கோலம் போட்ட பானைகள் ஒன்றன்மேல்

ஒன்றாக வைக்கப்பட்டிருந்தன. மணமக்கள் கதராடை தரித்து வந்து மேடையில் அமர்ந்திருந்தனர். பிரபல மகாராஷ்டிர பண்டிதரான பிரம்மஸ்ரீ லக்ஷ்மண சாஸ்திரியார் வேத முறைப்படி விவாகச் சடங்கை நடத்திவைத்தார். மணமக்கள் கதர் நூல் மாலைகளையே மாலையாக மாற்றிக்கொண்டனர். தாய் நிலையிலிருந்து - தாயினும் சாலப் பரிந்து-பாதுகாத்து வளர்த்துவந்த தம் அருமை மகளை இராஜாஜி தேவதாஸின் கரத்தில் ஒப்படைத்தார். பின்னர் முறையே திருமாங்கலிய தாரணம் முதலியவை நடைபெற்றன. பஜனைகீதம் பாடிய பின்னர், எழுந்திருக்கவும் சக்தியற்ற நிலையிலிருந்த மகாத்மா காந்தியை மணமக்கள் வணங்கினர். மகாத்மா கட்டிலின்மீது சாய்ந்து கொண்டிருந்தவாறே அவர்களை ஆசீர்வதித்தும் பகவத்கீதை, பஜனாவளி புத்தகங்கள், கையால் நூற்ற நூல் மாலை ஆகியவைகளைத் திருமணப் பரிசாக அளித்தார். பிறகு அவர் மண மக்களுக்கு இல்வாழ்க்கையின் மாண்பை விளக்கும் முறையில் இதோபதேசம் செய்தார்.

இவ்விவாகத்துக்கு வந்திருந்தவர்களில், அச்சமயம் காங்கிரஸ் தலைவராயிருந்த ஸ்ரீ ஆனே, ஸ்ரீ கேஸ்கர், ஸ்ரீ ஜம்னலால் பஜாஜ், ஸ்ரீ பிர்லா, ஸ்ரீமதி சரோஜினிதேவி, மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் குறிப்பிடத்தக்கவர்களாவர். சிறையிலிருந்த பண்டித ஜவாஹர்லால் நேரு, ஸர்தார் வல்லபபாய் படேல் ஆகியவர்களும், மற்றும் பலரும் மணமக்களுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தனர் இந்திய

ஊழியர் சங்கம் முதலிய சமூக சீர்திருந்தச் சங்கங்கள் இவ் விவாகத்தை வெகுவாகப் பாராட்டின.

ஆனால், இராஜாஜியின் இவ்வரிய செயலை இகழ்ந்தவர்களும் உண்டு. வைதிகர்களை மட்டும் நாம் இங்கே குறிப்பிடவில்லை. அரசியல் விரோதிகளையே முக்கியமாகக் கூறுகிறோம். 'இது என்ன சீர்திருத்தத் திருமணம்! மகாத்மா காந்தி உலகப் பிரசித்தி பெற்றவராதலால்தான் அவரது மகனுக்குத் தம் புதல்வியைக் கொடுக்க இவர் இசைந்தார். மகாத்மாவின் சம்பந்தி என்பது பெருமையும் புகழுமல்லவோ! அவர் உண்மையிலேயே சீர்திருத்த நோக்கமுடையவராயிருப்பின், சாதாரண நிலையிலுள்ள ஒரு வாலிபனுக்குத் தம் மகளைக் கொடுப்பது தானே'' என்றெல்லாம் புரளியாகப் பேசி வாதிக்கலாயினர். இவர்களை இராஜாஜியின் உண்மையான மனநிலையை அறியாதவர்களென்றோ, அறிந்தும் ஏதோ குறைகூறவேண்டுமென்ற கெட்ட எண்ணமுடையவர்களென்றோதான் கூறமுடியும். லக்ஷ்மி தேவதாஸிடம் கொண்டதுபோல், வேறொரு சாதாரண வாலிபனிடம் காதல் கொண்டிருந்தால், கட்டாயம் அவனுக்குத்தான் இராஜாஜி விவாகம் செய்து வைத்திருப்பார். இதில் சிறிதும் சந்தேகமில்லை.

1934-வது வருஷத்தில் மகாத்மா காந்தி ஹரிஜன இயக்கத்தைப் பரவச்செய்ய நிதி திரட்டுவதற்காகத் தமிழ்நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்தாரல்லவா! அச்சமயம் இராஜாஜி மூன்றாவது முறையாகச் சிறை சென்று கோவை ஜெயிலில் இருந்தார்.

மகாத்மா, டாக்டர் ராஜனுடன் 6-ந்தேதி திருப்பூருக்கு விஜயம் செய்தார். அதே நாளில் இராஜாஜி சிறையிலிருந்து விடுதலை அடைந்தார். அவர் சிறைவாசக் கஷ்டத்துக்குச் சிரம பரிகாரம் செய்து கொள்ள வேண்டியிருக்க, அவ்விதம் செய்யாது, நேராகத் திருப்பூரில் நடைபெறும் கூட்டத்திற்கு ஸ்ரீ ஈ. வே. ராமசாமி நாயகரின் மோட்டாரில் வந்து அவர்களுடன் கலந்து கொண்டார். பிறகு, அங்கிருந்து மகாத்மா கோஷ்டியுடனேயே ஸ்ரீரங்கம் முதலிய பல இடங்களுக்குச் சென்று ஹரிஜன இயக்கத்துக்குப் பேராதரவும் நிதியும் சேர்த்துக் கொடுத்தார். 10-ந்தேதி தமது திருச்செங்கோடு ஆசிரமத்தில் மகாத்மா கோஷ்டியினரை வரவழைத்து உபசாரம் செய்தார். வடநாடு செல்லும்வரை அவர் மகாத்மாவுடனேயே எல்லா இடங்களுக்கும் சென்று தீவிரமாக வேலை செய்யலானார்.

## சட்டசபை வேலையில் சிரத்தை

இராஜாஜி சட்டசபை வேலைகளில் சிரத்தை காட்டி ஈடுபட்டார் என்ற செய்தி பலருக்கும் ஆச்சரியத்தை விளைவிக்கும். முன்னர் தேசபந்து சித்தரஞ்சன தாஸருடன் சட்டசபைப் பிரவேசம் கூடாதென்று தீவிரமாகப் போராடிய இராஜாஜி தேசபந்து தாஸ், பண்டித மோதிலால் நேரு, ஸ்ரீ விட்டல்பாய் படேல் முதலிய தலைவர்கள் சேர்ந்து தோற்றுவித்த சுயராஜ்யக் கட்சியால் தேச மக்களுக்குப் பலனொன்றும் உண்டாகாதென்று எடுத்துக்காட்டி நிரூபித்த இராஜாஜி - 1934 - வது வருஷம் செப்டெம்பர் மாதம் முதலிலிருந்து சட்ட

சபைப் பிரவேசத்தை ஆதாரித்துத் தேர்தல் பிரசாரத்தைச் செய்யத் தொடங்கி விட்டாரென்றால் அது அனைவருக்கும் ஆச்சரியத்தை விளைவிக்கத்தான் செய்யும்.

காலதேச வர்த்தமானத்தை அனுசரித்துக் காரியம் செய்வதில் ராஜாஜி சிறந்த நிபுணர். தேசபந்து தாஸர் தேச நலத்தை முன்னிட்டே சட்ட சபைப் பிரவேசம் செய்ய விரும்பினாரெனினும், அவர் சுயராஜ்யக் கட்சியை ஆரம்பித்த சமயம் அரசியல் நிலைமையும், பொது மக்கள் மனோபாவமும் அவரது நன்னோக்கத்தை நிறைவேற்றுவதற்குத் தகுந்த பக்குவம் வாய்த்தனவாக இல்லை. அதனாலேயே சுயராஜ்யக் கட்சியின் தீவிர வேலை எதிர்பார்த்த பலனை யடையாது தோல்வியுற்றது. இந்நிலைமையைத் தீர்க்க தரிசனமாக அறிந்தே இராஜாஜி தேசபந்து தாஸர் முதலியவர்களின் முயற்சியை எதிர்த்தார்.

இராஜாஜி சட்டசபை வேலையில் புகுந்திருக்கும் இச்சமயமே தகுந்த தருணமாகும். 1924-வது வருஷத்து அரசியல் நிலைமையும் 1934-வது வருஷத்து அரசியல் நிலைமையும் சீர் தூக்கிப் பார்ப்பவர்களுக்கு இந்திய அரசியலில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தியும் முற்போக்கும் நன்கு விளங்கும். பிரிட்டிஷ் சர்க்கார் இந்திய 'மாகாண சுயாட்சி' வழங்க முன்வந்திருக்கும் காலம். 'மாகாண சுயாட்சி' என்ற சொல்லுக்குரியவாறு இந்திய மக்களுக்கு அரசியல் சுதந்திரம் கொடுக்காவிடினும், அதை நமது கட்டுப்பாடான முயற்சியால் பெற்றுவிடலாம் என்ற

நம்பிக்கை இருந்து வந்தது. இத்தகைய நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதில் பழுதொன்றும் இல்லை. அடுத்தடுத்து ஏற்பட்ட அரசியல் போராட்டங்களால் அலுத்துப் போயிருக்கும் பொதுமக்களுக்குக் களைப்பாற அவகாசம் கொடுத்துப் பூரண சுதந்தர லட்சியத்தைப் பெறுவதற்கு நடைபெற விருக்கும் பெரிய போராட்டத்துக்குத் தங்களைத் தயராக்கிக் கொள்வதற்குப் போதிய அவகாசம் கொடுத்து - இதனிடையே பிரிட்டிஷ் - இந்திய சர்க்கார் வாயிலாகக் கிடைக்கும் அரசியல் உரிமைகளைக் கொண்டு அப்பொது மக்களுக்கு எவ்வளவு தூரம் நன்மை செய்ய முடியுமோ அவ்வளவும் செய்யலாம் என்ற உயரிய நோக்கோடேயே இராஜாஜி காலமறிந்து இச் சட்டசபை வேலையில் பிரவேசித்துத் தீவிரமாக வேலை செய்யலானார்.

டாக்டர் அன்சாரி, பண்டித மாளவியா, டாக்டர் விபினசந்திர ராய், ஸ்ரீ சத்தியமூர்த்தி முதலிய தலைவர்கள் சேர்ந்து பழைய சுயராஜ்யக் கட்சியை உயிர்ப்பித்து, மகாத்மாவினுடைய ஆசியும் காங்கிரஸ் மகாசபையினுடைய ஆதரவும் பெற்று சட்டசபை வேலை செய்பலாம் என்று செய்த முயற்சியை, இராஜாஜி காங்கிரஸ் மகாசபையே நேரிடையாகச் சட்டசபை வேலையில் ஈடுபடுவது தேச நலத்துக்கு மிகவும் உகந்தது என்று உட்கொண்டு அவ்வழியில் திருப்பினார். தீவிரவாதியான பண்டித ஜவாஹர்லால் நேருவும் காங்கிரஸ் இடதுசாரிகளும் காங்கிரஸ் சட்டசபைப் பிரவேசம் செய்யக்கூடா

தென்று தீவிரமாக எதிர்த்தும், இராஜாஜி ஸ்ரீ சத்திய மூர்த்தியோடு சேர்ந்து அவர்களுக்கெல்லாம் தகுந்த பதிலளித்து முடிவில் சட்டசபைப் பிரவேசத்தைக் காங்கிரஸ் மகாசபை மேற்கொள்ளும்படிச் செய்து விட்டார்.

சட்டசபைப் பிரவேசமே காங்கிரஸ் மகாசபை யின் முக்கிய வேலைத்திட்டமான பிறகு இராஜாஜி யதேச்சாதிகாரங் கொண்ட பிரிட்டிஷ் இந்திய சர்க்காருக்கும் பிற்போக்காளர்களான பிற கட்சி யினருக்கும் பதிலளிக்கும் முறையில் தேர்தல் தந்திரங் களை நியாயமான வழியில் கடைப்பிடித்து இந்தியா சட்டசபை, சென்னை ஜனப்பிரதிநிதி சபை, அரசாங்க சபை, சென்னை நகரசபை, வெளியூர் முனிசிபாலிடி, ஜில்லா போர்டுகள் ஆகிய ஸ்தாபனங்களில் காங் கிரஸ்காரர்களுக்கே வெற்றியை வாங்கிக் கொடுக்கச் செய்த அபார வேலை இராஜாஜியின் சரித்திரத்தி லேயே பொன்னெழுத்துக்களால் பொறித்து வைக்கக் கூடிய குறிப்பிடத்தக்க சம்பவமாகும். சட்டசபைப் பகிஷ்கார வேலையில் எவ்வளவு தீவிர உணர்ச்சி காட்டினாரோ, அதேபோல் சட்டசபைப் பிரவேச வேலையிலும் அதிதீவிர உணர்ச்சி காட்டிச் சேவை செய்யலானார்.

1934-வது வருடம் கூடிய தமிழ் மாகாண காங்கிரஸ் மகாநாட்டில் இராஜாஜி மீண்டும் தமிழ் மாகாண காங்கிரஸ், கமிட்டிக்குத் தலைவராக ஏக மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனவே, காங் கிரஸ் மகாசபையின் கட்டளைப்படி இந்தியா சட்ட சபைத் தேர்தலுக்குத் தமிழ்நாட்டில் தகுந்த அபேட்

சகர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பும், அத்தேர்தலில் காங்கிரஸுக்கே பெரு வெற்றி ஏற்படும்படி செய்யும் பொறுப்பும் இராஜாஜிக்கே ஏற்பட்டன.

இராஜாஜி தகுந்த அபேட்சகர்களை தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் மிகவும் சிரத்தை காட்டலானார். தம் சொந்த அபிப்பிராய பேதங் காரணமாக காங்கிரஸிலிருந்து விலகியிருக்கும் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு இத்தேர்தலில் ஒரு அபேட்சகராக நிற்க விரும்புவதாக அறிந்ததும் இராஜாஜி அவரிடம் தாமே நேரில் சென்று மீண்டும் காங்கிரஸில் சேர்ந்துவிட்டால் அவரை வடாற்காடு, கோவை, சேலம் ஆகிய தொகுதிகளுக்குக் காங்கிரஸ் அபேட்சகரராகப் போட்டுவிடுவதாக கூறினார். டாக்டர் நாயுடு காங்கிரஸ் பலத்தைக் காட்டிலும் தம் சொந்த பலத்தில் அதிக நம்பிக்கை கொண்டிருந்ததால், காங்கிரஸில் சேர முடியாதென்றும், தம்மைப் போட்டியின்றி விட்டுவிட வேண்டுமென்றும் பிடிவாதமாகக் கூறினார். இராஜாஜி பழைய தோழமையைக் கருதி டாக்டருக்கு எவ்வளவோ தூரம் சொல்லிப் பார்த்தார்.

டாக்டர் நாயுடு தம் பிடிவாதத்தை விடாது போகவே இராஜாஜி அவருக்குப் புத்தி கற்பிக்க விரும்பினார். டாக்டர் நாயுடுவைப் போன்றே, ஸர் ஆர். கே. சண்முகம் செட்டியாரும் தம் மிடுக்கைக் காட்டலானார். சட்டசபைத் தலைவராக இருப்பவர்களைப் போட்டியின்றியே விட்டுவிடுவது

வழக்கமாதலால், தமக்கும் காங்கிரஸ் யாரையும் போட்டியாகப் போடக்கூடாதென்று பெருமிதத்தோடு கூறினர். காங்கிரஸ் தமக்குப் போட்டியாக அபேட்சகரைப் போடப்போவதாக அறிந்ததும், அவர் வெகுண்டு எழுந்து, காங்கிரஸ் மெம்பர்கள் ஒழுங்காக நடக்கிறார்களா என்று பார்ப்பதற்காகத் தாம் கட்டாயம் இத் தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் தலைவராகவே வரப்போவதாகவும், சென்ற தேர்தலில் ஒரு தொகுதியில் நின்று வெற்றிபெற்ற தாம் இந்தத் தேர்தலில் சென்னையிலுள்ள எல்லா ஜில்லாக்களும் சேர்ந்த வியாபாரத் தொகுதியில் நின்று பெருவெற்றி பெறப் போவதாகவும் வீராப்புப் பேசினர்.

இதுவரை அரசியல் கொள்கை காரணமாக இராஜாஜியுடன் மாறுபட்ட அபிப்பிராயங் கொண்ட மிதவாதக் கட்சியினரும், ஜஸ்டிஸ் கட்சியினரும், தாங்கள் ஏகபோகமாக அநுபவித்துவரும் சட்ட சபைப் பதவி முதலியவைகளுக்குக் காங்கிரஸ்காரர்களை அபேட்சகர்களாக நிறுத்தித் தேர்தல் பிரசாரஞ் செய்ய வந்துவிட்டார்களென்று அறிந்ததும் அவர்கள் மனங் கலங்கினர். இந்தத் தேர்தலில் தங்கள் பணம், பட்டம், செல்வாக்கு எல்லாம் பறிமுதல் போய்விடுமென்று ஊகித்துக்கொண்டே அவர்கள் இராஜாஜியைப் பலவிதமாகத் தாக்கினர். ஜஸ்டிஸ் கட்சிப் பத்திரிகைகள் எல்லாம் இராஜாஜியைப் பற்றிக் கேவலமாக எழுதித் துஷ்பிரசாரம் செய்தன. இராஜாஜி சென்னை நகரம் முதலிய தொகுதிகளுக்கு முறையே ஸ்ரீமான்கள் எஸ். சத்தியமூர்த்தி,

முத்துரங்க முதலியார், டாக்டர் ராஜன், பி. எஸ். குமாரசாமி ராஜா. டி. எஸ். அவிநாசிலிங்கம் ஆகியவர்களை அபேட்சகர்களாக நிறுத்தினர். மற்றெல்லாத் தொகுதிகளைவிட, டாக்டர் நாயுடு, ஸர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார் ஆகியோர் நின்ற வட ஆற்காடு தொகுதிகளில்தான் இராஜாஜி தீவிரப் பிரசாரம் செய்தார். அவரது பிரசார வேகத்தையும் சக்தியையும் கண்டு எதிரிகள் நடுங்கினர். ஆரம்பத்தில் வீராப்புப் பேசிய ஸர் சண்முகம் உள்ளூறப் பயங்கொள்ளலானர். அவர் தலைவர் பதவிக் காலம் முடியுமுன்பே தேர்தல் பிரசங்கம் செய்யத் தொடங்கி விட்டார். அவர் தம் பிரசங்கங்களில் இராஜாஜியை எவ்வளவு தூரம் தாக்கிப் பேசமுடியுமோ அவ்வளவு தூரம் தீவிரமாகத் தாக்கிப் பேசினர். இராஜாஜிக்குக் ''குல்லுக பட்டர்'' என்று பட்டம் சூட்டினர். முற்காலத்தில் மநு தர்ம சாஸ்திரத்துக்கு குல்லுக பட்டர் என்பவர் வியாக்கியானம் செய்து விட்டுப் போனதுபோல், மகாத்மாவும் காங்கிரஸும் செய்துவரும் வேலைகளுக்கு இராஜாஜி புதுப்புது தத்துவங்களையெல்லாம் கற்பித்து வியாக்கியானம் செய்து மகிமை உண்டுபண்ணி வருவதாகப் பொருள் படுத்தி அவர் அவ்விதம் கூறினர்.

இதுவன்றி, ஒரு சில வைதிக சநாதனத் தலைவர்கள் இராஜாஜி கடவுள் நம்பிக்கை யற்றவரென்றும், வைதிக ஆசாரங்களினின்றும் வழுவினவரென்றும் அதனால் அவர் சேர்ந்திருக்கும் காங்கிரஸும் கடவுள், மதம் ஆகிய விஷயங்களில் தக்க பாதுகாப்பளிக்காதென்றும் பொய்ப் பிரசாரம் செய்து மக்கள் மனத்தைக் கலக்க முயன்றனர்.

இவ்விதம், ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களும் சநாதனிகளும், பொய்ப் பிரசாரம் செய்தும், இராஜாஜியும் ஆந்திர கேரள காங்கிரஸ் தலைவர்களும் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக, சென்னை மாகாணமே எல்லா ஸ்தானங்களிலும் வெற்றி பெற்று மற்ற மாகாணங்களுக்கும் வழிகாட்டியது.

இந்தியா சட்டசபைத் தேர்தலை யடுத்து, சென்னைச் சட்டசபையில் ஏற்பட்ட உப தேர்தல்களிலும் காங்கிரஸ் அபேட்சகர்களை நிறுத்தி வெற்றிபெறச் செய்த பெருமை இராஜாஜிக்கே உரியதாகும். இதிலிருந்து, இராஜாஜி ஒத்துழையாமைச் சட்ட மறுப்புப் போராட்டங்களை நடத்துவதில் மட்டுமல்ல; கதர், மதுவிலக்கு, தீண்டாமையொழிப்பு முதலிய நிர்மாண வேலைத்திட்டங்களை நிறைவேற்றி வைத்திருப்பதில் மட்டுமல்ல; சட்டசபைத் தேர்தல் போராட்டங்களைத் திறம்பட நடத்துவதிலும் பேராற்றல் வாய்ந்தவர் என்பது உறுதியாயிற்று.

இங்ஙனம் சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸுக்குப் பெருவெற்றியை வாங்கித் தந்த இராஜாஜி ஸ்ரீமதி ருக்மணி லட்சுமீபதியைப் பாராட்ட சென்னை ஹைக்கோர்ட்டுக் கடற்கரையில் நடந்த மாபெருங் கூட்டத்தில் “நான் பொதுவாழ்வில் ஈடுபட்டு 30 வருஷங்கள் ஆயின. மற்றவர்கள் வேலை செய்வதற்கு இடங்கொடுக்க நான் விலகிக் கொள்கிறேன்’’ என்று தாம் காங்கிரஸிலிருந்து விலகி ஓய்வு எடுத்துக்கொள்ளப் போவதாக மெல்லப் பேச்சோடு பேச்சாகக் கூறிவிட்டார்.

இவ் விஷயத்தை முதலில் யாரும் அவ்வளவாகக் கவனிக்கவில்லை. நாளடைவில்தான் இராஜாஜி அரசியலிலிருந்து விலகி ஓய்வெடுத்துக் கொள்ளப் போவது உறுதி என அனைவருக்கும் தெரிந்தது. இராஜாஜி 1935-வது வருஷம் மே மாதம் 12-ஆம் தேதியன்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவியையும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் பதவியையும் ராஜிநாமாச் செய்து மேற்படி கமிட்டிகளுக்கு முறையே தமது ராஜிநாமாக் கடிதங்களை அனுப்பிவிட்டார். அதன் பிறகுதான் தமிழ் நாட்டில் பரபரப்பு உண்டாயிற்று. வடநாட்டுத் தலைவர்களுக்கும் அவ் விஷயம் வருத்தத்தை உண்டு பண்ணியது. ராஜன் பாபு, வல்லபபாய் படேல், பண்டித நேரு முதலியோர் இராஜாஜியின் ராஜிநாமாவை வாபஸ் வாங்கிக்கொள்ளும்படி வேண்டிக்கொண்டனர். மகாத்மா கூட இராஜாஜி விலகுவதை ஒப்புக் கொள்ளவில்லை. தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியாரும், "நீங்கள் வேண்டுமானால் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்; ஆனால், தலைவர் பதவியை ராஜிநாமாச் செய்யவேண்டாம்" என்று வெகு தூரம் வேண்டிக்கொண்டனர். இராஜாஜி சட்டசபைப் பிரவேச காலத்தில் பலவிதமான தொந்தரவுகளும், குழப்பங்களும் ஏற்படும் என்பதை உத்தேசித்தோ என்னவோ இவ்விஷயத்தில் பிடிவாதமாகவே இருந்து விட்டார்.

அடுத்து, செங்கற்பட்டில் நடைபெற்ற 47-வது தமிழ் மாகாண மகாநாட்டில் இராஜாஜி ராஜிநாமா விஷயம் வெகுவாக விவாதிக்கப்பட்டது. அங்கும்

பலர் இராஜாஜியை, "முக்கியமான இச்சமயத்தில் தாங்கள் அரசியலிலிருந்து விலகிக் கொள்வது சரியா ?" என்று கேட்டுக்கொண்டனர். அப்போது இராஜாஜி, "தனி மனிதர்கள் வருவார்கள்; போவார்கள். ஆனல், காங்கிரஸ் எப்போதும் நிலைத்து நிற்கும். மக்களின் தேசீய உணர்ச்சியும் சுதந்திர தாகமுந்தான் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் ஜீவசக்தி. ஆகையால் தனி மனிதர்களைப்பற்றி நீங்கள் கவலைப் படக்கூடாது" என்று உருக்கமாக அளித்த பதில் யாரையும் அதற்குமேல் பேச வொட்டாமல் செய்து விட்டது.

## இராஜாஜியும் சத்தியமூர்த்தியும்

பின்னர், இராஜாஜி விருப்பப்படி ஸ்ரீ சத்திய மூர்த்தி தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒரு சிலர் ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்காரைக் கொண்டுவர முயன்றனர். ஆனல், அது பலிக்கவில்லை. முதல் வருஷத்தில் ஸ்ரீ சத்தியமூர்த்தி செய்த அரிய சேவையைக் கண்டே, காரைக்குடியில் கூடிய 47-வது தமிழ் மாகாண மகாநாட்டில் பதவி மோகங் காரணமாகப் பலத்த போட்டியிருந்தும், இராஜாஜி அவரை மற்ருெரு வருஷமும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவராக வரும்படி செய்தார்; அதற் கேற்ப, மாகாண காங்கிரஸ் பிரதிநிதிகள் பெரும் பாலாரும் ஆதரித்தனர். ஸ்ரீ சத்தியமூர்த்தியின் தலைமையில் தமிழ் நாடு காங்கிரஸ், முன் எப் போதையும்விட பெருஞ்சிறப்பு அடைந்ததே ஒழிய, எவ்வகையிலும் தாழ்ச்சியுறவில்லை. போட்டி

யும், பொருமையும், பிளவும் ஏற்படக்கூடிய சட்ட சபை முதலியவைகளின் தேர்தல் காலங்களில் காங்கிரஸ் போன்ற ஓர் அரசியல் ஸ்தாபனத்தைத் தலைமை வகித்து நடத்துவதென்பது சாமானிய காரியமன்று. இந்திய அரசியல் சீர்திருத்தச் சட்டத் தின்படி ஏற்பட்ட பொதுத் தேர்தலில் - அதாவது மாகாண சட்டசபைத் தேர்தலில் - தமிழ்நாட்டுக்கு நிகரற்ற வெற்றியை வாங்கித் தந்த பெருமை ஸ்ரீ சத்தியமூர்த்தியையே சாரும். அவரது சலியா உழைப்பும், சிறந்த பிரசங்கமுமே அன்று சென்னை ஜனப்பிரதிநிதி சபையிலும், அரசாங்க சபையிலும் காங்கிரஸ்காரர்கள் பெரும்பான்மையோராக வீற்றிருந் ததற்கும், காங்கிரஸ்காரர்கள் ஆட்சிப் பீடத்தில் இருந்து வந்ததற்கும் மூலகாரணமென்பதை எவரே மறுக்க வல்லார்?

மகாத்மா காந்தி காங்கிரஸிலிருந்து விலகியிருந் தாலும் சமயம் நேரும்போது எங்கிருப்பினும் தாமே வந்து கலந்து கொள்வதாகக் கூறியதுபோல், அவ்விதமே பல முக்கிய சமயங்களிலும், காங்கிரஸ் தலைவர்கள் வேண்டுகோளின்படி தமது அரிய ஆலோசனைகளைக் கூறி யுதவுவதுபோல், இராஜாஜியும் அரசியலிலிருந்து விலகியிருந்த காலத்தும், காங்கிரஸ் வேலைகள் ஒழுங்காக நடை பெறுவதற்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறியே வரலானார். பொதுத் தேர்தல் நெருங்கியதும், மீண்டும் வந்து கலந்து கொண்டு காங்கிரஸ் வெற்றிக்காகப் பாடு படலானார்.

இதனிடையே, திருச்சி ஜில்லாத் தலைவர் தேர்தலில் ஓர் அசம்பாவிதம் நேர்ந்தது. அதில்

109103

டாக்டர் ராஜன் உள்ளூர்த் தகராறைப் பெரிதாக எண்ணி, உத்தியோக முறையில் தலைவர் பதவிக்கு நிறுத்தப்பட்ட காங்கிரஸ் அபேட்சகருக்குப் போட்டியாக ஒருவரை நிறுத்தி வெற்றி பெறச் செய்து காங்கிரஸ் கட்டுப்பாட்டைக் குலைத்தார். இது இராஜாஜியின் மனத்தைப் பெரிதும் புண்படுத்தியது. தமக்கு மிகவும் அத்தியந்த சிநேகிதராகவும், தமது நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரராகவும் உள்ள ஒருவரே இவ்விதம் வரம்புமீறிச் செய்த செயல் அவருக்குச் சகிக்கக் கூடாததாய்ப் போய்விட்டது இந்நிலைமையே மீண்டும் காங்கிரஸிலிருந்து இராஜாஜியை விலகும்படி செய்தது

பின்னர், பொதுத்தேர்தலில் ஸ்ரீ சத்தியமூர்த்தி தாம் நின்ற சர்வகலாசாலைத் தொகுதியை விட்டுக் கொடுத்து, சர்தார் படேலோடு வற்புறுத்தி நிறுத்திய தன் பேரிலேயே, தவிர்க்க முடியாத நிலைமையில் இராஜாஜி மீண்டும் அரசியலில் கலந்துகொண்டார். அதுவரை அவர் உபநிஷத் ஆராய்ச்சியிலேயே தமது அறிவாற்றலை ஈடுபடுத்தியிருந்தார். பிறகு அவர் திருச்சி, கோவை முதலிய இடங்களுக்கெல்லாம் போய்த் தீவிரமாகத் தேர்தல் பிரசாரம் செய்யலானார். இவரது தீவிரப் பிரசாரத்தைக் கண்டுதான் திவான் பகதூர் ஸி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் போன்ற பிரமுகர்கள் காங்கிரஸ் அபேட்சகர்களோடு போட்டி போடுவதினின்றும் விலகிக் கொண்டனர்.

ஸ்ரீ சத்தியமூர்த்திக்குப் பதிலாக நின்ற இராஜாஜி, பட்டதாரி வாக்காளர்களையெல்லாம்

தனித்தனியாகக் கடிதமூலம் கேட்டுக்கொள்ள முடியாதென்று கூறிப் பத்திரிகையில் விண்ணப் பித்துக் கொண்டார். இவருக்குப் போட்டியாக ஸ்ரீ நாராயண குரூப்பும், ஸ்ரீஎஸ். இராஜகோபாலனும் நின்றனர். இவரது தொகுதியில் மொத்தம் பதி வான 6000 ஓட்டுகளில் ஸ்ரீஇராஜகோபாலன் 270 ஓட்டுகளும், ஸ்ரீ குரூப் 372 ஓட்டுகளுமே பெற்றனர். ஆகவே, இவர்கள் இருவரும் தாங்கள் கட்டிய ஜாமீன் தொகைகளை இழந்தனர்.

எதிர்பார்த்ததற்கு மேலாகவே, சென்னை மாகாணத்தில் ஜனப்பிரதிநிதி சபைக்குக் காங்கிரஸ் காரர்கள் மொத்தம் 215 ஸ்தானங்களில் 159 ஸ்தானங்களைக் கைப்பற்றினர். இவ்விதமே அரசாங்க சபைக்கும் காங்கிரஸ்காரர்களே பெரும் பான்மையாக வந்தனர்.

## பிரதம மந்திரி பதவி

ஆகவே, இராஜாஜியே காங்கிரஸ் சட்டசபைக் கட்சிக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பாஷா வாரியாகப் பார்த்தால் இக் காங்கிரஸ் கட்சியில் ஆந்திரர், மலையாளிகள், கர்நாடகர்கள், தமிழர் ஆகிய நால்வகைப் பட்ட மக்களும் அங்கத்தினர்களாக வந்திருந்தனர். இந் நான்கு பிரிவினரும் ஏகோபித்து இராஜாஜியைத் தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுப்பதென்றால், எவ்வளவு தூரம் அவர்கள் அவரிடம் நம்பிக்கை வைத்திருக்க வேண்டுமென்று சொல்லவேண்டியதில்லை.

தலைமைப் பதவி வகிக்கக்கூடிய தகுதி ஒரு சிலருக்குத்தான் இயற்கையாக அமைந்திருக்கிறது.

அவ்விதப் பெருந் தகுதி வாய்ந்தவர்களில் இராஜாஜி தலை சிறந்தவராவார். ஒரு நாட்டுக்கோ அல்லது ஒரு ஸ்தாபனத்துக்கோ தலைவராக இருப்பவருக்கு அறிவு ஆற்றல் நிர்வாகத் திறமை ஆகியவற்றோடு ராஜ தந்திரமும் இருக்க வேண்டியது அவசியம். இராஜாஜி ராஜதந்திரமே ஓர் உருவானவர். அவரது ராஜதந்திர முறையே அரசியல் எதிரிகளையே யன்றி, நண்பர்களையும் நடுங்க வைத்து வந்தது. அத் தகைய ராஜதந்திரி பல பிரிவினரைக் கொண்ட காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராகவோ அரசியலில் பிரதம மந்திரியாகவோ வந்ததில் ஆச்சரியமில்லை யல்லவா!

பொதுத் தேர்தலில் ஈடுபடுவதற்கு முன்பிருந்தே காங்கிரஸ் தலைவர்களிடையே மந்திரி பதவியை ஏற்பதா? வேண்டாமா? என்ற பிரச்னை இருந்து வந்ததல்லவா? காங்கிரஸ்காரர்கள் ஆறு மாகாணங் களில் பெரும்பான்மையாக வந்துவிடவே, இப் பிரச்னைபற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. எனவே, காங்கிரஸ் காரியக் கமிட்டியும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும் இப்பிரச்னை பற்றித் தீவிரமாக வாதித்து, ‘கவர்னர்கள் விசேஷ அதிகாரங்களை உபயோகிப்பதில்லை என்று வாக்குறுதி கொடுத்தால், காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவி ஏற்கலாம்’ என்று தீர்மானித்தன. இவ்வித முடிவுக்கு இராஜாஜியும், ஸ்ரீ சத்தியமூர்த்தியுமே மூல காரணர்களாவர். ஆனால், கவர்னர்கள் வாக்குறுதி நிபந்தனையே காங்கிரஸ்காரர்கள் உடனே பதவி யேற்க முடியாமற் போனதற்கும் பதவி வேட்டைக் காரர்கள் இடையில் நான்கு மாத காலம் ஆட்சியை

லிருந்ததற்கும் காரணமாய் முடிந்தது. பினும் மந்திரி களுக்கு உயிர்ப்பிச்சை தரவேண்டிச் சட்டசபை கள் கூடக் கூட்டப்படவில்லை.

டில்லியிலிருந்து வந்ததும் கவர்னர் அழைப்பின் மீது இராஜாஜி அவரைக் கண்டு பேசினுர்; காங் கிரஸ் தீர்மானப்படி, வாக்குறுதி யளிப்பதாயின், தாம் மந்திரிசபை அமைப்பதாக அவர் கூறினுர். ஆனல், கவர்னர் மேலுத்தரவை யொட்டி இதற்கு இசைய வில்லை.

மூன்று மாதங்கள் கழிந்தன. இவ்வித அரசியல் நெருக்கடியைச் சர்க்கார் நீடிக்க விரும்பவில்லை. எனவே, காங்கிரஸ்காரர்கள் ஒத்துழைப்புக்கு வேண்டியபடி, இந்தியா மந்திரியும், வைஸ்ராயும் முதலிலிருந்த தங்கள் தீவிரத்தினின்றும் ஒரு படி இறங்கி, அரசியல் நிலைமையை விளக்கி ‘இம்மாகாண சுயாட்சியில் மந்திரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சுதந்திரத்தில் கவர்னர்கள் இம்மியளவும் தலையிட மாட்டார்கள்’ என்று உறுதி கூறினர். தாங்கள் விதித்த நிபந்தனைப்படி கவர்னர்கள் சார்பில் இந்தியா மந்திரியும், வைஸ்ராயும் மறைமுகமாக வேனும் வாக்களிக்கவே காங்கிரஸ்காரர்களும் தங்கள் பிடியைத் தளர்த்திக் கொடுத்தனர்.

எனவே, அடுத்துக் கூடிய கமிட்டிகளில் காங் கிரஸ் கட்சித் தலைவர்கள் கவர்னர்கள் அழைப்புக்கு இணங்கிப் போய்ப் பதவிகளை ஒப்புக்கொள்ளும்படி தீர்மானிக்கப் பட்டது. அவ்விதமே இராஜாஜியும் கவர்னர் அழைப்புக்கு இணங்கி மந்திரி சபையை அமைத்தார். அவர் அமைத்த மந்திரி சபை இது

வரையில் இல்லாத வகையில் நூதனமான முறையில் இருந்ததைப் பலரும் பாராட்டி வரவேற்றனர். சென்னை மாகாணத்திலுள்ள எல்லாப் பிரிவினர்க்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும் முறையில் பத்து மந்திரி களையும், பத்துப் பார்லிமெண்டரிக் காரியதரிசி களையும் இராஜாஜி ஏற்படுத்தினர். இன்ன இன்ன வேலைக்கு இன்ன இன்னவர்களை நியமித்தால்தான் காரியம் நன்கு நடைபெறும் என்று அறிந்து இராஜாஜி ஏற்படுத்தியிருந்த இவ்வமைப்பில் அனைவருக்கும் பரம திருப்தியேயாயினும் டாக்டர் ராஜன், ஸ்ரீ எஸ். ராமநாதன் ஆகிய இருவரை மந்திரி சபை யில் சேர்த்திருந்ததைப் பலர் விரும்பவில்லை. அதற்கு அவர்கள் பல காரணங்கள் கூறினர். அத்துடன், ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு மந்திரி சபையில் இடமளிக் காததையும் ஒரு பெருங்குறையாகப் பலர் கருதினர். காங்கிரஸிலிருந்தே விலகிப் போய்விட்ட டாக்டர் ராஜனைச் சென்னை அரசாங்க சபையில் நியமன மெம்பராக நியமித்து மந்திரி சபையில் சேர்த்துக் கொண்டது போல், ஸ்ரீ சத்தியமூர்த்திக்கும் காலியா யிருக்கும் மற்றொரு நியமன ஸ்தானத்தை அளித்து ஏன் மந்திரியாக்கக் கூடாது என்று சிலர் வாதித்தனர்.

ஸ்ரீ ராமநாதனுக்குக் கொடுக்கப்பட்ட விளம்பர இலாகா மந்திரி பதவி இதுவரை எங்குமே இல்லாத புதிய பதவியாகும். அப்பதவிக்கு ஸ்ரீ ராமநாதன் எவ்வளவு தூரம் பொருத்தமுடையவர் என்பதை அவரது அறிவாற்றலையும் கல்வித் திறமையையும் மேனாட்டு அரசியல் அநுபவத்தையும் உணர்ந்தவர் கள் நன்கு அறிவர்,

ஆனல், இராஜாஜி காங்கிரஸ் கட்சித் தலைவர் என்ற முறையில் தாம் பிரதம மந்திரியாகி அமைத்த

மந்திரி சபை, காரியதரிசிகள் நியமனங்களிலிருந்து ஒரு விஷயத்தை உணரலாம். இராஜாஜி அரசியல் வாழ்வை மேற்கொண்ட பின்னர், தம் நம்பிக்கைக்கும் அன்புக்கும் பாத்திரமானவர்களை எந்நிலையிலும் மறந்ததில்லை. விடுதலைப் போரில் கலந்து சிறை செல்லும்போதும் சரி, நிர்மாண வேலைத் திட்டங்களை நிறைவேற்றி வைக்கும் போதும் சரி, இதுபோன்ற பதவிகளை வகிக்க நேரும் போதும் சரி, அவர் அவர்களைக் கைவிட்டதேயில்லை டாக்டர் ராஜன், ஸ்ரீஎஸ். ராமநாதன் போன்றவர்கள் மந்திரி சபையில் இருந்ததற்கு இதுவே மூலகாரணமாகும்.

இராஜாஜி பிரதம மந்திரியான பிறகு செய்திருக்கும் காரியங்களை அனைவரும் அறிவர். முன்பின் இவ்வித ஆட்சிப் பீடத்திலிருந்து அநுபவமில்லாத இராஜாஜி, பொக்கிஷ மந்திரி என்ற ஹோதாவில் தயாரித்துச் சட்டசபைகளில் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தைக் கண்டதுமே, அவருடைய நிர்வாகத் திறமையையும் புத்தி கூர்மையையும் எதிர்க்கட்சியினரும் கண்டு வியப்புற்றனர். அவர் வகுத்த வேலைத் திட்டங்களை-மதுவிலக்குத் திட்டம், கைத்தொழில் பாதுகாப்புத்திட்டம் முதலிய வேலைத் திட்டங்களை-சர் முகமது உஸ்மான், திவான் பகதூர் அப்பாதுரைப் பிள்ளை போன்ற எதிர்க்கட்சிப் பிரமுகர்கள்கூட பலபடப் பாராட்டியிருக்கின்றனர்.

சென்னை ஜனப்பிரதிநிதி சபையும் அரசாங்க சபையும் ஆரம்பிக்கப்பட்டதும், சென்னை கவர்னர் மெம்பர்களுக்கு நம்பிக்கையுண்டாகும் வகையில் புதிய அரசியல் நிலைமையை விளக்கி பிரசங்கம்

செய்தாரல்லவா? அவர் வந்து சென்றதுமே, இராஜாஜி மேற்படி அரசியல் திட்டத்தின் போலித் தன்மையைப் புலப்படுத்தி, இந்திய மக்களின் தேசீயக் கோரிக்கைத் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி வைத்தார். "இதுபோன்றே பிரிட்டிஷ் சர்க்கார் நம்மீது சுமத்த இருந்த சமஷ்டி அரசியலையும் கண்டித்து ஒரு தீர்மானம் கொண்டு வந்து இருசபையிலும் நிறைவேற்றினர்.

தங்களுக்குக் குறைந்த சம்பளமாக 500 ரூபாயை ஏற்படுத்திக்கொண்டது போல், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ் தர்கள் உட்பட அனைவருக்கும் தராதரத்திற்கேற்ற படி சம்பளத்தைக் குறைத்ததும், நீண்ட கால மாகக் கிளர்ச்சி செய்தும் அசைக்க முடியாதிருந்த ஜெனரல் நீல் துரையின் உருவச்சிலையை அப்புறப் படுத்திச் சென்னை மியூசியத்தில் கொண்டுபோய் வைத்ததும் இராஜாஜியின் துணிகரமான செயல் களுக்குச் சிறந்த உதாரணங்களாகும்.

பட்ஜெட் விவாதத்தின்போதும், கடன் நிவாரண மசோதா விவாதத்தின்போதும் எதிர்க் கட்சியினர், ஜஸ்டிஸ் கட்சி, முஸ்லீம் லீக் கட்சி, ஐரோப்பியர் கட்சி ஆகிய சிறுபான்மைக் கட்சி களெல்லாம் ஒன்று சேர்ந்து காட்டிய எதிர்ப்புகளை யெல்லாம் இராஜாஜியின் ஆணித்தரமான பதில்கள் தவிடுபொடியாக்கிவிட்டன. அவரது திறமையான வாதத்தின் முன் எதிர்க் கட்சியினரின் விதண்டா வாதங்களனைத்தும் இருந்த இடந் தெரியாமல் போய் விட்டன.

இராஜாஜி காங்கிரஸ் கட்சித் தலைவராயும் பிரதம மந்திரியாயும் இருந்துவருவதால், சில விஷயங்களில் சர்வாதிகாரத்துவ முறையில் நடந்து கொள்கிறார் என்று பிறர் - ஏன்? காங்கிரஸ் கட்சியி லேயே சில ஆந்திரர்களும் சில தமிழ்ச் சகோதரர் களுங்கூட - முணுமுணுத்தனர். ஆயினும் விவசாயிகள் கடன் நிவாரண மசோதா கொண்டுவர விருந்த முதல் சட்டசபைக் கூட்டத்தின் போது கூடிய காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் இராஜாஜி இதுவரை செய்த காரியங்களை ஆதரித்து அவரிடம் தங்களுக்குப் பூரண நம்பிக்கை இருப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றினர். அத்தீர்மானத்திற்குப் பாதகமாகச் சிலரே-அதுவும் ஆந்திரர்களே-ஓட்டுக் கொடுத்தனர். இவ்விதமே, 1937 - இல் வத்தலக் குண்டில் கூடிய 49 - வது தமிழ் மாகாண காங் கிரஸ் மகாநாட்டிலும், காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலில் இராஜாஜி அநாவசியமாகத் தலையிட்டார் என்று குறை கூறினர் சிலர். ஆயினும் அங்கும், மந்திரிசபை செய்த காரியங்களையும், இராஜாஜியைத் தலைவராகக்கொண்ட மந்திரிகளைப் பாராட்டி அவர் களிடம் தங்கள் நம்பிக்கையைத் தெரிவித்து மகா நாட்டில் தீர்மானம் நிறைவேற்றினர்.

இராஜாஜி மேற்கூறியபடி சர்வாதிகார முறையில் நடந்துகொண்டாரென்றால், அது பொதுநலத்தை யொட்டியே இருந்ததேயொழிய தன்னலத்தைச் சார்ந்ததில்லை என்பது அனுபவத்தில் தெரிந்ததே.

1938 - ஆம் வருஷம் ஜனவரி மாதத்தில் விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் வைஸ்ராயின்

அங்கீகாரமும் பெற்றுவிட்டது. பின்னர் இராஜாஜி சமர்ப்பித்த இரண்டாவது பட்ஜெட்டைக் 'காங்கிரஸ் பட்ஜெட்' என்றும் பொது மக்களுக்குப் பெரிதும் நன்மை தரக்கூடிய நல்ல பட்ஜெட் என்றும் துணிந்து கூறலாம். இப்பட்ஜெட்டில் குறிப்பிடத் தக்க அம்சங்கள் : கிராம மக்கள் குடிநீர் வசதித் திட்டம், விவசாயிகள் கடன் உதவித் திட்டம், கால்நடை மேய்ச்சல் கட்டணக் குறைப்பு, சித்தூர் கடப்பை ஜில்லாக்களில் மதுவிலக்கு முதலியவை யாகும்.

நம் மாகாண சரித்திரத்திலேயே பிரசித்திபெற்ற மதுவிலக்குத் திட்டம் முதல் முதலாகச் சேலம் ஜில்லாவில் அமுலுக்கு வந்தது. மூன்று, நான்கு மாதங்களுக்குள்ளாகவே அது பரிபூரண வெற்றியை அளித்ததால், மேலும் இரண்டு - சித்தூர், கடப்பை- ஜில்லாக்களில் இத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர எண்ணினர். மதுவிலக்கால் ஏற்பட்ட பலாபலன்களைப்பற்றிச் சர்க்காருக்குத் தாம் அனுப்பிய அறிக்கை யொன்றில், சேலம் ஜில்லாக் கலெக்டரா யிருந்த மிஸ்டர் டிக்ஸன், "மதுவிலக்கு ஏழை மக்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாயிருக்கிறது. இப்போது போலவே சட்டம் திறமையாக அமுல் நடத்தப்படுமானல் குடியானவர்கள் தொழிலாளர் கள் வாழ்க்கையில் மகத்தான சுபிட்சம் ஏற்பட்டு அது நிரந்தரமாக இருக்கும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். மது விலக்கில் நம்பிக்கையில்லாத, மதுபானப் பழக்க முடைய ஐரோப்பிய ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர் ஒருவர் இவ்விதம் கூறியிருக்கிறரென்றல் நம்

மாகாணம் முழுவதும் இத்திட்டம் அமுலுக்கு வரின் நம் நாடு சுபிட்சமடைந்துவிடும் என்பதில் சந்தேக முண்டோ !

இராஜாஜி பிரதம மந்திரியா யிருந்த சுமார் இரண்டேகால் வருஷ காலத்தில் பொதுமக்கள் நன்மைக்கான நல்ல காரியங்கள் பலவற்றைச் செய் திருக்கிறார். முன்னரே கூறிய விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம், மதுவிலக்குச் சட்டம் இவை யன்றி, ஆலயப் பிரவேசப் பாதுகாப்புச் சட்டம். சுகாதாரச் சட்டம் ஆகியவை குறிப்பிடத் தக்கவை, இவை பொது மக்களுடைய நலனுக்குகந்தனவும் இராஜாஜி மந்திரி சபைக்கு அழியாப் புகழைத் தருவனவுமாகும். மக்கள் நல்வாழ்வுக்கான இவ் விதச் சட்டங்களைக்கூடக் காங்கிரஸ் விரோதிகள் குறைகூற முற்பட்டனர் என்றால், ஆச்சரியப்படுவதற் கில்லை. உயர்தரப் பாடசாலைகளில் முதல் மூன்று பாரங்களுக்கும் ஹிந்தி பாஷையைக் கட்டாயப் பாட மாக்கியதற்கும், ஹரிஜன ஆலயப் பிரவேசப் பாது காப்புச் சட்டத்திற்கும் பிரமாதமான எதிர்ப்பு ஏற் பட்டது.

1938 ஆம் ஆண்டில் மதுரையில் ஆலயப் பிரவேச மகாநாடு ஒன்று நடைபெற்றது. அதைச் சிறப்பாக நடத்தி வைத்தவர் தமிழ்நாட்டு ஹரிஜன சேவா சங்கத் தலைவர் ஸ்ரீ ஏ. வைத்தியநாதையர் இராஜாஜி தம் முக்கிய அலுவல்களையும் ஒதுக்கி விட்டு அதில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டார். இராஜாஜியின் அரிய பிரசங்கத்தினால் உணர்ச்சி மேலிட்ட ஸ்ரீ வைத்தியநாதையர் சில நாடார்

சகோதரர்களையும் ஹரிஜனங்களையும் மீனுட்சியம்மை யின் கோவிலுள் அழைத்துச் சென்று தரிசனம் செய் வித்தார். இதற்குக் கோவில் தலைமைத் தர்மகர்த்தா வான ஸ்ரீ ஆர். எஸ். நாயுடு பேருதவி புரிந்தது இங்கே குறிப்பிடத்தக்கது. இதன் எதிரொலி, திருச்செந்தூர் சுப்ரமணியர் கோவில், திருநெல்வேலி ஜில்லா சங்கர நயினர் கோவில் முதலிய பல கோயில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடச் செய்துவிட்டது. மதுரையில் வைதிகர்களும் சில சநாதனிகளும் இதற்கு எதிராகக் கிளர்ச்சி செய்து வழக்கும் தொடர்ந்தனர். நிலைமையைச் சமாளிக்க எண்ணி, இராஜாஜி அவசர அவசரமாக ஆலயப் பிரவேசப் பாதுகாப்புச் சட்டமொன்று செய்தார். வழக்குகள் செல்லுபடியாகாது போயின. பின்னர் கவர்னருக் கும் வைஸ்ராய்க்கும் அனுப்பப்பட்ட விண்ணப்பங் களும் தூது கோஷ்டியும் ஒன்றும் பயன்பெறவில்லை.

ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி, ஆலயப் பிரவேச எதிர்ப்புக் கிளர்ச்சி, இவற்றையடுத்து இராஜாஜி புதி தாகத் தமது வரவு செலவுத் திட்டத்தில் கொணர்ந்த புகையிலை வரிக்கும் விற்பனை வரிக்கும் எதிராகக் கிளர்ச்சி உண்டாயிற்று, மதுவிலக்கினுல் ஏற்பட்ட வருமான நஷ்டத்தைச் சரிக்கட்டவே இவற்றை விதிக்க நேர்ந்தது. எதை எடுத்தாலும் சில சுய நலமிகளும் எதிர்க்கட்சியினரும், சமயத்தைப் பயன் படுத்திக்கொண்டு எதிர்ப்பைக் கிளறிவிடுவதே தொழிலாக இருந்தனர். இதற்கு எல்லாம் பயந்து, எடுத்த காரியத்தை விடுவதென்பது இராஜாஜியிடம் இல்லை. அவர் எடுத்த காரியம் என்றும் வெற்றிதான்.

இராஜாஜியின் ராஜ தந்திரமும், நுண்ணறிவும் நிர்வாகப் போக்கும் சர்க்கார் காரியாலய நடைமுறையையே மாற்றிவிட்டது. மந்திரிகள், ஐ.ஸி.எஸ்.வர்க்கத்தினரின் கைப்பொம்மையாக இல்லாமல், இப்போது மந்திரிகள் கையிலேயே, சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பொம்மைபோல் ஆடினர். இராஜாஜியின் திறமைக்கே தனிப் பெருமை ஏற்பட்டது. அரசியல் முறை சம்பந்தமான அவ்வப்போதைய பிரச்னைகளுக்கு அவர் கூறிய யோசனைகள் பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் மூளைக்கும் நல்ல வேலையைக் கொடுத்தன என்றால் அதிகம் சொல்வானேன்!

இராஜாஜி அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டைப் போலத் தமக்குக் கிடைத்த அதிகாரத்தைக்கொண்டு எவ்வளவு துரிதமாகப் பொது நலனைக் கருதிச் சட்டங்களை இயற்றலாமோ, அவ்வளவு சீக்கிரமாகச் செய்து வந்தார். சட்டசபைக் காலங்களிலும் சுற்றுப் பிரயாண காலங்களிலும் தவிர மற்றக் காலங்களில் தவறாது காரியாலயத்துக்குச் சென்று எல்லா அலுவல்களையும் சுறுசுறுப்பாகக் கவனித்தார். சர்க்கார் காரியாலயமும், வெகு வேகமாக இயங்கும் யந்திரம்போல், சுறுசுறுப்பாக இயங்கியது.

விசேஷ அதிகாரங்களுள்ள மாகாண கவர்னரும் இராஜாஜியின் சொல்லுக்கு அட்டியின்றியே நடந்து வந்தார் என்றால் மற்ற உத்தியோகஸ்தர்களைப் பற்றிக் கேட்பானேன்?

இராஜாஜி பிரதம மந்திரி பதவியை அலங்கார பீடமாகவோ, அனுபவிக்கத்தக்க ஸ்தானமாகவோ

கொள்ள வில்லை. மூலாம் பூசிய மாகாண சுயாட்சி யைத் தகர்த்து எறிவதே நோக்கமாக மந்திரி பத வியைக் காங்கிரஸ் ஏற்றாலும், அதிகாரம் உள்ள அளவுக்குப் பொதுமக்களுக்கு, கூடிய நன்மை புரிய வேண்டுமென்றும், அசாத்திய நிலைமை ஏற்படின், பத வியை உதறித் தள்ளவேண்டுமென்று தீர்மானத் துடனேயே இராஜாஜியின் ஆட்சி நடைபெற்றது. "நாளைக்கு இராஜிநாமா செய்வதற்குத் தயாராக வும் அதே சமயத்தில் 100 வருஷம் இந்தப் பொறுப்பை வகிப்போம் என்ற எண்ணத்துடனும் நாங்கள் ஒவ்வொரு காரியமும் செய்வோம்'' என்று ஒரு தடவை இராஜாஜி சொன்னார். என்றும் எதிர்க் கட்சியினரா யிருந்தவர்கள் இதையும் திரித்துக்கூறிக் குறை சொல்லலானார்கள். இராஜாஜி இதை யெல்லாம் பொருட்படுத்தவில்லை தாம் சொல்வது போலவே செய்தும் காட்டலானார். ஐரோப்பாவில் யுத்த நெருக்கடி ஏற்பட்டு, காங்கிரஸ் மந்திரிகள் பத வியை விட்டு வெளியேற வேண்டிய சமயம் வந்ததும், மற்ற மாகாணங்களின் மந்திரி சபை களுக்கு முன்னமே இராஜாஜி தம் மந்திரி சபையைக் கலைத்துவிட்டு, வெளியேறினார்.

பதவியிலிருந்த காலத்திலும் சந்தர்ப்பப் பட்ட போதெல்லாம் காரியக் கமிட்டிக்குத் தம் அரிய யோசனைகளை இராஜாஜி கூறிக்கொண்டேயிருந்தார். அம்மாதிரி சமயங்களில் அவருக்கு விசேஷ அழைப்பு வரும். 1938-ஆம் வருஷம் அரசியல் கைதிகள் விடுதலை சம்பந்தமாகப் பீகார், ஐக்கிய மாகாண மந்திரி சபையினர் ராஜிநாமாச் செய்யவே அந்

நெருக்கடியைத் தீர்க்க ஹரிபுரா காங்கிரஸில் முயற்சி செய்யப்பட்டது. உடல் நலமின்மை காரணமாக இராஜாஜி ஹரிபுரா செல்லாது குற்றலத்தில் இருந்தார். பின்னர் அழைப்புத் தந்தி வந்தது. உடல் நலம் இடந் தராததனுல் இராஜாஜி போகக்கூடவில்லை. காரியக் கமிட்டியே ஒருவாறு நெருக்கடியைச் சமாளித்துக் கொண்டது.

1938-ஆம் வருஷக் கடைசியில் காங்கிரஸில் ஒரு குழப்பமான நிலைமை ஏற்பட்டது. அனைவரும் அறிந்ததே! சமஷ்டி அரசியலில் பதவி வகிப்பது சம்பந்தமாய், பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் சேர்ந்து சில காங்கிரஸ் கட்சியினரும் பேரம் பேசுகிறுர்கள் என்ற வதந்தி உலவவே, ராஷ்டிரபதி சுபாஷ் சந்திரபோஸ் அப்படியிருப்பின், தாம் தலைமைப் பதவியைத் துறந்தேனும் அம்முயற்சியை எதிர்த்துப் போராட நேரும் என ஒரு அறிக்கை விட்டார். அது கா. க. அங்கத்தினர் சிலருக்கு வருத்தத்தை அளித்தது. அதனுல் ஏற்பட்ட மனக்கசப்பும் வேற்றுமையும் திரிபுரா காங்கிரஸ் தலைவர் தேர்தலில் அமளியை உண்டுபண்ணி விட்டன. சுபாஷ் பாபுவும், பட்டாபி சீதாராமையாவும் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டனர். சுபாஷ் போஸ்தான் வெற்றி யடைந்தார். காந்திஜி இதைக் குறித்து, "பட்டாபியின் தோல்வி என் தோல்வி" என்றதும், (பண்டித நேரு, சரத்சந்தர போஸ் தவிர) கா. க. அங்கத்தினர்கள் தலைவரிடம் பிணக்கங் கொண்டு கட்டுப்பாடாக ராஜிநாமாச் செய்ததும் ஒன்றன் பின் ஒன்ருக நிகழ்ந்தது உலகறிந்ததே.

சர்தார் வல்லபபாய் படேலின் செயல்களுக்கு மகாத்மாஜி ஆதரவு அளிக்கவே, இராஜாஜியும் சுபாஷ் சந்திர போஸுக்கு எதிராக வேலை செய்ய வேண்டியதாயிற்று. ஆகவே, தம் சகா மந்திரிகளுடனும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினருடனும் திரிபுரா காங்கிரஸுக்குச் சென்று ராஷ்டிரபதிக்கு எதிராகப் பிரசாரம் செய்யலானார். திரிபுரா காங்கிரஸ் பொருட்காட்சிப் பந்தலில் நம் இராஜாஜி செய்த பிரசங்கம் வருமாறு:—

“மகாத்மா காந்தி சிறிதளவுதான் தம்மால் செய்ய முடியுமென்று சொல்லி, அதிகமாகச் செய்து காட்டுகிறார். ஆகவே, அவரை நம்புங்கள். அவர் உங்களைப் பத்திரமாகப் பாதுகாத்து வருவார். இப்போது காங்கிரஸாகிய ஆற்றிலே இரு படகுகள் செல்லுகின்றன. ஒன்று பழையது; மிகப் பெரியது; மகாத்மா காந்தியால் செலுத்தப்படுவது புதிய படகுடன் ஒருவர் வந்திருக்கிறார்; அந்தப் படகு கண்களைக் கவரக்கூடியதாய் மிக அழகாய் இருக்கிறது. அவர் அந்தப் படகில் ஏறிக் கொள்ளுமாறு கூறுகிறார்.

“மகாத்மா காந்தி அநுபவம் வாய்ந்த படகோட்டி. அவர் உங்களைப் பத்திரமாய் ஆற்றின் அக்கரை கொண்டு சேர்ப்பார். புதிய படகு இருக்கிறதே! அது ஓட்டைப் படகு என்பது எனக்குத் தெரியும். அந்த ஓட்டைப் படகிலே நீங்கள் ஏறிக்கொண்டீர்களானால், எல்லோரும் மூழ்கிப்போவீர்கள். நர்மதா நதி மிக மிக ஆழமானது

“புதிய படகோட்டி என்ன சொல்கிறார்? ‘நீங்கள் என்னுடைய படகிலே ஏறிக்கொள்ள முடியா

தென்றல் உங்கள் படகுடன் என் படகினைக் கட்டி விடுங்கள், என்கிறார். இதுவும் முடியாத காரியம். நல்ல படகுடன் ஓட்டைப் படகைக் கட்டியோட்ட முடியாது. அவ்விதம் ஒன்றுசேர்த்துக் கட்டி யோட்டி ஆற்றிலே மூழ்கிப் போகும் ஆபத்துக்கு ஆளாகக் கூடாது. நமக்கு ஒரே ஒரு தலைவரே உண்டு. அவர் தாம் மகாத்மா காந்தி. அவர் சொற்படி கேட்டு நாம் நடக்கவேண்டும். அவரே நம்மைப் பாதுகாக்கவல்ல வர். ஆகவே, அவருடைய படகில்தான் நாம் ஏற வேண்டும். அவர் அநுபவம் வாய்ந்தவர். எங்களுக் குத் தெரிந்து இந்த 35 ஆண்டுகளாக நாங்கள் அவரைச் சோதித்துத் திருப்தியடைந்து விட்டோம்.

"வெறும் வாய்க்கூச்சலில் மயங்கி ஓட்டைப் படகில் ஏறிவிடாதீர்கள் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். புதிய படகிலே சிறிது நேரம் ஏறி யிருந்து விட்டுப் பழைய படகுக்கு வந்துவிடலா மென்று எண்ணாதீர்கள். புதிய படகு ஓட்டையான தாலே, மறுபடியும் பழைய படகில் ஏறும்வரையிலும் நீங்கள் பிழைத்திருக்க மாட்டீர்கள்."

இப்பிரசங்கம், தீவிரவாதிகளுக்கு ஆத்திர மூட்டியது; காந்தீயர்களெல்லாம் அதன் ஆழ்ந்த பொருளையும் உவமானத்தையும் உணர்ந்து வியந்து பாராட்டினர். உதாரணத்தைக் கூடார்த்தப் படங் களாகப் பத்திரிகைகள் பிரசுரித்தன.

இதன் பின்னர், பண்டித கோவிந்த வல்லப பந்த் மகாத்மாவிடமும் காரியக் கமிட்டியிடமும் நம் பிக்கைத் தீர்மானத்தைப் பிரேரேபித்தார். பலமான வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன. இராஜா ஜியும்—

"நாம் ஒவ்வொருவரும் தவறு செய்வது இயற்கை. ஆனால், அதைத் திருத்திக்கொள்ளல் வேண்டும். காங்கிரஸ் சமஷ்டியை எதிர்த்தபோதிலும், முக்கிய மான தலைவர் சிலர், நிபந்தனையுடன் சமஷ்டியை ஏற்கலாம் என்று கூறுகின்றனரென்றும் சமஷ்டி மந்திரிகள் ஜாபிதா தயாராகிவிட்டதென்றும் ராஷ்டிர பதி கூறினர். அது நேரடியாகவோ மறைமுகமாவோ காரியக் கமிட்டியைத் தாக்குகிறது. இத்தகைய அறிக்கைக்குப் பிறகு ஏதாவது செய்தேயாகவேண் டும். சந்தேகத்துக்கிடமான காரியக் கமிட்டியினர் பதவியை வேறு யாரேனும் ஏற்கவேண்டும். ஏனெ னில், அரசன் மனைவி பதிவிரதைதானா என்ற சந்தே கம் ஏற்படக்கூடிய நிலையில் இருத்தலாகாது" என்று வெகு சாதுர்யமாகப் பேசி மேற்படி தீர்மானத்துக்கு ஆதரவு தேடிக்கொடுத்தார். பெரும்பான்மை வாக்கு களால் தீர்மானம் நிறைவேறியது.

திரிபுரா காங்கிரஸுக்குப்பின் கல்கத்தாவில் நடைபெற்ற அ. இ. கா. க. கூட்டத்துக்கு இராஜாஜி சென்று, சுபாஷ் போஸின் ராஜிநாமாவுக்குப்பின் பாபு ராஜேந்திர பிரசாத் ராஷ்டிரபதியாவதற்கு வேண்டிய உதவிபுரிந்தார். கல்கத்தாவில் தென்னிந்திய சங்கத் தின் வரவேற்பு உபசாரத்திற்குப் பிறகு, சென்னை திரும்பி, இராஜாஜி ஜனப் பிரதிநிதி சபையிலும், சட்ட சபையிலும், பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவில் ஓர் அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்த வேண்டுமெனக் கோரி ஒரு தீர்மானம் நிறைவேற்றி னர்.

## தேசிய சர்க்கார் யோசனை

உலக நிலையைக் கவனித்து, எந்நேரத்திலும் ஐரோப்பாவில் யுத்தம் மூளலாம் என்று எதிர் பார்த்தே திரிபுரா காங்கிரஸில் யுத்த சம்பந்தமான தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. 1939-ஆம் வருஷம் செப்டெம்பர் மாதம் 3-ந் தேதி யுத்த நெருக்கடி ஐரோப்பாவில் தோன்றிற்று. அது எந்த விதமாகவோ இந்தியாவிலும் அரசியல் நெருக்கடியை உண்டு பண்ணிவிட்டது. யுத்தத்தில் ஈடுபட்ட பிரிட்டிஷார், இந்தியர்களைக் கேளாமலே இந்தியாவைப் போரில் சம்பந்தப்படுத்திப் பாதுகாப்புச் சட்டங்கள் எனப் பல கட்டுப்பாடுகளைச் செய்து கொண்டனர். இதையெல்லாம் பார்த்த காங்கிரஸ், "இந்த யுத்தத்தில் இந்தியாவின் தகுதி என்ன? ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் நிலை நாட்ட இந்த யுத்தம் நடைபெறுவதாகக் கூறப்படுகிறதே! அப்படியானல் இந்தியாவுக்கும் உண்மையான ஜனநாயகமும் சுதந்திரமும் உண்டா? யுத்த முடிவிலாயினும் இச்சுதந்திரம் அளிக்கப்படுமா?" என்றெல்லாம் கேட்கத் தொடங்கியது. மகாத்மா காந்தி வைஸ்ராயைப் பல தடவை பேட்டி கண்டார். பண்டித நேருவும் பாபு ராஜேந்திர பிரசாத் முதலிய தலைவர்களும் பேட்டி கண்டு மக்களின் அபிப்பிராயத்தையும் நிலைமையையும் எடுத்துரைத்தனர். ஆனல், நன்முடிவு ஒன்றும் ஏற்படவில்லை. பிரிட்டிஷ் சர்க்கார் ஓரளவேனும் விட்டுக் கொடுக்கவில்லை. எனவே காங்கிரஸ் மந்திரிகளை ராஜிநாமாச் செய்துவிட்டு

வெளியேறச் சொல்லவேண்டியதாயிற்று. இராஜாஜி எல்லோருக்குமுன் ராஜிநாமாவை நீட்டி விட்டு மந்திரிசபையைக் கலேத்துவிட்டார்.

மிக நெருக்கடியான இச்சமயத்தில், இராஜாஜியின் அரிய யோசனைகளைப் பெற எண்ணியே ராம்கார் காங்கிரஸில் ராஷ்டிரபதி நம் இராஜாஜியைத் தமது மந்திராலோசனை சபையில் அங்கத்தினராக்கினர். காங்கிரஸ் கமிட்டிக்கும் மகாத்மாவுக்கும் ஏற்படும் அபிப்பிராய பேதங்களையும் தமக்குள் ஆழ்ந்து சிந்தித்து வந்ததுடன், அதே சமயம் சர்க்கார் வெளியிட்டு வந்த அறிக்கைகளையும் இராஜாஜி கூர்ந்து கவனித்து அவற்றிற்கும் ஆணித்தரமாகப் பதிலளித்து வந்தார்.

இப்படியிருக்க, திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ்காரர்கள் 12-வது அரசியல் மகாநாட்டை நடத்த ஏற்பாடு செய்து, தலைவர் பதவிக்கு இராஜாஜியே தருந்தவரென முடிவு செய்து, இராஜாஜியின் சம்மதத்தையும் பெற்றனர். தாம் யோசித்து முடிவு செய்திருக்கும் விஷயங்களை வெளியிட இம்மகாநாடு ஏற்ற சந்தர்ப்பமாயிருக்குமெனக் கருதியே இராஜாஜி இசைந்தார். மகாநாடு அம்பா சமுத்திரத்தில் 9-6-1940-இல் நடைபெற்றது. சரோஜினி தேவியார் மகாநாட்டைத் திறந்துவைத்தார். ஸ்ரீ கோபால ரெட்டியார் (மாஜி மந்திரி) கொடியேற்றினர். இவ்வைபவங்களுக்குப்பின், இராஜாஜி தம் அரிய சொற்பொழிவை நிகழ்த்தினர். அது காங்கிரஸிற்கே ஒரு வழி காட்டியாய் விளங்கியது. இராஜாஜி கூறிய தேசீய சர்க்கார் அமைப்பு

யோசனையை தேச நலம் நாடுவோர் அனைவரும் மனமுவந்து ஏற்றனர். எனவே, காங்கிரஸ் கமிட்டி யாரும் இராஜாஜியின் தேசீய சர்க்கார் யோசனையை அப்படியே அங்கீகரித்தனர்; வர்தா கூட்டத்துக்குப் பின், புனாவில் நடந்த காரியக் கமிட்டிக் கூட்டத்தில் இராஜாஜியைக் கொண்டே இந்த யோசனை அடிப் படையில் ஒரு தீர்மானத்தைத் தயாரித்து நிறைவேற் றினர்; பிரிட்டிஷ் சர்க்கார் இணங்கினால் காங்கிரஸ் தனது அஹிம்ஸா தர்மத்தைக்கூட சற்று ஒதுக்கி வைத்து யுத்த முயற்சிக்கு ஆதரவு தர முற்படும் என்று இத்தீர்மானம் வாயிலாகச் சர்க்காருக்குத் தெரி விக்கப்பட்டது,

காந்திஜியோ, காரியக் கமிட்டியினர் தம்மை விட்டு விலகி வெகுதூரம் சென்றுவிட்டனர் என்று கூறி அரசியலினின்றும் விலகி நின்றார். இது அனை வருக்கும் வருத்தமளித்தது. இந்நிலையில், மக்களி டையே அமைதியை நிலவச் செய்ய என்றே, புனாத் தீர்மானத்தை அடுத்து டில்லியில் நடந்த கமிட்டிக் கூட்டத்தில் உறுதி செய்தனர்.

ஆனால், பிரிட்டிஷ் சர்க்காரோ இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை; யுத்த நிலையை உத்தேசித்து, காங்கிரஸ் மிகவும் விட்டுக் கொடுத்து வெளியிட்ட குறைந்த பட்சக் கோரிக்கையை அலட்சியம் செய்தனர். ஆகவே, பம்பாயில் நடந்த அ. இ. கா. கமிட்டிக் கூட்டத்தில், டில்லித் தீர்மானம் ரத்து செய்யப்பட்டு காந்திஜிக்கு மீண்டும் சர்வாதிகாரம் அளித்துப் போராட்டத்தைத் தொடங்குவதென்று தீர்மானிக்கப்பட்டது.

இச்சமயத்தில், சோஷலிஸ்டுகளும் இதர தீவிர வாதிகளும் இராஜாஜியைக் கேலி செய்யலாயினர். இராஜாஜி அதைப் பொருட்படுத்தாது, சாதுர்ய மாகப் பதில் கூறி, அவர்களை வாயடக்கினர். இச் சம்பவத்தை யொட்டி ஓர் அறிஞர் 'நேஷனல் ஹெரால்ட்' பத்திரிகையில் எழுதியது இங்கே குறிப் பிடத் தக்கது.

"மிகப் புத்தி சாதுர்யம் வாய்ந்தவர்களிடம் ஜனங்களுக்கு ஒரு விதமான சந்தேகம் ஏற்படுவ துண்டு. மிகப் பிரசித்தி வாய்ந்த பெரியோர்களிட மும் இம்மாதிரியான சந்தேகம் ஏற்படுவதுண்டு. இராஜாஜி மிகவும் புத்தி சாதுர்யம் வாய்ந்தவர். இந்தத் தேசத்தில் ஜனங்களின் தவருன அபிப்பிரா யத்திற்கு ஆளானவர் ஸ்ரீ இராஜாஜி. ஆனல், அவர் மீது குற்றமொன்றுமில்லை........

"காங்கிரஸ் அங்கத்தினர்களுக்குக் காந்திஜியி னிடம் சந்தேகமில்லை, அ. இ. கா. கமிட்டியிடத்தும் சந்தேகமில்லை. சந்தேகமெல்லாம் இராஜாஜியிடமே. ஏனென்ருல், அவர் அவ்வளவு பேராற்றல் வாய்ந்த வர். சமீபத்தில் மகாத்மாவைக் கூடத் தலைவர் பதவியிலிருந்து அப்புறப்படுத்திவிட்டுத் தாமே தலை வராகிவிடுவாரோ என்று அச்சப்படக்கூடிய நிலைமையை அவர் உண்டாக்கி விட்டார் அல்லவா?

"காந்திஜியை நோக்கி உங்களுக்கு வயதாகி விட்டது. அதனல் புத்தி சற்று மழுங்கியிருக்கிறது" என்று கூறுவதற்கு எவ்வளவு துணிச்சல் இருக்க வேண்டும்? ஆனல், இராஜாஜியினல்தான் அவ்

வாறு சொல்ல முடிந்தது. ஏனெனில், இராஜாஜிக்கும் காந்திஜிக்கும் உள்ள பரஸ்பர நேசமும் அன்பும் அவ்வளவு அதிகம்; இருவரும் மனத்தில் ஒன்றையும் ஒளியாமல் பேசிக் கொள்ளும் நட்புரிமையுடையவர்கள்.

"உலகத்தில் ஜனங்கள் புத்திசாலிகளைக் கண்டு பிரமிப்பது சகஜம். அப்பேர்ப்பட்ட சந்தேகத்திற்கு இராஜாஜி ஆளானதில் அதிசயமென்னவிருக்கிறது? டில்லி காரியக் கமிட்டிக் கூட்டத்தில் இராஜாஜியின் தீர்மானம் அரசியல் சதுரங்கத்தில் முதல்தரமான யுக்தி வாய்ந்ததாகும். அது மட்டுமல்ல; காங்கிரஸின் தேசபக்தியின் அளவுக்கும் புத்தி சாதுர்யத்தின் அளவுக்கும் ஒரு சின்னமாகவும் இருந்தது. அத்தீர்மானத்தைச் சர்க்கார் அங்கீகரித்திருந்தால் இந்திய அரசியலின் போக்கே தலைகீழாக மாறிவிட்டிருக்குமல்லவா? ஆனால், அடிமைப்பட்டு விடுதலைக்குப் போராடும் ஒரு தேசம், அதன் எஜமானர்கள் இழைக்கும் தவறுகளாலேயே விருத்தியடைய வேண்டுமென்பது விதியாக இருக்கிறதே; என் செய்வது!

"சி. ஆர்."—இதுதான் இராஜாஜியின் பக்தர்கள் அவருக்கு இட்ட அன்புப் பெயர்; அவருடைய புத்தி சாதுர்யத்தின் மேன்மையை மெச்சி இச்சுருங்கிய பெயராலேயே அவரை அன்புடன் அழைப்பர். இராஜாஜி அரசியல் சாமர்த்தியத்தினால்தான் தலைவராக விளங்குவதாகக் கருதிவிடக்கூடாது. அந்தச் சாமர்த்தியத்தை அகற்றி நோக்கினும், அவர் தலைவராகவே இருப்பார்.

பம்பாய் கா. கமிட்டிக் கூட்டத்தில் தீவிரவாதிகளும் மற்றும் சிலரும் இராஜாஜியைப்பற்றித் தவருன அபிப்பிராயங்கொண்டு கடுமையாகவும் நியாயமற்ற முறையிலும் அவரைத் தாக்கிப் பேசியது கண்டு காந்திஜி வருந்தினர். தம்முடைய முன்னைய அபிப்பிராயமே மற்றவர்களை இவ்வளவு தூரம் இட்டுச் சென்றது என்றறிந்து, காந்திஜி அதற்குப் பரிகாரமாக, 22-9-40 "ஹரிஜன்" இதழில் தமது அபிப்பிராயத்தை ஒளிவு மறைவின்றி எழுதினர். அதில், "இராஜாஜி தைரியமாகவும் சரியான முறையிலுமே எல்லாக் காரியங்களையும் செய்திருக்கிருர்; நான்தான் தவறி நடந்திருக்கிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிருர். அதற்குப் பதிலாக இராஜாஜி, காந்திஜிக்கு ஒரு கடிதம் எழுதினர் காந்திஜியும் இராஜாஜியின் பெருந்தன்மையான மனேபாவத்தை மெச்சி அதற்குப் பதில் எழுதினர்

காந்திஜியின் கட்டுரை

"இராஜாஜியை நான் நன்ருக அறிவேன். அவர் எதற்கும் பிறர் ஆதரவை எதிர்பார்க்கக் கூடியவரல்லர். அவர் மிகவும் பரந்த மனேபாவம் வாய்ந்தவராதலால், எந்த அபகாரத்தையும் பொருட்படுத்த மாட்டார். அவர் ஹாஸ்யச்சுவை நிறைந்தவராக இருப்பதால், தம்மைப் பற்றிய எந்தப் பரிகாசத்தையும் சந்தோஷமாகவே ஏற்றுக்கொள்ளும் சுபாவமுடையவர். ஆகையால், என்னுடைய திருப்திக்காகவே இந்த விஷயத்தை வெளியிடுகிறேன்.

"நான் இராஜாஜியைத் தூண்டிவிடாமலிருந்தால், அவர் தம்முடைய தீர்மானத்தைப் புதிய டில்லி

யில் கொண்டு வந்திருக்கமாட்டார் என்று நான் பொது மக்களுக்குச் சொன்னேன். அஹிம்சா தத்துவத்தை உபயோகிக்கும் முறையைப் பற்றியும், அதன் உள் கருத்தைப்பற்றியும், நான் நினைப்பது தவறு என்றும், அவர் சொல்லுவதுதான் சரி என்றும் அவர் வற்புறுத்திச் சொன்னபொழுது அவருடைய உண்மை மனோபாவத்தையும், அவருடைய தீர்ப்பில் எனக்கு இருந்த நம்பிக்கையையும் உத்தேசித்து நான், அஹிம்சா தத்துவ முறையைப்பற்றி அர்த்தம் செய்வதுதவறு என்று சந்தேகப்படக்கூடிய வகையில், அவரைத் தன் தீர்மானத்தை வற்புறுத்தும்படி நான் செய்தேன். இவ்விஷயத்தில் நான் அதைரியத்தைக் காண்பித்ததுடன். அவரிடமும் நியாயமற்ற முறையில் நடக்க வேண்டியதாயிற்று. உண்மையில் பலவீனமாக இருப்பவன் நியாயமாக நடப்பது அகஸ்மாத்தான காரியமே. அஹிம்சா முறையைக் கைப்பற்றிய பலசாலி அநியாயமாக நடப்பதும் அகஸ்மாத்தான காரியமே. இராஜாஜியிடம் நான் நியாயமாக நடந்து கொள்ளவில்லை. ஏனென்றால், அவரை அன்பற்ற முறையில் தாக்குவதற்கும், அவர் பரிகாசம் செய்யப் படுவதற்கும் நான் அவரைக் காட்டிக் கொடுத்துவிட்டேன். இதனால், காங்கிரஸிற்கு ஒரு கெடுதலும் ஏற்படவில்லை என்றாலும், நான் தவறாக நினைத்திருந்த விஷயம் சீர்திருத்தப்பட்டு விட்டபோதிலும், ஒரு பெரிய தலைவரின் வேலையைத் திடீரென்று கெடுப்பது நல்லதல்ல. இன்னமும் இராஜாஜி தம்முடைய அபிப்பிராயந்தான் சரி என்று நினைத்துக் கொண்டிருக்கிறார். அவர் அபிப்பிராயம் ஆமோதிக்கப்பட்டிருந்தால் இப்பொழுது நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம்

இந்த உருவைப் பெற்றிராது. நான் இன்னமும் காங்கிரஸுக்கு வெளியில்தான் இருந்துகொண்டிருப்பேன். டில்லித் தீர்மானம், வர்தாத் தீர்மானத்தின் விளைவாக வருவதற்கு முன்னமேயே நான் காங்கிரஸை விட்டு விலகி விட்டேன்.

இராஜாஜியிடம் மட்டுமின்றிக் காங்கிரஸ் காரியக் கமிட்டியிடங்கூட நான் நியாயமாக நடந்து கொள்ள வில்லை. ஏனெனில், நான் பிடிவாதமாக இருந்திருந்தால், வர்தாத் தீர்மானங்கூட நிறைவேறியிராது. சத்தியாக்கிரக தர்மத்துக்கும், அதன் தத்துவங்களுக்கும் கர்த்தா நான்தான் என்பது ஒப்புக் கொள்ளப்பட்டால், அந்த விஷயங்களை ஓட்டுக்கு விடக்கூடாது. அவைகளைப்பற்றி என் சகோதரத் தலைவர்கள் நன்கு விவாதித்து அவைகள் மீது அவர்கள் கொண்டுள்ள அபிப்பிராயம் சரி என்று என்னை நம்பும்படி செய்ய முயலலாம். அவர்களுடைய அபிபிராயத்தை நான் ஒப்புக்கொள்ள முடியாவிட்டால் சத்தியாக்கிரக தர்மத்தின் கர்த்தா என்கிற ஹோதாவிலும் சத்தியாக்கிரக யுத்தத்தின் சேனாதிபதி என்கிற ஹோதாவிலும் என்னுடைய தீர்ப்பே ஒப்புக் கொள்ளப்படவேண்டும்.

"என்னை அந்த இயக்கத்திலிருந்து விலக்குவதன் மூலமே என் சிநேகிதர்கள் என் யோசனையை நிராகரிக்க முடியும். வர்தாவில் அவர்கள் அப்படிச் சொல்லியே என்னை விலக்கினார்கள். ஆனால், நான் விலகவேண்டுமென்கிற அர்த்தம் அவர்கள் வார்த்தைகளில் தொனிக்க வில்லை. என்னை விலக்குவதற்கு அவர்கள் விரும்பவில்லை. நானேஅவர் களை

நிர்ப்பந்தபடுத்தி என்னை விலக்கிக் கொண்டேன். என்னுடைய பலவீனம் வர்தாவிலேயே ஏற்பட்டு விட்டது. ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்ட பொழுது அது யாருடைய அதிகாரத்துக்குட்பட்டது என்கிற விஷயத்தை நான் கிளப்பியிருக்கவேண்டும். ஒரு விஷயத்தைப்பற்றி நன்ருக அறிந்த நிபுணனும் அதை நடத்தவேண்டியவனுகவும் இருக்கிற நான் அந்த விஷயத்தைப்பற்றி தீர்மானிக்கக் காரியக்கமிட்டிக்கு அதிகாரமில்லை என்று தெரிவித்திருக்க வேண்டும்.

"அதிகார எல்லையைப்பற்றி என் அபிப்பிராயத்தை எல்லா அங்கத்தினர்களும் ஒப்புக்கொள்ளவில்லை என்பது எனக்குத் தெரியும். அது தீர்மானத்துக்கும் வரவில்லை. இப்பொழுது தேசத்திற்கு முன்பு வெளிவந்திருக்கும் இந்தத் தீர்மானம் விவாதத்திற்கு வந்த பொழுது கமிட்டி முன்பு நான் இந்த விஷயங்களை வெளிப்படுத்தியதை என்னுடைய மதிப்புக்குரிய சகா ஊழியருக்காக நான் இங்கே பிரசுரம் செய்துள்ளேன்.

"சென்ற வர்தாக் கூட்டத்தில் நடைபெற்ற அங்கத்தினர்களின் தொடர்ச்சியான நிகழ்ச்சிகள் மூலம் இந்தத் தீர்மானம் முடிவாக நிறைவேறியிருக்கிறது. ஆகவே, நாம் ஒரு தேசீய விபத்திலிருந்து தப்பித்துவிட்டோம். இந்தத் தீர்மான முடிவிற்குக் காங்கிரஸ்காரர்கள் சரியானபடி ஆதரவு அளித்தால் இந்தியாவுக்கு எப்பொழுதுமில்லாத புதிய நிலைமை ஏற்படுவதுடன் கூடிய சீக்கிரத்தில் இந்தியா தன் லட்சியத்தை அடைந்துவிடுமென்பது நிச்சயம். நான்

நினைப்பது சரியா இல்லையா என்பது காலக்கிரமத்தில் தான் தெரியும். இது ஒரு புறம் இருக்கட்டும்; காரியக் கமிட்டியின் அதிகார எல்லையைக் குறித்து நான் கொண்டுள்ள அபிப்பிராயத்தை வாசகர்கள் ஒப்புக்கொள்ளும்படி செய்வதற்காக இந்தக் கட்டுரை வரையப்படவில்லை. என்னுடைய பிழையை உணர்த்துவதற்காகவே அந்த விஷயம் இங்கே பிரஸ்தாபிக்கப்பட்டது. தன் சக ஊழியரின் அபிப்பிராயம் சரியென்று-சரியாக இருக்கலாம் என்று அல்ல-நன்ருகத் தெரிந்துகொண்டாலொழிய ஒரு சேனுதிபதி தன் அபிப்பிராயத்தை விட்டுக்கொடுப்பது அபாயகரமானது; ஆகவே, இராஜாஜி செய்தது சரி என்றும் நியாயமென்றும் அதன் பிழைக்கு நான் தான் ஜவாப்தாரி என்றும் நான் சொல்லுகிறேன்.

"முஸ்லீம்களுக்கு இராஜாஜி விடுத்த யோசனையைப் பற்றியும் நான் இம்மாதிரியே அபிப்பிராயப்படுகிறேன். அதை ஆதரிப்பதற்காக நான் இந்த விஷயங்களை வெளியிடவில்லை. புனு தீர்மானத்தின் உண்மையான தத்துவம் ஒப்புக்கொள்ளப்பட்டால் இராஜாஜியின் யோசனை தைரியமான யோசனை என்றே தோன்றும். இந்திய முஸ்லிம்களின் சலுகையைப் பெற்ற பெரிய ஸ்தாபனமென்றே நாம் முஸ்லிம் லீகைப்பற்றி நினைக்கவேண்டும். காங்கிரஸ் இதைப் பற்றி ஏற்கனவே கவனித்திருக்கிறது. இன்னமும் காங்கிரஸ் முஸ்லிம் லீகைப்பற்றி அவசியம் கவனிக்கப் போவதாக நான் நம்புகிறேன். நமது அபிப்பிராயப்படி ஜின்ஞு தவருக நடந்ததாக இருந்தபோதிலும், நம்முடைய விஷயங்களில் நாம் விரும்புவது

போல் அவருடைய விஷயத்திலும் அவர் யோக்கிய மாக நடந்துகொள்ளுகிறதாக நாம் நம்பவேண்டும். யுத்த மேகங்கள் மறைந்த பிறகு இந்தியா சுயேச்சை பெற்றவுடன் முஸ்லிமரையோ, கிருஸ்தவரையோ, பார்ஸிக்காரரையோ, சீக்கியரையோ, காங்கிரஸில் இல்லாத வேறு யாரையோ, இந்தியாவின் பிரதம மந்திரியாகக் காங்கிரஸ்காரர்கள் வரவேற்கக்கூடும். ஆகவே, இராஜாஜியின் யோசனை இதைத்தான் வெளியிட்டது என்பதில் பிசகில்லை. அவரைக் குறை கூறுகிறவர்கள் நிதானமாகக் கவனித்தால் அவருடைய யோசனையில் இதைத்தான் தெரிந்து கொள்வார்கள். பொதுநல ஊழியரைப்பற்றிச் சந்தே கிப்பது பிறகு. அதுவும் இராஜாஜியைப் போன்ற மனப்பான்மை யுடையவர்களைச் சந்தேகிப்பது மிக வும் பிசகு. இந்தத் தப்பு அபிப்பிராயத்தினுல் அவ ருக்கு நஷ்டம் ஒன்றுமில்லை. ஆனால், தேசத்தின் உண்மையான பொது ஊழியரைச் சந்தேகித்து அவருடைய வேலைகளை இழப்பதனுல் தேசத்திற்குத் தான் கெடுதல் நேரிடும். ஆகவே, அடிப்படையான சுதந்திரத்திற்காகக் காங்கிரஸ் ஒரு பெரிய அஹிம்சா யுத்தத்தை ஆரம்பிக்கக் கூடுமாதலால், காங்கிரஸ் காரர்கள் கடுமையானதும் அவசரப்பட்டதும் நியாய மில்லாததுமான அபிப்பிராயங்களுக்கு இடம் கொடுக் காமல் தங்களைத் தடைப்படுத்திக் கொள்வது அவசியம்.''

இந்தக் கட்டுரை சம்பந்தமாக இராஜாஜி காந்திஜிக்கு எழுதிய கடிதம் அடுத்த வார 'ஹரிஜனி'ல் வெளியானது. விவரம் வருமாறு:—

"அன்புள்ள காந்திஜிக்கு,

தாங்கள் செப்டெம்பர் மாதம் 22-ந்தேதி பத்திரிகைக்காக எழுதிய தலையங்கத்தின் கையெழுத்துப் பிரதியை ஸ்ரீ சந்திர சங்கர் உதவியால் நான் புனவிலிருந்தபோது பார்த்தேன். தாங்கள் அந்தக் கட்டுரையை எழுதியதன் காரணம் இன்னதென எனக்கு நன்ருக விளங்குகிறது. ஆனுல், அந்தக் கட்டுரையை வெளியிடாமல் நிறுத்தியிருக்கவேண்டும். அல்லது ஒரு குறிப்பையும் சேர்த்து வெளியிட்டிருக்க வேண்டும். இப்போது அது பத்திரிகையில் வெளியாகி விட்டதால் நான் என் நிலையைச் சரியாக வெளியிடக் கூடுமென்று நினைக்கிறேன். என்னைத் தாங்கள் கேவலப்படுத்திவிட்டதாக நான் நினைக்கவேயில்லை. புன தீர்மானத்தைப் பம்பாயில் தாக்கிப் பேசியதற்காக நான் அன்று வருத்தமடையவும் இல்லை. அந்த நிலைமையில் எது சரியென எங்களுக்குத் தோன்றியதோ அதையே புன தீர்மானத்தில் சொல்லியிருந்தோம். அந்தத் தீர்மானத்துக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் இணங்கவில்லை. அதனுல் அந்த யோசனை கைவிடப்பட்டது. அதைக் கொண்டு அப்போதிருந்த காரணங்கள் சரியல்லவென நினைக்கக்கூடாது. இந்தியாவிலுள்ள அறிவாளிகள் அனைவரும் புன தீர்மானத்தை வரவேற்றூர்கள். தாங்கள் மட்டும் அதைத் தவறெனக் கருதினீர்கள். ஏனெனில், யுத்தத்தில் சம்பந்தப்பட்ட அத்தீர்மானம் இடங்கொடுத்ததாலேயே, இந்தியப் பாதுகாப்புக்காகவே யுத்தத்தில் கலப்பதாகவிருந்தாலும் சரியே. புன தீர்மானத்தைப் பிரிட்டிஷார் ஏற்றுக் கொள்வார்கள் என்றும், நாம்-

பிரிட்டனோடு ஒத்துழைக்க வேண்டியிருக்கும் என்றும், அது தங்களுக்குச் சம்மதமாக இருக்காதென்றும் கருதி சிலர் அஞ்சினார்கள். சிலர் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு யோசனையை வெளியிடுவது அவமானம் எனக் கருதுகிறார்கள்; இன்னும் சிலர் குழப்பம் அதிகரிக்க வேண்டுமென்றும் அப்போது நமது நாட்டின் பிற்கால நிலை சீர்ப்படுமென்றும் கருதுகிறார்கள். அத்தகையவர்கள் அவ்விதக் குழப்பத்தை அடக்கக்கூடிய காரியங்களை எதிர்ப்பார்கள். இத்தகையவர்கள் போக நாட்டிலுள்ள பெரும் பகுதியினரான அறிவாளிகள் புனாவில் வெளியிட்ட யோசனையை மிக்க உற்சாகத்துடன் அங்கீகரித்தனர்.

"தாங்கள் இப்போதிருந்தே காங்கிரஸை யுத்தமே சம்பவிக்கக்கூடாத ஒரு நிலைமை ஏற்படுவதற்கு உழைக்கச் சொல்லுகிறீர்கள். நமது தேசீய லட்சியத்துக்கும் இதற்கும் சம்பந்தம் இருப்பதாகத் தாங்கள் கருதுகிறீர்கள். ஆகவே, தாங்கள் இந்த யுத்தத்தில் எவ்விதக் காரணங் கொண்டும் கலந்து கொள்ளக் கூடாதெனக் கருதுகிறீர்கள்.

"நானுந்தான் உலகில் சமாதானம் ஏற்பட வேண்டுமென்றும், யுத்தம் சீக்கிரத்தில் ஒழிய வேண்டுமென்றும் கோருகிறேன். இதற்கு வழி என்ன வென்றால் சர்வ தேச ஒத்துழைப்பு உணர்ச்சி ஏற்படும்படி அறிவு வளர வேண்டும். ஒருவர் நோக்கத்தையும் அவாவையும் கெடுக்க இன்னொருவர் மாறுபட்ட மார்க்கங்களை அநுஷ்டிப்பதால் அக் காரியம் கைகூடாது. பிரிட்டிஷார் புனா தீர்மானத்தை

ஏற்க மறுத்துவிட்டதால் நாம் யுத்தத்தில் ஈடுபடாமல் காப்பாற்றப்பட்டதாகக் கருதித் தாங்கள் சந்தோஷிக்கிறீர்கள். ஆனால் அவ்வித உணர்ச்சி எனக்கு இல்லை.

"புனா தீர்மானம் தவறாக இருக்கிறதென்ற காரணத்தைக் கொண்டு நான் பம்பாய் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை. நான் பின்கண்ட காரணங்களை முன்னிட்டு அத்தீர்மானத்தை ஆதரித்தேன்.

"இந்தியரைக் கேட்காமல் இன்னொரு தேசத்துடன் இந்திய மக்கள் போர் தொடுத்திருப்பதாகப் பிரிட்டிஷார் தெரிவிப்பது தவறாகும். யுத்தமென்றால் கொஞ்சம் பணம் கொடுப்பது, யுத்தத் தளவாடங்களை உற்பத்தி செய்வது என்று மட்டும் அர்த்தமல்ல. லண்டனில் நிகழ்வது போன்ற நிகழ்ச்சிகள் இங்கே சுலபமாக ஏற்படக்கூடும். அந்த நிலையிலிருந்தே இதனைக் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். 40 கோடி மக்களைக் கேட்காமலோ அவர்கள் விருப்பத்திற்கு மாறாகவோ அத்தகைய நிலைமைக்கு உட்படுத்தக்கூடாது. யுத்தத்தில் சேராமலும் அவசியமான அளவுக்குமேல் யுத்தம் பரவும்படி செய்யாமலும் நாம் பிரிட்டிஷ் கட்சியின் நியாயத்தை அங்கிகரிப்பது சாத்தியமாகும். அமெரிக்கா பிரிட்டனுக்குச்சாதகமாகத் தீர்ப்புக்கூறலாம் ஆனல் அமெரிக்கா யுத்தத்தில் சேர மறுக்கிறது. சீனவின் கட்சியில் நியாயமிருந்தபோதிலும் சீன - ஜப்பானிய யுத்தத்தில் நாம் சேரவில்லை. புனா பிரேரணை, சுயமரியாதைக் கிணங்கிய முறையில் நாம் யுத்தத்தில் கலக்கும்படி செய்ய முயன்றது. அது நமது தலையீட்டைப் பயனுள்ளதாகவும் செய்ய முயன்றது.

ஆனால், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அந்தப் பிரேரணையை நிராகரித்துவிட்டார்கள். இதனால் இந்தியா யுத்தத்தில் கலக்க முடியாதென மறுக்க உரிமை பெற்றிருக்கிறது. ஆனால், இந்தியா சுயேச்சையான அந்தஸ்து இல்லாத ஏகாதிபத்திய நாடு என்ற ஹோதாவில் யுத்தத்தில் கலக்கும்படியும் அதற்கு உதவி செய்யும்படியும் நிர்ப்பந்திக்கப்படுகிறது. யுத்தத்தில் சேருவதா அன்றி நடுநிலைமை வகிப்பதா என்பதைத் தெரிந்தெடுக்க இந்தியாவுக்கு உரிமை இல்லை. இந்தியா தனக்கு வலுவில் உதவி செய்வதாகப் பிரிட்டன் கூறிவருகிறது. யுத்தத்தில் கலக்கக் கூடாதென்று பிரசாரம் செய்கிறவர்கள் சிறையிலிடப்பட்டு அடக்கப்படாமலிருந்தால் பிரிட்டனின் கூற்று நியாயமானதெனக் கூறலாம். அல்லது அதற்குள்ள ஆட்சேபத்தை எவ்வளவு தூரம் குறைக்க முடியுமோ அவ்வளவு தூரம் குறைத்துவிடும். அப்படிச் செய்தால் யுத்தத்தில் கலக்கக்கூடாது என்று பிரசாரம் செய்யவேண்டிய போதிலும் இந்தியாவில் கிடைக்கும் ஒத்துழைப்பு உண்மையிலேயே வலுவில் மனப்பூர்வமாகக் கிடைக்கும் ஒத்துழைப்பு என்று கூறமுடியும். இந்திய மக்களைத் தங்கள் சம்மதமின்றி தற்கால யுத்தக் கொடுமைகளுக்குள்ளாகும்படி இழுத்துவிடும் குற்றத்தைக் குறைப்பதற்காக இப்பிரசார சுதந்திரமேனும் அளிக்கப்படவேண்டும்.''

இக்கடிதம் பற்றி காந்திஜி வெளியிட்ட அபிப்பிராயம் வருமாறு:

"இராஜாஜி கேலி செய்வதைப் பொருட்படுத்துபவராக இருந்தால் அவர் இராஜாஜியாகவே இருக்க

முடியாது. அவரது மனோபாவத்திலிருந்து பார்க்கு மிடத்து அவரது நிலை சற்றும் அசைக்க முடியாத தாகும். ஆனால், அது 20 வருஷமாகக் காங்கிரஸ் செய்த வேலையை மறுக்கிறதென்பது இல்லாமல் போகாது. புனா சமிக்ஞையை ஏற்று நடந்திருந்தால் காங்கிரஸ் சமாதான மனோபாவத்துடன் இல்லாமல் திடீரென்று யுத்த மனோபாவத்தை மேற் கொண் டிருக்கும். இராஜாஜிகூட இதனைச் சாதித்திருக்க முடியாது. ஆனால், அதெல்லாம் கடந்துபோன விஷய மாகும். நான் எனது பிழையை ஒப்புக்கொண்டு எழுதியவற்றிற்கும் இராஜாஜியின் குறிப்புக்கும் எவ்விதத்திலும் அது பொருத்தமானதல்ல.”

இதனிடையே இராஜாஜி இந்திய அரசியல் நெருக்கடி சம்பந்தமாக, அவ்வப்போது வைஸ் ராயும், இந்தியா மந்திரியும் வெளியிட்டுவந்த அறிக் கைகளுக்கு, செய்து வந்த பிரசங்களுக்கும் சரியான பதிலளித்து, இந்திய மக்களின் அபிப்பிராயத்தை உலகுக்குத் தெரிவித்து வந்தார். 1940- ஆம் வருஷம் ஜூன் மாத மத்தியில் இந்தியா மந்திரி கர்னல் அமெரி, வைஸ்ராய்க்குப் புதிய அதிகார மளிக்க வேண்டி, காமன்ஸ் சபையில் ஒரு மசோதா வைப் பிரேரணை செய்து நிறைவேற்றினார். அதைப் பலமாகக் கண்டித்தவர்களில் இராஜாஜியும் ஒருவர். கர்னல் அமெரியின் மசோதாவைப் பற்றிய அவரது அபிப்பிராயத்தில் இராஜாஜியினுடைய அரசியல் நிபுணத்துவம் நன்கு பிரதிபலித்தது. அவ்வபிப் பிராயம் பின்வருமாறு :—

“சாம்ராஜ்ய நாடுகளை ஜெர்மனியின் கொடுமை அதிகமாகத் தாக்குவதால் ஏற்பட்டுள்ள நிலைமையின்

சகஜமான விளைவே புதிய இந்திய மசோதா. இரண்டு சாம்ராஜ்ய நாடுகளின் மத்தியமான பாகங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. குடியேற்ற நாடுகள் ஏதாவதொரு கொள்கையைப் பின்பற்றி நடக்க இப்பொழுது விரைகின்றன. தென்னாப்பிரிக்கா, கானடா, மற்றும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த இதர சுயாட்சி பெற்ற குடியேற்ற நாடுகளும் உள் நாட்டு நிர்வாகத்தையாவது நடத்திக் கொள்ளக் கூடிய நிலைமையில் இருக்கின்றன. ஆனால், இந்தியா வோ வேண்டுமென்றே ஒருவகையான ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த ஆட்சிக்குக் குறைந்தது சென்ற 50 வருஷங்களாகவாவது, யாதொரு அவசியமும் இல்லை. அந்தக் கொடுமை இப்பொழுதுதான் நன்கு புலனாகிறது. தன்னைத்தானே காத்துக்கொள்ள இந்தியா வழியற்றதாக இருக்கிறது. இந்தியாவிற்கென ஒரு தேசீய சர்க்காருமில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டுவிட்டால் எப்படி யிருக்குமோ அதே நிலையில்தான் இருக்கிறது இப் பொழுது இந்தியா. ஆனால், நாம் திக்கற்றவர்களல்ல என்ற உணர்ச்சியை மக்கள் மனத்திலே ஊட்டச் சென்ற 20 வருஷங்களில் காந்திஜி சிறிது சேவை புரிந்திருக்கிறார் ஆனால், அவ்வளவுதான்; அதற்கு மேல் ஒன்றும் நடக்கவில்லை

"இந்தியா சம்பந்தமான சகல அதிகாரமும் இப் பொழுது ஒரு தனிப்பட்டவரின் முடிவுகளையே பொறுத்திருக்கிறது. இதில் ஒரு விஷயத்தை நாம் மனத்தில் கொள்ளவேண்டும். அதாவது ஹிட்லர், முஸோலினி, க்ராம்வெல், நெப்போலியன் இவர்களைப்

போல் இந்திய ராஜப்பிரதிநிதி, நிலைமைக்குத் தக்க வாறு நடந்து கொள்ளக் கூடியவரல்லர்.

"யுத்தம் ஆரம்பித்தது முதல் நாம் ஓயாமல் கூச்ச லிட்டு வருகிறோம். அது என்ன? ஜனங்களின் ஆதரவு துளிக்கூட இல்லாமல் இந்தியாவில் ஏதேச் சாதிகாரம் தாண்டவமாடுவதன் கொடுமையை நாம் எடுத்துக் காட்டியிருக்கிறோம். பிரிட்டிஷ் மகாஜனங் களும், பார்லிமெண்டும், மந்திரிகளும் இப்பொழுது அதிகாரமற்றவர்களாக ஆகிவருகின்றனர். இதற்கு ஒரு காரணம் அவர்களுக்குள்ள இதர அலுவல்கள்; இரண்டாவது காரணம் போக்குவரத்துகளில் ஏற் பட்டு வரும் கஷ்டங்கள்.

"அமெரியின் மசோதா ஒரு பதிலாக இருக்கமுடி யாது. துரிதமாகப் பெருகிவரும் தனித் தன்மையில் ராஜப்பிரதிநிதி அதிகாரத்தை நடத்தித்தான் ஆக வேண்டும். பொதுமக்களின் ஆதரவு இல்லாமல் மாத்திரமல்ல; அவர்களுடைய அபிப்பிராயத்துக்கு விரோதமாகவும் அவர் நிர்வாகத்தை நடத்தியே ஆகவேண்டும். இத்தகைய நிலைமையில் இந்தியர் எவரும் கவலை கொள்ளாமலிருக்க முடியுமென்று நான் எண்ணவில்லை."

உலகத்தில் ஜனநாயகத்தையும், சுதந்திரத்தை யும் நிலை நாட்டுவதற்காகவும், சிறு தேசங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவுமே யுத்தம் செய்வ தாகவும், ஐரோப்பாவிலும் உலகிலும் ஒரு புதிய சகாப்தத்தை யுண்டாக்கி மனிதவர்க்கத்துக்கு நன்மை செய்யப்போவதாக ஒருபுறம் கூறிவரும்,

பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியா விஷயத்தில் மட்டும் விபரீத மனோபாவங் காட்டித் தவறான வழியில் நடந்து, அரசியல் நெருக்கடியை நீளவிட்டுக் கொண்டிருக்கும் விசித்திரத்தை இராஜாஜி எங்கே போனாலும் எக்கூட்டத்திலும் கண்டித்துப் பேசி வரலானார்.

பின்னர் மகாத்மா காந்தி மந்திரிபதவி வகித்தவர்களையும், சட்டசபைகளில் அங்கம் வகித்தவர்களையும், மற்றும் பொறுப்புள்ள ஸ்தானங்களில் இருந்தவர்களையும், தாம் தொடங்கியிருக்கும் தனிப்பட்டவர்கள் சத்தியாக்கிரகத்தில், கலந்து கொள்ள வேண்டுமென்று கட்டளையிடவே, இராஜாஜி தமிழ் நாட்டில் சத்தியாக்கிரகத்தைச் சிறப்பாக நடத்தவேண்டி, தகுந்த ஏற்பாடுகளெல்லாம் செய்யலானார், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்கு இவ்வகையில் வேண்டிய உதவி புரிந்தார். தமது அத்யந்த நண்பரான டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனை முதல் முதலாகச் சத்தியாக்கிரகஞ் செய்ய வைத்து மற்றவர்களுக்கு வழிகாட்டச் செய்தார். டாக்டர் ராஜனைத் தொடர்ந்து, திருச்சி பி. ஆர். தேவர், பட்டுக்கோட்டை நாடிமுத்துப் பிள்ளை, டாக்டர் சுப்பராயன் தம்பதிகள், ஸ்ரீ கே. வெங்கடசாமி நாயுடு போன்ற சுகபுருஷர்களும், செல்வந்தர்களு மெல்லாம் சத்தியாக்கிரகம் செய்து சிறை புகுந்தார்களென்றால் இராஜாஜியின் அரிய உபதேசமும் தியாக உணர்ச்சியுமே அதற்குக் காரணமாகும். இவ்விதம், தமிழ் நாட்டில் சத்தியாக்கிரகம் ஒழுங்காக நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்தபின்

இராஜாஜி தாமும் சிறை புகுவதற்குத் தயாரானார். அதற்குமுன், அவர் காங்கிரஸ் மாளிகை மைதானத்தில் ஸ்ரீ சாம்பமூர்த்தி தலைமையில் ஸ்ரீ சத்திய மூர்த்தி இந்தியா சட்ட சபையில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றிப் பேசிய ஒரு மாபெருங் கூட்டத்திற்கு விஜயஞ்செய்து, சென்னை நகர மக்களுக்கு மகாத்மாவின் சத்தியாக்கிரகத் தத்துவத்தை எடுத்துரைத்து மக்களிடம் பிரியாவிடை பெற்றுக்கொண்டார். அச்சமயம் அவர் செய்த அரிய பிரசங்கம் பொன் எழுத்துக்களால் பொறித்துப் போற்றந் தக்கதாகும். அதைக் கீழே தருகிறோம்.

"உலகத்துக்கே ரொம்பப் பெரியதான பிரச்னை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இதை நாமே ஒப்புக்கொள்கிறோம். அப்படியிருக்க, இவ்வளவு அசந்தர்ப்பமான நிலைமை இந்தியாவில் ஏன் ஏற்பட்டது? இந்த நிலைமை தேசத்தில் ஏற்பட்டது தவறு என்பதில் சந்தேகமில்லை. இதை நாமும் ஒப்புக்கொள்கிறோம்; ஆங்கிலேயரும் ஒப்புக்கொள்கிறார்கள். இது யார் தவறு என்பதுதான் கேள்வி. சாந்தமே உருவான மகாத்மாவுக்கும் பிரிட்டனுக்கும் ஏன் இந்த மனஸ்தாபம்? அவர்கள் பேரில்தான் தவறு என்பது எனக்குத் தெரியும். பிற்காலத்தில் இந்திய சரித்திரத்தில் இப்படித்தான் எழுதப்படும்.

"இந்தியாவின் கோரிக்கை என்ன? சுதந்திரம் பெறத் தனக்குள்ள உரிமையை ஒப்புக்கொள்ளும்படி இந்தியா கேட்டது. 'நமக்குக் கவலை நம்முடைய தேசத்தைப்பற்றி; உங்களுக்குக் கவலை உங்கள்

தேசத்தைப்பற்றி. ஆகையால், 'எங்கள் தேசத்தைப் பாதுகாக்க எங்கள் ஆட்சியை ஏற்படுத்துங்கள்' என்று சொன்னோம். இதற்காகப் புதிய தேர்தல்கூட நடத்தச் சொல்லவில்லை. 'உங்கள் இஷ்டப்படி ஏற்படுத்தியிருக்கும் மத்திய சட்ட சபைக்குப் பொறுப்புள்ள சர்க்காரை ஏற்படுத்துங்கள்' என்று சொன்னோம். அதற்கு அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. நம்முடைய சண்டையெல்லாம் இங்கிலீஷ் வாய்க்காலிலேயே நடப்பதாகச் சொல்லுகிறார்கள். ஏதேதோ கதைகளை எல்லாம் சொல்லுகிறார்கள். நேராகப்பதில் ஒன்றும் சொல்லவில்லை. இதற்காகத்தான் நாம் போராடுகிறோம்.

"இந்தச் சத்தியாக்கிரகம் என்ன பிரச்னையை முன்னிட்டு நடக்கிறது என்று சிலர் கேட்கிறார்கள். எந்தப் பிரச்னைக்காக நடக்கிறதென்பது தெளிவாக இல்லை என்கிறார்கள் சிலர். யுத்தத்துக்குப் பிரிட்டிஷ்காரர்கள் சொல்லும் பிரச்னையைவிட நாம் நமது சத்தியாக்கிரகத்துக்குச் சொல்லும் பிரச்னை மிக மிகத் தெளிவாயிருக்கிறது. நமது பிரச்னை இதுதான், இந்தக் காலத்து யுத்தம் பழைய யுத்தங்களைப்போல் அல்ல ஆண், பெண் குழந்தைகள் எல்லோரும் இதில் மடிகிறார்கள்; ஆகவே இதில் நாம் யோசித்துத்தான் சேரவேண்டியிருக்கிறது. அதற்கு, நமக்கு அவர்கள் இடங்கொடுக்கவில்லை. 'இங்கிலீஷ்காரர்கள்தான் யோசித்து யுத்தத்தில் சேர்ந்து இருக்கிறார்களே, அவர்களுடன் நாமும் சேர்ந்தால் என்ன?' என்றுசிலர் கேட்கிறார்கள். அப்படித்தான் சேரலாமென்றால், நம்மைக்கேட்கவாவது செய்தார்களா? சரி, அப்பொழுது

தான் கேட்கவில்லை, இப்பொழுது அசெம்பிளியில் கேள்வி கேட்டார்களே! என்ன பதில் கிடைத்து விட்டது? அப்புறமும் என்ன செய்கிறார்கள்? ஏதாவது மாறுதல் உண்டா? இல்லை. நம்மை அவர்கள் அலட்சியம் செய்கிறார்கள்; நம்மை மனிதர்களாகவே கருதவில்லை. அதனால்தான் எதிர்ப்பு. இதுதான் நமது சத்தியாக்கிரகப் பிரச்னை.

"நாம் 40 கோடி பேரும் சேர்ந்தால் 10 பிரான்ஸ் சேர்ந்தது போலாகுமே என்று சொன்னோம். அதை அவர்கள் கேட்கவில்லை. நமது யோசனையைத் தள்ளிவிட்டார்கள். இதற்கு உண்மைக் காரணமென்ன? அதை ஜின்னாவே முடிவு சொல்லி விட்டார். அதிகாரத்தை இந்தியர்களிடம் மாற்ற அவர்களுக்கு இஷ்டமில்லை. இந்த விஷயத்தில் ஜின்னாவே முடிவு சொல்லிவிட்டதால் அதை 'வசிஷ்டர் வாக்கு' என வைத்துக் கொள்ளலாம். இந்த இரண்டு காரணங்களுக்காகத்தான் சத்தியாக் கிரகம் நடக்கிறது.

"இந்தச் சத்தியாகிரகத்தில் எல்லோரும் ஜெயிலுக் குப் போகக் கூடாது. மகாத்மாஜி குறிப்பிடுபவர்கள் தாம் போகலாம். அவசரப்பட்டு எதையும் செய்யக் கூடாது, நல்ல ஏரியிலுள்ள ஜலத்தில் காலை வைத் துச் சேற்றைக் கலக்கி விட்டால், நீரைக் குடிக்க முடியாது. நிதானமாகக் காரியம் செய்தால் சுத்த மான நீரைக் குடித்து சுதந்திர தாகத்தைத் தீர்த்துக் கொள்ளலாம்.

"இந்தியாவின் எல்லை ரப்பரைப்போல் கொஞ்சங் கொஞ்சமாக நீண்டுகொண்டே போய் இப்பொழுது

இங்கிலீஷ் வாய்க்காலுக்கருகில் சென்றுவிட்டது, அப்படி இங்கிலாந்தும் இந்தியாவும் ஒன்ருகப் போய் விட்டாலும், இந்திய மக்களே பெரும்பான்மையோர்; ஆகையால், இந்தியர்தான் இங்கிலாந்தையும் ஆளும் படியாக விருக்கும்.''

கடைசியாக, இராஜாஜி, 1940-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் முதல் தேதியன்று, யுத்தக் கமிட்டி யில் அங்கத்தினரான மேயர் வாசுதேவ முதலியா ருக்கு, யுத்த முயற்சியில் ஈடுபட வேண்டாமெனக் கூறிக் கடிதங்கள் எழுதித் தபாலில் அனுப்பினர். மறுநாள் காலை, பத்திரிகைகளிலே இச்செய்தி வெளியானது. அத்துடன் இராஜாஜி கைது செய்யப் படலாமென்ற குறிப்பும் வெளியடப்பட்டதால் பொது மக்கள் பரபரப்பு அடைந்தனர். கைதாவது நிச்சயம் என்று தெரிந்ததும் சஞ்சலமுற்றபொதுமக்கள், தியாக ராயநகரில் பஸலுல்லாரோட்டிலுள்ள இராஜாஜி யின் பங்களாவை நோக்கித் திரள்திரளாகச் செல்ல லாயினர். எல்லோர் முகத்திலும் கவலையும் ஆவ லும் காணப்பட்டன. இராஜாஜியின் அரசியல் சகாக் களும், நண்பர்களும் வருவதும் சற்று உரையாடு வதும், திரும்பிச் செல்வதுமாக இருந்தனர்.

போலீஸார் எச்சமயம் வந்தாலும் தாம் செல்லத் தயாராக இருக்கவேண்டுமென்ற எண்ணத்துடன், தம்முடன் சிறைக்கு எடுத்துச் செல்லவேண்டிய படுக்கை முதலியவற்றை எடுத்துத் தயாராக வைத் திருந்தார். மக்கள் ஆவல் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக இருந்ததோ, அவ்வளவுக்கவ்வளவு ஏமாற்றமும் ஏற்பட்டது. பகல் கழிந்தும், போலீஸார்

வந்தபாடில்லை. இரவு வந்ததும் சோதனைபோல, மழையும் பெய்ய ஆரம்பித்தது. கூட்டமோ கலைந்த பாடில்லை. இந்நிலையிலே, இரவும் கழிந்து, மறுநாள் காலை சிறு தூற்றலுடன் புலர்ந்தது. அன்று ஜனக் கூட்டம் அதிகம். சுமார் எட்டரை மணிக்கு போலீஸ் கான்ஸ்டேபிள்கள் ஒரு லாரியில் வந்திறங்கி ஜனங் களை ஒரு புறமாக இருக்கச்செய்து, காவல் புரிய லாயினர். ஜனங்களைக் கலைந்துபோகுமாறு இராஜாஜி யே கேட்டுக்கொண்டார். சரியாக 9-50க்கு, சென்னை, தெற்கு வட்டம், உதவி போலீஸ் கமிஷனர், ஸ்ரீ சையத் யூசப் அலி இராஜாஜி மாளி கைக்கு வந்துசேர்ந்தார். பத்து நிமிஷத்துக்கெல்லாம் இராஜாஜி தம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டு அவருடன் காரில் புறப்பட்டுவிட்டார். தம் குடும்பத் தாரிடமும், மற்றவர்களிடமும் இராஜாஜி விடை பெற்றுப் பிரிந்த காட்சி மனதை உருக்கும்படியாக இருந்தது. கார் புறப்பட்டது; ஜனங்கள் 'இராஜாஜிக்கு ஜே' என்று கூவினர்; காரின்மீது மலர்மாரி பொழிந்தனர் சிலர்.

சிறை செல்லுமுன் தமிழ் மக்களுக்கு இராஜாஜி கீழ்க் காணும் செய்தியை அளித்தார் :—

"ஜவாஹர்லால் நேருவும், வல்லபபாய் படேலும் சிறையிலிருக்கையில் இந்த யுத்தத்தில் பிரிட்ட னுடன் இந்தியா தானாகவே நிர்ப்பந்தமில்லாமல் சேர்ந்திருக்கிறது என்று நிரூபிப்பது சிரமமான காரியந்தான். இந்தியாவிலுள்ள வசதிகளைத் தமக்குப் பயன்படுத்திக்கொள்ளும் வரம்பைக் குறைக்கக்கூடிய எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்

கொள்ளாம லிருப்பதுதான் பிரிட்டிஷ் சர்க்காரின் கொள்கை என்பது இப்பொழுது வியக்தமாய்விட்டது. மக்களின் பிரதிநிதிகளுக்கு (எந்த வகுப்பினர் ஆயினும் சரி) ஆதிக்கத்தை மாற்றுவது பேராபத்து என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி, அதிகாரம் மாற்றப்படுவதை அவர்கள் தள்ளிப் போட்டுக்கொண்டு வருகிறார்கள்.

"இது அவர்களுடைய திடமான உறுதி என்பது இதுவரை எனக்குத் தெரியாமலிருந்தது. அவர்களுடைய மனத்திலிருப்பதைப் புரிந்துகொள்வதில் நான் தவறிப் போனேன் என்பது இப்பொழுது தெரிகிறது.

"நான் வெறும் கனவு காண்பவனல்ல. முரட்டுப் பிடிவாதமோ, பிரிட்டனிடம் துவேஷமோ எனக்கு இல்லை. பொது வாழ்வில் பிரதாபம் அல்லது பொது மக்களின் வாழ்த்துக்குள்ள மதிப்பு இவைகளைப் பற்றிப் பிரமை எதுவும் எனக்கு இல்லை. நான் திடமாக ஊன்றி நடப்பவன். நம்மைக் கேவலமாக நடத்தியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

"நான் சண்டைக்காரன் அல்ல பொறுப்பும் அதிகாரமும் வகித்து அநுபவமடைந்தவன். சமாதானத்திற்காக, நியாயமான முயற்சிகளெல்லாம் செய்து பார்த்து விட்டுச் சலித்துப்போனேன். பிற நாட்டாரைப்போல் நாமும் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் வாழவேண்டுமென்றே சந்தோஷமாகச் சிறை செல்லுகிறேன். சாந்தமாகவும் உறுதியாகவும் இருப்போமானால் ஆண்டவன் அருள்வான்."

போலீஸ் கமிஷனரின் கார் பத்தேகால் மணிக்கு எழும்பூர் போலீஸ் கோர்ட்டை அடைந்தது. இதற்குள் ஏராளமான ஜனங்கள் அங்கே குழுமி விட்டனர். கோர்ட்டுக்குள் போலீஸ் பந்தோபஸ்து பலமாயிருந்தது; பொது ஜனங்கள் உள்ளே விடப் படவில்லை. தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ காமராஜ் நாடார், மாஜி மந்திரி எஸ். ராமநாதன், ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன், இராஜாஜியின் மூத்த புதல்வி, ஸ்ரீ ரகுராஜ பாரதி, ஸ்ரீமதி ராஜம் பாரதி, ஸ்ரீ சி. எஸ். நாராயணசாமி ஐயர், ஜனாப் ஷாபி முகம்மது முதலிய தலைவர்களும், ஆந்திரத் தலைவர்கள் சிலரும் மட்டும், மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட்டனர்.

தலைமைப் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் ஜனாப் அப்பாஸ் அலி முன்னிலையில் இராஜாஜி வழக்கு விசாரணை நடைபெற்றது. இராஜாஜி உள் நுழைந்ததும் மரியாதை செய்தனர். அவருக்கு உட்கார் ஆசனம் அளிக்கப்பட்டது. இராஜாஜி மாஜிஸ்டிரேட்டுக்கு வந்தனமளித்தார்; மாஜிஸ்டிரேட்டும் இராஜாஜிக்குப் பிரதிவந்தனம் செலுத்தினர். பின்னர் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முதலாவதாக, மேயரின் குமாஸ்தா ஸ்ரீ விசுவநாத முதலியாரும், போலீஸ் இன்ஸ்பெக்டரும், சென்னை செக்ரடேரியட் குமாஸ்தா ஸ்ரீ வலியானந்த நாயனும் ஆகியோரும் சர்க்கார் சார்பில் சாட்சியம் கூறினர். பின்னர் மாஜிஸ்டிரேட் இராஜாஜியை நோக்கி, "ஏதாவது சொல்லிக் கொள்ள விரும்புகிறீர்களா?" என்று கேட்டார். இராஜாஜியும் பின்வரும் வாக்குமூலத்தை வெளியிட்டார்.

"இந்தியாவில் சட்ட சபைகளின் அபிப்பிராயம் என்ன வென்று கேட்காமல் பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவை யுத்தத்தில் இழுத்தது. இந்தியாவை விடப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஜனத் தொகை மிகக் குறைவாகவும், அதே சமயம் யுத்தத் தற்காப்புப் பலத்தில் நல்ல நிலைமையில் இருக்கும் நாடுகள் யுத்தத்தில் வேண்டுமானால் நடுநிலைமையாக இருக்கலாம் என்று அந்த அந்த நாட்டின் இஷ்டப்படி நடக்க இடம் தரப்பட்டது. பிரதம மந்திரி என்ற ஹோதாவில் நான் இம்மாகாணத்தின் சட்டசபையை வழிகாட்டித் தலைமை வகித்து நடத்தியிருக்கிறேன். அந்தச் சட்டசபையானது 1939 அக்டோபரில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. நடுநிலைமை வகிக்கும் உரிமையைக் கோரவும், இப்போதைய நிர்வாகத்தால் எதற்காகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளேனோ அதே வேண்டுகோளை விடுவிக்கவும், இந்தியாவுக்குப் பாத்தியதை உண்டென்று கூறிய இந்தீர்மானம் பெருவாரியான மெஜாரிடியுடன் நிறைவேறியது. அத்தீர்மானத்துக்குச் சாதகமாக 155 வோட்டுகளும் எதிராக 22 வோட்டுகளும் பதிவு செய்யப்பட்டன. இந்தச் சட்டசபையில் நிர்ணயமான தீர்மானம் அலட்சியம் செய்யப்பட்டிருக்கிறது. இப்போது சத்தியாக்கிரகம் புரிவதன் மூலம் நான், சட்டசபைத் தலைமை வகித்து வழிகாட்டியவன் என்ற ஹோதாவில், என்மீதுள்ள தார்மீகப் பொறுப்பையே நிறைவேற்றுகிறேன்.

"இந்தியாவில், யுத்த முயற்சியானது மனப்பூர்வமான சம்மதத்தை ஆதாரமாகவே கொண்டு நடத்தப்

படுகிறது என்று பாத்தியதை கொண்டாடப்படும் வரையில், சுலோகங்கள் மூலமோ, கடிதங்கள் மூலமோ (என்னைப்போல) வேண்டுகோள் விடுக்க ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமையுண்டு என்றும், அது சட்ட சம்மதமே என்றும் பாத்தியதை கொண்டாடுவது என் கடமையாகும். இவ்வுரிமை இல்லையாயின் யுத்த முயற்சியானது, சம்பந்தப்பட்டோரின் மனப்பூர்வமான சம்மதத்தை அடிப்படையாகக் கொண்டதே என்று வாதிப்பது வெறும் பாசாங்கேயாகும். என் மீதுள்ள குற்றச்சாட்டில் காணப்படும் நிகழ்ச்சித் தகவல்கள் உண்மையே என்று ஒப்புக்கொள்கிறேன்.''

அதன்பின் மாஜிஸ்டிரேட், இராஜாஜிமீது குற்றப்பத்திரிகை வாசித்தார். எதிரி அனுப்பியுள்ள கடிதங்களில் இந்தியப் பாதுகாப்புச் சட்டம் நெ. 34-6 ஏ. பிரிவுப்படி சட்ட விரோதமான அம்சங்கள் இருப்பதாகவும், அதற்காக அவர்மீது இந்தியப் பாதுகாப்புச் சட்டம் 38(5) 38, 1-ஸி. பிரிவுகளின் படி, குற்றப் பத்திரிகை படிப்பதாகவும் கூறினர். பிறகு அவர் இராஜாஜியைப் பார்த்து, ''தாங்கள் குற்றவாளியா? இல்லையா?'' என்று கேட்டார்.

அதற்கு இராஜாஜி, ''ஆம், நான் குற்றவாளிதான்'' என்று கூறிக் குற்றத்தை ஒப்புக்கொண்டார். மாஜிஸ்டிரேட் இராஜாஜியினது உடல் நிலையைப்பற்றி விசாரித்து விட்டுக்கடைசியாக, தமது தீர்ப்பைக் கூறினர். அவ்விதம் தீர்ப்புக்கூறும் சமயத்தில் ஜனுப் அப்பாஸ் அலி உணர்ச்சி மேலீட்டால் சில விநாடிகள் பேசாதிருந்தார். பிறகே அவர் 'சென்னை சர்க்காரின் மாஜி

பிரதம மந்திரியான எதிரி, இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி ஆட்சேபகரமான அம்சங்கள் கொண்ட சில கடிதங்களை அனுப்பியதாக என் முன்பு குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார். சென்னை யுத்தப் படை திரட்டும் கமிட்டிக் காரியதரிசிக்கும் மற்றும் சிலருக்கும் இவ்விதம் கடிதமொன்று அனுப்பியிருக்கிறார். இது சம்பந்தமாக மூன்று பேர் சாட்சி கூறியிருக்கின்றனர். இந்தியப் பாதுகாப்புச் சட்டம் 38 (5), 38 - 1 -ஸி. பிரிவுகளின்படி எதிரியின் மீது சாட்டப்பட்ட குற்றத்தை அவர் ஒப்புக் கொள்கிறார். ஆகவே, அவர் குற்றவாளி எனத் தீர்மானித்து, அவருக்கு ஒரு வருஷ வெறுங்காவல் தண்டனை விதிக்கிறேன். அரசாங்கத்தார் உத்தரவிடும் வரை அவர் 'ஏ' வகுப்புக் கைதியாக நடத்தப்பட வேண்டுமென்று நான் உத்தர விடுகிறேன்" என்று சிரமத்துடன் கூறி முடித்தார். அவரது குரலில் தழுதழுப்பு தொனித்தது. வாயிதழ் துடிப்பு அவரது உள்ளத் துடிப்பை ஒருவாறு புலப்படுத்தியது.

ஜனாப் அப்பாஸ் அலி தாம் எவ்வளவு மனவேதனையுடன் இவ்வழக்கை விசாரித்துத் தீர்ப்பு அளிக்க நேர்ந்ததென்பதை உணர்த்தும் முறையில் இராஜாஜியை நோக்கிப் பேசத் தொடங்கி,

"ஸீதந்தி மம காத்ராணி
முகம் ச பரிசுஷ்யதி
வேபதுஸ்ச சரீரம் மே
ரோமஹர்ஷஸ்ச ஜாயதே"

[என்னுடைய அவயவங்கள் அயர்வடைகின்றன. என் நா உலர்கிறது. எனது உடல் விதிர்ப்புறுகிறது. மயிர்க் கூச்செறிகிறது.]

"காண்டீவம் ஸ்ரம்ஸதே ஹஸ்தா
த்வக்சைசவ பரிதஹ்யதே
நச சக்நோம்ய வஸ்தாதும்
ப்ரமதீவ ச மே மன:"

[காண்டீவம் கரத்தினின்றும் நழுவுகிறது. தேகத்தில் வெப்பமுண்டாகித் தகிக்கிறது. என்னால் நிற்க முடியவில்லை. என் மனம் ஒரு நிலையிலில்லாது மருள்கிறது.]

என்னும் கீதாசாரியனின் பகவத் கீதை சுலோகங்களை எடுத்துக் கூறி, "நானும் தற்போது அந்த அர்ச்சுனனுடைய நிலையையே அடைந்திருக்கிறேன்" என்று வெகு உருக்கமாகச் சொன்னார். அத்துடனில்லாது அவர்,

"கர்மண்யே வாதிகாரஸ்தே
மாபலேஷு கதாசித்
மா கர்மபல ஹேதுர்பூமி
தே ஸங்கோ அஸ்த்வ கர்மணி"

[செயல் புரியவே உனக்கு உரிமையுண்டு. அதன் பலாபலன்களை எதிர்பார்க்க எப்போதும் உனக்கு உரிமை கிடையாது. செய்யும் காரியங்களில் பயனை எதிர்பாராதே. தொழிலைச் செய்யாமலும் இருக்காதே.]

என்னும் மற்றொரு பகவத் கீதை சுலோகத்தைச் சொல்லி, இக் கீதா மொழியின்படி நானும் என் கடமையைச் செய்யவேண்டியவனாயிருக்கிறேன். அதுவன்றி நான் வேறு என்ன சொல்வதற்கு இருக்கிறது? தற்போது தேசத்தில் நிலவியுள்ள நெருக்கடி

நீங்கி, நீங்கள் கூடிய சீக்கிரம் விடுதலை பெற்றுவந்து, முன்போல் உயர் பதவியை மீண்டும் வகிக்க நேர்ந்தால், நான் பெருமகிழ்ச்சியடைவேன்" என்று கூறித் தம் உள்ளத்தின் உண்மை உணர்ச்சியை வெளிப்படுத்தினர்.

இராஜாஜி மாஜிஸ்டிரேட்டின் அன்புரையை ஏற்று அதற்குப் பதிலாக, "உங்களுக்கு என்றால் சிறிது தர்மசங்கடமான நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன்" என்று கூறி வந்தனஞ் செலுத்திவிட்டு எழுந்தார். மாஜிஸ்டிரேட்டு அவருக்கு மறு வந்தனமளித்து, வழியனுப்பினர்.

சென்ட்ரல் ஸ்டேஷனில், பெங்களூர் எக்ஸ்பிரஸ் புறப்பட ஐந்து நிமிஷம் இருக்கையில்தான், போலீஸார் இராஜாஜியை அழைத்துவந்து இரண்டாம் வகுப்பில் ஏற்றினர். பிளாட்பாரத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஜனத்திரள் சொல்லிமுடியாது. வண்டி புறப்படும்வரை மக்கள், "மகாத்மா காந்திக்கு ஜே" "ராஜாஜிக்கு ஜே" என்று ஆரவாரம் செய்துகொண்டிருந்தனர். வண்டிநகர ஆரம்பித்தும், அனைவர் கண்களிலும் நீர் ததும்பியது. போலீஸார் இராஜாஜியை வேலூருக்கு அழைத்துச் சென்றனர். இராஜாஜி சிறைப்பட்ட செய்தி காட்டுத்தீப்போல் நாடெங்கும் பரவியது. இதைக் கேள்வியுற்ற வேலூர் வாசிகளும் காங்கிரஸ்காரர்களும் அவரைக் காணக் கூடியிருந்தனர். ஜனக் கூட்டத்தைத் தவிர்க்க என்றே போலீஸார், இராஜாஜியை இடையேயுள்ள காட்பாடி ஸ்டேஷனிலேயே இறக்கி, அங்கிருந்து

மோட்டாரில் ஆரணி வழியாக, வேலூர் சிறைக்கு அழைத்துச் சென்றனர்.

இச் சிறையில் ஏற்கனவே இருந்துவரும் டாக்டர் ராஜன் முதலிய காங்கிரஸ்காரர்கள் இராஜாஜியை வரவேற்றனர். ஒரு மாதங்கூட ஆகாத நிலையில், இச் சிறையில் எல்லா அரசியல் கைதிகளுக்கும் இடமில்லை என்று காரணங்கூறி, சென்னை சர்க்கார் இராஜாஜியையும் மற்றவர்களையும் திருச்சி சிறைக்கு மாற்றி விட்டனர்.

அவ்வாறு சிறை மாற்றும் சமயத்தில் வேலூர் சிறையிலிருந்து திருச்சி சிறைவரையில், ரெயில் பிரயாணத்தின் போதும், காரில் செல்லும் போதும், மற்றெல்லோரையும் விட இராஜாஜி, சிறைவாச விதிகளுக்குச் சற்றும் பிசகாமல் நடந்து கொண்டார் என்பதைக் குறிப்பிடாதிருக்க முடியாது. தம்மைக் கண்டு ஆரவாரித்த ஜனங்களையும் கையமர்த்தி அமைதியாக இருக்கச் சொல்லிக்கொண்டே சென்றது, ஒழுங்கு கட்டுப்பாடு நியதிகளில் அவருக்குள்ள கவனத்தின் அறிகுறியாகும்.

இராஜாஜி சிறைவாசத்திற்குச் செல்லும்போது தம்முடன் ஸ்ரீ சங்கராசாரியாரின் நூல்கள், திருவாசகம், பட்டினத்தார் பாடல், தாயுமானவர் பாடல் முதலிய புத்தகங்களையும் எடுத்துச் சென்றாரென்பது குறிப்பிடத்தக்கது. இச்சிறைவாச காலத்தில், இராஜாஜி தமிழ், ஸம்ஸ்கிருத இலக்கியங்களை ஆராய்ச்சி செய்துவந்ததோடன்றி உலக மகாயுத்தத்தின் எதிரொலியாக இப்பாரத தேச முழுவதும் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி முதலிய பிரச்னைகளை எம்

படித் தீர்ப்பது என்பது பற்றித் தீவிரமாகச் சிந்தனை செய்து ஒரு திடமான முடிவுக்கு வந்தார். (இருபத்தைந்து வருஷங்களுக்கு மேலாகத் தாம் எவரை அரசியல் குருவாகக் கொண்டு சேவை புரிந்தாரோ அந்த மகாத்மா காந்தியின் விருப்பத்துக்கே மாறாக ஜனாப் ஜின்னாவின் 'பாகிஸ்தான்' கொள்கையை ஆதரித்தும் தற்போதைய சிக்கலான நிலைமையைத் தீர்ப்பதற்கு எப்படியும் பதவி ஏற்கவேண்டியது அவசியம் என வற்புறுத்தியும் இராஜாஜி பின்னர் செய்த பிரசாரத்தினின்றும் இவ்வுண்மை நன்குவிளங்கும். 1941 ஆம் வருஷம் நவம்பர் மாதத்தில் இராஜாஜி தம் தண்டனைக் காலம் முடிந்து, விடுதலையடைந்தார்.)

## கிரிப்ஸ் தூதும் அதன் முறிவும்

இராஜாஜி சிறையினின்று வெளிவந்ததும் உலகில் பல நிகழ்ச்சிகள் ஏற்படலாயின. ஜப்பானும், ஜெர்மனியும், இத்தாலியும் முக்கூட்டு ஒப்பந்தப்படி மகாயுத்தத்தில் கலந்து கொண்டன. மலாயா, சிங்கப்பூர், டச்சுத் தீவுகள், ரங்கூன் முதலிய நாடுகள் ஜப்பான் வசமாயின. சிங்கப்பூர் வீழ்ச்சிக்குப் பின்னர் தான், பிரிட்டிஷ் சர்க்காருக்கு ஞானோதயம் ஏற்பட்டது. இந்தியாவுக்கு ஒரு தற்காலிகத் திட்டத்தை வகுத்து, இந்தியத் தலைவர்களுடன் ஒரு சமரசத்திற்கு வர ஸ்டாப்போர்ட் கிரிப்ஸ்-ஐ தூதராக அனுப்பினார்கள். அவர் மகாத்மா முதலிய தலைவர்களைப் பல முறை சந்தித்துப் பேசினார். இராஜாஜியையும் அவர் சந்தித்தார். "யுத்தத்திற்குப் பிறகு குடியேற்ற நாட்டு அந்தஸ்து வழங்குவோம்; பின்னர் நீங்கள் விரும்பினால் பிரிட்டனிடமிருந்து பிரிந்து போகலாம். ஒவ்வொரு மாகாணமும், சுதேச சமஸ்தானமும் ஐக்கிய

இந்திய யூனியனில் சேர்ந்திருக்கலாம். அவ்விதம் சேர விருப்பாவிடில் அவை தனித்தனி யூனியனாகவும் பிரிந்திருக்கலாம். தற்போது, ராணுவ இலாகா ஒன்று தவிர, மற்ற இலாகாக்கள் யாவும் இந்தியரின் கைக்கு மாற்றத் தயாராக இருக்கிறோம்" என்று தம் திட்டத்தைப் பற்றி விளக்கினர். காங்கிரஸ் தலைவர்களோ, "ஜனுப் ஜின்னு ஒரு பாகிஸ்தான் மட்டும் கேட்கிறார். கிரிப்ஸ் திட்டம் பல பாகிஸ்தான்களை உண்டாக்க வழி கோலுகிறது" என்பதை உணர்ந்து, அதை நிராகரித்தனர். ஆனால், இராஜாஜியோ, 'சிறிது விட்டுக்கொடுத்தாகிலும், இந் திட்டத்தை நாம் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டு'மென்று கருதினர். 'பிரிட்டிஷாருக்கு யுத்தத்தில் தோல்விக்கு மேல் தோல்வி ஏற்பட்டு வருவதால், கூடிய சீக்கிரம் நம் நாட்டைக் காக்கும் பெரும் பொறுப்பை நம் தலையில் சூட்டப் போகிறார்கள். அதை ஏற்க நாம் சித்தமாயிருக்க வேண்டும்' என்பதே அவர் கருத்து. அதைத் தமிழ் மக்களுக்கு, அவர் விடாமல் எடுத்துச் சொல்லிவந்தார். ராஜதந்திரமாக அனுப்பப்பட்ட கிரிப்ஸ் திட்டத்தை மகாத்மா உள்ளிட்ட தலைவர்கள் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டனர் என்றே கருதி, இராஜாஜி நாட்டிற்கும் காங்கிரஸுக்கும் வழிகாட்டும் வேலையில் துணிந்து இறங்கினர்.

### காங்கிரஸ் - லீக் சமரஸ முயற்சி

காங்கிரஸுக்கும் முஸ்லீம் லீகுக்கும் இடையே சமரசம் ஏற்படாமல், தேசீய சர்க்கார் அமைப்பதோ, சுதந்திரம் பெறுவதோ சாத்தியமில்லை என்று இராஜாஜி மிக நன்றாக உணர்ந்தார். பிடிவாதமாய்

இருக்கும் முஸ்லிம் லீகினரின் கோரிக்கையைக் காங்கிரஸ் ஒப்புக்கொள்வதாகச் சொன்னால்தான் இந்திய அரசியலில் நிலவிவரும் நெருக்கடியைத் தவிர்த்துச் சுதந்திர லட்சியத்திலும் வெற்றி காண முடியும் என்று அவர் திடமாக நம்பினர். ஆகவே, காங்கிரஸ் - லீக் சமரசத்துக்காக அவர் ஒரு திட்டத்தை வகுத்தார். அதாவது, (1) தற்காலிகமாக இடைக்காலச் சர்க்கார் ஒன்று அமைக்க முஸ்லீம் லீக் காங்கிரஸுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும், (2) யுத்தம் முடிந்ததும் இந்தியாவில் வடமேற்கிலும் வடகிழக்கிலும் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக இருக்கும் பிரதேசங்களைப் பிரித்து எல்லை நிர்ணயம் செய்ய ஒரு கமிஷன் ஏற்படுத்தப்படும் என்றும், அவ்விதம் எல்லை நிர்ணயம் செய்யப்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் எல்லோருக்கும் வயது வந்தோர் ஓட்டுரிமையோ அல்லது காரிய சாத்தியமான வேறுவித ஓட்டுரிமையோ அளித்து, சர்வஜன ஓட்டுமூலம் பிரிவினை விஷயத்தைத் தீர்மானிக்க வேண்டும் என்றும், இந்தியாவிலிருந்து பிரிந்து தனி அரசாங்கங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று பெரும்பான்மையோர் விரும்பினல் அந்த விருப்பத்தை அமலுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், ஆனல், எல்லையில் இருக்கும் ஜில்லாவாசிகளுக்கு அவர்கள் எந்த அரசாங்கத்தில் சேர விருப்பமோ அதனுடன் சேர உரிமை அளிக்க வேண்டுமென்றும், (3) சர்வஜன ஓட்டுக்கு முன் தங்களுடைய கருத்தை எடுத்துச்

சொல்ல எல்லாக் கட்சிகளுக்கும் உரிமையுண்டு என்றும், (4) பிரிவினை ஏற்பட்டால், தற்காப்பு, வர்த்தகம், போக்குவரத்து போன்ற முக்கிய விஷயங்களுக்காகப் பரஸ்பர ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளலாம் என்றும், (5) ஜனப் பரிவர்த்தனை வேண்டுமென்றால் அது முற்றிலும் சுய விருப்பத்தைப் பொறுத்தே இருக்கவேண்டும் என்றும், (6) பிரிட்டன் பூரணமாக அதிகாரத்தையும் பொறுப்பையும் இந்திய நிர்வாகத்துக்கு மாற்றினால்தான் மேற்குறித்த நிபந்தனைகள் கட்டுப்படுத்தும் என்றும் இந்நிபந்தனைகளுக்கு இணங்கி முஸ்லிம் லீக் இந்தியச் சுதந்திரக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளலாம் என்றும் அத்திட்டம் விவரித்தது.

பின்னர் அட்லி சர்க்கார் இந்தியாவுக்கு வழங்கிய குடியேற்ற நாட்டந்தஸ்து அநேகமாக இராஜாஜியின் இத் திட்டத்தைத் தழுவியதாகவே அமைந்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது "தீர்க்கதரிசியான ஆராஜாஜி அன்று அந்தரங்க சுத்தியுடன் தொடங்கிய முயற்சியின் விளைவுதான் இந்தியாவின் அரசியலில் ஏற்பட்டிருக்கும் மகத்தான மாறுதல்" என்று பட்டாபி சீதாராமையா போன்ற அறிவாளிகள் அன்று பாராட்டிக் கூறிவந்தார்கள்.

இராஜாஜி இந்து முஸ்லீம் ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு தயாரித்த திட்டத்தின் சிறப்பை மேனாட்டு அறிஞர்களும் ராஜதந்திரிகளும் வியந்து பாராட்டினார்கள், "காங்கிரஸுக்கும் லீகுக்கும் இடையே செளஜன்யமான நிலைமை நிலவிச் சமரசம் ஏற்படவேண்டுமானால், இடைக்காலச் சர்க்காரின் உப தலைவராக, ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியாரைக்

காங்கிரஸ் நியமித்திருக்க வேண்டும்'' என்று மேனாட்டு அரசியல் நிருபரான மிஸ்டர் எர்ஸ்கின் வைஸ் "எவ்வரிபடீஸ் வீக்லி" என்ற ஆங்கிலப் பத்திரிகையில் எழுதினார் என்றால் அதிகமாக வேறென்ன சொல்லவேண்டும்?

இராஜாஜி கட்சித் தலைவர் என்ற முறையில் சென்னை சட்டசபைக் கட்சிக் கூட்டங்களைக் கூட்டினார். தாம் வகுத்துள்ள திட்டத்தை இரு முக்கிய தீர்மானங்களாகச் (ஒன்று ஜனாப் ஜின்னா கோரும் பாகிஸ்தானுக்கு ஆதரவு தருவது; மற்றொன்று முஸ்லீம் லீகுடன் வகுப்புச் சமரசம் செய்துகொண்டு தேசீய சர்க்கரை அமைப்பது) சமர்ப்பித்து கட்சியினரின் அங்கீகாரத்தைப் பெற்றார். சட்டசபை அங்கத்தினர்களுடைய ஆதரவை மட்டு மன்றி சென்னை மாகாண மக்கள் அனைவருடைய பேராதரவையும் பெற வேண்டி, இராஜாஜி எங்கும் பிரசாரம் செய்யலானார். இதற்கு நாடு முழுவதும் எதிர்ப்பு தோன்றிற்று.

சர் கிரிப்ஸ் விஜயத்தின் போது டில்லியில் கூடிய காங்கிரஸ் கமிட்டி, மீண்டும் அரசியல் நெருக்கடியை கருதி அலகாபாத்தில் கூடியது. அதில் இராஜாஜி யின் மேற்குறித்த இரு தீர்மானங்களும் ஆலோசனைக்கு வந்தன. ஸ்ரீ சந்தானத்தின் பெயரால் அனுப்பப்பட்ட இவற்றைத் தாமே பிரேரேபிக்க எண்ணி இராஜாஜி காரியக் கமிட்டி அங்கத்தினர் பதவியையும் விட்டார். அப்படி இவரே பிரேரே பித்துங்கூட, பாகிஸ்தான் கோரிக்கைக்கு ஆதரவு தரும் முதல் தீர்மானத்தைக் கமிட்டி நிராகரித்தது.

எனவே, தேசீய சர்க்கார் அமைப்பது பற்றிய தமது இரண்டாம் தீர்மானத்தை இராஜாஜி பிரேரேபிக்கவேயில்லை. ஆனால், இக்கொள்கையை ஊர் ஊராகப் பிரசாரஞ் செய்யலானார். இத்திட்டமே தேசத்தில் நிலவிய அரசியல் நெருக்கடியைத் தீர்க்க உதவி செய்யக்கூடியது என்று, அவர் எதிர்ப்புகள் பலவற்றையும் லட்சியம் செய்யாது, விடாப்பிடியாய்ப் பிரசாரத்தை நடத்தினார். காங்கிரஸையும் சீக்கிரத்தில் தம் வழிக்குத் திருப்பிவிடப் போவதாகவும் உறுதிகூறினார். தேசீய சர்க்கார் ஏற்படுத்தும் ஆர்வத்தில் தேசத்தைத் துண்டிக்கும் பாகிஸ்தான் கொள்கையை இவர் ஆதரிக்கிறாரேயென்று இராஜாஜியின் அந்தரங்க நோக்கத்தையும் தீர்க்கதரிசனமான திட்டத்தின் சிறப்பையும் சிந்தித்துப் பார்க்காத பலரும் அநுதாபங் கொண்டனர். "இராஜாஜியின் பாகிஸ்தான் பிரசாரம் பாவமானது" என்று காந்திஜியும் கண்டித்தார். "காங்கிரஸ் ஒரு முடிவு செய்த பின், எதிர்ப் பிரசாரம் செய்வது தவறு" எனப் பண்டித நேரு முதலியோர் கருதினர். ஆனால், இராஜாஜி சென்னையுடன் நிற்காமல், வெளி மாகாணங்களிலும் தம் கொள்கைகளுக்கு ஆதரவு தேட ஆரம்பித்தார். இதனிடையே, ஜனாப் ஜின்னாவை மும்முறைச் சந்தித்துப் பேசினார். ஆனால், அச்சமயம் பலன் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஜனாப் ஜின்னா இப்பேட்டி பற்றி ஒன்றும் சொல்லவில்லை. இராஜாஜி, இச்சம்பாஷணை ஜின்னாவை மனமாற்றம் கொள்ளச் செய்யக்கூடும் என்றே நம்பினார்.

இராஜாஜி இவ்வாறு காங்கிரஸ் கட்டுப்பாட்டை ஒழுங்கையும் மீறிப் பிரசாரம் செய்து வருகிறார்;

அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று புகார்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கும், அ. இ. கா. கமிட்டிக்கும் அனுப்பப்பட்டன. காங்கிரஸ் தலைவர் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் "இவ் விஷயம் மாகாணக் கமிட்டியைப் பொறுத்தது" என்று காரியக் கமிட்டி அபிப்பிராயத்தை அநுசரித்துக் கூறிவிட்டார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியும் நடவடிக்கை எடுத்தது. இராஜாஜியைத் தாம் செய்யும் எதிர்ப்பிரசாரத்திற்குச் சமாதானம் கூறும்படி கேட்டது. அதற்குப் பதில் அளிக்கையில், "காங்கிரஸ் வெறும் கட்சி ஸ்தாபனம் மாத்திரம் அல்ல; அது ஜனநாயகத்தன்மை வாய்ந்த தேசீய ஸ்தாபனமுமாகும்...... கமிட்டியில் தீர்மானங்களாக வெளிவந்துள்ள சில கருத்துக்களை மாற்றிக்கொள்ளும் படி, ஒருவர் பிரசாரம் செய்வதைத் தடுக்க முடியாது. காங்கிரஸ் அதன் தற்போதைய திட்டத்திலிருந்து மாற்றுவதற்குப் பாடுபட எனக்குப் பரிபூரண சுதந்திரம் இருப்பதால், காங்கிரஸ் சார்பாக நான் வகித்துவரும் பதவிகளை ராஜிநாமாச் செய்கிறேன்" என்று கூறி, அவ்வாறே இராஜாஜி மாகாணக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் பதவியையும் சட்டசபை அங்கத்தினர் பதவியையும் ராஜிநாமாச் செய்தார்.

பெயரளவில் காங்கிரஸைவிட்டு விலகி நின்ற போதிலும், இராஜாஜியின் மனமெல்லாம் அதிலேயே இருந்தது. காங்கிரஸ் - லீக் சமரசம் ஏற்படச் செய்வதிலும், தேசீய சர்க்கார் அமைப்பதிலும், அப்போது மாகாணங்களில் நடைபெற்ற சர்வாதிகார ஆட்சிக்

குப் பதிலாக ஜனநாயக சர்க்கார்களை ஏற்படுத்துவதிலும், அச்சு நாடுகளுக்கு எதிராக இந்தியாவைப் பாதுகாக்க மக்களும் சர்க்காரும் ஒத்துழைக்க ஒரு வழி காணவும், இராஜாஜி அரும்பாடு படலானார். காங்கிரஸின் போக்கில் மாறுதல் வேண்டுமெனச் சில காங்கிரஸ்காரர்கள் விரும்பினும், மகாத்மாவுக்கு எதிராக அதைக் கூறவும் துணிவின்றி இருந்தனர். இராஜாஜி தான், எதிர்ப்பு எத்தகையதாயினும் அதைக்கண்டு திகைக்காது, நாட்டிற்குநல்லது என்று தாம் ஆழ்ந்து கண்டதை வெளியிடவும் அதைப் பிரசாரஞ் செய்து பரப்பவும் செய்யவல்லவர்; ஆதலால், அவ்வாறே அவர் செய்தார்.

## ஆகஸ்டுப் புரட்சி

ஸர் கிரிப்ஸ் தூது முறிந்து போனதும் மகாத்மா காந்தி, "பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவை விட்டு வெளியேறுக" என்ற சுலோகத்தை எழுப்பி, அதற்கு வியாக்கியானம் செய்யும் முறையில் "ஹரிஜன்" பத்திரிகையில் தொடர்ந்து எழுதலானார். இச் சுலோகம், தேச முழுதும் முழக்கம் செய்யலாயிற்று. கடைசியாக, 1942-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் கூடிய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், இச் சுலோகமே, தீர்மான உருவத்தில் தேச சரித்திரத்தில் பதிவு செய்யப்பட்டது. "அன்னிய சர்க்கார் ஒழிந்தால்தான் இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படும். ஆதலால், பிரிட்டிஷ் சர்க்கார் உடனே இந்தியாவை விட்டு வெளியேறவேண்டும். வெளியேறிவிட்டால் காங்கிரஸ் மகாத்மாவின் தலைமையில் அஹிம்சா தர்மத்தை அனுசரித்துச் சுதந்திரப் போர் நடத்தும்" என்பதே அத்தீர்மானம்.

மறுநாளே (9-8-1942) விடியற்காலையில், காந்தியடிகளையும் முக்கியத் தலைவர்களையும் மத்திய சர்க்கார் கைது செய்தனர். இந்த அடக்குமுறை, மாகாணங்களில் எல்லாம் எதிரொலித்தது. தலைவர்களும், தொண்டர்களும் இதரப் பிரமுகர்களும் விசாரணையின்றியே சிறைப் படுத்தப்படுவதைக் கண்டு தேசமக்கள் கொதித்தெழுந்தனர். எங்கு பார்த்தாலும் தண்டவாளங்களைப் பிடுங்கி எறிவதும், தந்திக் கம்பிகளைத்துண்டிப்பதும், தபால்பெட்டிகளைக் கொளுத்துவதும் சர்க்கார் கட்டிடங்களைத் தீக்கிரையாக்குவதும் ஆகிய பல புரட்சிகரமான காரியங்கள் பலவிடங்களிலும் நடைபெற்றன அதிகாரிகளின் அதிகார துஷ்பிரயோகங்கள், எரிகிற நெருப்பில் நெய் வார்த்தது போலாயின. மக்களின் வீராவேசம் கொழுந்துவிட்டு எரியலாயிற்று என்று சொல்லவும் வேண்டுமோ! இதுதான் 'ஆகஸ்டுப் புரட்சி' என்று நம் தேச சரித்திரத்தில் பொறிக்கப்பட்டது.

இராஜாஜி காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் பதவியையும், காங்கிரஸ் அங்கத்தினர் பதவியையும் ராஜிநாமா செய்தது மட்டுமின்றி, காங்கிரஸின் ஆகஸ்டுத் தீர்மானத்தை ஆதரிக்காததாலும், காங்கிரஸின் கொள்கைக்கு மாருகப் பிரசாரஞ் செய்து வந்ததாலும், அதிகாரிகளின் அடக்குமுறைக்கு ஆளாகவில்லை. இருப்பினும், சாப்ரூ ஜயகர் போன்ற மிதவாதத் தலைவர்களைப் போல அவர் சிறையிலிருந்த காங்கிரஸ் தலைவர்களை விடுவிக்க முயன்று வந்தார். இதற்காக வைஸ்ராய் லின்லித்கோ பிரபுவைப் பேட்டி காண முயன்ருர். ஆனல் அனுமதி மறுக்கப்பட்டது. ஆகஸ்டுத் தீர்மானத்தை

காங்கிரஸ் வாபஸ் பெற்றலொழிய, தலைவர்களை விடுதலை செய்வதோ அல்லது அவர்களுடன் சமரசம் பேசுவதோ முடியாது என்று சர்க்கார் சொல்லி வந்தனர்

வைஸ்ராய் வேவல் திட்டம்

இதனிடையில் வைஸ்ராய் பதவியில் மாறுதல் ஏற்பட்டது. இராணுவ அதிகாரியான வேவல் பிரபு பதவியேற்றார். ஆனல், அரசியல் நெருக்கடியை இது ஒன்றும் தீர்க்கவில்லை. ஜப்பானியப் படை, இந்திய தேசிய ராணுவப்படை இவற்றினால் ஏற்பட இருந்த மிக அபாய நிலையைச் சமாளிக்கவே இராணுவ அதிகாரியொருவர் வைஸ்ராயாக நியமிக்கப்பட்டா ரென்ற பேச்சு நாட்டில் உலாவியது.

இராஜாஜி மட்டுமேயல்லாது நாட்டின் நலத்தில் நாட்டம் கொண்ட பிற கட்சித் தலைவர்களும், சிறைப்பட்ட தலைவர்களை விடுவிக்கவும் அரசியல் நெருக்கடியைத் தீர்க்கவும் முயற்சி பல செய்தனர். சர்க்காரும் தங்கள் பழைய பல்லவியையே பாடினர்; பலனொன்றும் இல்லை. இராஜாஜி மட்டும் நம்பிக்கை யை இழக்காமல் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து பொது வாக, தேச சேவை, லோக சேவை செய்து வரலானார். இடையிடையே மகாத்மா காந்தியைச் சிறையில் கண்டு பேசித் தம் கொள்கையைப் பிரசாரஞ் செய்ய அவருடைய அங்கீகாரத்தையும் ஒருவாறு பெற்றுக் கொண்டார்.

அச்சுகளின் சரணாகதியுடன் ஐரோப்பிய யுத்தம் முடிந்தது. ஆனல் இந்திய அரசியல் நிலைமையில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. உலக யுத்தத்தின்

எதிரொலியாக உணவு நெருக்கடி போன்ற பல நெருக்கடிகள் தோன்றி நாட்டின் நிலைமை மோச மாகியது. இந்நிலையில் 1945-ஆம் வருஷத் தொடக்கத்தில், வேவல் பிரபு லண்டனுக்குச் சென்று வெகு சாதுர்யமாகத் தயாரித்த ஒரு அரசியல் திட்டத்துடன் இந்தியா திரும்பினர். பழைய அரசியல் சட்டத்தின் அடிப்படையிலேயே எல்லா அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுங் கொண்ட ஒரு நிர்வாக சபை அமைப்பதென்றும். அதில் வைஸ்ராயையும் சேனபதியையும் தவிர, மற்றப் பதவிகளில் இந்துக் களுக்கும் முஸ்லீம்களுக்கும் சரிசமமாகப் பங்கு உண்டென்றும் வெளிநாட்டிலாகாவும் இந்தியர் கை யிலேயே இருக்கும் என்றும் வேவல் திட்டம் விவரித் தது. இதுபற்றி விவாதித்து முடிவுக்கு வருவதற் கென்றே சிறையிலிருந்த காங்கிரஸ் தலைவர்கள் விடுவிக்கப்பட்டனர். ஒரு கூட்டு மகாநாடு கூட்டப் பெற்று, மகாத்மா உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர் களும் ஜனப் ஜின்னவும் அழைப்பின் பேரில் கலந்து கொண்டனர். இராஜாஜியும் இதில் கலந்துகொண் டார். முஸ்லீம்களுக்குச் சரியான பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை யென்றும், யுத்த முடிவில் ‘பாகிஸ்தான்’ அளிப்பதாக உறுதி கூறப்படவில்லை யென்றும் காரணங் கூறி ஜனப் ஜின்ன ஒத்துழைக்க மறுத்தார். எனவே, காங்கிரஸ் எவ்வளவோ விட்டுக் கொடுத்துங் கூட மகாநாடு முறிந்தது ; வேவல் திட்டம் வியர்த்தமாயிற்று என்று சொல்லவேண்டிய தில்லை.

## தமிழ் நாட்டில் எதிர்ப்பு

இச்சமயத்தில், பிரிட்டனில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சியார் படுதோல்வி யுற்றுத் தொழிற் கட்சியார் பதவிக்கு வந்தனர். பிரதம மந்திரி சர்ச்சில் வெளியேறினர்; மிஸ்டர் அட்லி பிரதம மந்திரியானர். இதன் பலனாக, சீக்கிரம் இந்தியா அரசியல் நெருக்கடி தீர முயற்சிக்கப்படும் என்றும் பொதுத்தேர்தல் நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டது. இதற்கு அநுகுணமாக, சட்ட விரோதமாகக் கருதப்பட்ட காங்கிரஸ் மீதிருந்த தடைகள் நீக்கப்பட்டன. இந்நிலையில் "காரியக் கமிட்டியிலிருந்து ராஜிநாமாச் செய்து அதன் மூலம் தம் அபிப்பிராயங்களை வெளியிடச் சுதந்திரம் தேடிய நிலைமை சம்பந்தமான சச்சரவு இப்போது தீர்ந்து விட்டது" என்று கூறி, இராஜாஜி, தலைவர் அபுல் கலாம் ஆஸாத்துக்குக் கடிதம் எழுதி விண்ணப்பித்து 1945-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் உ-ஆம் தேதி மீண்டும் காங்கிரஸில் சேர்ந்துவிட்டார். இவ்விஷயம் இராஜாஜி திருச்செங்கோடு வட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் தேர்தலுக்கு அபேட்சையை அனுப்பியபோதுதான் தெரிந்தது. இராஜாஜி போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டாலும், இத்தேர்தல், திருச்செங்கோடு காங்கிரஸ் கமிட்டியால் அதிகாரமின்றி நடத்தப் பெற்றதால், செல்லாது என த. நா. கா. தலைவர் ஆட்சேபம் தெரி வித்தார். த. நா. கா. கமிட்டியும் அவ்விதமே தீர்ப்பு அளித்தது. அச்சமயம் இராஜாஜி புனவில் இருந்தார். அங்கிருந்து த. நா. கா ''ாவருக்கு,

"தாங்கள் தேர்தல் நடத்துமாறு அறிக்கை அனுப்பவில்லை என்ற காரணத்திற்காக, என்னைத் தேர்ந்தெடுத்திருப்பது செல்லாது என்று சொல்வதாகப் பத்திரிகை வாயிலாக அறிந்தேன்.........திருச்செங்கோடு தாலூகா கமிட்டி தேர்தல் நடத்தியது தவறு எனத் தாங்கள் அறிவிப்பீர்களாயின். அதைத் தாங்களே முடிவு செய்துவிடாமல், மாகாணக் காங் கமிட்டியிலும், அ. இ. கா. தலைவருக்கு அனுப்பியும் தீர்ப்புப் பெறவேண்டும் எனக் கோருகிறேன்" என்று கடிதம் எழுதினர். இப்பிரச்னைமீது வாதப் பிரதி வாதங்கள் நடந்தன. நடுநிலையாளர்கள் ஒரு சமரசம் ஏற்படுத்த முயன்றனர். திருப்பரங்குன்றத்தில் நடந்த கமிட்டிக் கூட்டத்திலும் இச்சமரச முயற்சி நடந்தது. ஆனல் ஒரு சிலரின் விஷமத்தினல் சமரசம் ஏற்படக் கூடவில்லை. பின்னர் இராஜாஜி கோஷ்டியாரின் வேண்டுகோளுக்கு இணங்கி, ஜனப் ஆஸப் அலி சென்னைக்கு வந்து செய்துவைத்த மத்யஸ்தத்தினல் சமரசம் ஏற்பட்டது.

இதனிடையே, தக்ஷிண பாரத ஹிந்தி பிரசார சபை வெள்ளிவிழாவில் தலைமை வகிக்கச் சென்னைக்கு வந்த மகாத்மா, மதுரை, பழநி முதலிய இடங்களுக்குச் சென்றுவிட்டு வர்தா திரும்புகையில், "இராஜாஜிக்கு எதிராகத் தமிழ்நாட்டில் ஒருகூட்டம் இருக்கிறது. அதைக் காண வருத்தமாயிருக்கிறது" என்று "ஹரிஜன்" பத்திரிகையில் எழுதினர். இதற்காக வருந்தி, த. நா. கா. கமிட்டித் தலைவர் ஸ்ரீ காமராஜ் நாடார் பார்லிமெண்டரி போர்டிலிருந்து

இராஜிநாமாச் செய்தார். இதனால் மீண்டும் இராஜாஜிக்கு எதிராகப் புயல் கிளம்பியது.

இது ஒருபுறமிருக்க, அட்லீ சர்க்கார் அறிக்கைப் படியே பொதுத் தேர்தல் இந்தியா எங்கும் நடை பெற்றது. தமிழ்நாடு பற்றியமட்டில், ஸ்ரீ காமராஜ் இராஜாஜியைக் கலந்தே அபேட்சகர்களைத் தேர்ந் தெடுத்து நிறுத்தினார். ஜாபிதாவில் இராஜாஜியின் பெயரும் இருந்தது; ஜாபிதாவும் மத்திய பார்லி மெண்டரி போர்டின் அங்கீகாரம் பெற்றுப் பத்திரிகை களிலும் வெளியாயிற்று. ஆனால், தமக்கெதிராகக் கிளம்பிய கிளர்ச்சியைக் கண்டு மனம் வருந்தி, இராஜாஜி தாம் தேர்தலுக்கு நிற்க விரும்பவில்லை என்று தெரிவித்துவிட்டார். ‘என்மீது பொழியப் படும் வசைமாரிகளையும் துவேஷங்களையும் நீல கண்டனைப் போல் தாங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள்’ என்று மகாத்மாவுக்கு எழுதி அவர் தம் அபேட்சை மனுவை வாபஸ் வாங்கிக்கொள்வதாகத் தெரிவித் தார்.

இவ்விஷயம் வட இந்தியத் தலைவர்களுக்கு மட்டுமன்றித் தமிழ் நாட்டினர்க்கும் வருத்தத்தை அளித்தது. பொதுத் தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் பெரு வெற்றி அடைந்துவரும் இச்சமயத்தில் மாகாண ஆட்சிச் சக்கரத்தைச் சுழற்ற நிர்வாகத் திறமையில் பேர்பெற்ற இராஜாஜியே தலைவராக வேண்டுமென மத்திய பார்லிமெண்டரி போர்டார் கருதி, இராஜா ஜியை மாகாண சட்டசபைத் தலைவராகத் தேர்ந் தெடுக்கும்படி உத்தரவிட்டனர். தமிழ்நாடு, ஆந்திர,

கேரளக் காங்கிரஸ் கமிட்டியினர், சர்தார் படேலின் இந்த உத்தரவு, தங்களுக்குள்ள நியாயமான உரிமையில் தலையிடுவதாகும் என்று கருதினாலும் சர்தாரின் வார்த்தைக்கு மதிப்புச் செலுத்தி அவ் வுத்தரவைச் சட்டசபைக் காங்கிரஸ் கமிட்டி முன் சமர்ப்பித்தனர். பெரும்பாலோர் இச் சிபார்சை ஏற்க வில்லை. எனவே இராஜாஜி மாகாண அரசியலினின் றும் விலகி நின்றார். சட்டசபை வேலையில் மிக நிபுண ரான ஒருவருடைய சேவையைச் சென்னை சட்ட சபை இழந்தது. பின்னர் ஏற்பட்ட பிரகாசம் மந்திரி சபையிலும், அதன் பின்னர்த் தோன்றிய ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார் மந்திரி சபையிலும் இராஜாஜி போன்ற ஒரு ராஜ தந்திரி இல்லாத குறையை நடை முறை விவகாரங்கள் வாயிலாக எல்லோரும் உணரலாயினர்.

காங்கிரஸ் மகாசபையினர் மட்டும் காரியக் கமிட்டியில் ஸ்தானமளித்து, இராஜாஜியைக் கௌரவித்தனர்.

## இடைக்காலச் சர்க்காரில் மந்திரி பதவி

இதனிடையே, இந்தியா மந்திரி லார்டு பெதிக் லாரன்ஸ் தலைமையில் ஏ. வி. அலெக்ஸாண்டர். ஸர் கிரிப்ஸ் ஆகியோரைக்கொண்ட தூது கோஷ்டி இந்தியாவுக்கு வந்தது. கோஷ்டியினர் காங்கிரஸ் தலைவர்களையும் ஜனுப் ஜின்னவையும் பலமுறை சந்தித்துப் பேசினர். இறுதியில் முக்கட்சி மகாநாடு ஒன்றும் நடத்தினர். சர்க்கார் தரப்பில் நால்வர்,

காங்கிரஸ் சார்பில் நால்வர், லீக் கட்சியில் நால்வர் கொண்ட இம் மகாநாடு சுமார் ஒரு வாரம் நடந்தது. இடையே பண்டித ஜவாஹரும், ஜனுப் ஜின்னுவும் சந்தித்துப் பேசினர். என்றுலும், ஒற்றுமை முயற்சி வெற்றி பெறவில்லை. ஆகவே, 1946-ஆம் ஞூ மேமீ 16-ஆம் தேதியன்று, பிரிட்டிஷ் மந்திரி சபைத் தூது கோஷ்டியினர், தற்காலிகத் திட்ட மென்றும், எதிர்காலத் திட்டமென்றும் கண்டு, ஒரு திட்டத்தை வெளியிட்டனர். இதற்கு அநுகுணமாக, இந்தியப் பிரதம சேனுதிபதியும், வைஸ்ராயின் நிர்வாக சபை அங்கத்தினர்களும் ராஜிநாமாச் செய் தனர். புது அரசியல் திட்டத்தைப்பற்றி விளக்கம் பெற, காங்கிரஸ் தலைவர்களும் லீக் தலைவர்களும் தனித்தனியே கடிதப் போக்குவரத்தும் பேச்சும் நடத்தினர். இருந்தும், இடைக்கால சர்க்காரில் பதவியேற்பதில் காங்கிரஸ்-லீக் இடையே ஒற்றுமை ஏற்படவில்லை. ஆகவே தூது கோஷ்டியினர் யோசனையின்படி வைஸ்ராயே இடைக்காலச் சர்க் காருக்கு 14 பேரை நியமித்து அவர்களுக்கு அழைப்பு அனுப்பினுர். இப் பதினுன்கு பேர்களில் இராஜாஜியும் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். லீக் இரண்டு திட்டங்களையும் ஏற்றது. காங்கிரஸ், தங்கள் ஜாபிதாப்படி ஸ்ரீ சரத் போஸின் பெயர் நிராகரிக்கப்பட்டு ஸ்ரீ மகதாப் சேர்க்கப்பட்டதைக் குறித்தும் ஒரு தேசீய முஸ்லீம் கூடச் சேர்த்துக்கொள்ளப் படாததைக் குறித்தும், இடைக்காலத் திட்டத்தை நிராகரித்து, நீண்ட

காலத் திட்டத்தை மட்டும் ஏற்றது. காங்கிரஸ் நிராகரித்து விட்டதால், தாம் ஏகபோகமாக மந்திரி சபையை அமைக்கலாம் என லீகினர் எண்ணினர். ஆனால், தேசீய ஸ்தாபனமான காங்கிரஸ் கலவாமல் மந்திரி சபையை அமைப்பது உசிதமல்ல எனச் சர்க்கார் கருதி ஆறு நியமன மெம்பர்கள் கொண்ட தற்காலிகப் பாதுகாப்பு நிர்வாக சபை ஒன்றை அமைத்துக் கொண்டனர். அரசியல் நிர்ணய சபை ஒன்றை அமைக்கத் தேர்தலுக்கும் ஏற்பாடு செய்யப் பட்டது.

இதனிடையே காங்கிரஸ் தலைவர் மௌலானா ஆஸாத் பண்டித ஜவாஹரிடம் பொறுப்பை ஒப்படைத்தார். 6-7-46-எல் பம்பாயில் நடைபெற்ற அ. இ. கா. கமிட்டி எதிர்கால அரசியல் திட்டம் பற்றிப் பழைய கமிட்டி செய்திருந்த தீர்மானத்தை உறுதிசெய்தது. காங்கிரஸ் அரசியல் நிர்ணயசபைத் தேர்தலில் கலந்து கொண்டது. பிற கட்சிகளைச் சேர்ந்த அரசியல் நிபுணர்களையும் தங்கள் சார்பில் நிறுத்தி வெற்றி பெறச் செய்து அரசியல் நிர்ணய சபைக்கு அனுப்பினர். காங்கிரஸ் கமிட்டியினர் சென்னை மாகாணத்தில் நடைபெற்ற அரசியல் நிர்ணய சபைத் தேர்தலில் இராஜாஜியும் நின்று வெற்றி பெற்றார்.

அரசியல் நிர்ணய சபைத் தேர்தலில் தங்களுக்குள்ள ஸ்தானங்களைப் பெரும்பாலும் கைப்பற்றிய பின்னரும், இச் சபைக்குள்ள சர்வாதிகாரத்தை

அறிந்து மருண்ட லீகினர் பிரிட்டிஷ் மந்திரிகளின் அதிகார மாற்றத் திட்டத்தை அங்கீகரிப்பதில்லை யென்றும் பாகிஸ்தானைப் பெற நேரடியான நடவடிக்கை யெடுப்பதென்றும் தீர்மானித்தனர். இதை லட்சியம் செய்யாது வைஸ்ராய் வேவல் பிரபு 12-8-46-ல் காங்கிரஸ் தலைவர் நேருவை அழைத்து இடைக்கால சர்க்கார் அமைக்கச் செய்தார். அப்போதும் பண்டித நேரு லீகையும் சேர்த்துக்கொண்டு கூட்டு மந்திரி சபை அமைக்கக் கருதி ஜனப் ஜின்னுவின் ஒத்துழைப்பை நாடினர் ; ஆனல், அது பலிக்கவில்லை. வேறு வழியின்றி மற்றச் சமுகத்தினரையும் சேர்த்துக்கொண்டு 12 பேர் கொண்ட தேசீய சர்க்காரை முதன்முதலாக 2-9-46-ல் அமைத்தார். இராஜாஜியும் இந்த மத்திய சர்க்காரில் அங்கம் பெற்ருர்.

இவ்விதம் தேசீய சர்க்கார் அமைந்ததைக்கண்டு மனம் பொருத முஸ்லீம் லீகினர் வகுப்பு வெறியைக் கிளப்பும் முறையில் பிரசங்கங்கள் செய்து ஆகஸ்டுமீ 16-ந்தேதி 'நேரடியான நடவடிக்கை நாள்' என்று சொல்லி நாடெங்கும் அமளி செய்யலாயினர், வங்காளம், பம்பாய் முதலிய இடங்களில் வகுப்புக் கலகம் வரம்பு மீறிப் போய் லட்சக்கணக்கான உயிர்ச்சேதமும் பொருட் சேதமும் ஏற்பட்டன. வைஸ்ராயின் தலையீட்டாலும் போபால் நவாபின் சமரச முயற்சியாலும் முஸ்லீம் லீகினர் (ஒற்றுமை

யுணர்ச்சிக்கு இடம் தராமல் போனலும்) இடைக் கால சர்க்காரில் நுழைந்துவிட்டனர். ஆனல் அங்கும் அவர்கள் கூட்டுப் பொறுப்பாயிருந்து காரியஞ் செய்யாமல், 'முஸ்லீம்களின் நலன்களைக் காக்கவே வந்திருக்கிறேம்'' எனச்சொல்லித் தங்கள் இஷ்டப்படி நடக்கலாயினர். அத்தருணத்தில்தான் முஸ்லீம்களில் வகுப்பு வெறியர்களாயுள்ளோர் நடத்திய போராட்டத்தில் நவகாளிப் படுகொலைச் சம்பவமும், பீஹார் திப்பரான் சம்பவமும் மற்றும் சில சம்பவங்களும் நடைபெற்றன. காங்கிரஸ் தலைவர்கள் இவ்வித வகுப்புக் கலகங்களை அடக்கப் பெரிதும் பாடுபட்டனர். முஸ்லீம் லீகினரோ அமைதியை நிலைநாட்ட அக்கறை கொள்ளவே இல்லை.

### சுதந்திர சர்க்காரில் இராஜாஜியின் அந்தஸ்து

இதனிடையே, அரசியல் நிர்ணய சபை பாபு ராஜேந்திர பிரஸாத் தலைமையில் கூடி ஒழுங்காகக் காரியம் செய்துவந்தது. அதில் பிரதமர் நேரு சபை யின் லட்சியத்தை விளக்கும் தீர்மானத்தை நிறை வேற்றினர். சுயேச்சையும் ஆதிபத்திய அதிகாரமும் உள்ள குடியரசாக இந்தியா எதிர்காலத்தில் விளங்கும் என மேற்படி சபை மூலம் பிரகடனம் செய்தார்.

லீகர் போட்டுவந்த முட்டுக்கட்டையால் அரசியல் நிர்வாகக் காரியங்களை ஒழுங்காக நடை

பெற முடியாததை உணர்ந்த பண்டித நேரு இந்திய அரசியல் நிர்ணய சபையில் லீகினர் சேர்ந்து செயல் புரிய வேண்டும் ; இல்லாவிடில், இடைக்காலச் சர்க் காரிலிருந்து வெளியேறிவிட வேண்டுமென்று கண்டிப் பாகக் கூறினர். எனவே, லீக் விட்டுக் கொடுக்கா விட்டாலும், பிரிட்டிஷ் சர்க்கார் நிலைமையை உணர்ந்தனர். ஆதலால், அட்லி சர்க்கார் 20-2-47-இல் "பிரிட்டிஷ் சர்க்கார் 1948-ஆம் வருஷம் ஜூன் மாதத்திற்குள், சகல அதிகாரங்களையும் நாளா வட்டத்தில் ஒரு மத்திய சர்க்காரிடமோ, அல்லது மத்திய சர்க்காரிடமும், சில மாகாணச் சர்க்காரிடமு மோ மாற்றிக் கொடுத்துவிட்டு வெளியேறிவிடுவர்" என்று அறிக்கை வெளியிட்டனர். அதை உறுதிப் படுத்தும் வகையில், லார்டு மவுண்ட்பேட்டனைப் புது வைஸ்ராயாக நியமித்து அதிகார மாற்றம் செய்யும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தனர். பிரிட்டிஷ் சர்க்காரின் அறிக்கையை வரவேற்று 8-3-47-இல் அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி ஒரு தீர் மானம் நிறைவேற்றியது.

பிரிட்டிஷ் சர்க்காரின் இந்த அறிக்கையில் 1948ஆ ஜூன் மாதம் கெடு வைத்திருந்தாலும், அதிகார மாற்றத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப் பட்ட லார்டு மவுண்ட் பேட்டன் இந்தியாவின் நிலை மையையும் இந்திய மக்களின் சுதந்திர ஆர்வத்தை யும் கண்டு, அதற்கேற்ப உடனடியாக, அரசியல்

அதிகாரத்தை இந்தியத் தலைவர்களிடம் மாற்ற நடவடிக்கை எடுத்துக்கொண்டார். அதன் பயனாகத் தான், பிரிட்டிஷ் சர்க்கார் 1947-ஆம் வருஷ ஆகஸ்டு மாதம் 15உ இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து வழங்கினர். ஆனால், இக்குடியேற்ற நாட்டந்தஸ்தால் ஏற்படக் கூடிய ஆட்சி சுதந்திரத்தை இந்திய மக்கள் ஒருமிக்க அனுபவிக்க முடியாதபடி, ஜனாப் ஜின்னாவின் பிடிவாதத் தன்மையும் முஸ்லீம் லீகின் முரட்டுப் போக்கும் நாட்டை இரு கூறாக்கி விட்டன. பிரிட்டிஷ் சர்க்கார் ஜனாப் ஜின்னாவின் பாகிஸ்தான் கோரிக்கைக்கு ஒருவிதமாக இடமளித்து, இந்தியாவுக்குச் சுதந்திரப் பிரகடனம் செய்தார்கள். அதன்படி, இந்திய தேசத்தின் பூகோள அமைப்பில் இந்திய யூனியனுக்கு உட்பட்ட பிரதேசங்கள் இன்னின்னவை யென்றும், பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு உட்பட்ட பிரதேசங்கள் இன்னின்னவை யென்றும் பிரித்துத் தேசப் படத்தில் மாறுதல் செய்யவேண்டியதாயிற்று. நாடு இரு கூறாகத் துண்டிக்கப்படுவதை நீண்ட காலமாக முழு மூச்சுடன் எதிர்த்து வந்த காங்கிரஸ் தலைவர்கள் வேறு வழியின்றி, மகா கோரமான வகுப்புக் கலகத்தை இப்பிரிவினையாலாயினும் தவிர்க்க முடியாதா என்ற நம்பிக்கையுடன் இப்பிரிவினையை ஒப்புக் கொண்டனர். "அவிபக்தமாக வாழும் குடும்பத்தில் சகோதரனொருவன் பிரிந்து போய்த் தனியாக வாழப் போகிறேன் என்றால்,

அவனுக்குரிய பங்கைப் பிரித்துக் கொடுத்துவிடுவதில் தவறில்லை. பிரிந்துபோனவன், தான் தனித்து வாழ்வதிலுள்ள கஷ்ட நஷ்டங்களை உணர்வானானால், திரும்பிவந்து சேர்ந்துகொள்ளுகிறான்'' என்று உதாரணங்கூறி ஜனாப் ஜின்னாவின் பாகிஸ்தான் கோரிக்கைக்கு ஆதரவு கூறிய இராஜாஜியின் தீர்க்க தரிசனப் படியும் திட்டப்படியுமே, குடியேற்ற நாட்டந்தஸ்தில் இந்திய மக்கள் கனவிலும் கருதாத பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்டது அனைவருக்கும் வியப்பைத் தந்தது. 'ஜனாப் ஜின்னா போகும் போக்கைப் பார்த்தால் எதிர்காலத்தில் இந்திய அரசியலில் இன்னவிதமான மாற்றந்தான் ஏற்படும்' என்று முன் கூட்டிக் கணித்தறிந்து கூறி வழி வகுத்துக்கொடுத்த இராஜாஜியின் ராஜதந்திரத்தை, அவர் பாகிஸ்தானுக்கு ஆதரவு காட்டிய சமயத்தில் தீவிரமாக எதிர்த்தவர்கள் கூடப் பலபடப் பாராட்டலாயினர்.

இடைக்கால இந்திய சர்க்காரில் மந்திரியாயிருந்த இராஜாஜி, குடியேற்ற நாட்டந்தஸ்தின்படி ஏற்பட்ட சுயராஜ்யத்தில் பிரதமர் பண்டித நேருவால் மேற்கு வங்காளத்துக்குக் கவர்னராய் நியமிக்கப்பட்டார். வகுப்புக் கலகத்தால் வங்காள முழுவதுமே அல்லோல கல்லோலப் பட்டுக்கொண்டிருந்த அச் சமயத்தில் கவர்னர் பதவி மட்டுமல்ல; அதற்கு மேற்பட்ட பதவி ஏதேனும் இருந்தாலும் அதை வகிக்க எப்பேர்ப்பட்டவர்களும் போகமாட்டார்கள்.

ஆனால், இராஜாஜி தமக்கு விதிக்கப்பட்ட கடமையைச் செய்யச் சிறிதும் தயங்கவில்லை. அதற்கேற்ப, ஆகஸ்டு மாதம் 14-ந் தேதி வரை ஒரே அமளியாயிருந்த மேற்கு வங்காளம், இராஜாஜி போய், கவர்னர் பதவியை ஏற்றதுமே அமைதியுற்றது மட்டுமல்லாமல், சுதந்திர தினத்தையும் மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. மகாத்மாவும் அங்கு அமைதி ஏற்படுவதற்காக மிகவும் பாடுபட்டார். கவர்னர் இராஜாஜி பிரதம மந்திரி டாக்டர் பி.சி. கோஷ் மற்றும் உள்ள மந்திரிகளின் துணையோடு நல்லாட்சி புரிந்துவந்தார். இந்துக்களேயன்றி முஸ்லீம்களும் மற்றும் உள்ள சிறுபான்மை சமூகத்தார்களும் இராஜாஜியின் பாரபட்சமற்ற ஆட்சியைப் பாராட்டி அவர்பால் பிரியமாய் இருந்துவந்தார்கள்.

இளவரசியின் திருமண விழாவுக்காக லண்டன் செல்லவேண்டிய சமயத்தில் கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட்பேட்டன் தமக்குப் பதிலாக இராஜாஜியையே தம் பதவியில் தற்காலிகமாக வைத்துவிட்டுப் போனார். இராஜாஜி ஆக்டிங் கவர்னர் ஜெனரலாக இருந்த இரு வார காலத்தில் அவருக்குள்ள அரசியல் நிர்வாகத் திறமை நன்கு புலனாயிற்று. எப்பேர்ப்பட்ட மிகப் பொறுப்புள்ள அரசியல் பதவியையும் இராஜாஜி திறம்பட வகிக்கத்தக்கவர் என்பதை இதற்குமுன் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியதுபோலவே, கவர்னர் ஜென

ரல் பதவியை வகித்த சமயத்திலும் மிக நன்ருக வெளிப்படுத்தினர். ஆக்டிங் பதவிக்காலம் முடிந்ததும் இராஜாஜி மீண்டும் மேற்கு வங்காளம் திரும்பிச் சென்று கவர்னர் பதவியை வகிக்கலானர். இந்தியா முழுவதிலுமுள்ள மக்கள் அனைவரும் இராஜாஜியே கவர்னர் ஜெனரலாக இருக்கவேண்டுமென விரும்பினர். அதற்கேற்ப, ஆங்கிலப் பத்திரிகைகள் சில இராஜாஜி நிரந்தரமாகக் கவர்னர் ஜெனரலாகக் கூடும் எனச் சூசகமாகத் தெரிவித்தன.

பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதியா யிருந்துவந்த லார்டு மவுண்ட்பேட்டன் விலகியதும், தேசத் தலைவர்கள் மகாத்மா காந்தியின் விருப்பத்தையும் நாட்டு மக்களின் விருப்பத்தையும் அநுசரித்து, இராஜாஜியை 1948-ஆம் ஹூ ஜூன் மாதம் 21-ந் தேதியன்று இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக்கினர். கிழக்கிந்தியக் கம்பெனியார் முதன் முதலாக நியமித்த வாரன் ஹேஸ்டிங்க்ஸிலிருந்து, ஜெனரல் வேவல் வரை இருந்து வந்த கவர்னர் ஜெனரல்கள் அனைவரும் பிரிட்டிஷ் மக்களின் நன்மைக்காக 38கோடி இந்திய மக்கள் மீது யதேச்சாதிகாரஞ் செலுத்தி இந்தியாவைச் சுரண்டி வந்தது உலகப் பிரசித்தம். இவ்விதம் உலகத்திலேயே சர்வாதிகாரத்துக்கும் சுகபோகத்துக்கும் நிலைக்களமா யிருந்தவந்த கவர்னர் ஜெனரல் பதவி, இராஜாஜி வந்ததும் சத்தியத்தையும் நீதியையும் கருணையையும் அடிப்படையாகக் கொண்ட ஜன

நாயக பதவியாய் மாறிவிட்டது. ஆயிரக்கணக்கான ஆள் மாகாணங்களுடன் அரண்மனையில் வாசஞ் செய்யும் உயர்நிலையும், முப்பத்தெட்டுகோடி மக்களின் முடிசூடா மன்னராகத் தலைமை வகிக்கும் பெருமையும் பெற்றிருந்தும் இராஜாஜி எப்போதும் போலவே எளிய வாழ்க்கையை நடத்தி வரலானர். இந்தியா பாரத தேசமென்று பெயர் பெறுவதற்குக் காரணமாயிருந்த பரத சக்கரவர்த்தியிலிருந்து மொகலாய சக்கரவர்த்திகள் வரை வீற்றிருந்து ஆட்சி செலுத்தி வந்த டில்லி சிம்மாசனத்தில் வீற்றிருந்தாலும் இராஜாஜி வெறும் அலங்காரப் பதுமையாயில்லாமல் பல இடங்களுக்கும் சென்று நாட்டு மக்களுடன் அளவளாவி அவர்களுக்கு அறிவுரை கூறிவந்தார்.

இவ்விதம் நம் தமிழ் நாட்டுப் பெரியார் ஒருவர் சுதந்திர இந்தியாவின் அரசியலைத் தலைமை தாங்கி நடத்தும் பேறு பெற்றிருந்தது தமிழ்மக்களாகிய நமக்கெல்லாம் பெருமையும் மகிழ்ச்சியும் தரலாயிற்று. இந்தியப் பாராளுமன்றத்தில் அரசியல் நிர்ணய சபை வகுத்துள்ள அரசியல் சட்டப்படி, அடுத்ததாகக் குடியரசுத் தலைவர் தேர்தல் நடைபெறலாயிற்று, அதில் இராஜாஜி அவர்களே ஏகமனதுடன் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று பெரும்பாலார் நம்பினர்.

எங்கிருந்தாலும் எந்த வேலையிலிருந்தாலும், தமிழ் நாட்டின் உயர்வுக்காகவும், தமிழ் மக்களின் நன்மைக்காகவும், தமிழ்மொழியின் ஆக்கத்துக்காக வும் இராஜாஜி பாடுபடத் தவறவில்லை.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே!'

என்று கருதியவர் இராஜாஜி; ஆதலால், வெளி மாகாணங்களில் கவர்னர் பதவி அல்ல; கவர்னர் ஜெனரல் பதவி வகிப்பதைவிட, தாம் பிறந்த தமிழ் நாட்டில் மந்திரியாயிருந்து நாட்டுக்கும் மக்களுக்கும் தம்மாலான சேவையையும் நன்மையையும் செய்வதையே பெரிதாகக் கருதினர். தமிழ் நாட்டில் இல்லை, பாரததேசத்தில் மட்டுமல்ல. உலக முழுவதிலுமே சிறந்த பேரறிஞர்களில் ஒருவராகவும் இருந்த இராஜாஜியின் பேரறிவும் ஆற்றலும் ஆட்சித் திறமையும் எல்லாம் நம் தமிழ் நாட்டுக்கே பயன்பட வேண்டும் என்றுதான் தமிழ் மக்கள் அனைவரும் பெரு விருப்பம் கொண்டிருந்தனர். அவர்கள் இராஜாஜியின் 10-12-47 முதல் மாதம் முடிய தமிழ் நாடு எங்கும் 70-ஆம் ஆண்டுவிழா வெகு சிறப்பாக வும் உற்சாகத்துடன் கொண்டாடிக் காட்டியதி லிருந்து இது நன்கு புலனாயிற்று.

இராஜாஜி பாரதம் போன்ற ஒரு மாபெருந் தேசத்தின் முடிசூடா மன்னராயிருந்தும் அரசாங் கத்திலேயே மிகப் பெரும்பதவியை வகித்துவந்தும், இராஜரிஷியான ஜனக மகாராஜாவைப் போலவே பற்றற்ற துறவியாக இருந்துவந்தார் எவ்விதப் பந்த பாசமும் பதவி மமதையும் இல்லாமல் அவர் தம் கடமையை ஆற்றி வந்தார். அவர் தம் அதிகார வரம்புக்குட்பட்டுக் காரியம் புரிந்து பிரதம மந்திரியை நல்ல முறையில் ஆட்சி செய்ய வைத்தார்.

சேலம் புதுப்பாளையம் காந்தி ஆசிரமத்தில் இருந்து மகாத்மாவின் தேசப் புனர் நிர்மாண வேலைத் திட்டத்தை (அதாவது தீண்டாமையொழிப்பு, கதர் அபிவிருத்தி, மதுவிலக்கு போன்றவற்றை) நிறை வேற்றி வந்தபோது எப்படி எளிய வாழ்க்கையை நடத்தி வந்தாரோ அப்படியே கவர்னர் ஜெனரலாய் பெரும் அரசாங்கத் தலைவர் பதவியை வகித்து வந்த காலத்திலும் சாதாரண மக்கள் போல வாழ்க்கை நடத்தி வந்தார். (1937-ம் ஆண்டில் மாகாண சுயாட்சி அமலுக்கு வந்தபோது வகித்த சென்னை மாகாணப் பிரதமர் பதவி, மத்தியில் தேசீய சர்க்கார் ஏற்பட்டபோது வகித்த மந்திரி பதவி, வங்காள மாகாண சர்க்காரில் வகித்த கவர்னர் பதவி, 1947-ம் ஆண்டில் பொறுப்பேற்ற கவர்னர் ஜெனரல் பதவி, மீண்டும் 1952-ம் ஆண்டில் வகித்த சென்னை முதல் மந்திரி பதவி ஆக எந்த அரச பதவி யில் இருந்தபோதும்)அவர் பதவித் தருக்கோ, படா டோபமோ, ஆடம்பர அட்டகாசமோ சிறிதும் இல் லாமல் அமைதியாகவும் அடக்கமாகவும் எளிமை யாகவுமே ஒரே நிலையில்தான் இருந்து வந்தார். அன் றாடம் தாம் தரித்த வேட்டி சட்டைகளைத் துவைப்பது முதல் தம் வேலைகள் அனைத்தையும் தாமே செய்து வந்தார்.

கவர்னர் ஜெனரலாயிருந்தகாலை இராஜாஜி உழவுத் தொழிலின் உயர்வை மக்களுக்கு அறிவிக்க ஒரு முறை அவர் தாமே ஏர்க்காலை நிலத்தில் ஊன்றி எருதுகளை ஓட்டி உழலானார்

இராஜாஜி கவர்னர் ஜெனரலா யிருக்கையில் என்ன மன நிலையில் இருந்தார் என்பதை உள்ளபடி படம் பிடித்துக் காட்டுவது போல் தெரிவிப்பதற்கு அவர் அச்சமயம் அருமை நண்பர் ரசிகமணி டி.கே.சி. க்கு எழுதிய கடிதமொன்றைத் தந்தால் போதும்.

புது தில்லியிலிருந்து அவர் 27-6-1948-ல் டி.கே.சி.க்கு இப்படி அன்பு மடலொன்று எழுதியிருக்கிறார். "கல்கி' அவ்விடம் வந்து கதையெல்லாம் சொல்லியிருப்பார் அல்லவா ? கூத்தாட்டத்துக்குள் ஒரு கூத்தாட்டம். திரைப்படத்திற்குள் ஒரு திரைப் படம் அதில் ஆடும் நிழற்படங்களைப் பார்த்து என் நண்பர்களும் அதைவிட, நினைவிலேயே இதுவரையில் மறைந்துவிட்டிருந்த உறவினர்களும் — அவர்கள் உறவினர்களும் ஏதோ தங்களுக்கே ஒரு சம்பத்து வந்துவிட்டதாகச் சந்தோஷம். கடிதங்கள் எழுதி வருகிறார்கள்.

என் மனோநிலையைக் 'கல்கி' சொல்லியிருப்பார். அவருடன் சரியாகப் பேசிச் சிரித்துச் சந்தோஷப் படவும் அவகாசம் இல்லை. எப்படியிருக்கும்? இவ்வளவு சிறந்த பதவியிருக்க, நண்பர்களுடன் பேசுவானேன் ! சிரிப்பானேன்! பதவியே போதுமே!

> "மெய்ப்பொருளை மதியாத மாந்தரொடு முயலவேனோ
> ஆரூதசினம் வாட்டும் அற்பர்கள் இடையிலே
> சுகமேதும் அறியாத அரியாசனத்தில் அலைவேனோ"

என்று இப்படிப் புதுதினுசு 'முத்தி நெறி'யை மனசில் பாடிக் கொண்டு ஆண்டவனை நினைத்துக் கொண்டு

காலங் கழிக்கிறேன். ஒன்றும் வெளிச்சம் காண வில்லை.

இதன் மத்தியில் அளவுக்கு மிஞ்சின வீடு ஒன்று. வீட்டில் நான் இல்லை. வீடு எனக்குள் இருக்கிறது. பெரிய உப்புசம் உண்டாக்கி வருகிறது.''

இக்கடிதத்திலிருந்தே இராஜாஜி கவர்னர் ஜெனரல் பதவியையும் அதன் ஆடம்பரச் சூழ்நிலை யையும் எவ்விதம் மதித்து வந்தார் என்று தெரிந்து கொள்ளலாம்.

அவர் அரச பதவிகளின்மீது ஆசையுடையவரா யிருந்தால் அரசியல் நிர்ணயசபை வகுத்துத்தந்த இந்திய அரசியல் சட்டத்தின்படி கவர்னர் ஜெனரல் பதவி ஒழிந்து, பாரதத்தின் ஜனாதிபதி பதவியேற் பட்டதும் பிரதமர் ஜவஹர்லால் நேரு, உள்துறை அமைச்சர் வல்லபபாய் பட்டேல் முதலியவர்கள் இராஜாஜியே இப் பதவியிலும் அமர வேண்டும் என்று கருத்து தெரிவித்து வற்புறுத்தியபோது உடனே தடை சொல்லாமல் ஏற்றுக்கொண்டிருந் திருப்பார். ஆனல், அவர் அவ்விதம் செய்யவில்லை. இப்பதவியை, காங்கிரசின் மூத்த தலைவர்களில் ஒருவரான இராஜேந்திர பிரசாத் விரும்புகிருர் என்று அறிந்ததும் அவர் நேரு, பட்டேல் முதலியவர் களிடம் அவர்கள் தம்மை விட்டுவிட்டு இராஜேந்திர பிரசாதை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்து ராஷ்டிரபதி பதவியில் அமர்த்துமாறு கேட்டுக்கொண்டார்.

பின் அவர் இந்திய ஜனாதிபதி பதவிப் பொறுப் பை இராஜேந்திரத் பிரசாதிடம் உவப்புடன் ஒப் படைத்துவிட்டுத் தமிழகத்துக்குத் திரும்பியது நாட்டு வரலாற்றில் பொன்னெழுத்துகளில் பொறிக்கப் பட்டுப் பசுமையாக மக்கள் உள்ளங்களில் இருக் கிறது.

இராஜாஜி கவர்னர் ஜெனரல் ஆவதற்குமுன், இந்திய சர்க்காரால் வங்காள மாநில கவர்னராகப் பொறுப்பேற்ருர். லார்டு கர்ஸான் என்ற பிரிட்டிஷ் வைஸ்ராயால் வங்காளப் பிரிவினை ஏற்படுத்தப்பட்ட காலத்திலிருந்து வங்காளத்தில் இந்து—முஸ்லிம் வகுப்புக் கலகம் அடிக்கடி நடப்பது இயற்கையாய் விட்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தில் தொழிற் கட்சி ஆட்சி வந்ததும் பாரதத்துக்கு ஆட்சி சுதந்திரம் வழங்க ஆவல் கொண்டிருக்கிறது என்ற நிலையில் இந்து-முஸ்லிம் கலகம் மேலோங்கி நின்றது. இவ் வகுப்புக் கலகம் முஸ்லிம்கள் மிகுதியாகவுள்ள பாஞ் சாலத்திலும் பரவியது.

சுயராஜ்யத்தில் இந்துக்கள் தங்களுக்கு நியாய மாக உரிமை வழங்கமாட்டார்கள். தங்களுக்குப் போதிய பாதுகாப்பு இராது என்று பிரித்தாளும் தந்திரத்தில் பேர்போன பிரிட்டிஷாரின் தூண்டுதல் படி முஸ்லிம்கள் கூறிக் கிளர்ச்சி செய்தனர். கலகம் உண்டாக்கினர். அவர்கள் சார்பில் முஸ்லிம் லீக் தலைவரான ஜனுப் முகம்மதலி ஜின்ஞ கவர்னர் ஜெனரலிடம் ‘ஆட்சி சுதந்திரம் வழங்குகையில் முஸ்லிம்களுக்கு இந்தியாவைப் பிரித்துக் கொடுக்க வேண்டு’மென்று வற்புறுத்தினர்.

பாரதத்தை எக்காரணங்கொண்டும் துண்டாடக் கூடாது என்று மகாத்மாகாந்தி அறிவுறுத்தினர். பட் டேல், நேரு போன்ற தலைவர்களும் அதே கொள்கை கொண்டிருந்தனர். ‘இந்து முஸ்லிம் ஏக்ஹோ’ என்று தேசத் தலைவர்கள் ஒற்றுமை முழக்கம் முழங் கினர். சுதந்திர பாரதம் ஒற்றுமையாயிருக்க வேண்டு மென்று காங்கிரஸ் தலைவர்களும் முஸ்லிம் லீக் தலைவர்களும் மனங்கலந்து உரையாடிய காலத்தில், முழு வங்கமும் முழு பஞ்சாபும் கொண்ட பாகிஸ்தானே எங்களுக்கு வேண்டும் என்று கூறி

ஜனுப் ஜின்ன நிபந்தனே மேல் நிபந்தனை விதித் தாரே யொழிய சமரசமான ஒரு முடிவுக்கு வர வில்லை. காந்தியடிகள் பிரிவினை வேண்டாம் என்ப தற்கு எவ்வளவு நியாயங்கள் எடுத்துச் சொல்லியும் ஜனுப் ஜின்ன முன் அது எடுபடவேயில்லை. அவர் நாட்டைப் பிரித்துக் கொண்டு போவதில் ஒரே பிடி வாதமாயிருந்தார்.

இந்நிலையைக் கண்ட இராஜாஜி பிரிட்டன் வழங்கவிருக்கும் ஆட்சி சுதந்திரத்தை நாம் பெற வேண்டுமானல், ஜனுப் ஜின்ன முஸ்லிம்கள் சார் பில் விடுக்கும் கோரிக்கையை ஒரு சிறிது விட்டுக் கொடுத்தேனும் ஏற்கத்தான் வேண்டும் என்று யோசனை கூறினர். ‘ஒரு அவிபக்த குடும்பத்தில் இளைய சகோதரன் பிதிரார்ஜித சொத்தில் தனக் குரிய பங்கைப் பெற்றுக் கொண்டு பிரிந்துபோய்விட வேண்டுமென்று விரும்பினல் — அவனுக்குத் தர வேண்டிய பாகத்தைத் தந்து தனியாகப் போக விடுவதுதான் நல்லது. அப்படிச் செய்யவில்லை யானல் மனக் கசப்பு வளர்ந்து சண்டை சச்சரவு தான் உண்டாகும்’ என்று சொல்லி, ‘ஜனுப் ஜின்ன வின் பாகிஸ்தான் பிரிவினைக்கு இணங்குவதைத் தவிர வேறு வழியில்லை. முஸ்லிம்கள் பெரும்பான் மையாகவுள்ள இடங்களை அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்து விடுவோம்’ என்றும் வற்புறுத்தினர்.

ஆனல், இராஜாஜியின் இந்த யோசனை முதலில் காங்கிரஸ் தலைவர்களுக்கும் நாட்டு மக்கள் பெரும் பாலாருக்கும் பிடிக்கவில்லை. அவர்கள் அவர் மீது ஆத்திரங் கொண்டனர். முஸ்லிம்கள் பெரும் பான்மையாகவுள்ள வங்கத்திலும் பஞ்சாபிலும் வகுப்புக்கலகம் வலுக்கத் தொடங்கி நிலைமை வர வர மோசமாகவே, இராஜாஜி யோசனை கூறியிருக் கிறபடி நடந்து கொள்வதுதான் சரி என்று தேசத் தலைவர்களுக்குத் தோன்றியது.

ஆகவே, காந்தி மகாத்மா, இராஜாஜியை ஜனுப் ஜின்ஞுவிடம் அனுப்பிச் சமரசம் பேச வைத்தார். காங்கிரஸ், முஸ்லிம் லீக் இடையே நடந்த சமரசப் பேச்சின்படி. வங்காளத்திலும் பஞ்சாபிலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்குப் பகுதிகளை அவர்களுக்குப் பிரித்துத் தந்து விடுவது என்று முடிவாயிற்று.

இப்படி இந்து-முஸ்லிம் வேற்றுமை வளராமல் இருக்க இவ்வகுப்புப் பிரச்னை முளைவிட்ட காலத்திலிருந்தே தீர்க்கமாகச் சிந்தித்துப் பரிகாரம் காண இராஜாஜி விசால மனப்பான்மையோடு முயன்று கொண்டிருந்ததால், இத்தகைய ஒரு மனிதரைத் தான் இந்து-முஸ்லிம் பிரிவினைக்குப் பிறப்பிடமான வங்காள மாநிலத்துக்குக் கவர்னராக அனுப்ப வேண்டுமென்று கவர்னர் ஜெனரல் மௌண்ட் பாட்டன் முடிவு செய்தார்.

இராஜாஜி அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரராகவே நடந்து கொண்டு, குழப்பம் மிகுந்த வங்கத்தை ஒருவித ஒழுங்குக்குக் கொண்டு வந்தார். அங்குள்ள இந்து முஸ்லிம்களிடையே ஒரு நேசப் பான்மையை ஏற்படுத்தினர்.

வங்காளிகள் வேற்று இனத்தார் யாரையும் தங்களுக்கு மேலாக ஒப்புக்கொள்ள மாட்டார்கள். தங்களைப் பிறர் நாட்டாண்மை புரிந்து அதிகாரஞ் செலுத்தச் சிறிதும் இடங்கொடுக்கமாட்டார்கள். அதிலும் இராஜாஜி, நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் காங்கிரஸ் தலைவராக இரண்டாவது முறையாக மகாத்மாவின் விருப்பத்துக்கு மாருக வந்து மற்ற காங்கிரஸ் தலைவர்களுடன் மாறுபாடு கொண்டிருந்த காலத்தில் அவருக்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தவர். சுபாஷ்பாபுவின் தலைமையை ஓட்டைப் படகு என வருணித்தவர். அதனல், அவர்

ஏற்கெனவே வங்காளிகளின் விரோதத்துக்கு ஆளாயிருந்தவர்.

அப்பேர்ப்பட்டவர் வங்கத்துக்குக் கவர்னராக வருகிறார் என்றால் அவர்கள் அவரை எளிதில் ஏற்றுக் கொள்வார்களா? ஆகவே, அவர் நியமனத்தை எதிர்த்தனர். முக்கியமாக, சுபாஷ் பாபுவின் அண்ணனான சரத்சந்திரபோஸ் எதிர்ப்பு அணியில் முதன்மையாக இருந்தார்.

ஆனால், இராஜாஜி வங்கக் கவர்னர் பதவியை ஏற்ற சிறிது காலத்துக்கெல்லாம் தம் இனிய சுபாவத்தாலும் இங்கிதப் பேச்சாலும் அன்பு உள்ளத்தாலும் சமரச மனப்பான்மையாலும் ஆளுமையாலும் வங்க மக்களின் அன்பைப் பெற்று விட்டார். பலதரப்பட்ட மக்களும் அவர்பால் மதிப்பும் நேசமும் கொள்ளலாயினர். இந்து முஸ்லிம் இரு பாலாருக்குமே அரசு நிர்வாகத்தில் அவர் சமநீதி வழங்கி எல்லா விஷயங்களிலும் சம வாய்ப்புத் தந்தார்

இராஜாஜி கவர்னர் ஜெனரல் பதவியை விட்டு வந்த சில காலத்துக்கெல்லாம் பண்டித நேருவினால் தில்லிக்கு அழைக்கப்பட்டார். அரசாங்க நிர்வாக விஷயத்தில் பிரதமர் நேருவுக்கும் உள்துறை மந்திரி வல்லபபாய் பட்டேலுக்கும் அடிக்கடி அபிப்பிராய பேதம் ஏற்படலாயிற்று. விரும்பத்தகாத இந்நிலையைத் தவிர்ப்பதற்காக நேரு இராஜாஜியின் உதவியை நாடினார். அவர் இராஜாஜிக்கு இலாகாப் பொறுப்பு ஏதுமில்லாத காபினெட் மந்திரி பதவியைத் தந்து தங்களுக்கு அவ்வச்சமயங்களில் அரிய ஆலோசனை கூறிக் கொண்டிருக்குமாறு செய்தார்.

அதன் பின் வல்லபபாய் பட்டேல் காலமானதும் இராஜாஜிக்கு அவர் வகித்து வந்த உள்துறை

மந்திரி பதவியைத் தந்து கௌரவப்படுத்தினர் பிரதமர் நேரு.

இராஜாஜி இவ்விதம் தில்லியில் இருந்த காலத்தில் தமிழகத்தில் பலவிதமான மாறுதல்கள் ஏற்பட்டன. செயற்கைச் சூழல்களுடன் இயற்கையின் நிலைமாற்றமும் சேர்ந்து தமிழ் மக்களை அல்லல் களுக்கு உள்ளாக்கின. தொடர்ந்து பருவமழை இல்லாததால் உணவுப் பொருள்களின் உற்பத்தி குறைந்து பஞ்சமும் பட்டினியும் ஏற்படலாயின.

இந்நிலையில், 1952-ம் ஆண்டில் இரண்டாவது பொதுத் தேர்தல் வந்தது. இத்தேர்தலில் எதிர்க் கட்சிகளெல்லாம் ஒன்று சேர்ந்து ஐக்கிய முன்னணி அமைத்து காங்கிரஸை எதிர்க்கலாயின. 1937-ம் ஆண்டிலிருந்து 1947-ம் ஆண்டுவரை எல்லா தேர்தல்களிலும் காங்கிரஸ் அபேட்சகர்களே பெரு வாரியாக வெற்றி பெற்று வந்தனர். ஆனால், இப் பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் பலவும் கூட்டாக சேர்ந்து எதிர்த்ததால், காங்கிரஸ் கட்சிக்குப் பெருந் தோல்வியேற்பட்டது. பிரபல தலைவர்பலர் திரும்பவும் சட்டசபைக்கு வர முடியவில்லை.

கூட்டணியில் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்ற முக்கிய தலைவர்களும் இருந்தனர். ஆகவே, பொதுத் தேர்தல் முடிவுக்குப் பின் பெரும்பான்மையாக வந்துள்ள ஐக்கிய முன்னணியினரே நியாயமாக மந்திரிசபை அமைத்து ஆட்சி பீடத்தில் அமருந் தகுதியைப் பெற்றிருந்தனர். ஆனால், அவர்களுக்குள் எந்தக் கட்சித் தலைவர் முதலமைச்சராக வருவது என்பதில் அபிப்பிராயபேதமும் போட்டியும் ஏற் பட்டது.

இந் நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயன்றார் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக அச்சமயம் இருந்த காமராஜ்

அவர் காங்கிரஸ் கமிட்டிப் பிரமுகர்கள் சிலருடன் இராஜாஜியிடம் சென்று, பொதுத் தேர்தல் முடிவினால் காங்கிரஸுக்கும் தமிழ் நாட்டுக்கும் ஏற்பட்டிருக்கிற நெருக்கடியைப் போக்குவதற்கு வழி காண வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

எப்போதும் யாரும் தம்மிடம் ஒப்படைக்கும் பொறுப்பைத் தட்டிக் கழிக்காத பெருந்தன்மை வாய்ந்த இராஜாஜி சமயோசித புத்தியை உபயோகித்து, இச்சோதனையைச் சமாளிக்க முற்பட்டார்.

தமக்கு இயற்கையாகவுள்ள சாணக்கிய தந்திரத்தைக் கையாண்டு இராஜாஜி ஐக்கிய முன்னணியில் சேர்ந்திருந்த காமன் வீல் பார்ட்டி தலைவர் மாணிக்கவேலு நாயக்கருடனும், டாய்லர்ஸ் பார்ட்டி (உழைப்பாளர்கட்சி) தலைவர் இராமசாமி படையாச்சியுடனும் சமரச ஒப்பந்தமொன்று செய்து கொண்டு அவ்விரு கட்சிகளின் உறுப்பினர்களின் முழு ஆதரவைப் பெற்று மந்திரி சபையை அமைத்தார்.

இரண்டாவது முறையாக சென்னை மாகாணத்துக்கு முதன் மந்திரியாகப் பொறுப்பேற்ற இராஜாஜி தாம் அமைத்த மந்திரி சபையில் மாணிக்கவேலு நாயக்கருக்கும் இராமசாமிப் படையாச்சிக்கும் மந்திரி பதவியைத் தந்தார். ஒரே கல்லெறியில் பல மாம் பழங்களை விழச் செய்வதுபோல், ஜோதி வேங்கடாசலம் என்ற பழங்குடிப் பெண்மணியை அமைச்சராக்கி ஹரிஜனங்களுக்கும் பெண்ணினத்துக்கும் பிரதிநிதித்துவம் ஏற்படச் செய்தார்.

இராஜாஜி முதன் மந்திரியானதும் முதல் வேலையாக ரேஷன் முறையை ரத்து செய்ததோடு நியாய விலைக் கடைகளை நிரம்பத் திறந்து அரிசி, சர்க்கரை முதலிய பொருள்கள் தட்டில்லாமல் கிடைக்கச்

செய்து மக்களின் உணவுப் பிரச்னையைத் தீர்த்தார். கள்ளச் சந்தையையும் பதுக்கலையும் ஒழித்தார்.

அடுத்து, மதுவிலக்கு, தீண்டாமையொழிப்பு ஆகியவற்றுக்குச் சட்டஞ் செய்தார். கதர் அபி விருத்தி, கைத்தறிகளுக்கு உதவி புரிந்தார் விவ சாயக் கடன் ஒழிப்புச் சட்டம், பண்ணையாள் சட் டம் முதலியவற்றைப் பிறப்பித்தார்.

(இராஜாஜி முதன் மந்திரியாயிருந்த சமயத்தில் தான் ஆந்திரர்கள் 'விசால ஆந்திரா' என்ற இயக்கத் தைத் தொடங்கி மொழிவழி மாகாணங்களைப் பிரிப் பது என்ற கொள்கைப் படி தங்களுக்குத் தனி ராஜ்யம் தரவேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். அப்படி ஏற்படும் ஆந்திர ராஜ்யத்துக்குச் சென்னை தலைநகரமாயிருக்க வேண்டுமென்று வலியுறுத்தினர். 'மதராஸ் மனதே' என்ற கோஷத்தையும் எழுப் பினர்.)

(இராஜாஜி ஆந்திரகேசரி பிரகாசம் தலைமையில் நடந்த இக்கிளர்ச்சியைச் சாதுரியமாகச் சமாளித்து, திருப்பதியை மட்டும் அவர்களுக்கு விட்டுக் கொடுத்து சென்னை நகர் தமிழர்களை விட்டுப் போகாதவாறு பார்த்துக் கொண்டார்.

சிறந்த இலட்சியங்களைக் கொண்டிருந்தும் தங்கள் கட்சியைப் பலப்படுத்திக் கொண்டு தாங்கள் நினைக்குங் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்கு பலாத்கார முறைகளைக் கையாண்டு அராஜகச் செயல் புரிந்துவந்த கம்யூனிஸ்டுகளின் கொட் டத்தையடக்க இராஜாஜி கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டார். கம்யூனிஸ்டுகள் என் முதல் நம்பர் எதிரி என்றும் அவர் பகிரங்கமாகத் தெரிவித்துக் கொண்டார்.

ஒரு முறை சம்பள உயர்வு கோரிப் போலீஸார் கூட வேலை நிறுத்தஞ் செய்யப் போவதாகப் பய

முறுத்தினர். தங்கள் சம்பளத்தை வாங்க அவர்கள் மறுத்தனர்.

இராஜாஜி இது கண்டு அஞ்சவில்லை. போலீ ஸார் தங்களுக்கென ஒரு சங்கம் வைத்திருந்தனர். அதன் மூலமாகவே தங்கள் உரிமைகளைக் கேட்ட னர். இராஜாஜி முதலில் அச்சங்கத் தலைவர்களைச் சிறைப்படுத்திப் பின் போலீஸாரை வழிக்குக் கொண்டு வந்தார்.

இப்படி இராஜாஜி அரசாங்க நிர்வாக விஷயங் களில் காட்டிய திறமை அவரைத் தலைசிறந்த ஆட்சித் தலைவர் என்று நாடு முழுதுமே வியந்து போற்ற வைத்தது.

(இராஜாஜி கல்வி முறையில் சில மாறுதல்கள் களைச் செய்தார். உயர்நிலைப் பள்ளிப் படிப்பில் தொழிற்கல்வியும் மாணவர்களுக்குப் போதிக்க அரு மையான திட்டமொன்றை அவர் வகுத்துத் தந்தார். அவருடைய உயர் நோக்கத்தைப் புரிந்துகொள் ளாது திராவிட கழகம் போன்ற சில எதிர்க்கட்சிகள் இத்திட்டத்தைக் 'குலக் கல்வித் திட்டம்' என்று பழித்து எதிர்த்தன. துரதிர்ஷ்டவசமாக, இக்கிளர்ச்சி யில் காங்கிரஸ்காரர் சிலரும் கலந்து கொண்டனர். ஆகவே, இராஜாஜி இந்த அபிப்பிராய பேதத்தை வளர விடாமல் செய்யத் தாம் வகித்துவந்த முதன் மந்திரி பதவியை ராஜிநாமா செய்து வெளியேறினர், அச்சமயத்தில் அதிக வேலை காரணமாக அவருக்கு உடல் நலங் கெட்டிருந்தது.

பாரதத்துக்கு ஆட்சி சுதந்திரங் கிடைத்ததுமே மகாத்மா காந்தி காங்கிரஸ் மகாசபையைக் கலைத்து விடுமாறு வற்புறுத்தினர். 'சுயராஜ்யம் வாங்கிக் கொடுத்ததும் அந்த ஸ்தாபனத்தின் வேலை தீர்ந்து விட்டது' என்று தெளிவுபடுத்தினர்.

ஆனால், பண்டித ஜவஹர்லால் நேரு, வல்லப பாய் பட்டேல் உட்படக் காங்கிரஸ் தலைவர்கள் நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கித்தரம் போராட்டம் நடத்திய காங்கிரஸின் பெயரையும் செல்வாக்கையும் தாங்கள் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கும் ஆட்சி பீடத்தில் அமர்ந்து நிலைத்திருப்பதற்கும் பயன் படுத்திக்கொள்ள விரும்பியதால், இவ்விஷயத்தில் மகாத்மாவின் சொல்லை அவர்கள் மதிக்கவில்லை. அவர் பாகிஸ்தானுக்கும் விட்டுக் கொடுத்துச் சகஜ மாகப் போக வேண்டுமென்று கூறிய அறிவுரையை யும் ஏற்றுக் கொள்ளவில்லை.

பாகிஸ்தானிடம் மகாத்மா பரிவு மிகக் காட்டிப் பேசியும் எழுதியும் வருவது இந்து மதவெறியர்கள் சிலருக்குப் பிடிக்கவில்லை. காங்கிரஸ்காரர்களில் சிலரே அவர் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாத போது பிறரைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

இதனால் ஏற்பட்ட தப்பபிப்பிராயந்தான், பாரதத்துக்கு சுயராஜ்யம் கிடைத்த ஆறே மாதத் தில் மகாத்மா காந்தியின் மகத்தான உயிரைப் பலி வாங்கியது. நாதுராம் கோட்ஷே என்ற பாதகன் அவரைச் சுட்டுக் கொன்று விட்டான்.

'தட்டிக் கேட்க ஆள் இல்லாதபோது தம்பி சண்டப் பிரசண்டன்' என்பார்களே! அதுபோல தங்களை வழி நடத்திச் சென்ற தேசத் தந்தை காந்தி மகாத்மா மறைந்து சில காலமானதுமே மத்தி யிலும் மாநிலங்களிலும் ஆட்சி பீடத்தில் அமர்ந் திருந்த காங்கிரஸ் தலைவர்கள் அதிகார மமதை கொண்டு தங்கள் மனம் போனபோக்கில் காரியங் களைப் புரிந்து வரலாயினர். பெரும்பான்மை பலம் தங்களுக்கு இருக்கிறது என்ற தருக்கினால், எதிர்க் கட்சியினர் மட்டுமல்ல, தங்களைச் சேர்ந்தவர்களே நல்லதைச் சொன்னாலும் செவி கொடுத்துக் கேளா

மல் மனம் போனபோக்கில் யதேச்சாதிகாரமாக நடக்கலாயினர்.

தங்கள் ஆட்சியை அவர்கள் பர்மிட், கோட்டா, லைசென்ஸ் ராஜ்யமாக்கி விட்டனர். அமெரிக்கா முதலிய வெளிநாடுகளிடமிருந்து அடிக்கடி கடன் வாங்கி டாம்பீகமாக நடந்து ஆடம்பரச் செலவு செய்யலாயினர்.

அமெரிக்காவிடம் பலவகையில் உதவி பல பெற்றுக் கொண்டே, அதற்கு நேர் எதிரியான சோவியத் ருஷ்யாவுடன் நெருங்கிய உறவு வைத்துக்கொள்ளலாயிற்று நேரு அரசாங்கம்.

இந்தவிதமான விபரீதப் போக்கெல்லாம் இராஜாஜிக்கு வரவரச் சிறிதும் பிடிக்கவில்லை. சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் அவர் அந்தரங்கமாகவும் வெளிப்படையாகவும் காங்கிரஸ் சர்க்காருக்கு அறிவுரை தந்து வந்தார்; எச்சரிக்கையும் செய்தார்.

பிரதமர் நேருவோ மற்றவர்களோ இராஜாஜியின் புத்திமதியை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆகவே, இராஜாஜி இம்முறை காங்கிரஸை விட்டு அறவே வெளியேறுவது என்ற முடிவுக்கு வந்தார். 1960-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் அவர் அகில இந்திய முறையில் சுதந்திராக் கட்சி என்ற ஒரு புதுக் கட்சியைத் தொடங்கி விட்டார்.

தம் கருத்துகளையும் கொள்கைகளையும் நாட்டு மக்களுக்கு விளக்கிச் சொல்வதற்கு "சுயராஜ்யா" என்ற பெயரால் ஆங்கிலப் பத்திரிக்கையொன்றையும் ஆரம்பித்து நடத்தினர். அதில் அவர் "Dear Reader" என்ற தலைப்பில் வாரந்தோறும் இந்திய அரசியல் போக்கு குறித்தும் அரசாங்க நிர்வாக விஷயங்கள் குறித்தும் அவ்வப்போது ஏற்படும் மக்கள் பிரச்னைகள் குறித்தும் நாட்டுமக்களுக்குத் தெளிவாகத் தெரிவித்து வந்தார்.

இராஜாஜி தொடங்கிய சுதந்திராக் கட்சிக்குத் தேசமெங்கணும் பரவலாக ஆதரவு கிடைக்கலாயிற்று. பல மாநிலங்களிலும் சுதந்திராக் கட்சிக்குக் கிளை ஸ்தாபனங்கள் ஏற்படலாயின.

காங்கிரஸ் ஆட்சியாளர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்குப் பர்மிட், கோட்டா, லைசென்ஸ் முதலிய சலுகைகளை வழங்கி லஞ்ச லாவண்யங்களைப் பெருக்கி ஊழல் புரிந்து வருவதை இராஜாஜி தம் கட்சிப் பிரசாரம் மூலம் கடுமையாகக் கண்டித்து வரலானார். பதவிகளில் அமர்ந்திருந்த காங்கிரஸ்காரர்கள் இராஜாஜி சுட்டிக் காட்டிய குறைபாடுகளைத் திருத்திக்கொள்ள முற்படவில்லை. பார்லிமெண்டிலும் ராஜ்யசட்டசபைகள் பலவற்றிலும் தங்களுக்கு இருக்கும் பெரும்பான்மை பலத்தையே பெரிதாக நினைத்து அவர்கள் தங்கள் போக்கிலேயே போய்க் கொண்டிருந்தனர்.

மத்தியிலும் மாநிலங்களிலும் காங்கிரஸ்காரர்களுக்கு இருக்கும் மிருகபலத்தை அடக்கி ஒடுக்கினால்தான் இவர்கள் வழிக்கு வருவார்கள் என்று உணர்ந்த இராஜாஜி 1962-ம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் பார்லிமெண்டுக்கும் சட்டசபைகளுக்கும் தம் கட்சி சார்பில் வாய்ப்பு இருக்கும் இடங்களில் அபேட்சகர்களைக் காங்கிரஸ்காரர்களுக்குப் போட்டியாக நிறுத்தினர்.

காங்கிரஸ் கட்சியும் மற்றும் சில கட்சிகளும் இராஜாஜி ஏற்படுத்தியுள்ள சுதந்திராக் கட்சி பணக்காரர் கட்சி, மேல்மட்டத்திலுள்ளவர்களின் நலனைப் பாதுகாப்பதற்காகவே வந்துள்ள கட்சி என்றெல்லாம் குறை கூறி அவருடைய கடுமையான எதிர்ப்பைச் சமாளிக்க முயன்றனர். பொதுமக்களும் இராஜாஜியின் அடிப்படை நோக்கத்தைப் புரிந்து கொள்ளாததால் காங்கிரஸ்காரர்கள் பணக்காரர்கள்

சொல்வதைப் போலவே அவரும் அவரது கட்சியும் பணக்காரர்களுக்குப் பாதுகாவலர்கள் தான் என நம்பினர். அதனால் இராஜாஜியின் 1962-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் சுதந்திரா கட்சி முதன்முதலாக நின்ற எதிர் பார்த்த அளவு வெற்றி பெறவில்லை. பார்லிமெண்டின் இரு சபைகளிலும் மாநிலச் சட்ட சபைகளிலும் எம். பிக்களாகவும் எம். எல். ஏ. க்களா கவும் சுதந்திராக் கட்சியுறுப்பினர்கள் ஒரு சிலரே இடம் பெற்றனர்.

ஆனாலும், இராஜாஜி தேர்ந்தெடுத்து அனுப்பிய சுதந்திரா கட்சியுறுப்பினர்கள் விஷய ஞானம் வாய்ந்தவர்களாயிருந்ததால் எண்ணிக்கையில் மிகச் சிலராயிருந்தாலும் அவர்களுடைய எதிர்ப்பைச் சமாளிக்கக் காங்கிரஸ் சர்க்கார் பெரும்பாடுபட வேண்டியதாயிருந்தது.

அத்துடன், இராஜாஜி நேரு சர்க்கார் அதிகார போதையில் புரிந்துவந்த தவறுகளை அவ்வப் போது சுட்டிக்காட்டிப் பேச்சு மூலமாகவும் எழுத்து மூலமாகவும் தெரிவித்த கண்டனமும் எதிர்ப்பும் காங் கிரஸ்காரர்களைத் திணற வைத்தன ஆயினும் அவர் கள் பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொண்டு தங்கள் ஆட்சியை ஒருவாறு நடத்தி வந்தனர்.

1962-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஏற்பட்ட அனுபவம் இராஜாஜிக்கு ஓர் உண்மையைப் புலப் படுத்தியது. தேர்தலில் பல கட்சிகள் தனித்தனியாக நின்று போட்டியிடுவதால் வாக்குகள் சிதறிப் போகிறது. அதனால் காங்கிரஸ் மற்றக்கட்சிகளைவிட எப்படியோ அதிக வாக்குகளைப் பெற்று ஆட்சியைப் பிடித்து விடுகிறது. காங்கிரஸுக்கு எதிரான கட்சி களெல்லாம் ஒன்று சேர்ந்து கூட்டணியாக நின்று அதை எதிர்த்தால் நிச்சயம் அதைத் தோற்கடித்து விடலாம் என்ற முடிவுக்கு அவர் வந்தார்.

1952-ம் ஆண்டினுடைய பொதுத் தேர்தலில் சென்னை மாகாணத்தில் எதிர்க்கட்சிகளெல்லாம் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் ஒன்று சேர்ந்து செல்வாக்கின் உச்சகட்டத்திலிருந்த காங்கிரஸை எதிர்த்துப் படுதோல்வியுறச் செய்த சம்பவம் இராஜாஜியின் நினைவில் இருந்திருக்க வேண்டும்.

ஆகவே, இராஜாஜி 1967-ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் தம் சுதந்திராக் கட்சியுடன் காங்கிரஸல்லாத கட்சிகளைக் கூட்டு சேர வைத்துக் காங்கிரஸுக்கு எதிராகப் போட்டியிட்டார். இதில் அவர் எடுத்துக்கொண்ட துணிகர முயற்சி என்ன வென்றால், காலமெல்லாம் இவரைத் தாக்கிப் பேசி வகுப்புவாத அடிப்படையில் துவேஷத்தைப் பரப்பிக் கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினரை யும் தம் கட்சியுடன் கூட்டுச் சேர்த்துக் கொண்டது தான்.

இவ்வகையில் அவர் தம் எதிரிக்கு எதிரி தமக்கு நண்பன் என்ற கொள்கையைக் கடைப் பிடித்தார் என்றே சொல்லவேண்டும். தமிழ்நாடு காங்கிரஸில் நிர்மாண வேலைத் திட்டங்களை நிறைவேற்றும் விஷயத்தில் ஏற்பட்டு வந்த கருத்து வேற்றுமை காரணமாக, இராஜாஜி குழுவினருக்கும் காமராஜ் குழுவினருக்கும் சிறிது காலமாக ஒருவித மோதல் இருந்து கொண்டிருந்தது.

(காங்கிரஸ் விவகாரங்களில் காமராஜரின் நோக்கும் போக்கும் கடைப்பிடிக்கும், கொள்கையும் இராஜாஜிக்குப் பிடிக்கவில்லை. காமராஜ் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக நீண்ட காலமிருந்து செய்து வந்த செயல்களிலும் முதலமைச்சராக வந்து நடத்திய ஆட்சியிலும் இராஜாஜி குறைபாடு கண் டார். இந்நிலையில், காமராஜ் அகில இந்திய காங் கிரஸ் தலைவராகவும் வந்துவிட்டது அவர் மனத்தை உறுத்தியது.

தமிழகத்தைப் பொறுத்தவரை காமராஜ் குழுவினரின் செல்வாக்கைக் குறைக்க வேண்டுமானால், பாமர மக்கள் பெரும்பாலாரின் பேராதரவைப் பெற்று அரசியலில் வளர்ந்து வரும் தி. மு. க.வினரின் கூட்டுறவு மிகவும் அவசியம் என்ற முடிவுக்கு இராஜாஜி வந்தார். ஆனால், சுதந்திரா கட்சியிலுள்ள முக்கியமானவர்கள் பலர் இக்கூட்டுறவை விரும்பவில்லை. இராஜாஜி தம் கட்சியினர் பலருடைய அபிப்பிராயத்தையும் பொருட்படுத்தாது தி. மு. க. தலைவர் பேரறிஞர் அண்ணாதுரையுடன் நேசம் வைத்துக் கொண்டார்.

தி.மு.க.வினர் காங்கிரஸையும் காமராஜரையும் எதிர்த்து வந்தவர்கள் என்பது உலகப் பிரசித்தம். காமராஜை மட்டந் தட்ட வேண்டுமென்றால் பொது மக்களின் ஆதரவைப் பரவலாகப் பெற்றுள்ள தி.மு.க வின் துணை தேவை என்று உணர்ந்து இராஜாஜி கம்யூனிஸ்டு கட்சி தவிர, மற்றெல்லாக் கட்சிகளையும் தம் கட்சியுடன் சேர்த்துக் கூட்டணி அமைத்து 1967 - ம் ஆண்டைய பொதுத் தேர்தலில் தீவிரமாக வேலை செய்தார்.

இராஜாஜியின் தீர்க்க தரிசனமும் நம்பிக்கையும் வீண்போகவில்லை. தேர்தல் முடிவு கூட்டணிக்குப் பெருவெற்றி என்பதை நிரூபித்தது. காங்கிரஸ் அமைச்சர்கள் பலரும் பிரமுகர்களுங்கூட இத் தேர்தலில் தோல்வியைத் தழுவினர்.

இராஜாஜி தம் எண்ணம் நிறைவேறுவதற்கு உறுதுணையாயிருந்த தி. மு. க. வினரை அரியணையில் ஏற்றி வைத்தார். ஆம்; அரசியல் அனுபவம் போதிய படியில்லாத தி. மு. க வினரை அதன் தலைவரான அண்ணாதுரை தலைமையில் மந்திரிசபையமைக்க வைத்து ஆட்சி நடத்துமாறு ஆசி கூறினார். 1967-ம்

ஆண்டிலிருந்து தமிழகத்தில் தி மு. க. ஆட்சி ஏற்பட்டதற்குச் சாணக்கியர் இராஜாஜிதான் மூல காரணம் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் மறந்தாலும் நாடு மறக்காது; சரித்திரம் மறக்காது.

பேரறிஞர் அண்ணா தமிழக முதல்வராயிருந்த வரை இராஜாஜியிடம் நன்றி விசுவாசத்துடன் நடந்து கொண்டார். கலைஞர் கருணாநிதியும் இராஜாஜியை மதித்து நடக்கலானார். ஆயினும் மது விலக்கு போன்ற காரியங்களில் அவருடைய அரிய ஆலோசனையைக் கேட்டு இவரால் நடக்க முடியவில்லை.

கலைஞர் ஒரு கட்டத்தில் மதுவிலக்கை ரத்து செய்தபோது இராஜாஜி அவரை நேரில் சந்தித்து 'இம்மாற்றம் மக்களுக்குப் பெருந்தீங்கை விளைவிக்கும் ஆதலால், மதுவிலக்கை மீண்டும் அமல்படுத்துக' என்று கேட்டுக் கொண்டார் இது செவிடன் காதில் விழுந்த சங்கொலி போலாயிற்று.

தமிழ் நாடு காங்கிரஸ் குழு மீதிருந்த கோபத்தால் தி.மு.க. வை ஆதரித்து ஆட்சியில் அமர்த்தித் தாம் வாழ்க்கையிலேயே பெரிய தவறு செய்து விட்டோம் என்று இராஜாஜி வருந்துகிற அளவுக்கு தி மு. க. அரசும் கட்சியும் அவரை மதியாமல் நடந்து கொண்டன.

ஆகவேதான், இராஜாஜி 1971-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தி. மு. க.வுடன் தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை. அவர் ஸ்தாபன காங்கிரஸுடனும், ஜனசங்கம் போன்ற வேறு சில கட்சிகளுடனும் மட்டும் தம் சுதந்திரா கட்சியைக் கூட்டுச் சேர்ந்துகொள்ள வைத்தார்.

1967-ம் ஆண்டில் தமிழகத்தில் தி. மு. க. வால் காங்கிரஸ் ஆட்சி வீழ்த்தப்பட்டாலும்,

காமராஜரின் செல்வாக்கு சிறிதுங் குறையவில்லை. நாட்டுமக்களும் காங்கிரஸ்காரர்களும் அவர்பால் பெருநம்பிக்கை வைத்திருக்கின்றனர். அ. இ. காங்கிரஸிலும் அவருக்கு அபார மதிப்பு இருக்கிறது என்பதை இராஜாஜி இத்தருணத்தில் உணர்ந்தார்.

சதா தேசம், தேசம், மக்கள் நலம் என்று சிந்தித்தே செயல்பட்டுக்கொண்டிருப்பவர் காமராஜ் அவர் ஏதேனும் தவறு புரிந்திருந்தாலும் அவர் தேச நலம், காங்கிரஸ் நலங் கருதியே செய்திருப்பார்; தன்னலமற்ற தியாகியான அவர், நேர்மையாளராகவும் இருக்கிறார்; நியாய வழியிலேயே நடந்து வருகிறார் என்பதை இராஜாஜி முன்னைவிட நெருங்கிப் பழகி வந்ததால் அறிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆகவே, அவர் காமராஜ்மீது பெருமதிப்புக் கொண்டார். முழு நம்பிக்கை வைத்து அவர் சகல காரியங்களையும் காமராஜிடம் ஒப்படைத்தார் தம் சுதந்திரா கட்சியினரைக் காமராஜ் சொற்படி கேட்டு நடக்கும்படி அறிவுரை கூறினர்.

கடைசி காலத்தில் இவ்விரு பெருந் தலைவர்களும் ஒருவர் மீது மற்றொருவர் மாசற்ற அன்பும் மதிப்பும் கொண்டு மனங்கலந்து உறவாடினர். இவர்களுடைய நெருக்கமான நேசத்தையும் கருத்து ஒற்றுமையையும் கண்டு அறிஞர்கள் பலர் வியப்புற்றனர். கட்சி வெறியில்லாத நாட்டு மக்கள் அனைவரும் பெரு மகிழ்ச்சியடைந்தனர்.

இவ்விரு பெருந்தலைவர்களும் இணைந்து செயல்பட்ட 1971-ம் வருஷப் பொதுத் தேர்தலில் கூட்டணி மட்டும் பெரும் வெற்றி பெற்றிருக்குமானல் பொதுவாக இந்திய அரசியலிலும் சிறப்பாகத் தமிழக அரசியலிலும் நல்லதொரு மாற்றம் ஏற்பட்டிருக்கும். நல்லாட்சி நிலைத்துச் சிறப்பாகச் சாதனைகள் பல

புரிந்திருக்கும். நாடு செழிப்புற்றிருக்கும்; நாட்டு மக்களுக்கு நலம் பல விளைந்திருக்கும்.

சர்வாதிகார மனப்பான்மையை வளர்த்துக் கொண்டிருந்த இந்திரா காந்தி சூழ்ச்சிசெய்து 1972-ம் ஆண்டில் நடக்க வேண்டிய நாடாளு மன்றத் தேர்தலை ஓராண்டுக்கு முன்பே நடத்த முனைந்தார். நாட்டுமக்களை அணுகித் தங்கள் கொள்கைகளையும் வேலைத் திட்டங்களையும் விவரித்து வாக்குகளைச் சேகரிப்பதற்கான அவகாசத்தைப் போதியபடி எதிர்க்கட்சிகள் பெறக்கூடாதவாறு அவர் திடீரெனப் பொதுத் தேர்தல் நடப்பதை அறிவித்து விட்டார். அந்தந்த மாநிலத்தில் செல்வாக்கு பெற்றிருந்த கட்சிகளையெல்லாம் தமக்குத் துணை சேர்த்துக் கொண்டார். அவ்வகையில் தமிழகத்தில் அரசுபீடத்திலிருந்த தி.மு.க.வுடன் பிரதமராயிருந்த இந்திரா நேச உறவு வைத்துக் கொண்டார்.

காலதேசவர்த்தமானமறிந்து சாதுரியமாக நடந்துகொள்வதில் சதுரரான கலைஞர் கருணாநிதி இச்சந்தர்ப்பத்தைத் தமக்கும் தம் கட்சிக்கும் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு நாடாளுமன்றத் தேர்தலுடன் சட்டமன்றத் தேர்தலையும் சேர்த்து நடத்தி விட முனைந்து விட்டார்.

சூழ்ச்சி அரசியலை நடத்துவதில் ஒருவரை யொருவர் மிஞ்சி நிற்கும் இந்திராகாந்தியும் கருணாநிதியும் சேர்ந்து நடத்திய சட்ட விதிமுறைக்கு மாறான இச் சந்தர்ப்பவாதத் தேர்தலில் பண பலமும் ஆள் பலமும் அவர்களுக்குப் பெரும்பான்மை பலத்தை ஏற்படுத்தித் தந்தது.

அமைதி மிக்க நம் தேசத்தில் இதற்கு முன் இல்லாத அராஜகமும் அவசர சட்டத் தடியடி தர்பாரும் ஒன்றரை வருஷ காலம் நடக்கவேண்டிய

துர்ப்பாக்கியம் இருக்கிறதே! அதை எப்படித் தவிர்க்க முடியும்?

தங்கள் வாழ்நாளில் இவ்வித அவலநிலையை யெல்லாம் காண வேண்டியிருக்கிறதே! என்று இராஜாஜியும் காமராஜரும் மிக மிக வருந்தினர் இந்த அசம்பாவிதங்களே அப்புனிதத் தலைவர்களின் ஆயுட்காலத்தைக் குறுகச் செய்து விட்டதோ!

பொதுத் தேர்தல்கள் வருவதற்கு முன்னும் தேர்தல்களின் போதும் இராஜாஜி காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு எதிராகத் துவஜங் கட்டிக் கடுமையாக எதிர்த்து வருவதற்கான காரணங்களை மிகவும் தெளிவாகத் தெரிவித்து வந்தார்.

"பிரதமர் ஜவஹர்லால், சர்வதேசப் புகழில் மயங்கித் தம்மை மறந்து செயல்பட்டு வருகிறார்; அன்னிய ஆட்சியிடம் காணப்பட்ட யதேச்சாதிகாரப் போக்கிலேயே நேரு சர்க்காரும் செல்கிறது. தம் கட்சி எம். பி., எம். எல். ஏ. க்களை அரசாங்க நிர்வாகத்தில் தலையிட வைத்துப், பர்மிட், கோட்டா, லைசென்ஸ் போன்றவற்றில் அதிகாரிகளைப் மருட்டி உருட்டிச் சலுகைகளைப் பெற வைத்தும் நேரு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஐந்தாண்டுத் திட்டங்கள் என்று சொல்லி, ஒரு பக்கம் காண்டிராக்ட் ராஜ்யத்தை ஏற்படுத்தி, இன்னொரு பக்கம் ஆடம்பரச் செலவு செய்து அந்நிய நாடுகளிடம் அதிகக் கடன்களை வாங்கிக் கொண்டேயிருக்கிறார். இப்படித் தேசீய சக்தியை மீறி அந்நிய நாட்டுக் கடன் பளுவை அதிகப்படுத்திக் கொண்டே போவது ஆபத்து. பெரிய பெரியதிட்டங்கள் போட்டு விட்டு அவற்றை நிறைவேற்ற முடியாமல் திண்டாடுவதைவிட, முக்கியமான திட்டங்களை மட்டும் சிறிது சிறிதாக வகுத்து தேசப் புனர் நிர்மாணஞ் செய்வது நல்லது. நாட்டு நன்மையை மனத்தில் கொண்டு

வெளிநாட்டுக் கொள்கைகளில் மாறுதல் செய்ய வேண்டும். பணத்துக்கும் உணவுப் பொருள் களுக்கும் அமெரிக்காவிடம் கையேந்தி நின்று உதவி களைப் பெற்று வரும் காங்கிரஸ் ஆட்சி, சோவியத் ருஷ்யாவிடம் அளவுக்கு மீறி உறவாடுவது சிறிதும் நியாயமன்று.

காஷ்மீர் பிரச்னையைக் கௌரவப் பிரச்னையாக்கி இந்திய சர்க்கார் ஆண்டுதோறும் பல கோடி ரூபாய் களை இராணுவத்துக்குச் செலவு செய்து வருவது சரி யன்று. பாகிஸ்தான் அண்டைநாடு; அதனுடன் தகராறு வைத்துக்கொள்வது அறிவுடைமையன்று. இது எல்லைப்புற விரோதியாயிருக்கும் சீனாவுக்கு அநு கூலமாகும்.

மொழிவழி மாநிலங்களைப் பிரிப்பது தேச ஒற்று மையைக் குலைத்து மக்களிடையே சண்டை சச்சரவு களை உண்டாக்கிப் பலவிதமான விபரீத விளைவு களை ஏற்படுத்தும்" என இராஜாஜி எச்சரித்து, தென்னாட்டியாவைப் பொறுத்தமட்டில் மாவது, கேரளம், மைசூர், ஆந்திரா, தமிழ்நாடு ஆகிய நான்கையும் ஒரு மாநிலமாக்கித் தட்சிணப் பிரதேசம் என ஏற்படுத்தலாம் என்று யோசனை கூறினார். அதற்குக் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டதும். மொழி வழி மாநிலங்கள் ஏற்பட்டதும், தமிழ்நாடு, ஆந்திரா, கேரளம், மைசூருடன் ஆற்று நீர், மின்சா ரம் முதலியவற்றுக்காக வாதப்பிரதிவாதங்கள் நடந்து வருவதும், தெலிங்கானா கிளர்ச்சி போன்ற கிளர்ச்சி அடிக்கடி ஏற்படுவதும் இராஜாஜியின் அறிவுரையை ஏற்காதது எவ்வளவு பெரிய தவறு என்பதை நமக்கு உணர்த்தி வருகிறது.

"ஆட்சியாளர்களிடம் அதிகாரங்கள் குவியக் கூடாது, தொழில்களைத் தேசீயமயமாக்கினால் சர்க்காருக்குத் தொல்லையேற்படும்.

தேசம் பெற்ற சுதந்திரம் ஆளுங்கட்சியான காங்கிரஸுக்குக் கிடைத்த சுதந்திரமாகக் கருதாமல், மக்கள் அனைவருக்கும் கிடைத்த சுதந்திரமாக மதித்து நேரு செயல்பட வேண்டும். குடியரசு சாஸனத்தின் ஜீவநாடியே மக்கள் சுதந்திரந்தான். மக்களே பங்கு கொண்டு நடத்துவதுதான் ஜனநாயக ஆட்சியாக இருக்க முடியும். இதற்குத் தனிமனித சுதந்திரத்துக்கு உரிய மதிப்புத்தந்து நடப்பது அவசியம். பிறரைத் துன்புறுத்தாமலும் பிறரால் துன்புறுத்தப்படாமலும் மக்கள் அனைவரும் சுதந்திரமாக வாழ வேண்டும். மக்களின் சுதந்திரத்தைக் காப்பதே நல்லாட்சி சுதந்திரத்தைப் பறித்து விட்டு வேறு என்ன தந்தாலும் நல்லதன்று.

கருத்து வேற்றுமை கொண்டு தெரிவிக்கும் உரிமையை ஜனநாயகத்தில் ஒடுக்கக்கூடாது. ஜனநாயகம் என்னும் கட்டிடத்துக்குத் தனிமனித சுதந்திரம் என்னும் கடைக்கால் மிகமிக அவசியம்.”

இப்படியெல்லாம் இராஜாஜி ஆட்சியாளர்க்கு இடித்துப் புத்தி சொல்லி வந்தார். பல முக்கியமான விஷயங்கள், பிரச்னைகளைப்பற்றி அவர் தைரியமாக அபிப்பிராயங்களைத் தெரிவித்து வந்தார்.

பிரதமர் நேரு இராஜாஜியின் அந்தரங்க சுத்தியை உணர்ந்திருந்ததால், அவரைத் தங்களுக்கு எதிர்ப்பானவர் என்று பாராட்டாமல், சந்தர்ப்பம் நேர்ந்தபோதெல்லாம் அவர் பல முக்கிய விஷயங்கள் குறித்து இராஜாஜியின் யோசனைகளைக் கேட்கலானார். அது அவருடைய சகாக்களுக்கும் மந்திரிகளுக்கும் பிடிக்கவில்லை. ஆகவே, நேரு, “இராஜாஜி கூறும் கருத்துகளையெல்லாம் நாம் ஏற்காமல் இருக்கலாம். ஆனால், அவரது யோசனையைக் கேட்பதில் தவறில்லை. எவ்விஷயத்திலாயினும் எனக்குக் குழப்பமோ சந்தேகமோ ஏற்பட்டால் அவருடன் ஆலோ

சனை செய்யத் தயங்கமாட்டேன்" என்று தெளிவு படுத்தினர்.

இராஜாஜி எதிர்க்கட்சித் தலைவராகிவிட்டதாலேயே, சர்க்கார் செய்துவந்த எல்லாவற்றையும் சகட்டுமேனிக்குக் கண்மூடித்தனமாக எதிர்த்து வரவில்லை. எதிர்க்க வேண்டியவற்றை மட்டும் எதிர்த்தார்; ஆதரிக்க வேண்டியவற்றை ஆதரித்தார்.

இதற்கு ஓர் உதாரணம் சொல்லலாம். 'இந்தி சீனிபாய் பாய்' எனக் கோஷமிட்டுப் பாரதத்தின் நேச நாடாக நடித்துவந்த செஞ்சீன 1962-ம் ஆண்டில் எல்லைப்புறத்தில் சில்விஷமம் செய்து கொண்டு வந்து திடீரென இந்தியா மீது படையெடுத்த விஷயம் உலகப் பிரசித்தம். அச்சமயம் இராஜாஜி நெருக்கடியிலிருக்கும் நேரு சர்க்காருக்குத் தம் அறிவாற்றலைப் பயன்படுத்தி உதவிபுரியப் பெருந்தன்மையோடு முன்வந்தார். அவசியமானல், தாம் காங்கிரஸ் சர்க்காரில் ஒரு காபினெட் மந்திரியாகச் சேர்ந்து பணிபுரியவும் சித்தமாயிருப்பதாக அவர் பிரதமர் நேருவுக்குத் தம் கருத்தைத் தெரிவித்தார்.

ஆனல், என்ன காரணமோ ஆட்சியாளர்கள் இராஜாஜியின் கோரிக்கையை வரவேற்கவில்லை. இதற்காக இராஜாஜி வருத்தப்படவில்லை. 'காலத்தால் கடமை புரிய விரும்பினேம் நம் தொண்டை ஆட்சியாளர் ஏற்கவில்லையென்ருல் அது அவர்களுக்குத்தான் நஷ்டமேயொழிய நமக்கு ஒன்றுமில்லை' என்று எண்ணி வாளா இருந்துவிட்டார்.

இராஜாஜி அரசாங்க விஷயங்களோடு மட்டும் நிற்கவில்லை. மக்கள் நலத்தைப் பாதிக்கும் பல பொதுவிஷயங்கள் பற்றியும் தம் கருத்துகளைத் தெளிவாகத் தெரிவித்துத் தீவிரமாகச் செயல் புரியலானர்.

காங்கிரஸ் ஆட்சி பி.சி.ஜி. என்னும் க்ஷயரோகத் தடுப்பு மருந்து ஊசியை ஒவ்வொருவரும் கட்டாயமாகப் போட்டுக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டது. இப் பி.சி ஜி. இஞ்செக்ஷன் மருந்து குறித்து மேனாட்டுப் பத்திரிகைகளில் வெளி வந்திருந்த அபிப்பிராய பேதங்களைப் படித்து அறிந்திருந்த இராஜாஜி, "இது ஒரு பயங்கரமான மருந்து. ஆதலால் இதை மக்கள் இஞ்செக்ஷன் செய்து கொள்ள வேண்டாம்" என்று எச்சரிக்கலானார். இது கண்டு பிடிக்கப்பட்ட நாட்டிலேயே அதற்கு எதிர்ப்பு இருக்கிறது என்றும் தெரிவித்தார்.

இராஜாஜி இவ்விஷயத்தில் காட்டிய தீவிர எதிர்ப்பைக் கண்டு நேரு சர்க்கார் "பி.சி.ஜி. ஊசியை விரும்புபவர்கள் போட்டுக் கொள்ளலாம். கட்டாயமில்லை" என்று உத்தரவைத் தளர்த்தினர்.

அடுத்து, இராஜாஜி தீவிரமாக எதிர்த்தது அமெரிக்காவின் அணுகுண்டு சோதனைக் கொள்கையை. சோதனைக்காகக் கூட அமெரிக்கா மனிதகுலத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தும் எலெக்ட்ரான் குண்டு முதலிய அணுகுண்டுகளை வெடிக்கக் கூடாது என அவர் வற்புறுத்திக் கூறி வந்தார்.

இந்த அஹிம்சைக் கொள்கையில், சாந்தி சமாதான ஸ்தாபனம் முனைந்து நின்று வேலை செய்து வந்தது. ஆதலால், தங்களுடைய இந் நற்பணிக்குத் தார்மீக ஆதரவு தந்து வரும் இராஜாஜியைத் தாங்கள் அமெரிக்க அரசாங்கத்துடன் கலந்து பேசச் செல்லும் சமாதானத் தூதுக் குழுவுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்து அனுப்பியது.

1962-ம் ஆண்டில் இராஜாஜி 85-ம் வயதில் தம் முதுமைத் தளர்ச்சியையும் பாராட்டாமல், ஆர். ஆர். திவாகர், பி. சிவராம் ஆகிய பிரமுகர்களுடன்

விமானப் பயணமுஞ் செய்து அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனுக்குச் சென்றார்.

யுனைடெட் ஸ்டேட்ஸ் சர்க்காரில் இந்திய ஹைகமிஷனராக இருந்த பி கே. நேரு என்பார் இராஜாஜி தலைமையில் வந்த சமாதானக் குழுவினரை ஜனாதிபதி ஜான் கென்னடியைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்

வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி கென்னடி, இராஜாஜி குழுவினரை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

மந்திரிசபை கூடும் அறையில் வந்து தம் பேட்டிக்காகக் காத்திருந்த இராஜாஜி குழுவினரைத் தாமே வந்து தம் தனியறைக்குள் அழைத்துச் சென்று பேசினார்.

இராஜாஜி அணுகுண்டு சோதனைக் கொள்கையில் பாரதம் கொண்டுள்ள கொள்கை-முக்கியமாகக் காந்தீயவாதிகள் கொண்டிருக்கும் கொள்கையைத் தெளிவாகத் தெரிவித்தார்.

சோதனைக்காகக்கூட அணுகுண்டுகளை வெடிக்கக்கூடாது; வெடித்தால் மனித இனம் முதலிய சகல ஜீவராசிகளுக்கும் இன்னின்னவிதமாகத் தீங்கும் துன்பமும் ஏற்படக் கூடும் என்று தர்க்க வாதத்துடன் எடுத்து இதமாகச் சொன்னார் இராஜாஜி.

சில நிமிட உரையாடலிலேயே இராஜாஜியின் மேதாவிலாசத்தை அறிந்து கொண்ட கென்னடி விஷயத் தெளிவுடனும் வாதத்திறமையுடனும் சுருக்கமாகப் பேசிய அவருடைய புத்தி கூர்மையை வியந்து பாராட்டினார்.

அணுகுண்டு சோதனை தடுப்பு குறித்து, காந்தி சமாதானக் குழுத் தலைவரான இராஜாஜி கூறிய கருத்துகளைத் தாம் சிந்தித்துப் பார்த்துச் செயல் புரிவதாக உறுதியளித்த அமெரிக்க ஜனாதிபதி கென்னடி, குழுவினரிடம், "உங்கள் தலைவர் பெறற்

காரிய பெரிய மனிதர். இவரை நீங்கள் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்" என்று கூறி விடை கொடுத்தனுப்பினார்.

வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி கென்னடி ஆடம்பரம், படாடோபமில்லாமல் சம்பிரதாயச் சடங்குகள் எதுவும் இல்லாமல் சகஜமாக நடந்து சம்பாஷணை புரிந்ததும் மரியாதை செய்ததும் இராஜாஜிக்கு ஆச்சரியத்தை அளித்தது.

தாம் கவர்னர் ஜெனரலாயிருந்த ராஷ்டிரபதி பவனத்தில் எவ்வளவு அட்டகாச ஆடம்பரங்கள்; எத்தனை சம்பிரதாயச் சடங்குகள்; ஜபர்தஸ்துகள் என்று அச்சமயம் இராஜாஜியின் நெஞ்சம் நினைத்துக் கொண்டது.

அதே சமயத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸில் ஏற்பட்டிருக்கும் மகத்தான பொருளாதார முன்னேற்றமும் அவரைத் திகைப்புற வைத்தது.

ஜனாதிபதி கென்னடியைச் சந்தித்துப் பேசி முடித்த பின் இராஜாஜி தம்மை அழைத்திருந்த மற்றும் சில நாடுகளுக்கும் அப்படியே சுற்றுப்பயணம் போய் வந்தார் தம் குழுவினருடன்.

இதில் இராஜாஜி ரோம் நகருக்குச் சென்று போப்பாண்டவரைச் சந்தித்து ஆசி பெற்று வந்தது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விதமாக, இராஜாஜி வெளிநாடுகளுக்குச் சென்று வந்தது இதுதான் முதலும் முடிவுமாகும்.

இராஜாஜி இந்திய ருஷ்ய ஒப்பந்தம், கிழக்கு வங்கப்பிரச்னை, வியட்நாம் போர், ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து தைவான் நீக்கம் போன்ற விஷயங்களிலும் தம் ஆழ்ந்த கருத்தைத் தெரிவித்தார்.

1970-ம் ஆண்டில் தமிழக முதல்வராயிருந்த கருணாநிதி கோடிக்கணக்காக வரும் கலால் வருமானத்துக்கு ஆசைப்பட்டு, குடி என்றால் என்ன

வென்றே தெரியாதிருந்த ஒரு தலை முறையை உரு வாக்கியிருந்த மதுவிலக்குச் சட்டத்தைத் திடீரென நீக்கி விட்டார்.

மதுவிலக்குச் சட்ட அமலால் ஏற்படும் பொருள் வருவாய் இழப்பைச் சரிக்கட்டுவதற்காக பரிசுச் சீட்டை நடத்துகிறோம் என்று சொல்லி தி. மு. க. ஆட்சி வந்தவுடனேயே ஏற்படுத்திய லாட்டரிப் போட்டியை நிறுத்திவிட வேண்டும் என்று வற் புறுத்தி வந்த இராஜாஜி. லாட்டரிப் பரிசுப் போட்டியை நிறுத்தாததோடு. மதுவிலக்கையும் ரத்து செய்து விட்டதைக் கண்டு மிகவும் வேதனை யடைந்தார். ஆகவே தான், இரவென்றும் மழை யென்றும் பாராமல் முதல்வர் கலைஞரை அவர் இல்லத்தில் சந்தித்து, குடியைக் கெடுக்கும் குடிப் பழக்கத்தை மீண்டும் உண்டாக்க வேண்டாமென்று மிகவும் கேட்டுக்கொண்டார்.

பரம ஏழை மக்கள் நலனுக்காக விடுத்த தம் வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டு இராஜாஜியின் மனம் பொறுக்கவில்லை. இதுவே அவருடைய உள்ள நலத்தையும் உடல் நலத்தையும் பெரிதும் பாதித்து விட்டது என்று சொல்ல வேண்டும்.

நாட்டுமக்கள் நலத்தையே பெரிதாக மதித்து நடக்கும் நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று இராஜாஜி கூட்டணி அமைத்து 1971-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் முனைந்து நின்ற முயற்சியிலும் ஆளும் வர்க்கத்தின் சதித்திட்டத்தாலும் சூழ்ச்சிச் செயலாலும் தோல்வி கிடைத்தது அவருக்குத் தாங்கொண்ணாத வேதனையை யுண்டாக்கியது; அவருடைய வஜ்ஜிரதேகம் நலிவுறுவதற்குப் பெருங் காரணமாய் விட்டது.

இளமையிலேயே பிடித்திருந்த ஆஸ்துமா என்னும் கொடிய நோயைக்கூடத் தம் உணவுக்

கட்டுப்பாட்டாலும் ஒழுக்கத்தாலும் ஒன்றும் இல்லா மல் செய்துவிட்ட இராஜாஜியைப் பிணி மெல்லப் பற்றிக் கொள்ளலாயிற்று

இடையில் இராஜாஜிக்கு 'இரணியா' என்னும் குடல் இறக்க நோய் ஏற்பட்டது. முதிய வயதில் ஆபரேஷன் செய்து கொள்வது சரியல்ல என்று சிலர் சொல்லியும் அவர் துணிந்து அறுவை சிகிச்சை செய்து கொண்டார்.

சோர்வுற்றிருக்கும் இராஜாஜிக்குத் தெம்பை யுண்டாக்க வேண்டும் என்பதற்காக, சுதந்திரா கட்சியினரும் இராஜாஜியின் அன்பர்களும் அவரு டைய 93-வது பிறந்த தினவிழாவைப் பிரமாதமாகக் கொண்டாடினர்.

பிறந்தநாள் விழா போன்ற விழாக்கள் கொண் டாடப்படுவது இராஜாஜிக்குப் பிடிக்காத ஒன்று. ஆதலால், அவர் தம் கட்சியினரும் மற்றவர்களும் சேர்ந்து நடத்திய பிறந்த நாள் பெருவிழாவைக் கண்டு, "இத்துடன் என்னைப் பொது வாழ்விலிருந்து வெளியேற்றி விட நினைப்பது போலிருக்கு இவ் விழா' என்று நகைச்சுவையுடன் தம் விருப்ப மின்மையை வெளிப்படுத்தினார்.

தீர்க்கதரிசியான இராஜாஜியின் வாயிலிருந்து வெளிப்பட்ட இவ்வார்த்தை வேறொரு வகையில் விரைவாக மெய்யாகிவிட்டது. அவர் பொது வாழ்வி லிருந்து மட்டுமல்ல; பூவுலக வாழ்விலிருந்தும் வெளி யேறிவிடும் அவலநிலை அடுத்த ஆண்டே ஏற்பட்டு விட்டது

இராஜாஜி தம் 94-வது வயதில் யுரேமியா என்ற நோயால் பாதிக்கப்பட்டார். சிறுநீரிலுள்ள உப்புத்தன்மை இரத்தத்தில் கலந்து விட்டதால் நஞ்சாகி உயிரையே பறிக்கக் கூடிய கொடிய நோய் என்று பிரபல டாக்டர்கள் கண்டுபிடித்து அந்த உப்பைக் கரைத்து வெளியேற்றி அவரைக்

காப்பாற்றப் பெரும் பாடுபட்டனர். இத்துடன் ரைகர் என்ற நடுக்கமும் காய்ச்சலும் இராஜாஜிக்கு ஏற்பட்டது. இல்லத்திலேயே வைத்துச் சிகிச்சை செய்து வந்த டாக்டர்கள் உடல்நிலை மோசமாகி வருவதை யுணர்ந்து 17-12-1972-ந்தேதியன்று சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் விசேஷ வார்டில் இராஜாஜியைக் கொண்டு போய்ச் சேர்த்துப் பல முறைகளையும் கையாண்டு சிகிச்சை செய்தனர்.

மருத்துவமனையில் சேர்த்த நான்காவது நாளில் இராஜாஜிக்கு மறுபடியும் ரைகர் என்ற நடுக்கமும் காய்ச்சலும் உண்டாய்விட்டது. மூச்சுக்குழாயில் ஏற்பட்ட நெரிசல் திணறலால் அவருடைய புனித உடல் மிகவும் வேதனைப்பட்டது. பிராணவாயு செலுத்தப்பட்டும் நுரையீரல் பழுதாகிக்கொண்டே போயிற்று.

சத்தியநாராயணா, ஏ. எஸ் இராமகிருஷ்ணன், ஸாம்மோஸஸ், சி. இராஜகோபாலன், மோகன்தாஸ் முதலிய பிரபல டாக்டர்கள் மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள புதுப்புது முறைகளையெல்லாம் கையாண்டு விதவிதமான மருந்துகளைத் தந்து இராஜாஜியை இக்கொடிய நோய்களிலிருந்து விடுவித்துப் பிழைக்க வைக்க மிகவும் முயன்றனர். கடைசிவரை கருவி மூலம் பிராண வாயுவைச் செலுத்திக் கொண்டேயிருந்தனர்.

வாய் வழியாக உணவை ஊட்ட இயலாதநிலை ஏற்பட்டதும், இராஜாஜிக்கு 'ட்ரிப்' மூலம் திரவ ரூபத்தில் உணவுப் பொருள் புகட்டப்பட்டு வந்தது. அதாவது இரத்தக் குழாய் மூலம் சொட்டு சொட்டாக நீராகாரம் கொடுக்கப்பட்டு வந்தது.

ஆஸ்பத்திரியில் இருந்த எட்டு நாள்களில் இராஜாஜி மூன்று தினங்கள் தன்னுணர்வை இழந்திருந்தார்.

இவ்வளவு கோளாறுகளுக்கு இடையில் இருதயத் துடிப்பு மட்டும் கடைசிவரை ஒழுங்காக

இருந்தது. உறுதியாகச் செயல்படும் இதய இயக்கத்தை டாக்டர்கள் மானிட்டரிங் கருவி மூலம் அறிந்து தெரிவித்தனர்.

இராஜாஜி எப்படியும் குணமடைய வேண்டுமென்று தமிழக மக்கள் மட்டுமல்லாமல் பாரதத்தின் பல பாகங்களிலுமுள்ள கோடிக்கணக்கான மக்களும் பிரார்த்தனை செய்தனர்.

விநோபாஜியும், ஆசார்ய சுவாமிகளும்கூட பாரதத்தின் பெருஞ் செல்வமான இராஜாஜி பிழைத்து எழவேண்டுமென்று பிரார்த்தித்தனர்.

புனிதர் பிழைக்க வேண்டுமென்று விநோபாஜி போன்ற புனிதர்கள் பிரார்த்தித்த பிராத்தனைகளால் போலும் இராஜாஜி அமரராவதற்கு முன் நாள் வரை விழுந்து வந்த இரத்த அழுத்தம் உயர்ந்து இயற்கை நிலையையடைந்தது. மூச்சுத் திணறலும் குறைந்தது. ஆதலால் பிராணவாயுக் கருவிகூட அகற்றப்பட்டது.

இராஜாஜி நோய் வேதனையிலிருந்தெல்லாம் விடுபட்டு நல்ல நினைவுடனிருந்தார். ஆனால், அவர் அறவே போய்விட்டதாகக் கருதப்பட்டிருந்த ஆஸ்துமா நோய் இக்கடைசி சமயத்தில் தலைகாட்டியது. மரணவேதனையிலிருந்து இம்மகான் மீள முடியாது என்று டாக்டர்கள் உணர்ந்து கொண்டனர்.

ஆகவே மரணத் தருவாயில் செய்யும் வைதீகச் சடங்குகளையெல்லாம் அருமை மைந்தர் நரசிம்மனைக் கொண்டு செய்வித்தனர். இராஜாஜியின் வாயில் கங்கை புனித நீர் வார்க்கப்பட்டது. கர்ணமந்திரம் ஓதப்பட்டது.

'மாதங்களில் சிறந்த மார்கழி மாதமாக நான் விளங்குகிறேன்' என்று கீதாசார்யன் சொன்னான் அல்லவா! அந்தப் புனித மார்கழி மாதத்தில் புருஷோத்தமரான இராஜாஜியின் புனித ஆன்மா பரப்பிரம்மத்தின் அருள் ஒளியில் ஐக்கியமாயிற்று. அதாவது தேவகுமாரனான இயேசு கிறிஸ்துவின் அவதாரத் திருநாளான டிசம்பர் 25 - ந்தேதியன்று இராஜாஜி அமரரானர்.

இறுதிக் காலத்தில் இராஜாஜியின் சுவாசம் மெல்ல மெல்ல அடங்கிப் பரமசாந்தத்தில் நிலைத்தது.

94 ஆண்டு காலம் வாழ்வாங்கு வாழ்ந்த மகா புருஷன், நிறை வாழ்வு வாழ்ந்த மாமனிதன் அறிவறிந்த நாளிலிருந்து தம் வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்தையும் பிறருக்காகவே பயன்படுத்திச் சர்வசங்கப் பரித்தியாகஞ்செய்த சேவைச் செம்மல், சதா தாம் தோன்றிய சமுதாயத்தின் மேன்மைக்காகவும் தேசத்தின் முன்னேற்றத்திற்காகவும் உலக மக்களை வாழ்விப்பதற்காகவும் தொண்டாற்றி வந்த பெரியோன் தம் பூதவுடலை நீத்துப் புகழுடம்பை அடைந்தார்.

பாரத ரத்தினமான இராஜாஜி இம்மண்ணுலக வாழ்வை நீத்ததையறிந்து உலகம் முழுதுமே கண்ணீர் வடித்தது.

இராஜாஜியின் புனித உடல் சென்னைப் பொது மருத்துவ மனையிலிருந்து அவர் பெயராலேயே வழங்கப்பட்டு வரும் அரசாங்கமனையிலுள்ள இராஜாஜி மண்டபத்தின் முகப்பில் வைக்கப் பட்டது.

(சென்னை மாகாணத்தின் முதல் பிரதமராகவும் தமிழ் மாநிலத்தின் முதல்வராகவும் சுதந்திரத்துக்கு முன்னும் பின்னும் இரு முறைக்குமேல் மத்திய சர்க்கார் மந்திரியாகவும், வங்காள கவர்னராகவும் எல்லாவற்றுக்கும் மேலாகச்சுதந்திரபாரதத்தின் கவர்னர் ஜெனரலாகவும் அரச பதவிகளை வகித்து) முடிசூடா மன்னராக அரியணையில் அமர்ந்து ஆட்சி புரிந்து புகழ்பெற்றிருந்த இராஜாஜியின் புனிததேகம் இராணுவத்தினரால் கொண்டுவரப்பட்டு, இராணுவ மரியாதையுடன் இராணுவ வாகனத்தில் ஏற்றி வைத்து ஊர்வலமாகச் சென்னை திருவல்லிக்கேணியிலுள்ள கிருஷ்ணாம்பேட்டை மயானத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, மதச்சடங்குகளுடன் தகனஞ் செய்யப்பட்டது.

நம் தமிழ் இனத்துக்கு - பாரதப் பெருந் தேசத்துக்கு நேர்ந்துவிட்ட இப்பேரிழப்பு நிகழ்ச்சியை இலட்சோபலட்சம் மக்கள் பெருந் திரளாகத் திரண்டு வந்து நேரில் கண்டு உள்ளம் உருகினர். கண்ணீரை ஆருக ஓட விட்டனர். அமரராய்விட்ட இராஜாஜியின் நினைவைத் தங்கள் உள்ளங்களில் பதித்துக்கொண்டு சென்றனர்.

தமிழ் மக்கள் இராஜாஜியை நல்லான் சக்ர வர்த்தி மரபில் வந்த தோன்றலாகக் கண்டனர். சக்ர வர்த்தி ஐயங்கார் குடும்பத்தின் தலைவராகப் பார்த் தனர். பிரபல கிரிமினல் லாயராக அறிந்தனர். சேலம் நகரத்தின் தந்தையாக நோக்கினர். சமுதாய சீர்திருத்தச் செம்மலாகப் புகழ்ந்தனர். சுதந்திரப் போராட்ட வீரராக வரவேற்றனர். சிறந்த சத்தியாக் கிரகியாகப் பாராட்டினர். திலகர், காந்தி ஆகியவர் கள் வழிவந்த தேசத் தலைவராகப்போற்றினர். காந்தி யடிகள் வகுத்துத்தந்த தேசப்புனர் நிர்மாணவேலைத் திட்டங்களை நிறைவேற்றும் கர்மவீரராகக் கண் டனர். தீண்டாமைப் பேயையும் மதுவிலக்கு அரக் கனையும் எதிர்த்து ஒழிக்கத் தவம் மேற்கொண்ட காந்தி ஆசிரமவாசியாக வணங்கினர் சொந்த பந்தங் களை அறவே துறந்து நாட்டுமக்கள் நலத்துக்காகத் தம்மை முற்றும் அர்ப்பணித்துக்கொண்ட சர்வ சங்கப் பரித்தியாகியாகப் போற்றினர். மாநில முதல மைச்சர் பதவியிலிருந்து கவர்னர் ஜெனரல் பதவி வரை எல்லா அரசாங்கப் பீடங்களிலும் அமர்ந்து ஆட்சிபுரிந்த தலைசிறந்த அரசியல் நிர்வாகியாகக் கண்டு வியந்தனர். காலவர்த்தமானத்துக்கேற்பச் சாணக்கியம் புரிந்து தாம் கொண்ட கொள்கைகளில் வெற்றி கண்ட ராஜதந்திர மேதையாக உணர்ந்து உவகை கொண்டனர். மகாத்மா காந்தி யின் மனச்சாட்சிக் காவலராக விளங்கி வந்ததை

அறிந்து மதித்தனர். காந்தீயத்துக்கு விளக்கஞ்சொல்லும் பாஷ்யகாரராகத் திகழ்ந்ததைக் கண்டு அன்பு செலுத்தினர்.

இராஜாஜி சிறந்த வழக்கறிஞர் மட்டுமல்ல; சமூக சீர்திருத்தவாதி மட்டுமல்ல; சுதந்திரப் போராட்டத் தளபதி மட்டுமல்ல; தலை சிறந்த அரசியல் நிபுணர்; அரிய பெரிய தியாகி; முடிசூடா மன்னர்; மும்மொழிப் புலமை வாய்ந்த எழுத்தாளர், பத்திரிகாசிரியர்; நாவன்மை படைத்த பேச்சாளர்; தர்க்கரீதியாக எதையும் ஆராய்ந்து அறியும் ஆற்றல் படைத்த வேதாகம வித்தகர்; இப்படி எல்லாமாகத் திகழ்ந்த முழு மனிதர்; மாமனிதர்; இலட்சியபுருஷர்.

இராஜாஜி நடந்து சென்ற மகத்தான ஜீவ யாத்திரையில் அவர் சந்தித்த மகாபுருஷர்கள் பலர்; அவர் பார்த்தறிந்த மகத்தான சம்பவங்கள் பல; அனுபவித்த சோதனைகள் வேதனைகள் பல; எதிர்ப்பட்ட இடையூறுகள் அனைத்தையும் தகர்த்தெறிந்து வெற்றிகொண்ட கொள்கைகள் பல: நெருக்கடியான பல கால கட்டங்களைக் கடந்து யாருக்கும் எதற்கும் அஞ்சாது தம் மனத்துக்குச் சரியெனப் பட்டதையே ஒளிவு மறைவில்லாமல் உறுதியாகச் சொல்லியும் எழுதியும் சுதந்திரப் பாதையை வகுத்துகொண்டு தம் வாழ்க்கை இலட்சியத்தை நோக்கிக் கம்பீரமாக நடை போட்ட இலட்சிய வீரர்.

இராஜாஜி இலட்சியபுருஷர் மட்டுமல்லர்; கருமயோகி; பிரத்தியட்சக் கண்ணோட்டங்கொண்டு யதார்த்த நிலையை நன்குணர்ந்து நடக்கும் செயல் வீரர்; வருமுன் காப்பவர்; வருமுன் எதையும் தீர்க்க தரிசனமாக உரைப்பவர். முக்காலமும் உணர்ந்து கூறும் முனிவர்; புனிதமான போதகர்; அனுபவ முதிர்ச்சி பெற்ற முதல்தரமான பெரியவர்; மனித

சுதந்திரத்தின் மாண்பினை எடுத்தோதிய மகான்; சுதந்திர மந்திரத்தின் மகரிஷி. தார்மீக நெறியைச் சதா சொல்லிவந்த தர்மமூர்த்தி. மனிதராகப் பிறந்தோர் பரோபகார சிந்தையுடனும் செயலுடனும் வாழ வேண்டும் என்று தாம் ஒவ்வொரு கணத்தையும் பிற மக்களுக்குப் பலவகையிலும் உதவிப் பயன்படுமாறு வாழ்ந்து காட்டிய புனிதர்.

எம்பெருமானுர் ஸ்ரீ இராமாநுஜரைப் போல், பூரண ஆயுளுடன் வாழ்வார் என எண்ணியிருந்த இந்த சுத்த ஆத்மா 94-வது வயதிலேயே தம் ஜீவ யாத்திரையை முடித்துக்கொண்டு நிரந்தரமான ஜீவதர்மத்தை நிலைநாட்டிவிட்டுச் சென்றதை நினைக்க நினைக்க நம் உள்ளமெல்லாம் நெக்கு நெக்கு உருகுகிறது.

'நந்தா விளக்கனைய நாயகனே ! நானிலத்தோர்
தந்தாய் ! தனிஅறத்தின் தாயே ! தயாநிலையே !
எந்தாய் ! இகல் வேந்தர் ஏறே ! இறந்தனையே !
அந்தோ! இனி வாய்மைக்கு ஆர் உளரே?'

இவ்விதம் அம்மகா புருஷனின் நெடும் பிரிவை நினைந்து புலம்பிய தமிழக மக்களின் நெஞ்சங்களில் நினைவுகளில் அவர் என்றென்றும் நிலைத்திருப்பார். இராஜாஜி நாமம் வாழ்க !

முற்றுப்பெற்றது

ARCHIVES LIBRARY
No. 109103
EGMORE, MADRAS

## இராஜதந்திரி இராஜாஜி

அந்தணரில் நனிசிறந்த அந்தணாளன்;
அவன் ஆற்றல் அருளறிவோ உலகே அறியும்;
தொண்ணூற்றே டிரண்டாண்டு தொடர்ந்தே இன்னும்
தொண்டாலே இளமைமிகப் பெற்று வாழ்வோன்!
பன்னூறு பிரச்சினைகள் பிறந்திட் டாலும்
பகுத்தறிந்து பகர்ந்துரைக்குந் திறனாய் வாளன்;
'என்னென்போம்! இவன் மதியை' எனவியக்கும்
எதிர்காலம் எடுத்துரைக்கும் ஏந்தல்; வாழி!

அரசாட்சி புரிந்ததிலோ இவரைப் போல
ஆளுமைசீர் உடையோராய் இருந்தோர் யாரே?
பொருளாட்சி புரியாத மக்கள் வாழ்வில்
பொன்னான வாய்ப்புகளைப் பலவுண் டாக்கித்
தெருளாதோர் புரிகின்ற தில்லுமல்லைச்
செவிட்டினிலே அறைந்திட்டுத் திருத்தஞ் செய்தே
அருளாட்சி புரிவதற்கு வழி வகுத்தே
ஆக்க முறு திட்டங்கள் ஈவோய்! வாழி!

சக்ரவர்த்தி யெனில் இவனே சக்ரவர்த்தி/;
சமூகத்தில், தேசத்தில், அரசு தன்னில்;
வக்ரபுத்தி படைத்தோரை விரட்டி விட்டு
வாகாகத் தொண்டுபுரி தூயர் தம்மை

மிக்கதொரு பொறுப்பினிலே உயர்த்தி வைத்து
மீசுரமாய் மக்களுக்கே அறிவை யூட்டிச்
சிக்கலின்றி அரசுரிமை துய்க்கச் செய்த
செம்மைசேர் இராஜாஜி ! வாழி ! வாழி !

நல்லான்சக் ரவர்த்தி மரபில் வந்தோன் ;
நாடறிய நற்பணிகள் பலபு ரிந்தோன்;
பொல்லாத பேர்களையே பொதுவில் கண்டால்
புறங்காணு மாறவரை யோட்ட வல்லோன்;
கல்லாருங் கேட்டுணர்ந்து கொள்ளுமாறு
கனிவாக எளிதாகப் பேசுங் கோமான் ;
எல்லோரும் ஏற்குமொரு தருமங் காண
இடையரு துழைக்கின்ற அறவோன் வாழி.!

இராஜாஜி போலே யொரு இராஜ தந்திரி
எவருளரோ ? நம் இந்தியத் துணைக்
கண்டத்தில் ?
தராதலத்தில் இவர்க்கிணையாச் சொல்லுதற்குத்
தக்கமதி யூகியை நான் கண்டதில்லை.
பராவுகின்ற பாரதத்தின் அரசு தன்னில்
பண்பாளர் வகிக்காத பதவி யுண்டோ ?
இராம ராமவெனும் நாமஞ் சொன்ன வேடன்
இராமகதை இன்தமிழில் ஈந்தோன்; வாழி!

(சென்னை எழும்பூரில் 10 - 12 - 1969 — ல் இராஜாஜி 92-ம் பிறந்தநாளை முன்னிட்டு கவியரங்கம் ஒன்றில் கவிமாமணி 'மஹி' தலைமையில் இந்நூலாசிரியர் பாடிய பாடல்கள்)